

# உங்கள் பொக்கிஷங்களுக்கு
# உன்னத பாதுகாப்பு

வருடாந்த அறிக்கை | 2017

இலங்கை
காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் | 4 |
| தலைவரின் செய்தி | 7 |
| பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 9 |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் | 14 |
| ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள் | 15 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 17 |
| அலுவலக உத்தியோகத்தர்கள் | 18 |
| மீளாய்வுகள் | |
| பொது மீளாய்வு | 22 |
| புள்ளிவிபர மீளாய்வு | 29 |
| செயற்பாட்டு மீளாய்வு | |
| - மேற்பார்வையாளர் மீளாய்வு | 63 |
| - ஒழுங்குமுறை மீளாய்வு | 66 |
| - விசாரணை மீளாய்வு | 70 |
| - சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியுறவுகள் பற்றிய மீளாய்வு | 77 |
| - நிருவாக மீளாய்வு | 79 |
| - நிதி மீளாய்வு | 80 |
| நிதித் தகவல்கள் | |
| - நிதி நிலைமை அறிக்கை | 84 |
| - நிதிப் பெறுபேறுகளின் அறிக்கை | 85 |
| - காசுப்பாய்ச்சல் அறிக்கை | 86 |
| - காப்புறுதிதாரர் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் அறிக்கை | 87 |
| - கணக்கீட்டுக் கொள்கைகள் | 88 |
| - நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 90 |
| கணக்காளர் நாயகத்தின் அறிக்கை | 97 |
| 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துகாட்டப்பட்ட விடயங்களும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்களும் | 105 |
| பின்னிணைப்பு I | 121 |
| பின்னிணைப்பு II | 122 |
| அருஞ்சொல் சொற்கள் | 124 |



உங்களைப் பாதுகாத்து
நிரூபிக்கிறோம்.
நீங்கள் மிகவும்
பெறுமதியானவர்கள்.

# நோக்கு

ஆசியாவின் திறன்மதிப்புமிக்க காப்புறுதி ஒழுங்குபடுத்துநராக இருத்தல்.



# பணி

காப்புறுதிதாரர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, காப்புறுதித் துறையின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்.



# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை - 28
- காப்புறுதித் தரகர்களின் எண்ணிக்கை - 60
- காப்பீட்டாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 45,228
- காப்புறுதி தரகர்களுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 419
- காப்புறுதி பற்றிய விழிப்புணர்வு 10 பிரதேச செயலகங்களிலுள்ள 796 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளைச் சென்றடைந்திருக்கிறது.

## காப்புறுதித் தொழிற்றுறையின் செயலாற்றுகை

| | 2017 | 2016 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (ரூ. மில்லியனில்) | 164,623 | 143,067 | 15.07% |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. மில்லியனில்) | 582,417 | 525,329 | 10.87% |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) ஓர் சதவீதமாக | 1.24 | 1.20 | 3.33% |
| காப்புறுதி அடர்த்தி (ரூ.) | 7,677 | 6,747 | 13.78% |

## சபையின் செயலாற்றுகை

| | 2017 | 2016 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி (ரூ. மில்லியனில்) | 4,110 | 3,291 | 24.89% |
| வீதவரி வருமானம் (ரூ. 000) | 418,235 | 408,179 | 2.46% |
| வருடாந்தக் கட்டணம் (ரூ.000) | 142,175 | 125,489 | 13.30% |

**ரூ. 582,417 மில்.**
காப்புறுதித் தொழிற்றுறையின்
மொத்தச் சொத்துக்கள்

**ரூ. 164,623 மில்.**
காப்புறுதித் தொழிற்றுறையின்
மொத்தக் கட்டுப்பணம்



# முகாமைத்துவத் தகவல்கள்



"2017 ஆம் ஆண்டில், காப்புறுதித் தொழிற்றுறை, இலங்கையில் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகாலக் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் முறையே 17% மற்றும் 12.65% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அதேவேளை, இத்தொழிற்றுறையின் மொத்த சொத்துக்கள் 10.87% னால் மிதமான வளர்ச்சியைக் காட்டுகிறது."

# தலைவரின் செய்தி

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்றுறைச் சட்டத்தின் பிரிவு 106 இன் கீழ் உள்ள ஒழுங்குவிதிகள் தேவைப்படுத்தும் வகையில் இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்ககப்பட்டுள்ள இலங்கை காப்புறுதி ஒழங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2017 ஆம் ஆண்டில், காப்புறுதிக் கைத்தொழில், இலங்கையில் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகாலக் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் முறையே 17% மற்றும் 12.65% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அதேவேளை, இக்கைத்தொழிலின் மொத்த சொத்துக்கள் 10.87% னால் மிதமான வளர்ச்சியைக் காட்டுகிறது. கட்டுப்பணத்தின் வளாச்சி, மோட்டார் மற்றும் உடல்நலக் காப்புறுதியின் உப வகுப்புகளில் இருந்து பெருமளவு பெறப்பட்டுள்ளன. காப்புறுதித் துறையில் ஒன்று படுத்தப்பட்ட சொத்துக்கள் பாரிய நிதி நிறுவனங்களின் மொத்த சொத்துக்களில் இருந்து 3.4% ஐ பிரதிபலிக்கிறது.

காப்புறுதிக் கம்பனிகள், புதிய மற்றும் புதுமையான பொருட்கள் மற்றும் விலை தொடர்பான கொள்கைகள் என்பனவற்றைப் பயன்படுத்துவதோடு, ஆக்கிரமிக்கக்கூடிய சந்தைப்படுத்தல் நடைமுறைகளையும் பயன்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும். மொத்த GWP யில் வளர்ச்சி ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) விகிதாசாரமாகப் பிரதிபலிக்கின்ற GWP ஏனைய ஆசிய வலயத்திலுள்ள முக்கியமான நாடுகளுடன் ஒப்படும் போது இலங்கையின் காப்புறுதி ஊடுருவல் குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டத்தைக் காட்டுகிறது. (2017 ஆம் ஆண்டு 1.24% 2016 ஆம் ஆண்டு 1.20%) மேலும், இலங்கையின் மொத்த சனத்தொகையில் காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கையை விகிதாசார அடிப்படையில் பார்க்கின்ற போது 2017 ஆம் ஆண்டு 14.3% ஐக் காட்டுகிறது. இது, இலங்கை சனத்தொகையில் பெரும்பான்மையானோர் ஆயுள் காப்புறுதிக் கொள்கை ஒன்றை பெறவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, என்னுடைய கருத்தில் இலங்கை காப்புறுதிக் கைத்தொழில் இன்னும் வளர்ச்சியடைய வேண்டிய நிலையில் உள்ளது.

இலங்கையில் காப்புறுதிக்கான கேள்வி நுகர்வோரின் செலவழிக்கத்தக்க வருமான மட்டத்தில் தங்கியுள்ளது. ஆகவே, செலவிடத்தக்க வருமானத்தின் குறைந்த மட்டம் மற்றும் காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றிய குறைந்த விழிப்புணர்வு மற்றும் அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய சமூக பாதுகாப்புத் திட்டங்கள் என்பன காப்புறுதி ஊடுருவல் மட்டம் அதிகரித்துச் செல்வதை தடை செய்கின்ற காரணிகளாக அமைகின்றன. இலங்கையின் பொருளாதார எதிர்வுகூறல் “விதி” உயர், நடுத்தர வருமான மட்டத்திற்கு செல்லக்கூடியதை எதிர்பார்க்கின்றது. இத்தகைய நகர்வு செலவிடத் தக்க வருமானத்தை மேன்மைப்படுத்துவதோடு, அதன் மூலம் காப்புறுதி ஊடுருவல் மட்டத்தை அதிகரிக்கலாம். செலவழிக்கத்தக்க வருமானத்தின் அதிகரிப்பு நிச்சயமாக, எதிர்காலத்தில் ஒரு தேவையுடனான - கோரிக்கை காப்புறுதிக் கைத்தொழிலை உருவாக்கும்.

வரி விதிப்பு தொடர்பான சட்டங்களுக்கான திருத்தங்கள் 2018 ஏப்ரல் மாதத்தில் இருந்து அமுலுக்கு வந்துள்ளது. இந்தத் திருத்தங்கள் நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்கள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளர்களுக்கு மிகைப் (surplus) பங்கீடு, வரி விதிக்கக்கூடிய இலாபங்களின் கணக்கீடு போன்றவற்றில் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தும். காப்புறுதிக் கைத்தொழில் மேலே கூறப்பட்ட மிகையை பங்குதாரர்களின் நிதிக்கு மாற்றம் செய்வதற்கும் அதனை மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கீடாக பேணிப் பாதுகாப்பதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இதற்கு அமைவாக, பல ஆயுள் காப்புறுதி கம்பனிகள் பொருத்தமான மிகையை ஆயுள்கால நிதியில் இருந்து நியமனம் செய்யப்பட்டுள்ள காப்பீட்டுக் கணிப்பாளர்களின் பரிந்துதரையுடன் பங்குதாரர்களின் நிதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இடமாற்றம் செய்துள்ளது. இது, 2017 ஆம் ஆண்டு இலாபத்தில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

IRCSL வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட இரண்டு திட்டங்களின் பயன்தருனராக செயற்படுகின்றது. அவையாவன - ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) முதலீட்டு சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (CMDP) மற்றும் உலக வங்கியின் (WB) நிதித்துறை நவீனமயப்படுத்தல் திட்டம் (FSMP) என்பனவாகும். ADB சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக காப்புறுதிப் பொருட்களின் நிதி அறிவை மேம்படுத்துவதற்கும் ஒரு விரிவான பிணக்குத் தீர்வு பொறிமுறையொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் ஒரு கல்வி நுட்பத்தை நடைமுறைப்படுத்தும் திட்டம் ஒன்றையும் விருத்தி செய்வதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. உலக வங்கியின் திட்டம் IRCSL லின் ஒழுங்குபடுத்தல் தகைமையை

# தலைவரின் செய்தி

வலுப்படுத்துவதற்கும் IRCSL இன் தேவையான உட்கட்டமைப்பை விருத்தி செய்வதற்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது. மேலே குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்கள் அனைத்தும் சாதகமான பங்களிப்பை வழங்குவதன் மூலம் காப்புறுதிக் கைத்தொழில் உகந்த ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல் ஒன்றை உருவாக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 01 ஆம் திகதி “தேசிய காப்புறுதி தினம்” ஒன்றைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இது, இலங்கை காப்புறுதித்துறை வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக அமைகிறது. இது, காப்புறுதிக் கைத்தொழில் தேசிய பொருளாதார மற்றும் சமூகநலனுக்கு அளித்துள்ள பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்றே, ஒரு விசேட ஞாபகார்த்த முத்திரை ஒன்றும் முதல் நாள் காகித உறையொன்றும் 2017 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி தினத்தை ஆரம்பித்து வைப்பதற்காக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார கௌரவ பிரதியமைச்சரினால் மாண்புமிகு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இது, IRCSL மற்றும் இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் (IASL) கூட்டு முயற்சியினால் அடையப்பட்ட ஒன்றாகும். செப்டம்பர் 1 ஆம் திகதியை தேசிய காப்புறுதி தினாகப் பிரகடனப்படுத்தி IRCSL மற்றும் IASL என்பன இந்தக் காப்புறுதி விழிப்புணர்வு மாதத்தில் (செப்டம்பர்) மேற்கொண்ட விளம்பர நிகழ்ச்சிகள் காப்புறுதியின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதற்கு பயனுள்ள ஒன்றாக அமைந்துள்ளது.

மேலும் IRCSL சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் அமைப்பு (IAIS) மற்றும் IRCSL ஒழுங்குபடுத்துநர்களின் ஆசிய மன்றம் என்பவற்றோடு உறவை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் வினைத்திறனாக செயற்பட்டு வருகின்றது. IRCSL உள்நாட்டு சந்தை நிலவரங்கள் மற்றும் கைத்தொழில் ஆட்களுடைய திறன்கள் என்பவற்றோடு இணக்கமாக செயற்படக்கூடிய ஒரு வலுவான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை கொண்டுள்ளது. மேலும், காப்புறுதிச் சந்தையின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு வழிவகை செய்வதோடு, சேவைகள் மற்றும் சந்தை ஸ்தரத்தன்மை என்பனவற்றின் வினைத்திறனை ஊக்குவிக்கிறது.

நான் IRCSL இன் தலைவராக 2018 ஏப்ரல் மாதம் பதவியேற்றேன். கௌரவ நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் IRCSL இன் புதிய உறுப்பினர்களை 2018 மே மாதத்தில் நியமித்தார். நான், IRCSL இன் முன்னாள் தலைவர் திருமதி இந்திராணி சுகததாச மற்றும் IRCSL யின் முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோர் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அளித்த பங்களிப்பை பாராட்டுகின்றேன்.

இறுதியாக, IRCSL யின் உறுப்பினர்கள் சார்பாக அனைத்து பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள், தரகர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட இடைத் தரகர்கள், IASL, இலங்கை காப்புறுதி தரகர்கள் அமைப்பு (SLIBA), இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII) மற்றும் காப்புறுதி ஒம்புட்ஸ்மன் ஆகியோர் உள்ளடங்கலாக அனைத்து கைத்தொழில் பங்குதாரர்கள் ஆகியோர் வழங்கிய மிகப் பெரிய ஆதரவு, ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியாக IRCSL உடன் அவர்கள் பேணி வந்த சுமுகமான உறவு என்பவற்றுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், செயலாளர் நாயகம், இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் IRCSL இன் பணியாட்கள் ஆகியோர் IRCSL க்கு உடைய தீர்மானங்களைச் செயற்படுத்தியவர்களின் அர்ப்பணிப்பு, திறன் என்பவற்றுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.



மனோ தித்தவெல்ல
தலைவர்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



நிதித்துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வை தொடர்பான சீர்திருத்தங்களை அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் அமுல்படுத்த IRCSL இனங்கண்டுள்ளது. சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர் அமைப்பினால் வழங்கப்படும் உள்ளக கொள்கைகளுக்கு அமைவாக காப்புறுதி சட்டத்தை மறுசீரமைத்தல், நுண் காப்புறுதிக்குரிய ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், IFRS 17 ஐ கவனத்திற் கொண்டு RBC விதியை மீளாய்வு செய்தல், தகவல் தொழில்நுட்ப கலப்புடன் இடர் அடிப்படையிலான மேற்பார்வைக்கு இடம்பெயர்தல் மற்றும் வர்த்தக நடத்தை விதிகள் என்பவற்றை மேம்படுத்தல் என்பன அவற்றில் சில முக்கியமான நடவடிக்கைகளாகும். மேலும், IRCSL நுகர்வோர் கோரிக்கைகளைக் கையாளுதல் தொடர்பான நடபடி முறையை நெறிப்படுத்துலையும் காப்புறுதிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தலையும் எதிர்பார்க்கின்றது.

IRCSL யின் சாதனைகளை மீள்பதிவு செய்தல் மற்றும் 2017 ஆம் ஆண்டில் இத்துறையின் செயலாக்கம் பற்றிக் கருத்துக் கூறுவதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றேன். 2017 ஆம் ஆண்டு சிறந்த காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பை ஒழுங்கான அடிப்படையில் மேற்பார்வை செய்யும் ஒழுங்குபடுத்துதல், பல சவால்களை எதிர்கொண்டது என்ற அடிப்படையில் தனித்துவமான ஒரு வருடமாகும்.

## முக்கியமான ஒழுங்குபடுத்தல் முயற்சிகள்

2017 ஆம் ஆண்டின் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்கு விதி சட்டத்திற்கு நீண்டகாலம் எதிர்பார்த்திருந்த திருத்தம் அமுலுக்கு வருகிறது. இந்தத் திருத்தங்கள் ஒழுங்குபடுத்துநரான இலங்கை காப்புறுதிச் சபை என்பதை, “இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு” என்ற புதிய பெயரை வழங்கியுள்ளது. அத்துடன், 2011 ஆம் ஆண்டு திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட கட்டாயமான அட்டவணைப்படுத்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிப்புக்களுடன் தொடர்பான ஏற்பாடுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், இத்திருத்தம் காப்பீட்டாளர்களுடைய காப்புறுதி முகவர்களுக்கு ஒரு ஆயுள் காப்புறுதிக் கம்பனிக்கும் இன்னுமொரு பொதுக் காப்புறுதிக் கம்பனிக்கும் இடைத் தரகர்களாக செயற்படக் கூடிய ஏற்பாடுகளையும் இது கொண்டுள்ளது. இவ்வகையில், ஏற்கனவே நடைமுறையில் இருந்த மட்டுப்பாட்டை நீக்கியுள்ளது. இந்தத் திருத்தங்கள், காப்புறுதி முகவர்களுக்கு ஒதுக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளில் பணி புரிய வழிவகை செய்துள்ளது.

உள்ளக ரீதியாக போதுமான அளவு காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் இன்றி RBC அமுலாக்கத்தின் பின்னர் இவ்வருடம் புதிய சவால்களை எதிர்கொண்டது. குறிப்பாக, புதிய வரி விதிப்பு சட்டங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுள் காப்புறுதிக் கொள்கையாளர்களின் நிதியத்திலிருந்து பங்குதாரர்களின் நிதியத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட surplus மாற்றம் தொடர்பான வரி மாற்றங்களைக் குறிப்பிடலாம். புதிய வரி தொடர்பான சட்டம் அமுலுக்கு வரும் திகதிக்கு முன்னராக காப்புறுதிக் கம்பனிகளினால் பங்குபற்றாத வர்த்தகங்களில் வைத்திருக்கப்பட்ட குறிக்கப்பட்ட மேலதிக இருப்புகள் சம்பந்தப்பட்ட பங்குதாரர் நிதியங்களுக்கு 2016 ஆம் ஆண்டு IRCSL ஆனால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலீட்டு பொதுமான தன்மையை மாற்றம் செய்தல் சட்டத்தின் காரணமாக நீண்ட தவணை காப்புறுதியின் கீழ் உருவாக்கப்பட்ட surplus ஐ மாற்றம் செய்வதற்கு நீண்ட தவணை காப்புறுதி வர்த்தகத்தில் கம்பனிகள் IRCSL உடைய வழிகாட்டியை கோரின. ஏனெனில், ஏற்கனவே, IRCSL மேலே கூறப்பட்ட surplus களை நிறுத்தி வைக்குமாறு காப்பீட்டார்களை வேண்டியிருந்தது. இவ்வகையில், IRCSL கூறப்பட்ட surplus களை கணக்கீடு செய்தல், மாற்றம் செய்யும் முறை மற்றும் பங்குதாரர்களின் நிதியத்தைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான வழிகாட்டிகளை வழங்க வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றது. இது தொடர்பாக IRCSL க்கு தேவையான தொழில்நுட்ப அறிவுரையை வழங்க IRCSL வெளிவாரி காப்புறுதி கணிப்பீட்டாளர் ஆலோசனை நிறுவனம் ஒன்றை நியமித்துள்ளது. இறுக்கமான காலக்கெடுக்களைப் பூர்த்தி செய்வது ஒரு நேரத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடாகும். கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இவை இருக்க வேண்டிய காரணத்தினால் அது தொடர்பான வழிகாட்டிகள் மீது கருத்துக்களைத் தெரிவித்தமைக்காக IRCSL இலங்கை பட்டய கணக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றது. புதிய வரி சட்டங்கள் அறிமுகங்கப்படுத்தப்படுவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஏற்பட்ட மேலே கூறப்பட்ட surplus ஐ மாற்றம் செய்வதற்கு நேரகாலத்துடன் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் உதவியளித்தன.

IRCSL சில நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகள் மற்றும் வழிகாட்டிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் சில, இழக்கப்பட்ட சரிசெய்யும் விதிகளைப் பதிவு செய்தல், குறித்த கால வரையறைக்குள் காப்புறுதிக் கொள்கையாளர்களுக்கு காப்புறுதிக் கொள்கை ஆவணங்களை விநியோகித்தல், நீண்டகால காப்புறுதிப்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு (தொடர்ச்சி)

பொருட்களுக்கு தணிந்து போகும் காலப்பகுதியை தரப்படுத்தல்.

இன்னுமொரு மேன்மைப்படுத்திய துறை யாதெனில், காப்பீட்டாளருடைய பிரதான அலுவலர் மற்றும் குறித்துரைக்கப்பட்ட அலுவலர் ஆகியோருடைய பொறுப்புக்களை தெளிவாக நிர்ணயம் செய்வதற்காக அவர்களுடைய வகிபங்கு மற்றும் பொறுப்பு தொடர்பான வழிகாட்டிகளை வழங்குதல்.

கைத்தொழிற்துறையின் வேண்டுகோள்களுக்கு அமைய IRCSL நீண்டகால காப்புறுதி நிதி மற்றும் தொழில்நுட்ப ஒதுக்கீட்டின் முதலீட்டு அளவுருகளை மீளாய்வு செய்தது. இந்த மீளாய்வுகள் கம்பனிகளினால் முதலீட்டு தொடர்பாக எதிர்கொள்கின்ற நடைமுறைச் சிக்கல்களில் இருந்து கடந்து செல்வதற்குரிய விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளது. மேலும், இந்த மீளாய்வுகள் மொத்த கம்பனி மற்றும் குழும வெளிப்பாட்டு வரையறைகள் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இவை, ஏற்கனவே இருந்த தேவைப்பாடுகளில் இருக்கவில்லை.

IRCSL முதலீடுகள் மீது வழிகாட்டிகளை வழங்கியுள்ளது. இவ்வழிகாட்டிகள் காப்பீட்டாளர்கள் தங்களுடைய முகாமைத்துவத்தின் கீழ் வருகின்ற நிதிகள் விவேகமான மற்றும் காரிய அறிவுடைய வகையில் முதலீடு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கும், வெளிப்படைத் தன்மையைக் கையாழ்வதற்கும் உதவுகிறது.

இன்னுமொரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். வெளிநாட்டு உடல்நலக் காப்புறுதிப் பொருட்களின் விற்பனை தொடர்பான வழிகாட்டிகளை வழங்கிய பின்னர் காப்புறுதி தரகர்கள் மேலதிக வருமானத்தை அதிகூடிய ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் பெற்று அனுகூலம் அடைந்துள்ளனர். இந்த வழிகாட்டி தத்துவங்கள் அனுமதிக்கப்படாத வியாபாரத்தில் இடைத் தரகர்களாக செயற்பட்டு வந்த அனைத்து ஒழுங்குபடுத்தப்படாத ஆட்களை நீக்குவதற்கும், அதற்குரிய பாதையை மூடிவிடுவதற்கும் உதவியளித்துள்ளது. இது, காப்புறுதிக் கொள்கையாளர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் சாதகமான வழிமுறை ஒன்றாகும்.

காப்புறுதிப் பொருட்கள் தொடர்பான இல.38 மற்றும் 39 சுற்றறிக்கைகளை வழங்கிய பின்னர், காப்பீட்டாளர்கள் புதிய பொருட்களை அறிமுகப்படுத்தும் போது அல்லது இருக்கக்கூடிய பொருட்களை மீளாய்வு செய்யும் போது வழங்க வேண்டிய தேவையான ஆவணங்களை வெளிப்படுத்துவதற்கு கால வரையறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சுற்றறிக்கை இப்பொருட்களை அறிமுகப்படுத்த முன்பு அது தொடர்பான விபரக் குறிப்புகளைப் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குகிறது. இது, காப்புறுதிக் கொள்கையாளர்களைப் பாதுகாக்கும் இலக்கைப் பூர்த்தி செய்கிறது.

நாம் மேலும், மீள் காப்பீட்டு வாய்ப்புகளுக்கான தேவைப்பாடுகளையும் திருத்தியுள்ளோம். இது, மேலே கூறப்பட்ட ஒழுங்குபடுத்துதல் கட்டமைப்புக்கு அதிகமான நெறிப்படுத்தப்பட்ட மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய அணுகுமுறையொன்றை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. இது, மீள் காப்பீட்டுடனான வாய்ப்புக்களுக்கு மேலதிகப் பாதுகாப்பு வழங்குதலை உள்ளடக்கியுள்ளது. அத்துடன், காப்புறுதிக் கம்பனிகளின் மீள்காப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏதேனும் முக்கியமான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும் போது அவற்றை IRCSL க்கு அறிக்கையிடுமாறும் தேவைப்படுத்துகிறது.

இன்னுமொரு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்பிரகாரம், இணைக்கப்பட்ட நீண்ட தவணை காப்புறுதி வியாபாரத்தின் மீதான சரணடைதல் பெறுமதி மீது காப்பீட்டாளர்கள் மீளச் செலுத்த வேண்டிய தொகை மீதுள்ள மட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. சட்டமானது, குறிப்பிட்ட காப்புறுதிக் கொள்கை தொடர்ச்சியான மூன்று வருடங்களுக்கு அமுலில் இருக்காத போது காப்பீட்டாளர்களை காப்புறுதிக் கொள்கையாளர்களுக்குரிய சரணடையும் பெறுமதியை செலுத்துவதை தவிர்த்தருந்தது. எவ்வாறாயினும், இப்புதிய ஏற்பாடு தளர்த்தப்பட்டுள்ளதோடு, மூன்று வருட காலப்பகுதிக்கு குறைந்த காலத்தில் காப்புறுதிக் கொள்கை அமுலில் இருந்திருந்தால், அது தொடர்பாக தீர்மானம் எடுக்க காப்பீட்டாளர்களுக்கு தற்துனிபு அதிகாரத்தை வழங்கியுள்ளது.

ஏதேனும் ஒரு காப்புறுதிக் கம்பனி ரூபா 2.5 மில்லியனுக்கு காப்புறுதி தரகராக செயற்பட திட்டமிட்டுள்ளபோது அதற்கான குறைந்தபட்ச குறித்துரைக்கப்பட்ட முதலீட்டுத் தேவைப்பாட்டினை IRCSL அதிகரித்துள்ளது. இந்தத் தீர்மானம் செயற்பாட்டுச் செலவில் அதிகரிப்பை கருத்திற் எடுக்கப்பட்டுள்ளது.

## காப்புறுதித் துறையின் செயற்திறன்

### மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (GWP)

பிரதானமாக, இயற்கை அனர்த்தங்கள் காரணமாக, இலங்கையின் பொருளாதாரம் கீழ் நோக்கிய போக்கு ஒன்றைக் காட்டுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 4.5% இலிருந்து (2016) 3.1% ஆக 2017 ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்து நாட்டினைப் பாதித்துள்ளது. காப்புறுதி வர்த்தகமும் மந்தமான வளர்ச்சியையே காட்டுகின்றது. காப்புறுதி வர்த்தகத்தின் முதன்மையாக ஆயுள் காப்புறுதி துறை 18% இல் இருந்து (2016) 12.6% ஆக (2017) வீழ்ச்சியடைந்துள்ளது.




இது, கடந்த வருடங்களில் காணப்பட்ட வளர்ச்சியில் இருந்து குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகிறது. கீழ் நோக்கிய இந்தப் போக்கு ஒட்டுமொத்த வளர்ச்சி வீதத்தை 16.35% இல் இருந்து (2016) 15.07% க்கு குறைவடையச் செய்துள்ளது. Swiss Re. Sigma அறிக்கைக்கு அமைவாக இந்த வீழ்ச்சி மேம்படுத்தப்பட்ட சந்தைகளிலும் ஆயுள் காப்புறுதித் துறையிலும் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு முரணாக, பொதுக் காப்புறுதித் துறையின் வளர்ச்சி விகிதம் 14% இல் இருந்து (2016) 17% ஆக உயர்வடைந்துள்ளது. இது, கடந்த 5 வருடங்களில் அதிகூடிய கூடிய வளர்ச்சி வீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேலே தரப்பட்ட

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு (தொடர்ச்சி)

வரைபடத்தில் காட்டப்பட்டவாறு முழுமையான பெறுமதிகள் வருடா வருடம் அதிகரித்துள்ளமை காப்புறுதித் துறைக்கு அதிகரித்த கேள்வி இருப்பதைக் காட்டுகிறது.

2015 ஆம் ஆண்டிலிருந்து ஆயுள் காப்புறுதியின் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி எண்ணிக்கைகளில் இருந்து வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்த எண்ணிக்கை வீழ்ச்சிப் போக்கைக் காட்டுகின்றது.




2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், புதிய ஆயுள் காப்புறுதி எண்ணிக்கையின் வீழ்ச்சி 2017 ஆம் ஆண்டில் சுமார் 104,355 ஆகும். இதற்கு முரணாக, பொதுக் காப்புறுதி வர்த்தகம் GWP யில் முன்னேற்றம் கண்டிருப்பதோடு, வழங்கப்பட்ட புதிய கொள்கைகளும் அதிகரித்துள்ளன. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வழங்கப்பட்ட புதிய கொள்கைகளின் எண்ணிக்கை 2017 இல் 219,845 ஆக அதிகரித்துள்ளது.

## காப்புறுதி ஊடுருவல் மற்றும் அடர்த்தி

வளர்ச்சியில் சாதகமான போக்குகள் காணப்பட்ட போதிலும், வளர்ந்து வரும் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை காப்புறுதி அடர்த்தி மற்றும் ஊடுருவலில் பின்தங்கியுள்ளது. நீண்டகால காப்புறுதியின் ஊடுருவல் மட்டங்கள் 1.24%, 0.54% ஆக குறைந்து காணப்படுகிறது. பொதுக் காப்புறுதி 0.70% ஆக உள்ளது. எவ்வாறாயினும், IRCSL இன் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புகளுக்குள் விவசாய மற்றும் பயிர்ச் செய்கை காப்புறுதி சபை மற்றும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன உள்ளடக்கப்படாததால், அவற்றினால் உருவாக்கப்படும் GWP ஊடுவல் வீதம் கணக்கீடுகளின் போது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. அதேபோன்று, ஒழுங்குபடுத்தப்படாத நுண் காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் சில நுண் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்களுக்காக அறவிடப்படும் கட்டுப்பணம் என்பனவும் ஊடுருவல் விகிதக் கணக்கீடுகளின் போது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. GWP யினால் ஒரு நபருக்குப் பிரதிபலிக்கும் GWP 14% ஆனால் ரூபா 7,677 இல் இருந்து ரூபா 6,747 ஆக அதிகரித்துள்ளது.

## காப்புறுதி சொத்துக்கள்

2017 ஆம் ஆண்டில் காப்பீட்டாளர்களினால் அறிக்கையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 582,417 மில்லியனால் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட பெறுமதி ரூபா 525,329 மில்லியனாகும்.




எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டு வளர்ச்சி விகிதம் 12.61% இல் இருந்து 10.87% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆயுள் காப்புறுதி வர்த்தகத்தில் சொத்துக்களின் வளர்ச்சி விகிதம் 13.5% ஆகும். அதேவேளை, பொதுக் காப்புறுதி வர்த்தக சொத்துக்களின் வளர்ச்சி வீதம் 6.77%.

## இத்துறையின் இலாபம்

நீண்ட தவணை காப்பீட்டாளர்கள் வருட இறுதியில் குறிப்பிடத்தக்களவு இலாபத்தினை காட்டியுள்ளனர். இது, வரிக்கு முந்திய இலாபத்தில் 72% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. முதலீட்டு போதுமான தன்மையின் தேவைப்பாடுகள் ரூபா 15,867 மில்லியனாக மாற்றமடைந்துள்ளதைத் தொடர்ந்து இலாபங்கள் ரூபா 39,268 மில்லியனாக அதிகரித்துள்ளன.




2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இதற்கு முரணாக பொதுக் காப்புறுதி யாளர்களின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்துள்ளது. வருட இறுதியில் ரூபா 8,543 மில்லியனைப் பதிவு செய்துள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2016 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்களவு தாமதமான பங்குலாப வருமானத்தைப் பெற்றுள்ளதே இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும். அதேவேளை, ஏனைய அனைத்து பொதுக் காப்புறுதி காப்பீட்டாளர்களும் இலாபத்தை பெற்றுள்ளனர். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தக் காப்பீட்டாளர்கள் ஒரு மீள்திருப்பத்தைக் காட்டுகிறது. இங்கு நான்கு கம்பனிகள் வியாபாரத்தில் நட்டத்தைக் காட்டுகின்றன.

## கடன் தீர் திறன்

இடர் அடிப்படையிலான முதலீட்டு விதிகள் காப்பீட்டாளர்களை குறைந்தபட்சம் ரூபா 500 மில்லியனை மொத்த பெறக்கூடிய முதலீடாகவும் (TAC) முதலீட்டு போதுமான தன்மை வீதத்தை (CAR) குறைந்தபட்சம் 120% ஆக பேணிப் பாதுகாக்க வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றது.

## கடன் தீர் திறன் - நீண்ட தவணை காப்புறுதி வர்த்தகம்



# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு (தொடர்ச்சி)




MBSL காப்புறுதி நிறுவனம் தவிர்ந்த, நீண்ட தவணை அடிப்படையிலான காப்புறுதி வர்த்தகத்தை நடத்தி வரும் கம்பனிகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 500 மில்லியன் குறைந்தபட்ச TAC தேவைப்பாட்டை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தன. இக்காப்புறுதித் துறையின் மொத்த TAC 2017 ஆம் ஆண்டு 9.17% ஆக முன்னேற்றம் கண்டு, ரூபா 191,175 மில்லியனை பதிவு செய்துள்ளது. CAR தொடர்பாக நோக்குகையில், அனைத்து கம்பனிகளும் CAR இனுடைய அமுலாக்க மட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. MBSL காப்புறுதி தவிர ஏனைய நிறுவனங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 160% காட்டியுள்ளன. MBSL காப்புறுதி நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டு அமுலாக்கல் மட்டத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும் அதன் CAR தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச மட்டத்திற்கு மேலாக இருந்தது. இத்துறையின் சராசரி CAR 302% இல் இருந்து 321% ஆக 2017 ஆம் ஆண்டு அதிகரித்துள்ளது.

## கடன் தீர் திறன் - பொதுக் காப்புறுதி வர்த்தகம்

MBSL காப்புறுதி மற்றும் சணச காப்புறுதி தவிர்ந்த சகல காப்புறுதிக் கம்பனிகளும் குறைந்தபட்ச TAC தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்தன. சணச காப்புறுதி கம்பனி கலப்புக் கம்பனி ஒன்றாகும். அது, பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை மாற்றம் செய்வதற்காக ஒன்றிணைக்கப்பட்ட துணைக் கம்பனியில் பகுதியளவில் முதலீடு செய்தள்ளது. ஒட்டுமொத்த TAC ரூபா 47,160 மில்லியனில் இருந்து ரூபா 52,142 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது, 10.5% அதிகரிப்பை சித்தரித்துக் காட்டுகிறது. இங்கு இன்னுமொரு விடயத்தை குறிப்பிடுவது அவசியமாகும். அதாவது, பெயார்பெஸ்ட் காப்புறுதியின் TAC 329% ஆல் அதிகரித்துள்ளது.







CAR தொடர்பாக பார்க்கும் போது MBSL காப்புறுதி தவிர்ந்த ஏனைய அனைத்துக் கம்பனிகளும் குறைந்தபட்ச CAR தேவைப்பாடான 120% ஐ பூர்த்தி செய்துள்ளது. எவ்வாறாயினும், சில கம்பனிகளின் CAR அமுலாக்க மட்டமான 160% க்கு குறைவாக இருந்தது. அத்தகைய கம்பனிகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான சராசரி CAR அதே 177% ஆகவே இருக்கின்றது.

## இடைத்தரகர் வர்த்தக செயற்திறன்

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இடைத்தரகர்களின் ஒட்டுமொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் குறிப்பிடத்தக்க வகையில் 26.11% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இதன் விளைவாக, ஒட்டுமொத்த எழுதப்பட்ட கட்டுப்பண பங்களிப்பும் 12.43% இல் இருந்து (2016) 13.62% ஆக 2017 ஆம் ஆண்டு அதிகரித்துள்ளது. இந்தப் பங்களிப்பு பொதுக் காப்புறுதி வர்த்தகம் மற்றும் நீண்ட தவணைக் காப்புறுதி வர்த்தகம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்ட




கட்டுப்பண வருமானத்தை உள்ளடக்கியது. இது முறையே 98.48% மற்றும் 1.52% ஆகும்.

## எதிர்கால உபாய நுப்பங்கள்

நிதித்துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வை தொடர்பான சீர்திருத்தங்களை அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் அமுல்படுத்த IRCSL இனங்கண்டுள்ளது. சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர் அமைப்பினால் வழங்கப்படும் உள்ளக கொள்கைகளுக்கு அமைவாக காப்புறுதி சட்டத்தை மறுசீரமைத்தல், நுண் காப்புறுதிக்குரிய ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், IFRS 17 ஐ கவனத்திற் கொண்டு RBC விதியை மீளாய்வு செய்தல், தகவல் தொழில்நுட்ப கலப்புடன் இடர் அடிப்படையிலான மேற்பார்வைக்கு இடம்பெயர்தல் மற்றும் வர்த்தக நடத்தை விதிகள் என்பவற்றை மேம்படுத்தல் என்பன அவற்றில் சில முக்கியமான நடவடிக்கைகளாகும். மேலும், IRCSL நுகர்வோர் கோரிக்கைகளைக் கையாளுதல் தொடர்பான நடபடி முறையை நெறிப்படுத்துதலையும் காப்புறுதிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தலையும் எதிர்பார்க்கின்றது.

## நன்றி நவிலல்

IRCSL இன் நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தும் வகையில் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட செயலகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் ஆதரவுகளை நான் பாராட்டுகின்றேன். மேலும், IASL, SLIBA, SLII என்பனவற்றின் தலைவர்கள், அலுவலக முகவர்கள் மற்றும் அனைத்து காப்புறுதிக் கம்பனிகள் தரகுக் கம்பனிகள் என்பன செயலகத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நான் நன்றி தெரிவிகிறேன். இறுதியாக, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் செயலகத்தின் அனைத்து பணியாளர்களும் எனக்கு வழங்கிய ஆதரவுக்கு பாராட்டுத் தெரிவிக்கின்றேன். இத்தகைய ஒத்துழைப்பு இன்றி எம்மால் இந்த வருடத்திற்குரிய இலக்குகளை அடைந்திருக்க முடியாது.

தமயந்தி பெர்னாண்டோ
பணிப்பாளர் நாயகம்



# ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் பணியாட்கள்

# ஆணைக்குழு அங்கத்தவர்கள்




[1] திரு. மனோ தித்தவெல்ல - தலைவர்
[2] திரு. சி.ஜே.பி.சிறிவர்தன
[3] திரு. உப்புல் தேஷப்பிரிய
[4] திரு. ஏ.ஆர்.தேசஷப்பிரிய
[5] திரு. யுதிஸ்தரன் கணகசபை
[6] திரு. டி.என்.ஆர்.சிறிவர்தன
[7] திரு. எரல் பெரேரா

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள்

## [1] திரு. மனோ தித்தவெல்ல தலைவர்

திரு. மனோ தித்தவெல்ல, இலங்கையின் இடைநிலை நீதி பொறிமுறைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட ஒருங்கிணைத்தல் மீள் இணக்க பொறிமுறைகள் (SCRM) செயலகத்தின் செயலாளர் நாயகம் ஆவார்.

மேலும், அவர், கௌரவ நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகருமாவார்.

திரு. தித்தவெல்ல, பொருளாதார விடயங்கள் தொடர்பான சிரேஷ்ட ஜனாபதி ஆலோசகர் ஆவார். அத்துடன், 2003 ஆகஸ்ட் தொடக்கம் 2005 நவம்பர் வரை ஜனாதிபதி காரியாலயத்தில் சிரேஷ்ட செயலாளர் நாயகமாக இருந்துள்ளார். இவர், உபாய நுப்ப நிறுவனங்கள் முகாமைத்துவ முகவராண்மையின் (SEMA) முதலாவது தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார். இந்த முயற்சி திரு. தித்தவெல்லவினால் இலங்கையின் பாரிய பொது நிறுவனங்களின் சிறந்த பொறுப்புக்கூறும் தன்மையையும் நல்லாட்சியையும் அதனுடைய செயற்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு ஊக்குவிக்கப்பட்ட ஒன்றாகும். இலங்கையின் சகல பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் நிறுவனமான பொருளாதார அபிவிருத்தி தேசிய பேரவை சபையில் (NCED) கடமையாற்றியமைக்கு மேலதிகமாக சுனாமி மீள்கட்டுமாண மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட பணிசக்தி அமைப்பின் தலைவராகவும் (TAFREN) கடமையாற்றியுள்ளார்.

திரு. தித்தவெல்ல, அரசதுறை சார்ந்த பல நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அவையாவன - இலங்கை அரசாங்கத்தின் அப்போதைய தனியார்துறை முகவராண்மையான பொது நிறுவன சீரமைப்பு ஆணைக்குழுவின் (PERC) பணிப்பாளர் நாயகம், இலங்கை அரசினால் உரிமை கொள்ளப்பட்ட மக்கள் வங்கியின் தலைவர் அத்துடன், இலங்கையின் சில பாரிய அரசதுறை நிறுவனங்களில் உள்ள சபைகளில் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார். அதுமாத்திரமன்றி, திரு. தித்தவெல்ல, தனியார் துறையிலும் பல்வேறு சிரேஷ்ட பதவிகளை வகித்து 35 வருடங்களுக்கும் மேலதிகமான அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்ற இவர் 1960 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். எடின்பர்க் பல்கலைக்கழத்தில் முதலீட்டு சந்தைப்படுத்தல் மற்றும் நிதித்துறையில் MBA பட்டத்தையும், பிரித்தானிய திறந்த பல்கலைக்கழகத்தில் மனித கணினி தொடர்பாடலில் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இவர் 2000 - 2003 வரை ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் சர்வதேச நம்பிக்கையாளர் சபையிலும் உறுப்பினராக இருந்துள்ளார்.

## [2] திரு. சி.ஜே.பி.சிறிவர்தன

சி.ஜே.பி.சிறிவர்தன மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக 2017 ஆகஸ்ட் மாதத்திலிருந்து செயற்பட்டு வருகின்றார். அவர், நிதித்துறை ஒழுங்குபடுத்தல் மற்றும் மத்திய வங்கியின் மேற்பார்வைக் கொத்துக்குப் பொறுப்பாக இருக்கின்றார். இவருக்கு, பொருளியல் மற்றும் விலை ஸ்திரத்தன்மை, நிதி முறைமை ஸ்திரத்தன்மை மற்றும் வங்கியினால் நடத்தப்படும் ஏனைய முகவராண்மைப் பணிகளில் மத்திய வங்கியில் 31 வருடங்களுக்கும் அதிகமான அனுபவம் உள்ளது. பிரதி ஆளுநராக நியமிக்கப்பட முன்பு திரு. சிறிவர்தன பொதுக் கடன், தகவல் தொழில்நுட்பம், சட்டம் மற்றும் இணக்கம், பாரிய விவேக கண்காணிப்பு, மனித வளங்கள், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, கொடுப்பனவுகள் மற்றும் சமரசத் தீர்வுகள் மற்றும் இடர் முகாமைத்துவ திணைக்களங்களில் உதவி ஆளுநராக கடமையாற்றியுள்ளார்.

திரு. சிறிவர்தன, ஐக்கிய இராச்சியத்தின் வோவிக் பல்கலைக்கழகத்தில் அளவியல் அபிவிருத்தி பொருளியலில் M.Sc பட்டத்தையும், பட்டப் பின் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். ருஹுணு பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் BSc பட்டத்தைப் பெற்றுள்ளார். இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையின் செயலாளராக கடமையாற்றிய திரு. சிறிவர்தன, தற்போது கடன் தகவல் பணியகத்தின் தலைவராகவும், கொழும்பு டொக்யாட் பிஎல்சி யின் பணிப்பாளராகவும், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளராகவும், பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், தேசிய கொடுப்பனவு பேரவையின் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார்.

## [3] திரு. டி.என்.ஆர்.சிறிவர்தன

திரு. டி.என்.ஆர். சிறிவர்தன, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் கலைமாணி சிறப்புப் பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் (LLB) பட்டத்தையும் பெற்றிருப்பதுடன், ஐக்கிய இராச்சியத்திலுள்ள கார்டிப் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து தகவல் தொழினுட்பவியல் மற்றும் புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச வியாபாரத்தில் முதுமாணி (LLM) பட்டத்தையும் பெற்றிருக்கிறார். இவர் தொழில்முறை ரீதியான ஓர் சட்ட வழிக்கறிஞரும் ஆவார். திரு. சிறிவர்தன, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் 1988 ஆம் ஆண்டில் இணைந்துகொண்டார். தற்போது, அவர் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிக்கிறார். திரு. சிறிவர்த்தன, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு ஆகியவற்றின் ஓர் பதவிவழி உறுப்பினராகவும் உள்ளார்.

## [4] திரு. ஏ.ஆர்.தேஷப்பிரிய

திரு. ஏ.ஆர். தேஷப்பிரிய, 30 வருட கால அரசாங்க சேவை அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். அவர் தற்போது இலங்கை நிர்வாக சேவையின் (SLAS) ஓர் சிறப்புத் தர அதிகாரி ஆவார்.

இவர் தனது சேவைக் காலத்தில், அரச துறையின் பல்வேறுபட்ட செயற்பாட்டுப் பகுதிகளிலும் சேவையாற்றியிருந்ததுடன் பொதுத் திறைசேரியின் பணிப்பாளர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிகளையும் வகித்திருக்கிறார்.

இவருடைய தற்போதைய பதவியை பொறுப்பேற்பதற்கு முன் இவர் திறைசேரிப் பிரதிச் செயலாளராகப் பணியாற்றியிருந்ததுடன் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியிருந்தார். இவர் பிரதேச அபிவிருத்தி வங்கியின் சபைப் பணிப்பாளராகவும் நலன்புரி நன்மைகள் சபையின் ஒரு உறுப்பினராகவும் சேவையாற்றியிருந்தார்.

திரு. ஏ.ஆர். தேசப்பிரிய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் அரச நிர்வாகத்தில் விஞ்ஞானமாணி பட்டமொன்றையும், ஸ்லோவேனியா நாட்டின் லுப்லிஜனா பல்கலைக்கழகத்தில் இருந்து MBA பட்டத்தினையும் பெற்றிருக்கிறார்.

## [5] திரு. யுதிஸ்தரன் கணகசபை

திரு. கணகசபை, கணக்காய்வுக் குழு, சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஊடுசெயல் குழு ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீனப் பணிப்பாளராகவும், தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார். 2018 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் சம்பளம் மற்றும் நட்டஈட்டுக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகின்றார்.

இலங்கை பேகோ பிஎல்சி சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராவார். மேலும், வரையறுக்கப்பட்ட (தனியார்) மிலேனியம் தகவல் தொழில்நுட்பங்கள், கார்கில்ஸ் பு.்.்ட் கம்பனி, வரையறுக்கப்பட்ட ஹன்டர்ஸ் பிஎல்சி மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா கெனரீஸ் கம்பனி ஆகியவற்றின் நிர்வாகம் அல்லாத இயக்குநராகவும், சபை கணக்காய்வுக் குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். இவர், 2016 ஆகஸ்ட் முதல் 2018 டிசம்பர் 31 வரை யூனியன் வங்கி பிஎல்சி யின் (இது ஒரு டெக்ஸாஸ் பசிபிக் குழுமத்தின் துணைக் கம்பனி) கணக்காய்வுக் குழுவின் தலைவராக செயற்பட்டு வந்தார். அத்துடன், 2006 ஆம் ஆண்டில் PricewaterhouseCoopers நிறுவனத்தின் சிரேஷ்ட பங்காளர்/ பிரதம நிர்வாக அலுவலராவார். இவர், 2017 மார்ச் 31 ஆம் திகதி ஓய்வு பெற்றார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஒரு உறுப்பினராவார். PricewaterhouseCoopers நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கடமையாற்றியுள்ளார். இந்த நிறுவனத்தில் 1981 ஆம் ஆண்டு இணைந்து கொண்டதைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு சிரேஷ்ட பங்காளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன் படிப்படியாக பல்வேறு பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்துள்ளார். அவர் 2017 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி ஓய்வு பெற்றார். அவர் பதவி வகித்த காலப்பகுதிகளில் இலங்கை மற்றும் மாலைதீவு நிறுவனங்களின் நடைமுறைகளை வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக தரமான தீர்வுகளை உகந்த நியமங்கள் மற்றும் பொருத்தமான சிறந்த நடைமுறைகளுடன் வழங்கி இரண்டு நிறுவனங்களின் சுய விபரங்களையும் தரமுயர்த்தினார். வெற்றிகரமான முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்றுகை என்பனவற்றில் ஈர்க்கக்கூடிய சாதனைகளை பதிவு செய்த ஒரு நெறிமுறை தலைவர் என்ற வகையில் அவர் நடைமுறை பொருளியல் சமூக மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் விடயங்களில் பரந்த அறிவைக் கொண்டுள்ளார்.

## [6] திரு. எரல் பெரேரா

ஏ.டி.பெரேரா இங்கிலாந்து, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பல்வேறு வர்த்தகங்களில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார். அவர் இலங்கை திரும்பிய பின்னர் வெளிநாட்டு முதலீடு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கூட்டு முயற்சிகளை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தினார்.

இவர், விபரக்கொத்து வெளியீடு, Pay Phones மற்றும் பக்கமாக்கல் கூட்டுமுயற்சித் திட்டங்கள் ஆகியவற்றுக்கு முன்னோடி அந்தஸ்துடன்கூடிய அங்கிகாரத்தை முதலீட்டு சபையில் இருந்து வெற்றிகரமாகப் பெற்றுக் கொண்டார். மேலும், கூட்டுமுயற்சி முதலீடு மற்றும் கூறுநம்பிக்கை "தொடக்க முயற்சி" என்பவற்றை இலங்கையில் ஊக்குவிப்பதற்கும் கருவியாக செயற்பட்டார். திரு. பெரேரா, 1990 ஆம் ஆண்டு GTE (இப்போது Verizon USA) ஜனாதிபதி சர்வதேச கிண்ணத்தைப் பெற்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். 1995 ஆம் ஆண்டு அவருடைய வழிகாட்டலின் கீழ் விபரக்கொத்து வெளியீட்டுக் குழு முதல் முறையாக இலங்கை தேசிய தர விருதைப் பெற்றுக்கொண்டது. அவர், அமெரிக்காவின் வணிகக் கழகத்தின் (AMCHAM) ஸ்தாபக உறுப்பினராவார். அவர் தற்போது இலங்கையின் பல்வேறு பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் சுயாதீன பணிப்பாளராக செயற்பட்டு வருகின்றார்.

## [7] திரு. உப்புல் தேஷப்பிரிய

திரு. தேஷப்பிரிய சட்ட வழக்கறிஞராவார். அத்துடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டமாணி (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுள்ளார். அவர் 2015 - 2018 வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றினார். மேலும், 2014 - 2016 வரை இலங்கையின் B & R அமைப்பின் முன்னாள் பொருளாளரும் ஆவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி




[1] திருமதி தமயந்தி பெர்னாண்டோ (பணிப்பாளர் நாயகம்)
[2] திருமதி ஷமரி ஏக்கநாயக்க (பணிப்பாளர் - மேற்பார்வை)
[3] திரு. ரணில் அங்குணவெல (பணிப்பாளர் - சட்டம்)
[4] திரு. சுதீர சேனாரத்ன (பணிப்பாளர் - விசாரணை)
[5] திரு. ராஜன் நிரூபசிங்கம் (உதவிப் பணிப்பாளர் - சட்டம்)
[6] திரு. பிம்சர விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர் - சந்தை அபிவிருத்தியும் வெளிவாரி உறவுகளும்)
[7] திருமதி சாரிகா வத்துஹேவா (உதவிப் பணிப்பாளர் - மேற்பார்வை)

# அலுவலக உத்தியோகத்தர்கள்




[1] திரு. லக்ஷ்மன் விஜேசிங்க
[2] திருமதி கோகிலா சிறிவர்தன
[3] திருமதி மெரினா டயஸ்
[4] திருமதி சந்திமா கம்புறுகமுவ
[5] திருமதி ஷானிகா நாணயக்கார
[6] திருமதி லசந்தி தொட்டஹேவா
[7] திரு. ரொஷான் டி கொஸ்தா
[8] செல்வி உபலக்ஷி ரணசிங்க
[9] திரு. சனத் உதயங்க

[10] திருமதி மல்ஹாரி விக்கிரமசிங்க
[11] திரு. சரித விக்கிரமசிங்க
[12] செல்வி நிரோஷா மதுஷானி
[13] திரு. எதிர்ராஜ் சிறிகாந்தன்
[14] திருமதி டெசிகா ரத்நாயக்க
[15] திருமதி உபேந்திரா செனவிரத்ன
[16] திருமதி ருவினி லியனகே
[17] திருமதி டி.டப்ளியூ.எஸ்.எஸ்.சுபுலீ
[18] திரு. சமிந்த லால் குமார

# அலுவலக உத்தியோகத்தர்கள்




[19] திரு. சமன் சேனாதீர
[20] திருமதி பிரியங்கி டி சில்வா
[21] திருமதி விந்தியானி துலபிட்டிய
[22] திருமதி சஷினி பிரேமலால்
[23] செல்வி அச்சினி சேரசிங்க
[24] திருமதி பவித்ரா புஞ்சிஹேவா
[25] திரு. லக்மின பத்திராஜ
[26] திருமதி கௌஷாலி தயாரத்ன
[27] திரு. அனுஷ்க பண்டார
[28] திருமதி. சுஜீவா ரணசிங்க
[29] திரு. நயன ரவிந்திர
[30] திரு. திலான் மிஹிரங்க
[31] திருமதி துஷாரி விஜேகுணவர்தன
[32] செல்வி நிலங்கா வலிசுந்தர
[33] திருமதி வீணா செனவிரத்ன
[34] திருமதி திலினி வாகிஸ்ட
[35] திருமதி ஷியாமலி அத்தநாயக்க
[36] திரு. நளின் தலகல



# மீளாய்வுகள்


பொது மீளாய்வு 22
புள்ளிவிபர மீளாய்வு 29
செயற்பாட்டு மீளாய்வு 62

# பொது மீளாய்வு

## சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் சீரமைப்பு நிருவாகம்

### சட்டவாக்கம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பிடப்படும்) இலக்கு மற்றும் பொறுப்பு யாதெனில், காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் சாத்தியமான காப்புறுதிக் கொள்கையாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கையில் காப்புறுதி வர்த்தகத்தை நேர்மைத்திறனுடன் தொழில்முறை ரீதியாகவும், விவேகமாகவும் நடத்துதலாகும்.

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்றுறைச் சட் ஒழுங்கு விதிகள் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதித் தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள், மற்றும் இழப்பு சரிசெய்பவர்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வை செய்வதற்குரிய இயைபான சட்டக் கட்டமைப்பை தருகிறது.

இது, காப்புறுதி தொழிற்றுறை ஒழுங்கு விதிப்படுத்தல் (திருத்தம்) 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டுள்ளது.

### துணைநிலை சட்டவாக்கம்

இவ்வாண்டில் இந்தச் சட்டத்திற்கு கொண்டவரப்பட்ட துணைநிலை சட்டவாக்கம் கீழே ஒழுங்குபடுத்தல் சீர்திருத்தங்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

#### ஒழுங்குபடுத்தல் சீதிருத்தங்கள்

இந்த திருத்தச் சட்டம், ஏனையவற்றுடன், ஒழுங்குபடுத்துநரின் பெயரை "இலங்கை காப்புறுதி சபை" என்பதிலிருந்து "இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு" எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது. அத்துடன், அட்டவணைப்படுத்தும் விதிவிலக்கையும் சேர்த்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன:

1. பெயர் மாற்றம் : சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "இலங்கை காப்புறுதிச் சபை" மற்றும் "சபை" என்பன முறையே "இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு" மற்றும் "ஆணைக்குழு" என பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

2. அட்டவணைப்படுத்தும் விதிவிலக்கு: கீழே தரப்பட்டுள்ள வகுப்பைச் சேர்ந்த காப்பீட்டாளர்கள், கட்டாய அட்டவணைப்படுத்தும் தேவைப்பாட்டிலிருந்து விதிவிலக்கு பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

(i) வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் 85% க்கும் மேலதிகமான பங்குகளை உரிமையாக்கிக் கொண்ட ஒரு உள்நாட்டு துணைநிலைக் காப்புறுதிக் கம்பனி. அத்துடன், மேலே கூறப்பட்ட வெளிநாட்டுக் கம்பனி, ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனையில் அட்டவணைப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். மேலும், அத்தகைய வெளிநாட்டுக் கம்பனியுடைய தொகுக்கப்பட்ட கணக்குகள் குழுமத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதையும் காப்புறுதி ஒழங்குபடுத்துநரை திருப்திப்படுத்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய வெளிநாட்டுக் கம்பனி வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனை (பிரிவு 15B) உடைய அனைத்து ஒழங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளுடன் குழும மட்ட இணக்கத்தை உறுதிப்படுத்தியுள்ளது என்பது சட்டரீதியாக தேவைப்படுத்தப்படுகின்றது.

(ii) ஒரு உள்நாட்டுக் காப்புறுதிக் கம்பனி - அதன் தாய்க் கம்பனி இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை சட்டத்தின் (பிரிவு 15C(2) கீழ் உரிமம் அளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையின் மீது அட்டவணைப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வகைகள் தவிர்ந்த தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை காபபுறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது பாகுபாட்டின் மீது உருவாக்கப்பட்ட ஏதேனும் காப்பீட்டாளர்கள் இந்த அட்டவணைப்படுத்தல் தேவைபபாட்டிலிருந்து விதிவிலக்குப் பெற்றுள்ளனர். அத்தகைய நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தினால் உரிமை கொள்ளப்பட்டிருக்கும் போது மாத்திரமே இந்த விதிவிலக்கு வலிதாகும் - (பிரிவு 15C(1) மற்றும் (3) ஆகியன).

மேலும், சட்டத்தின் பிரிவு (15க்கு அமைய, சட்டத்தின் கீழ் அட்டவணைப்படுத்துவதில் இருந்து விதிவிலக்குப் பெற்றுள்ள கம்பனிகள் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

3. காப்புறுதி முகவர்: சட்டத்தின் பிரிவு 78(5) நீக்கப்பட்டு, பின்வரும் ஏற்பாடுகள் பதிலீடு செய்யப்பட்டுள்ளன:

(i) எவரேனும் ஆள் ஒருவர் ஏற்கனவே இன்னுமொரு தரகர் அல்லது காப்பீட்டாளரின் காப்புறுதி முகவராக பதிவு செய்யப்பட்டிருக்கும் போது, அத்தகைய நபர் இன்னுமொரு காப்புறுதி முகவராகவோ அல்லது தரகராகவோ நியமனம் செய்வதற்கு தகுதியுடையவரல்ல.

(ii) எவரேனும் ஒரு நபர், தரகர் ஒருவருரின் காப்புறுதி முகவராக பதிவுசெய்யப்பட்டுள்ள போது, அத்தகைய நபர் இன்னுமொரு காப்பீட்டாளரின் காப்புறுதி முகவராக நியமனம் பெறுவதற்கு தகுதியுடையவரல்ல.

(iii) எவரேனும் ஒரு நபர் அதே காப்புறுதி வர்த்தக வகுப்பில் இன்னுமொரு காப்பீட்டாளரின் காப்புறுதி முகவராக பதிவு செய்யப்பட்டுள்ள போது, அத்தகைய நபர் அதே குறிப்பிட்ட காப்புறுதி வர்த்தக வகைக்கு காப்பீட்டாளர் ஒருவரின் கீழ் காப்புறுதி முகவராக நியமனம் பெற தகுதியுடையவரல்ல.

### விதிகள்

#### இழப்பு சரி செய்யும் பதிவு தொடர்பான விதிகள்

இழப்பு சரி செய்யும் பதிவு

தொடர்பான விதிகள் 2017 ஜுலை 5 ஆம் திகதியிடப்பட்ட 2026/27 ஆம் இலக்க மேலதிக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் கீழ் இழப்பு சரிசெய்பவர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே இழப்பு சரிசெய்பவராக அல்லது அத்தகைய நிலையை வைத்திருக்க முடியும். (பிரிவு 114(1) இன் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு) அவ்வாறு பதிவு செய்யப்படாத போது சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திருத்தம் இழப்பு சரிசெய்பவராக இயங்குவதிலிருந்து தடை செய்கிறது. சட்டத்தின் பிரிவு 89A(2) இன் கீழ் பதிவு செய்யும் தேவைப்பாட்டிலிருந்து வரையறுக்கப்பட்ட விதிவிலக்கு ஒன்று உள்ளது.

ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 89(B) இன் கீழ் இழப்பு சரிசெய்பவராக பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கக் கூடிய ஆட்களுக்கு தேவைப்படுகின்ற விசேட தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பான விதிகளை உருவாக்கலாம். பிரிவு 89C(1) இன் கீழ் ஆணைக்குழு தேவையான ஆவணங்கள், தகவல்கள், பதிவுக் கட்டணம் ஆகியன தொடர்பான விதிகளை வழங்குதல் வேண்டும்.

மேலே கூறப்பட்டதற்கு அமைவாக இழப்பு சரிசெய்பவர் ஒருவராக பதிவு செய்யும் நபர் ஒருவருக்கு தேவைப்படுகின்ற தகைமைகள் மற்றும் / அல்லது அனுபவங்களை நாம் குறித்துரைத்துள்ளோம். மேலும், மேலே கூறப்பட்ட அத்தகைய விதிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## சட்டத்தின் பிரிவு 96(A) இன் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டிகள்

### i) வழிகாட்டி 9 உடன் இணங்கி நடத்தலை நீடிப்பதற்கான தேவைப்பாடு

2017 ஆம் ஆண்டு மே 12 ஆம் திகதியிலிருந்து சட்டத்தின் பிரிவு 96(A) இன் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு அமைவாக காப்பீட்டாளர் ஒருவரின் அல்லது காப்புறுதி தரகர் ஒருவரின் பிரதான அலுவலர் பிரதம நிறைவேற்று அலுவராக அல்லது முகாமைத்துவப் பணிப்பாளராகச் செயலாற்றி மற்றும் அல்லது தனிப்பட்ட நபர் ஒருவர் கம்பனியின் பணிப்பாளர் சபையின் வழிகாட்டிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை உடையவராவர்.

காப்புறுதித் தொழிற்றுறை நிறுவனங்களின் பல்வேறு வேண்டுகோள்களையும் கருத்திற் கொண்ட பின்னர் மேலே கூறப்பட்ட வழிகாட்டியுடன் இணங்கி நடப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளும் காப்புறுதி இடைத்தரகர்களும் கம்பனிகளுக்கு ஆணைக்குழு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி வரை கால நீடிப்பை வழங்கியிருந்தது.

### ii) வழிகாட்டி 10 - காப்புறுதி தரகர்களால் வழங்கப்படும் துணைச் சேவைகள்

மேலே தெரிவிக்கப்பட்ட விடயம் தொடர்பாக இலங்கை காப்புறுதி தரகர்கள் அமைப்பின் கருத்துக்களை பெற்ற பின்னர் ஆணைக்குழு வழிகாட்டி 10 இனை வழங்கியது. இதன்பிரகாரம், காப்புறுதி இடைத் தரகர் கம்பனிகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு காப்புறுதி இடைத்தரகு வியாபாரத்திற்கு மேலதிகமாக துணைநிலை சேவைகளை வழங்க விரும்பினால் அது தொடர்பாக ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

### iii) வழிகாட்டி 11 - கடல் கடந்த உடல்நலக் காப்புறுதி

ஆணைக்குழு வழிகாட்டி 11 இன் கீழ், எவரேனும் காப்புறுதி தரகர் மற்றும் அல்லது தரகர் ஒருவரின் உப முகவராக செற்பட்டு ஏதேனும் வெளிநாட்டுக் காப்புறுதிப் பொருளை சந்தைப்படுத்தல் மற்றும் அல்லது பிரசாரம் செய்வதிலிருந்து அனைத்து காப்புறுதி தரகர்களையும் தடை செய்கிறது.

### iv) வழிகாட்டி 12 - அனைத்து காப்புறுதி கம்பனிகள் மற்றும் இடைத்தரகர் காப்புறுதி கம்பனிகளுக்கும்

ஆணைக்குழு, வழிகாட்டி 9 இனை வழங்கியமைக்கு மேலதிகமாக பின்வரும் விடயத்தை அறியப்பெற்றுள்ளது. அதாவது, பல சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவுக்கும் பிரதான அலுவலருக்கும் இடையே பரிமாற்றப்பட்ட தொடர்பாடல்கள் காப்பீட்டாளரின் பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

எனவே, அனைத்து காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் இடைத்தரகர் கம்பனிகளின் பிரதான அலுவலரை ஆணைக்குழுவுக்கும் அவருக்கும் இடையே நடைபெறும் தொடர்பாடல்களை இயன்றளவு விரைவில் குறிப்பாக பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வருவமாறு ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 96(A) இன் கீழ் மேலே கூறப்பட்ட வழிகாட்டியை வழங்கியுள்ளது.

### v) வழிகாட்டி 13 - குறித்துரைக்கப்பட்ட அலுவலரின் வகிபங்கும் பொறுப்பும்

சட்டத்தின் பிரிவு 32 க்கு அமைவாக காப்புறுதி வியாபாரத்தை நடத்துகின்ற ஒவ்வொரு காப்பீட்டாளரும் ஒரு குறித்துரைக்கப்பட்ட அலுவலரை வேலையில் அமர்த்துல் வேண்டும். அத்தகைய நபர், காப்புறுதி நிறுவனத்தின் தகைமையை அல்லது ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளக்கூடிய அத்தகைய தகைமைக்கு சமமான ஒரு தகைமையையும் அத்தகைய தகைமையை பெற்ற பின் முகாமைத்துவ மட்டத்தில் 5 வருட கால அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், சட்டம் குறித்துரைக்கப்பட்ட அலுவலருடைய வகிபங்கையும் பொறுப்பிபையும் வரையறுக்கவில்லை.

எனவே, இலங்கை காப்புறுதி சங்கத்தின் (IASL) அவதானிப்புக்களை மீளாய்வு செய்ததோடு, நடைமுறை என்ற அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர் காப்புறுதிக் கம்பனி ஒன்றில் எப்போதும் தொழில்நுட்ப வகிபங்கு ஒன்றினை நிறைவேற்றுகின்றார் என்ற அடிப்படையில் சட்டத்தின் பிரிவு 96(A) இன் கீழ் ஆணைக்குழு மேலே கூறப்பட்ட வழிகாட்டிக்கு அமைவாக குறித்துரைக்கப்பட்ட அலுவலரின் வகிபங்கு மற்றும் பொறுப்பு தொடர்பான பின்வரும் தகுதிகாண்களை வரையறை செய்துள்ளது.

காப்பீட்டாளர் ஒருவரின் குறித்துரைக்கப்பட்ட அலுவலர் பின்வருவனவற்றுக்கு பொறுப்பாவார்.

1. காப்பீட்டாளர் ஒருவரின் தொழில்நுட்ப பிரிவுக்குத் தலைவராக செயலாற்ற வேண்டும். அத்துடன், காப்பீட்டாளரின் பிரதான

அலுவலருக்கு நேரடியாக அறிக்கை இடுதல் வேண்டும்;

2. பிரதான நிதி அலுவலர் காப்பீட்டுக் கணிப்பாளர், முதலீட்டுப் பிரிவுகள் மற்றும் கம்பனியின் ஏனைய பொருத்தமான அலுவலர்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தல்களுடன் தொடர்புடைய விடயங்களை மீளாய்வு செய்வதற்கும், தெளிவுபடுத்துவதற்கும் அதிகாரமுண்டு. அத்துடன், தேவைப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்துதல்கள் திரும்பல்களில் கையொப்பமிட வேண்டும்.

3. காப்புறுதி எழுத்தாக்கம் இடர் முகாமைத்துவம் மீள்காப்பீடு தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் கோரிக்கை முகாமைத்துவம் என்பன தொடர்பான தொழில்நுட்ப விடயங்களை நிறுவனம் போதுமான அளவிலும், விவேகமாகவும் காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் காப்புறுதித் துறையில் நியாயத்தை உறுதிப்படுத்தும் வகையில் பின்பற்றின என்பதை பிரதான அலுவலர் பணிப்பாளர் சபை மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பவற்றுக்கு உறுதிப்படுத்தும் பொறுப்பை உடையவர். மற்றும்,

4. சட்டத்திலுள்ள தொழில்நுட்ப ஏற்பாடுகள் தொடர்பாக ஏதேனும் மீறல்கள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக பிரதான அலவலர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளார்.

### தீர்மானங்களுக்கான திருத்தங்கள் 14 மற்றும் 15

ஆணைக்குழு இதன் வடிவமைப்புக்களை (அவற்றின் உள்ளடக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாது) மீள் ஒழுங்கு செய்தது. அத்துடன், தீர்மானம் 14 இல் இடர் மதிப்பீட்டு அறிக்கையையும் சேர்த்துள்ளது.

## சந்தை அமைப்பு

### காப்பீட்டாளர்கள்

சட்டப் பிரிவு 12 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க, காப்புறுதி வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்படுவதாகக் கருதப்படுகின்ற நபர் அல்லாத எவரும் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை முன்னெடுக்க முடியாது.

சட்டப் பிரிவு 13 இன் அடிப்படையில், இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விரும்பம் கொண்டுள்ள எந்தவொரு நபரும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றைக் கூட்டிணைத்துப் பதிவுசெய்ய வேண்டும் என்பதுடன் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட சட்டநியதித் தேவைப்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றியதன் பின்னர் சட்டத்தின் கீழ் ஒரு காப்புறுதி வழங்குநராக உரிமம் (அனுமதி) ஒன்றினையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாண்டின் இறுதியில் காப்புறுதி வழங்குநர்களாக 28 கம்பனிகள் இயங்கியிருந்தன. வரையறுக்கப்பட்ட MBSL காப்புறுதிக் கம்பனிக்கு நீண்ட தவணை மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதற்கு வழங்கப்பட்ட பதிவு 2017 ஜுன் 28 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும், வரையறுக்கப்பட்ட AIG காப்புறுதிக் கம்பனி எந்தவிதமான புதிய காப்புறுதிகளையும் ஏற்றுக்கொள்ளாததுடன் அந்தக் கம்பனி இலங்கையில் இருந்து வெளியேறும் நடைமுறையில் இருக்கின்றது.

வரைபடம் 1
காப்புறுதி வழங்குநர்களால் முன்னெடுக்கப்படும் காப்புறுதி வியாபார வகைகள்




படம் 1, காப்புறுதி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள காப்புறுதி வியாபாரத்தின் வகைகளை சித்தரிக்கின்றது. செயற்பாட்டிலுள்ள 28 கம்பனிகளில் வரையறுக்கப்பட்ட MBSL காப்புறுதிக் கம்பனி உட்பட 03 நிறுவனங்கள் நீண்டகால காப்புறுதி வியாபாரத்திலும் பொதுக் காப்புறுதி வியாபாரத்திலும் ஆகிய இரண்டிலும் ஈடுபட்டு வருகின்றன. 12 கம்பனிகள் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும் 13 கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் நடத்தி வருகின்றன.

### காப்புறுதித் தரகர்கள்

2007 ஆம் ஆண்டின் இல.07 கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்று காப்புறுதி தரகர் எனப்படும். கம்பனி, காப்புறுதி இடைத்தரகு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளது. காப்புறுதித் தரகர்கள் காப்புறுதி வழங்குநர், காப்புறுதிக் கொள்கையாளர் அல்லது காப்புறுதிக்காக அல்லது மீள் காப்புறுதிக்காக திட்டமிட்டிருப்பவர் ஆகியோர் சார்பாக காப்புறுதி வியாபாரத்தை அமைத்துக் கொடுப்பதற்கு தரகு அடிப்படையில் கொடுப்பனவு ஒன்றை பெறும் நோக்கில் காப்புறுதிக் கம்பனி அல்லது மீள்காப்பீட்டுக் கம்பனிகளுடன் இடைத்தரகர்களாக செயறப்டுவர்.

இவ்வருட இறுதியில் 60 கம்பனிகள் காப்புறுதித் தரகர்களாகப் பதிவு செய்திருந்தன. கூறப்பட்ட அத்தகைய கம்பனிகளில் 41 கம்பனிகள் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி இடைத்தரகு வியாபாரத்திற்கு பதிவு செய்துள்ளதோடு, 19 கம்பனிகள் பொதுக் காப்புறுதி இடைத்தரகு வியாபாரத்திற்கு மாத்திரம் பதிவு செய்திருந்தன.

படம் 2 - இந்த வருட காலப் பகுதிகளில் காப்புறுதித் தரகர்கள் நடத்திய காப்புறுதி இடைத்தரகு வியாபாரத்தின் வகைகளை சித்தரித்துக் காட்டுகிறது.

வரைபடம் 2
காப்புறுதி தரகர்களினால் இவ்வருடம் நடத்தப்பட்ட காப்புறுதி இடைத்தரகு வர்த்தகத்தின் வகைகள்




### காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு காப்புறுதி வழங்குநருடன் அல்லது காப்புறுதி தரகருடன் பதிவு செய்யப்பட்டு, அந்தக் காப்புறுதி வழங்குநர் அல்லது காப்புறுதித் தரகருக்கான காப்புறுதி வியாபாரத்தில் தரகு ஒன்றைக் கேட்பதை அல்லது

பெறுவதைக் கருத்திற்கொள்கின்ற நபர்கள் காப்புறுதி முகவர்கள் ஆவர். பதிவுக்குத் தேவையான தகைமைகள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

சட்டப் பிரிவு 34 இன்படி, காப்புறுதி வழங்குநர்கள் காப்புறுதி வியாபாரத்தைப் பெறுகின்ற ஒரு முக்கிய விநியோக வழியாக காப்புறுதி முகவர்கள் இருக்கின்றனர்.

காப்புறுதி வழங்குநர்களால் விநியோகிக்கப்பட்ட தகவலின்படி, இவ்வாண்டில் காப்புறுதி முகவர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை அண்ணளவாக 14,595 ஆகும். இது முன்னைய ஆண்டைவிட (13,390) 8.99% அதிகிப்பாகும்.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காப்புறுதி வழங்குநர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தனிநபர் காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை 45,228 ஆகும். இது முன்னைய ஆண்டைவிட (43,816) 3.22% அதிகரிப்பாகும்.

வரைபடம் 3 ஆனது காப்புறுதிக் கம்பனிகளுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள காப்புறுதி முகவர்களைக் காட்டுகிறது

வரைபடம் 3
2017.12.31 இல் மொத்த காப்புறுதி முகவர்கள்




2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள தனிநபர் காப்புறுதி முகவர்கள் அண்ணளவாக 419 ஆகும்.

## கம்பனி அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி வழங்குநர்களுள் 9 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன - AIA இன்ஷுவரன்ஸ் லங்கா பிஎல்சி., யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி., சொப்ட்லொஜிக் லை·.வ் இன்ஷுவரன்ஸ் பிஎல்சி. HNB அஷ்யூரன்ஸ் பிஎல்சி., அமானா தக்காபுள் பிஎல்சி., அமானா தக்காபுள் லை·.வ் பி.எல்.சி., ஜனசக்தி இன்ஷுவரன்ஸ் பி.எல்.சி., ஆர்பிகோ இன்ஷுவரன்ஸ் பி.எல்.சி. மற்றும் பீப்பள்ஸ் இன்ஷுவரன்ஸ் பி.எல்.சி.

வரைபடம் 4 ஆனது பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத காப்புறுதி வழங்குநர்களின் சதவீதத்தைக் காட்டுகிறது.

வரைபடம் 4
பட்டியலிடப்பட்ட / பட்டியலிடப்படாத காப்புறுதி வழங்குநர் அந்தஸ்து




2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றில் காப்புறுதி வழங்குநர்கள் பட்டியலிடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துகிறது. கூட்டுக் காப்புறுதிக் கம்பனிகள் 2015 பெப்ரவரியிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ தனது வியாபாரத்தை இரு வேறு கம்பனிகளாக பிரிப்பதற்கும் 2016 பெப்ரவரியிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ பட்டியலிடப்பட வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்பட்டிருந்தன.

2011 ஆம் ஆண்டின் 03 இலக்க திருத்தச் சட்டம் செயல்வலுப் பெற்றதன் பின்னர், காப்புறுதி வழங்குநராகப் பதிவுசெய்யப்பட்ட ஒரு புதிய கம்பனி, ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டு மூன்று வருட காப்பகுதியினுள் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றில் பட்டியலிடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

2011 யூன் மாதத்திற்கு முன் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி வழங்குநர்களின் குறிப்பிடு மூலதனமானது 2015 பெப்ரவரி அல்லது அதற்கு முன் காப்புறுதி வியாபாரத்தின் ஒரு குறித்த வகைக்காக குறைந்தபட்சம் ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்கு உயர்த்தப்பட வேண்டுமென ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப் பட்டிருக்கிறது.

2011 யூன் மாதத்தை அடுத்து பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் ஐந்நூறு மில்லியனுக்குக் குறையாத குறிப்பிடு மூலதனமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## காப்புறுதி வழங்குநர்களிடமிருந்தான வீதவரி (Cess)

சட்டப் பிரிவு 7 இன் பிரகாரம், காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்காக வீதவரி விதிப்புக்கு கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. 2002 யூலை 9 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலின் மூலம், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிகரக் கட்டுப்பணத்தின் 0.2% ஆகவும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிகரக் கட்டுப்பணத்தின் 0.4% ஆகவும் இது குறிப்பிடப்பட்டு காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

காப்புறுதி வழங்குநர்களிடமிருந்தான வீதவரி சேகரிப்பு 2003 சனவரியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்கான வீதவரி சேகரிப்புத் தொகை ரூ.418 மில்லியனைக் கொண்டிருந்தது. அட்டவணை 1 ஆனது வீதவரி மற்றும் காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி ஆகியவற்றின் நகர்வைக் காட்டுகிறது.

## காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம்

காப்புறுதி வழங்குநர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட வீதவரியானது சட்டப் பிரிவு 103 இற்கு அமைவாக தாபிக்கப்பட்ட காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்புச் செய்யப்படுகிறது.

கூடிய அளவில் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவுக்கு காப்புறுதிதாரர்கள் மற்றும் எதிர்காலக் காப்புறுதிதாரர்களின் நன்மையின் பொருட்டு பின்வரும் நோக்கங்களுக்காக, ஏனையவற்றுடன், இந்நிதி பயன்படுத்தப்படலாம் -

a) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதித் தொழிற்றுறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஏற்பட்ட செலவுகள் மற்றும் காப்புறுதித் தொழிற்றுறையின் அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட வேறு செலவுகள் ஆகியவற்றை ஈடுசெய்தல். மற்றும்,

b) ஆணைக்குழுவின் நடவடிக்கைகள், பொறுப்பு நிறைவேற்றம் மற்றும் தத்துவங்கள், தொழிற்பாடுகள், கடமைகள் ஆகியவற்றை ஆற்றுதல் போன்றவற்றிற்கு ஆணைக்குழுவினால் ஏற்பட்ட செலவுகளை ஈடுசெய்தல்.

காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைப்பதற்காகக் கிடப்பிலுள்ள தொகை அரச பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுகின்றது.

2017 டிசெம்பர் 31 இல் உள்ளபடி, நிதியத்திலுள்ள திரண்ட தொகை ரூ. 4,110 மில்லியன் ஆகும். இது கடந்த ஆண்டில் இருந்த தொகையின் (ரூ.3,292 மில்லியன்) 24.85% அதிகரிப்பைக் காட்டுகிறது.

அட்டவணை 1
வீதவரி மற்றும் காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம்




## காப்புறுதி விதிப்பனவு

தற்போது எந்தவொரு பொதுக் காப்புறுதி வியாபார வகைக்கும் விதிப்பனவுகள் எதுவும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி மற்றும் பணியாளர் இழப்பீட்டுக் காப்புறுதி போன்றவற்றுக்கு ஏற்கனவே இருந்த விதிப்பனவுகள் முறையே 2002, 2005 மற்றும் 2007 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டன.

## சட்டப் பிரயோகத்திற்கான விதிவிலக்குகள்

1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமநல காப்புறுதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விவசாய, கமநலக் காப்புறுதி சபை, 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புச் சபை ஆகியவற்றுக்கு சட்டப் பிரிவு 12(3) இன் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட மாட்டாது.

## தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தினால் (NITF சட்டம்) தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையானது 2011 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

NITF சட்டத்தின் பிரகாரம், NITF ஆனது நிதி, திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்ட வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத நிதியத்தை உள்வாங்கிக் கொண்டது. NITF சார்பாக வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத இடர்களுக்கு எதிராக காப்புறுதியை வழங்குகின்ற காப்புறுதி வழங்குநர்கள் அவற்றின் மீது வசூலிக்கப்பட்ட கட்டுப்பணங்களை NITF இற்குச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரால் கணிப்பிடப்பட வேண்டிய மீள்காப்புறுதியிட விரும்புகின்ற பொறுப்பின் 50% இனை விஞ்சாத ஒரு சதவீதத்தை NITF உடன் மீள்காப்புறுதியிடுவதற்கு மீள்காப்புறுதி வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரையும் 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் தேவைப்படுத்துகிறது. வர்த்தமான அறிவிப்பு இல. 1791/4 இன் பிரகாரம், காப்புறுதி வழங்குநரால் நுழையப்பெற்ற நீண்ட கால மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் தவிர்ந்த, ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்தும் எழுகின்ற மொத்தப் பொறுப்புக்கள் மீது 30% இனை NITF (காப்புறுதி வழங்குநரால் ஈடுபட்டுள்ள நீண்டகால மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் நீங்கலாக) உடன் மீள்காப்புறுதியிடுவதற்கு 2013 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் தேவைப்படுத்தப்படுகின்றனர். முன்னர் இச்சதவீதமானது 20% ஆகக் காணப்பட்டது.

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதிப் பாதுகாப்புக்கான தேசிய பேரவை (NCRS)

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வீதிப் பாதுகாப்புக்கான தேசிய பேரவையானது போக்குவரத்து அமைச்சின் ஆளுகையின் கீழ் இருக்கிறது. மோட்டார் வாகனக் காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் NCRS இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்பு நிதியத்திற்கு மூன்றாந் தரப்புக் காப்புறுதிக் கட்டுப்பணங்களில் 1% இனைப் பங்களிப்புச் செய்யத் தேவைப்படுத்தப்படுகின்றனர். ஆணைக்குழுவானது NCRS இன் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இடித்துவிட்டு ஓடுகின்ற மோட்டார் வாகன விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக இப்பங்களிப்புத் தொகை பயன்படுத்தப்படுகிறது.

### நிதித் துறை மேற்பார்வை பேரவை (FSOC)

இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) தாபிக்கப்பட்ட உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் பேரவையானது "நிதித்துறை மேற்பார்வை பேரவை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த உயர் மட்டக் குழுவானது நிதிச் சந்தைகளின் ஒழுங்கான அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கை வழிகாட்டல்கள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் சகல நிதிசார் ஒழுங்குபடுத்தல் முகவரகங்களும் முழுமையான நிதி முறைமையில் அக்கறையுடைய தகவல்களை ஒருங்கிணைத்துப் பரிமாறிக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்குமென அமைக்கப்பட்டது. ஆணைக்குழுவானது, FSOC இல் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

### இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL) 1989 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன், சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் இதில் அங்கத்துவம் பெறுவதற்குத்

தகைமை உடையவர்கள் ஆவர்.

சகல காப்புறுதிக் கம்பனிகளினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை (CEO) உள்ளடக்கிய IASL இன் நிறைவேற்றுக் குழு ஒட்டுமொத்த நடவடிக்கைகளின் முகாமைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பின்வரும் குழுக்கள் அவர்களது உரிய பரப்புகளுடன் தொடர்புடைய விடயங்கள் மீது நிறைவேற்றுக் குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்வதன் மூலம் உதவியளிக்கின்றன.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொதுக் காப்புறுதி மன்றம்
- நிதித் தொழினுட்ப உப குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப குழு
- தகவல் தொழினுட்ப உப குழு
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மன்றம்
- காப்புறுதிக் கணிப்பீடு உப குழு

## IASL இன் பிரதான இலக்குகள்

1. அதன் அங்கத்தவர்கள் மற்றும் காப்புறுதி செய்கின்ற பொதுமக்களின் பொதுவான அக்கறைகள் மற்றும் நலன்புரி விடயங்களைப் பாதிக்கும் அம்சங்களில் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்காக வழங்கப்படக்கூடிய வாய்ப்புகளின் பொருட்டு சகல காப்புறுதி வழங்குநர்களையும் ஒன்றாக கொணர்வித்தல்;
2. காப்புறுதியிடும் பொதுமக்கள் மத்தியில் நம்பகத்தன்மையை விருத்தி செய்ய ஒரு சீரான / மிகச் சரியான நடவடிக்கைகள் மற்றும் உயர் ஒழுக்கநெறி நியமங்கள் ஆகியவற்றை மேம்படுத்தலும் பராமரித்தலும்.;
3. பொதுமக்கள் மத்தியில் காப்புறுதியின் தேவை மற்றும் பெறுமதி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்;
4. சட்டமியற்றல் / ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைக் கண்காணித்தலும், ஸ்திரத்தன்மை மற்றும் தொழிற்றுறையின் வளர்ச்சி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கலும்;
5. ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் நுட்பங்களை மீளாய்வு செய்து பரீட்சிப்பதுடன் அவற்றில் இலங்கைச் சந்தைக்குப் பொருத்தமான மிகச் சிறந்த நடவடிக்கைகளை தனதாக்கிக் கொள்ளல்;
6. இலங்கையில் இயங்குகின்ற தொழில்சார் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் / குழுமங்கள் அத்துடன் மீள் காப்புறுதிப் பங்காளர்கள் ஆகியோருடன் பங்காளராவதன் மூலம் கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாக காப்புறுதித் தொழிற்றுறையை ஊக்குவித்தல், துடிப்புடன் உதவியளித்தல் மற்றும் தொழில்சார் மனப்பான்மையை மேம்படுத்தல்

## இலங்கை காப்புறுதி நிறுவகம் (SLII)

1982 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவகம் (SLII) என்பது ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும். இதன் பிரதான இலக்கு, காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நபர்களின் திறன்களையும் அறிவையும் அபிவிருத்தி செய்வதாகும். காப்புறுதி வழங்குநர் மூலமாகவும் அதன் அங்கத்தவர்களின் வருடாந்தச் சந்தா மூலமாகவும் செய்யப்படும் பங்களிப்பின் ஊடாக SLII இற்கான நிதி கிடைக்கப்பெறுகிறது.

## SLII இன் பிரதான இலக்குகள்

1. காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அல்லது பணி புரியும் SLII இன் அங்கத்தவருக்கோ அல்லது அங்கத்தவர் அல்லாதவருக்கோ அவர்களின் சொந்த அனுகூலத்திற்காக மட்டுமன்றி அந்த வியாபாரத்தை மிகவும் விளைதிறன்மிக்க வகையில் நடத்துவதை ஒழுங்கமைப்பதையும் நோக்காகக் கொண்டு, தொழில்சார் மனப்பான்மை, முன்னேற்றம் மற்றும் பொதுவான அபிவிருத்தி ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான ஒரு மத்திய நிறுவனத்தை வழங்குதலும் பராமரித்தலும் மற்றும் அறிவுறுத்தல் வழங்குவதும் தொழிற்றுறையின் தொழில்சார் மனப்பான்மையைப் பேணுவதும்;
2. காப்புறுதி பற்றிய அறிவை விருத்திசெய்வதன் பொருட்டு டிப்ளோமா மற்றும் சான்றிதழ் தகைமைகளைப் பெறுவதற்கான பாடநெறிகளை நடத்துதல்;
3. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் ஊடாக காப்புறுதியின் எந்தவொரு பிரிவிலும் காணப்படும் எந்தவொரு பாடத்தினதும் தொழில்சார் கற்கையினை ஊக்குவிப்பதற்காகவும் அதற்கு உதவுவதற்காகவும் பரீட்சைகளை நடாத்துதல்;
4. தொழில்சார் அலுவல்கள், நாட்டங்கள் மற்றும் கடமைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக மாநாடுகளையும் கூட்டங்களையும் நடத்துதல், ஆவணங்களை வாசித்து விரிவுரைகளை நடத்துதல், பட்டியல்கள், பதிவுப் புத்தகங்கள் மற்றும் சம்பவங்களின் பதிவுகள் ஆகியவற்றை ஒறுப்பினர்களின் நன்மைகளுக்காக ஒன்றுதிரட்டி நாட்டத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல். மற்றும்,
5. SLII இன் அங்கத்தவர்களின் அக்கறைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பதற்கு அவர்கள் மீதான தொழில்சார் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மேலும் அவர்களுடைய முன்னேற்றம், மற்றும் பொதுவான காப்புறுதி அதிகாரிகள் மற்றும் குறிப்பிட்ட SLII இன் அங்கத்தவர்கள் ஆகியோரின் அந்தஸ்தை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய எந்தவொரு ஊக்குவிப்பையும் செய்தல்.

SLII ஆனது லண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவகத்துடன் இணைந்துள்ளதுடன் லண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவகம், இந்தியாவின் காப்புறுதி நிறுவகம் மற்றும் இந்தியாவின் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு நிறுவகம் போன்ற தொழில்சார் குழுமங்களின் பரீட்சைகளையும் நிர்வகிக்கின்றது. காப்புறுதித் தொழிற்றுறையில் பணிபுரியும் ஆட்களுக்காக காப்புறுதியில் குறுகிய கால டிப்ளோமா பாடநெறிகளை நிறுவகம் நடத்துகிறது.

காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்பட வேண்டிய ஆட்களுக்காக முன் - ஆட்சேர்ப்புச் சோதனைகளை நடத்துவதற்கான பொறுப்பை ஆணைக்குழுவானது நிறுவகத்திடம் ஒப்படைத்திருக்கிறது. நிறுவகம், காப்புறுதி வியாபாரத்தின் இரு வகைகள் தொடர்பிலும் முன் - ஆட்சேர்ப்புச் சோதனைகளைத்

தொடர்ந்தும் நடத்துகிறது.

### காப்புறுதி குறைகேள் அதிகாரி

இலங்கை காப்புறுதிச் சங்கம் கலாநிதி விக்கிரம வீரசூரியவை காப்புறுதிக் குறைகேள் அதிகாரியாக 2005 சனவரியில் நியமித்திருந்தது. IASL உடன் ஒப்பந்தம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக, காப்புறுதி குறைகேள் அதிகாரியும் IASL இன் அங்கத்தவர்களாக உள்ள காப்புறுதிக் கம்பனிகளும் காப்புறுதிதாரர்களால் காப்புறுதி குறைகேள் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரும் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்து தீர்ப்பதற்கு மிகச் சிறப்பாகச் செயற்படுவார்கள்.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)

காப்புறுதி மேற்பார்வையாளர் சர்வதேச சங்கத்தின் (IAIS) ஓர் உறுப்பினர் என்ற வகையில், காப்புறுதியின் உள்ளகக் கோட்பாடுகள் மற்றும் IAIS இன் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் சம்பந்தமான வெளியீடுகள், வழிகாட்டல்களை ஆணைக்குழுவானது கிரமமாகப் பெறுகிறது. IAIS இனால் பரிந்துரைக்கப்பட்ட சில உள்ளகக் கோட்பாடுகள் இலங்கையின் காப்புறுதித் தொழிற்றுறையின் விளைதிறன்மிக்க மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்காக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

# புள்ளிவிபர மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கக் குறியீடுகள்

| | காப்புறுதிக் கம்பனியின் முழுமையான பெயர் | வருடாந்த அறிக்கை நோக்கத்திற்கான கம்பனி அடையாள முத்திரைகள் |
|---|---|---|
| 1 | ஏஐஏ காப்புறுதி லங்கா பிஎல்சி | ஏஐஏ லைவ் |
| 2 | ஏஐஜி காப்புறுதிக் கம்பனி | ஏஐஜி |
| 3 | அலியான்ஸ் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட். | அலியான்ஸ் ஜெனரல் |
| 4 | அலியான்ஸ் லை∴வ் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட் | அலியான்ஸ் லை∴வ் |
| 5 | அமானா தக்காபுல் பிஎல்சி | அமானா ஜெனரல் |
| 6 | அமானா தக்காபுல் லை∴ப் பிஎல்சி | அமானா லை∴ப் |
| 7 | ஆர்பிகோ இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | ஆர்பிகோ |
| 8 | செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட் | செலிங்கோ ஜெனரல் |
| 9 | செலிங்கோ லை∴வ் இன்சூரன்ஸ் லிமிட் | செலிங்கோ லை∴ப் |
| 10 | கொன்டினென்டல் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட் | கொன்டினென்டல் |
| 11 | கோப்பரேட்டிவ் இன்ஷுவரன்ஸ் கம்பனி லிமிட் | கோப்பரேட்டிவ் ஜெனரல் |
| 12 | கோப்லை∴வ் இன்ஷுவரன்ஸ் லிமிட் | கோப்லை∴வ் |
| 13 | பெயார்பெஸ்ட் இன்ஷுவரன்ஸ் லிமிட் | பெயார்பெஸ்ட் |
| 14 | எச்என்பி அஷுவரன்ஸ் பிஎல்சி | எச்என்பி லை∴வ் |
| 15 | எச்என்பி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட் | எச்என்பி ஜெனரல் |
| 16 | ஜனசக்தி இன்ஷுவரன்ஸ் பி.எல்.சி. | ஜனசக்தி லை∴வ் |
| 17 | ஜனசக்தி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட் | ஜனசக்தி ஜெனரல் |
| 18 | லை∴வ் இன்ஷுவரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிட் | எல்ஐசி |
| 19 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட் | எல்ஓஎல்சி ஜெனரல் |
| 20 | எல்ஓஎல்சி லை∴வ் அஷுவரன்ஸ் லிமிட் | எல்ஓஎல்சி லை∴வ் |
| 21 | எம்பிஎஸ்எல் இன்ஷுவரன்ஸ் கம்பனி லிமிட் எம்.பி.எஸ்.எல். | எம்பிஎஸ்எல் |
| 22 | நஷனல் இன்ஷுவரன்ஸ் டிரஸ்ட் ∴பண்ட் | என்ஐடிஎப் |
| 23 | ஓறியன்ற் இன்ஷுவரன்ஸ் லிமிட் | ஓறியன்ற் |
| 24 | பீப்பள்ஸ் இன்ஷுவரன்ஸ் லிமிட் | பீப்பள்ஸ் |
| 25 | சீமாசஹித்த சணச ரக்ஷண சமாகம | சணச |
| 26 | சொப்ற்லொஜிக் லை∴வ் இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | சொப்ற்லொஜிக் லை∴வ் |
| 27 | ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லிமிட் | எஸ்எல்ஐசி |
| 28 | யூனியன் அஷுவரன்ஸ் ஜெனரல் லிமிட்டெட் | யூனியன் ஜெனரல் |
| 29 | யூனியன் அஷுவரன்ஸ் பிஎல்சி | யூனியன் லை∴ப் |

புள்ளிவிபர மீளாய்வில் காணப்படும் அட்டவணைகள் மற்றும் விளக்கப்படங்களில் உள்ள தரவுகள் பற்றி பொருள் விளக்கம் கொள்ளும் போது பின்வரும் பொதுக் குறிப்புகள் அவற்றை குறைநிரப்பு செய்கின்றன.

1. இந்த அறிக்கையில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள அட்டவணைகளும், விளக்கப்படங்களும் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.
2. வரையறுக்கப்பட்ட AIA பொதுக் காப்புறுதி லங்கா மற்றும் வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டும் 2016 ஆம் ஆண்டு ஒன்றிணைக்கப்பட்டு "வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பொதுக் காப்புறுதி" என அழைக்கப்படுகிறது.
3. 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் சொப்ட்லொஜிக் ஆயுள் காப்புறுதி பிஎல்சி ஏஷியன் அலயன்ஸ் காப்புறுதி பிஎல்சி என அறியப்பட்டிருந்தது.
4. வரையறுக்கப்பட்ட ஏஷியன் அலையன்ஸ் பொதுக் காப்புறுதி 2015 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பெயார்பெஸ்ட் ஏஷியாவினால் கையேற்கப்பட்டு, தற்போது "வரையறுக்கப்பட்ட பெயார்பெஸ்ட் காப்புறுதி" என அழைக்கப்படுகிறது.
5. வரையறுக்கப்பட்ட யூனியன் பொது காப்புறுதியானது, வரையறுக்கப்பட்ட ∴பெயார்பெஸ்ட் காப்புறுதி உடன் 2017 பெப்ரவரி 28 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இணைக்கப்பட்டிருப்பதுடன், தற்போது "வரையறுக்கப்பட்ட பெயார்பெஸ்ட் காப்புறுதி" என அழைக்கப்படுகிறது.
6. வரையறுக்கப்பட்ட AIGA காப்புறுதி முடிவுக்குக் கொண்டுவரும் செயன்முறையின் மீது இருப்பதால் IRCSL க்கு RBC திரட்டல்களை சமர்ப்பிப்பதற்கு வேண்டப்படவில்லை.
7. NITF பல்வேறுபட்ட வகையான காப்புறுதித் திட்டங்களை கையாள்வதனால் NITF இனால் இலாபகர மற்றும் இடர் அடிப்படையிலான முதலீடு சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள் ஒப்பிடுதலை பேணிப் பாதுகாப்பதற்காக கருத்திற் கொள்ளப்படவில்லை.
8. NITF இனுடைய மறுகாப்பீட்டு வியாபாரத்தில் அறிக்கையிடப்பட்டுள்ள இலக்கங்கள் NITF இனால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த திரட்டல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.
9. NITF இனால் செயற்படுத்தப்பட்ட பயிர் மற்றும் கடன் பாதுகாப்புத் திட்டத்தின் நிதிக் கூற்று, 2014 ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித் தொழிற்றுறையின் புள்ளிவிபர கணிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இந்த நடவடிக்கை காப்புறுதி ஒன்றாக கருத்திற் கொள்ளப்படவில்லை.

10. அட்டவணையிலுள்ள சில இலக்கங்கள் கிட்டிய இறுதி இலக்கத்திற்கு வட்டமாக்கப்பட்டுள்ளன. எனவே, காட்டப்பட்டுள்ள மொத்த தொகைக்கும் அதன் கூறுகளின் தொகைக்கும் இடையில் சிறிய வித்தியாசங்கள் இருக்கலாம்.
11. உடனடுத்த மீளாய்வுகள் காரணமாக ஏற்கனவே வெளியிடபபட்ட இலக்கங்களுடன் ஒப்பிடும் போது வித்தியாசங்கள் ஏற்படலாம்.
12. அடைப்புக் குறிக்குள் குறித்துக்காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் எதிர்மறை பெறுமதிகளாகும்.
13. பின்வரும் குறியீடுகள் முழு அறிக்கையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(a) = மீளமர்த்தப்பட்ட மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட இலக்கங்கள்
(b) = இடைக்கால இலக்கங்கள்
- = இல்லை

# இலங்கை காப்புறுதித் தொழிற்றுறை பற்றிய ஓர் கண்ணோட்டம்

## ஒரே பார்வையில் உலகளாவிய காப்புறுதிச் சந்தை

உலகளாவிய காப்புறுதி வளர்ச்சியுடன் தொடர்புபட்ட வாய்ப்புகள் 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் தொடர்ந்து முன்னேற்றமடைந்தது. இது, உண்மையில் உலகளாவிய கட்டுப்பண வளர்ச்சியில் சுமார் 3% அதிகரிப்பைக் காட்டியது. ஆயுள் காப்புறுதி கட்டுப்பண வளாச்சி, வளர்ந்து வரும் ஆசியாவில் சேமிப்புப் பொருட்களின் வலுவான விற்பனையினால் வளர்ச்சியடைந்ததுடன் ஆயுள் காப்புறுதியற்ற துறையுடனான வளர்ச்சி சுவிஸ் Re வெளியீடுகளின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட விலை அதிகரிப்புகளின் அளவில் தங்கியிருந்தது.

உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய நிறுவனங்களுடன் இணைந்து காப்புறுதி வழங்குநர்களால் உலகளாவிய ரீதியில் “InsurTech” தீர்வுகளுடைய பலன்களை செயற்திறனுடன் அணுகுவதை நோக்கிய போக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிவதுடன். இணைய அச்சுறுத்தல்கள் காரணமாக இணைய காப்புறுதி தீர்வுகளுக்கும் தேவைப்பாடுகள் உள்ளன.

## ஒரே பார்வையில் இலங்கையின் பொருளாதாரம்

2017 ஆம் ஆண்டு இலங்கை பொருளாதாரம் சவால்மிக்க ஆண்டாக இருந்தது. அதன் பொருளாதார வளர்ச்சி 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.1% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. இயற்கை அனர்த்தங்கள், உயரிய பணவீக்கம், மற்றும் சிக்கலான அரசியல் சூழல் என்பன இதற்கு காரணமாகும். இலங்கையின் விவசாய வளர்ச்சி மோசமான காலநிலைக் காரணிகளால் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியதன் காரணமாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ரூபா 13,289 பில்லியன் ஆகும். கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகள் என்பனவும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு மெதுவான வேகத்திலேயே வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டில் பாரிய பொருளாதார நிலைமைகள் சாவல்கள் மிக்கதாக இருந்த போதிலும், இவ்வருட காலப்பகுதியின் போது நிதித்துறை முன்னேற்றமான செயற்பாட்டை காட்டியது. இதில் வங்கித்துறை முன்னணி வகிப்பதுடன், அதனைத் தொடர்ந்து ஏனைய சேமிப்புக்களை பெற்றுக்கொள்ளும் நிதி நிறுவனங்கள், ஒப்பந்த ரீதியான சேமிப்பு நிறுவனங்கள் என்பனவும் இதற்கு பங்களிப்பு செய்தன. “ஒப்பந்தத்துடன் கூடிய சேமிப்பு நிறுவனங்கள்” என்ற வகைக்குள் காப்புறுதித் துறையும் ஒரு பங்குபற்றுநராக வருவதோடு, அது, 2017 ஆம் ஆண்டில் சாதகமான செயற்பாட்டினைக் காட்டியிருந்தது. (மூலம்: இலங்கை மத்திய வங்கியின் 2017 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கை).

## இலங்கை காப்புறுதிச் சந்தை

ஒழுங்குபடுத்தல் தொடர்பான தேவைப்பாடு, முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம் மற்றும் அதிகூடிய வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்கள் என்பன சவால்களை சந்தித்த போதிலும், ஒட்டுமொத்தமாக காப்புறுதிக் கைத்தொழில் உயரிய விற்பனைகளையும் இலாபகரத்தின் மீதும் கவனம் செலுத்தியிருந்தன.

காப்புறுதி தொழிற்றுறையின் மொத்த காப்புறுதிக் கட்டுப்பணம் (GWP) 2017 ஆம் ஆண்டு 15.07% ஆல் அதாவது, ரூபா 164,623 மில்லியனாக (2016 இல் ரூபா 143,067 மில்லியன்) வளர்ச்சியடைந்தது. கட்டுப்பபணத்தின் வளர்ச்சி பெருமளவில் மோட்டார் மற்றும் உடல்நலக் காப்புறுதியின் உப வகுப்புக்களாக அமையும் பொதுக் காப்புறுதித் துறையினால் பெருமளவில் வளர்ச்சியடைந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த GWP 2017 ஆம் ஆண்டில் ரூபா 93,119 மில்லியனாக அமைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டு ரூபா 79,590 மில்லியனாக இருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 இல் 17% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆயுள் காப்புறுதி துறையும் கட்டுப்பண வருமானத்திற்கு 12.65% வளர்ச்சியைப் பதிவு செய்து சாதகமான பங்களிப்பை காட்டியுள்ளது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் முதலீட்டுடன் சம்பந்தப்பட்ட உற்பத்திகளும் குறைந்து செல்லும் கால காப்புறுதி உற்பத்திகளும் ஆயுள் காப்புறுதி கட்டுப்பண வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு செய்துள்ளன. இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதிக் கம்பனிகள் ரூபா 71,504 மில்லியனை மொத்த GWP ஆக அறிக்கையிட்டுள்ளது. (2016 இல் ரூபா 63,477 மில்லியன்) விளக்கப்படம் 1, கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்கு உரிய காப்புறுதித்துறையின் கட்டுப்பண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதத்தை விளக்குகிறது.

வரைபடம் 01
காப்புறுதித் தொழிற்துறை கட்டுப்பண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்



அட்டவணை 1

கட்டுப்பண வருமானமும் ஊடுருவலும்

| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|---|---|---|
| கட்டுப்பண வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்லியனில்) | 41,676 | 44,596 | 53,691 | 63,477 | 71,504 |
| கட்டுப்பண வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்லியனில்) | 58,284 | 61,202 | 69,271 | 79,590 | 93,119 |
| மொத்தக் கட்டுப்பண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்லியனில்) | 99,960 | 105,798 | 122,962 | 143,067 | 164,623 |
| மொத்தக் கட்டுப்பண வருமானத்தின் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 10.22 | 5.84 | 16.22 | 16.35 | 15.07 |
| மீள்காப்புறுதி கட்டுப்பண வருமானம் (ரூ. மில்லியனில்) ** | 1,042 | 2,041 | 1,738 | 2,397 | 3,683 |
| நடப்புச் சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூ. பில்லியனில்)* GDP வளர்ச்சி வீதம் %* | 9,592 | 10,448 | 10,952 | 11,907 | 13,289 |
| GDP வளர்ச்சி வீதம் % * | 3.40 | 4.90 | 4.84 | 4.50 | 3.10 |
| ஊடுருவல் % (GDP இன் சதவீதமாக காப்புறுதி வியாபாரத்தின் மொத்தக் கட்டுப்பணம்) | 1.04 | 1.01 | 1.12 | 1.20 | 1.24 |
| ஊடுருவல் % (GDP இன் சதவீதமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் கட்டுப்பணம்) | 0.43 | 0.43 | 0.49 | 0.53 | 0.54 |
| ஊடுருவல் % (GDP இன் சதவீதமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டுப்பணம்) | 0.61 | 0.59 | 0.63 | 0.67 | 0.70 |
| காப்புறுதி அடர்த்தி - (மொத்தக் கட்டுப்பண வருமானம் - காப்புறுதி வியாபாரம் / சனத்தொகை) ரூ. | 4,857 | 5,094 | 5,865 | 6,747 | 7,677 |
| சனத்தொகை "000 (நடு ஆண்டு)* | 20,579 | 20,771 | 20,966 | 21,203 | 21,444 |

* மூலம் : இலங்கை மத்திய வங்கியும் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமும்

** மீள் காப்பீட்டு கட்டுப்பண வருமானம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மீள் காப்பீட்டுக் கட்டுப்பணங்களின் வீத வரியை ஜேவுகு க்கு விட்டுக்கொடுத்துள்ளது.

GWP யில் வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மொத்த காப்புறுதி ஊடுருவல் 2017 ஆம் ஆண்டில் 1.24% ஆகவே இருந்தது. இதனுள் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் முறையே 0.54% மற்றும் 0.70% பங்களிப்புக்களை மேற்கொண்டிருந்தன. எவ்வாறாயினும், இந்தக் கணக்கீட்டில் காப்புறுதியின் கட்டுப்பண வருமானம் மற்றும் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சமூக பாதுகாப்பு சபை, நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் என்பனவற்றினால் வழங்கப்பட்ட நுண் காப்புறுதிக் கொள்கைகள் என்பன இந்த வருமானத்தைக் கணக்கிடும் போது கருத்திற் கொள்ளப்படவில்லை. ஏனெனில், இவையனைத்தும் தற்போது IRCSL உடைய ஆளுகையின் கீழ் வரமாட்டாது.

இலங்கையில் காப்புறுதிக்கான தேவைப்பாடு வாடிக்கையாளர்களின் செலவழிக்கத்தக்க வருமானத்தில் ஒப்பீட்டளவில் தங்கியுள்ளது. குறைந்தமட்ட செலவழிக்கத்தக்க வருமானம் அத்துடன், விழிப்புணர்வு பற்றாக்குறை காப்புறுதிக் கொள்கை முகாமைத்துவத்தில் உள்ள வினைத்திறனற்ற தன்மை, நாட்டிலுள்ள சமூக பாதுகாப்பு நலன்கள் மற்றும் சமூக அடிப்படையிலான நலன்கள் ஆகியனவற்றின் காரணமாக காப்புறுதி ஊடுருவல் மட்டம் சாதகமான போக்கை நோக்கி நகராததுடன் கடந்த தசாப்தத்தில் சுமார் 1% ஆகத் தேங்கியுள்ளது.

2017 ஆம் ஆண்டு மொத்த சனத்தொகையில் விகிதமாக மொத்த கட்டுப்பணத்தின் வருமானத்தின் மூலம் காப்புறுதி அடர்த்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 6,746 உடன் ஒப்பகையில், ரூபா 7,677 ஆக ஓரளவு வளர்ச்சியை காட்டுகிறது. அட்டவணை 1, கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் உள்ள GWP யின் விபரங்கள் காப்புறுதி ஊடுருவல் மற்றும் அடர்த்தி என்பனவற்றை வழங்குகிறது. இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் தொடர்பாக சில போக்குகள், சந்தர்ப்பங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தும் மாற்றங்கள் என்பன கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளியல் எதிர்வுகூறல்களின் அடிப்படையில் காப்புறுதிக் கைத்தொழில் நாட்டில் நடுத்தர மட்டத்திலிருந்து நீண்டகாலத்தை நோக்கி வளர்ச்சியடையும் என்பதுடன், உயர் நடுத்தர வருமான மட்டத்தை நோக்கி நகரக்கூடிய வாய்ப்பு இருப்பதால் இது செலவழிக்கத்தக்க வருமானத்தில் முன்னேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் உயரிய காப்புறுதி ஊடுருவல் ஒன்று ஏற்படும் என்ற பச்சை விளக்கைக் காட்டுகிறது. மேலும், நுண் காப்புறுதி தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட ஒழுங்குபடுத்தல்கள், அபிவிருத்திகள் குறைந்த வருமானமுடைய மக்களின் தேவைகளை இலக்காகக் கொண்டு இருப்பதால் நாட்டில் காப்புறுதி ஊடுருவல் மட்டத்தை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் ஒன்று உள்ளது.

இன்னும் 02 தசாப்தங்களில் இலங்கையில் ஏற்படக்கூடிய மக்கள் தொகை மாற்றங்களில் ஒவ்வொரு நான்கு ஆட்களுக்கும் ஒரு சிரேஷ்ட பிரசை இருப்பார் என்ற அடிப்படையில் முதியோர் சனத்தொகை வீதத்தில் அதிகரிப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது, விசேடமாக உடல்நல மற்றும் ஓய்வூதியத்துடன் தொடர்புபட்ட காப்புறுதிப் பொருட்களின் கேள்வியை அதிகரிக்கும். மேலும், வரவிருக்கின்ற IFRS 17 நடுத்தரகால காப்புறுதி வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காப்பீட்டாளர்களின் முறைமைகள், செயற்பாடுகள் மூலதனம் இடர் முகாமைத்துவம் போன்றவற்றில் முழுமையான மாற்றம் ஒன்றை உருவாக்கலாம். காப்புறுதி வழங்குநர்கள் விவேகமாக திட்டமிடுவதன் மூலம், வினைத்திறன்களையும், அதிகரித்த தகைமைகளையும் உருவாக்குவதால் அதன் மூலம் இவ்வியாபாரம் மேலும் விரிவான நன்மைகளை அடைந்து கொள்ளலாம்.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி வலுவுக்கு வந்த வரிவிதிப்பு சட்டங்களுக்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் சில துறைகளில் தாக்கங்களை ஏற்படுத்தின. அவையாவன - பங்குதாரர்கள் மற்றும் காப்புறுதியாளர்களுக்கு

ஆயுள் காப்புறுதி வழங்குநர்களின் surplus பங்கீடு, வரிவிதிக்கக்கூடிய இலாபங்களின் கணக்கீடு போன்றன இதற்கமைவாக இவ்வருட காலப்பகுதியின் போது நியமிக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளர்களின் பரிந்துரைகளுடன் சில ஆயுள் காப்புறுதி வழங்குநர்கள் பொருத்தமான surplus களை பங்குதாரர் நிதியத்திற்கு மாற்றம் செய்துள்ளனர். இதன் விளைவாக, 2017 ஆம் ஆண்டுக்கான இலாபங்கள் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளன.

அண்மைய வருடங்களில் பொருள் அபிவிருத்தி, பங்கீடு, வாடிக்கையாளர் சேவை உள்ளடங்கலாக காப்புறுதி வாழ்க்கை சுழற்சியில் பல வழிகளில் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தின் மூலம் அனுகூலங்களைப் பெறுவதற்கு இலங்கையின் காப்புறுதி வழங்குநர்கள் எத்தனித்துள்ளனர். பல காப்புறுதி நிறுவனங்களும் காப்புறுதி இடைத்தரகர் கம்பனிகளும் காப்புறுதி சேவையின் பரப்பெல்லையை விரிவாக்குவதற்காக தொலைத்தொடர்பு சேவைகள் வழங்குநர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் காப்புறுதி வழங்குநர்கள் குறிப்பாக NITF அடர்ந்த பருவகால மழை உட்பட இயற்கை அனர்த்தங்களினால் பல சவால்களை எதிர்கொண்டனர். இந்த மழை இலங்கையின் பல மாவட்டங்களில் மோசமான வெள்ளப் பெருக்குகளையும், மண்சரிவுகளையும் ஏற்படுத்தின.

## காப்புறுதி நிறுவனங்களின் மொத்த சொத்துக்கள்

வட்டி வீதங்களில் ஏற்பட்ட உயரிய ஏற்ற இறக்கம், பணவீக்கம் போன்ற பாரிய பொருளாதார காரணிகளும் ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல் தேவைப்பாடுகள் காரணமாக காப்புறுதி வழங்குநர்களுக்கு அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முகாமைத்துவம் செய்வதில் பல சவால்கள் ஏற்பட்டன. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு காப்புறுதி வழங்குநர்களால் அறிக்கையிடப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 582,417 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டின் 12.61% வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 10.87% ஆனால் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அட்டவணை 2 மற்றும் விளக்கப்படம் 2 என்பன கடந்த 5 வருட காலப்பகுதிகளில் காப்புறுதித்துறையில் இருந்த மொத்த சொத்துக்களுடன் தொடர்புபட்ட விபரங்களை சித்தரிக்கின்றன.

பொதுவாக காப்புறுதி வழங்குநர்களின் பொறுப்புக்கள் நீண்டகாலப் பகுதியாக இருப்பதால் நீண்டகால சொத்துக்களில் அவர்கள் முதலீடு செய்வதை இயக்குவதன் மூலம் அர்த்தமுள்ள வகையில் நிதிப் பாய்ச்சல்கள் மதிப்பீடு செய்யப்படலாம். 2017 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட ஆயுள் காப்புறுதி வழங்குநர்களின் மொத்த சொத்துக்கள் ரூபா 392,400 மில்லியன் ஆகும். இதற்கு முரணாக பொதுக் காப்புறுதி வழங்குநர்கள் காப்புறுதிக் கொள்கை எழுத்தாக்கம் செய்யப்பட்ட நாளில் இருந்து கோரிக்கைகளை பெறுவதால், அவர்களால் கணிசமான அளவு திரவச் சொத்துக்களை பேணிப் பாதுகாக்கக் கூடியதாகவுள்ளது. 2017 ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதி வழங்குநர்களால் அறிக்கையிடப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 185,767 மில்லியன் ஆகும்.

SLIC, செலிங்கோ ஆயுள், AIA ஆயுள், மற்றும் யூனியன் ஆயுள் ஆகியன சொத்துக்களின் இலாகாக்களுக்கு பிரதான பங்களிப்பாளர்களாக உள்ளன.

தேசிய மீள் காப்புறுதி வழங்குநரான NITF அவர்களுடைய மீள் காப்பீட்டு வியாபாரத்துடன் தொடர்புபட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,250 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் NITF இன் மீள் காப்பீட்டு வியாபார சொத்துக்களின் இலாகா 2017 ஆம் ஆண்டு 26.15% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், NITF இனுடைய மீள் காப்பீட்டு வியாபாரத்துடன் தொடர்புபட்ட நிதி முதலீடுகளில் கணிசமான அளவு குறைவு ஏற்பட்டுள்ளது.

## பாரிய நிதித்துறைகளின் மொத்த சொத்துக்களின் பங்கீடு

அட்டவணை 3 மற்றும் விளக்கப்படம் 3

வரைபடம் 02

காப்புறுதிக் கைத்தொழிலின் மொத்த சொத்துக்களும் சொத்துக்களின் வளர்ச்சி வீதமும்




அட்டவணை 2

காப்புறுதி நிறுவனங்களின் மொத்த சொத்துக்கள்

| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்ட கால காப்புறுதி (ரூ. மில்லியன்) | 216,275 | 247,061 | 312,713 | 345,589 | 392,400 |
| பொதுக் காப்புறுதி (ரூ. மில்லியன்) | 155,636 | 174,588 | 151,177 | 173,985 | 185,767 |
| மீள்காப்புறுதி (ரூ. மில்லியன்) | 1,453 | 3,065 | 3,417 | 5,755 | 4,250 |
| மொத்தம் (ரூ. மில்லியன்) | ***365,760** | ***422,031** | ***466,519** | **525,329** | **582,417** |

*பிரிவுகளுக்கிடையேயான கொடுக்கல் - வாங்கல்கள் நீக்கப்பட்டிருக்கின்றன.

இல் சித்தரிக்கப்பட்டவாறு, நிதித்துறை 2016 இன் ரூபா 15,220 பில்லியனாக இருந்த சொத்து இலாகாவை 2017 ஆம் ஆண்டு ரூபா 17,076 பில்லியனாக மேலும் விரிவடையச் செய்து, பொருளாதாரத்துறைக்கு சாதகமான பங்களிப்பை வழங்கியுள்ளது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டின் நிதி நிறுவனங்களின் சொத்து அடித்தளம் 12.19% ஆல் அதிகரித்துள்ளது.

வங்கித்துறை மொத்த சொத்துக்களில் 69.7% ஐ பிரதிபலிக்கின்றது. இது, 2017 ஆம் ஆண்டில் நிதித்துறையினால் பதிவு செய்யப்பட்ட 12.50% வளர்ச்சி வீதத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளது. விசேட நிதி நிறுவனங்களின் நிதி அடித்தளம் ரூபா 388.9 பில்லியனாக (2016 இல் ரூபா 335.4 பில்லியன்) விரிவடைந்து, 2017 இல் 15.95% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அத்துடன், ஒப்பந்தத்துடன் கூடிய சேமிப்பு நிறுவனங்கள் 11.82% னால் வளர்ச்சியடைந்து முன்னேற்றம் அடைந்து செயற்பாட்டைப் பதிவு செய்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டு அதன் சொத்துக்களின் பெறுமதி 2,837 பில்லியனாக பதிவு செய்துள்ளது. இத்துறை நிதித்துறையின் மொத்த சொத்துக்களின் 16.6% பங்களிப்பை மேற்கொண்டுள்ளன.

கடந்த வருடங்களைப் போன்று 2017 ஆம் ஆண்டிலும் காப்புறுதிக் கம்பனிகள் நிதிதுறையின் மொத்த சொத்துக்களில் 3.4% தன்னகத்தே கொண்டுள்ளன.

## One-Off Surplus

IRCSL இனால் 2016 ஆம் ஆண்டு இடர் அடிப்படையிலான முதலீட்டு ஆளுகை அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்தும் கொள்கைப் பொறுப்பு மதிப்பீட்டின் மாற்றம் என்பன சில நீண்டகால காப்புறுதி வழங்குநர்களின் கொள்கைப் பொறுப்புக்களின் குறைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் surplus கணிசமான அளவு அதிகரிப்பை ஏற்படுத்தியது. இங்கு கூறப்பட்ட surplus "One-Off Surplus" எனப் பெயரிப்பட்டதுடன், ஆயுள் காப்புறுதி நிதியத்தில் வைக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், ஆயுள் காப்புறுதி பிரிவுடன் தொடர்புபட்ட வரிவிதிப்பு சட்டங்களுக்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் இங்கு கூறப்பட்ட surplus ஐ பங்குதாரர்களின் நிதியத்திற்கு மாற்றம் செய்வதற்கு IRCSL உடைய அங்கீகாரத்தை பெற வேண்டுமெனத் தேவைப்படுத்தியதோடு, அதனை மட்டப்படுத்தப்பட்ட ஒதுக்கீடாக பேணிப் பாதுகாக்குமாறும் தேவைப்படுத்தப்பட்டது. இதேவிடயத்தை கையாள்வதற்காக One-Off Surplus ஐ இனங்காண்பதற்கும் நடத்துவதற்கும் IRCSl இனால் வழிகாட்டி 16 வழங்கப்பட்டது.

இதற்கமைய, பங்குபற்றும் வியாபாரத்தைத் தவிர்த்து நீண்டகால காப்புறுதி வழங்குநர்களுக்கு 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திலோ அல்லது அதனை உடனடுத்து வருகின்ற ஒரு திகதியிலோ இந்த வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து, One-Off Surplus ஐ பங்குதாரர்களுக்கு மாற்றம் செய்வதற்கு IRCSL அனுமதி வழங்கியது. மேலும், இங்கு குறிப்பிட்ட Surplus பங்குதாரர் நிதியத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல்கள் ஒதுக்கம் என்ற வகையில் பேணிப் பாதுகாக்குமாறு காப்புறுதி வழங்குநர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

பங்குபற்றும் வியாபாரம் தொடர்பான One-Off Surplus ஐ ஒதுக்கப்படாத மதிப்பீட்டு Surplus இல் ஒரு பகுதியாக பங்குபற்றும் நிதியம் ஒன்றாக வைத்திருக்குமாறு IRCSL காப்புறுதி

வரைபடம் 05

காப்புறுதி நிறுவனங்களின் விநியோக மார்க்கம்




| | நீண்டகால 2016 | பொது 2016 | நீண்டகால 2017 | பொது 2017 |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 87.59 | 27.17 | 87.94 | 27.15 |
| தரகர்கள் | 0.51 | 17.41 | 0.79 | 17.57 |
| நேரடி | 5.91 | 43.25 | 4.52 | 44.81 |
| பாங்கஷ்ரன்ஸ் | 5.04 | 3.86 | 5.97 | 2.66 |
| ஏனைய | 0.95 | 8.30 | 0.78 | 7.81 |

அட்டவணை 03

முக்கிய நிதிப் பிரிவுகளின் மொத்த சொத்துக்கள் விநியோகம்

| நிதி நிறுவனங்கள் | சொத்துக்களின் விநியோகம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
| | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % |
| வங்கித் துறை | 7,187.5 | 69.6 | 8,442.0 | 70.3 | 9,503.7 | 68.7 | 10,575.8 | 69.5 | 11,897.4 | 69.7 |
| ஏனைய வைப்பு நிதி நிறுவனங்கள் | 756.4 | 7.3 | 857 | 7.1 | 1044.2 | 7.5 | 1246.7 | 8.2 | 1370.4 | 8.0 |
| சிறப்பு நிதி நிறுவனங்கள் | 378 | 3.7 | 441 | 3.7 | 557.8 | 4.0 | 335.4 | 2.2 | 388.9 | 2.3 |
| ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் | 1,632.5 | 15.8 | 1,853.6 | 15.4 | 2,257.5 | 16.3 | 2,536.6 | 16.7 | 2,836.50 | 16.6 |
| காப்புறுதிக் கம்பனிகள் | 365.8 | 3.6 | 421.1 | 3.5 | 466.7 | 3.4 | 525.2(a) | 3.4 | 582.4(b) | 3.4 |
| மொத்தம் | **10,320.2** | **100** | **12,015.0** | **100.0** | **13,830.8** | **100.0** | **15,223.4** | **100.0** | **17,075.6** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: காப்புறுதி நிறுவனங்களின் சொத்துக்கள் காப்புறுதி நிறுவனங்களிலிருந்து பெற்ற தரவுகளின் அடிப்படையில் மீளமைக்கப்படடன

வழங்குநர்களை வேண்டியுள்ளது. இந்த Surplus RII சட்டத்தின் பிரிவு 38 க்கு அமைய காப்புறுதிக் கொள்கையாளர்களுக்கு உரிய போனஸ் என்ற வகையில் பங்குதாரர்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மேலும், விளம்பப்பட்ட போனஸ் காப்புறுதிக் கொள்கையாளர்களின் நியாயமான எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிலையானதாகவும் ஒப்புரவுடன் கூடியதாகவும் இருத்தல் வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது. பங்குபற்றுதல் வியாபாரத்துடன் சேர்த்து ஆயுள் காப்புறுதி வழங்குநர்களால் அறிக்கையிடப்பட்ட மொத்த One-Off Surplus ரூபா 29,399 மில்லியன் ஆகும். அத்துடன், 2016 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு பங்குபற்றும் வியாபாரத்தைத் தவிர்த்த One-Off Surplus ரூபா 10,823 மில்லியன் மற்றும் ரூபா 18,572 மில்லியன் ஆகும். IRCSL உடைய அங்கீகாரத்தைப் பெற்றதன் மீது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு பங்குதாரர்கள் நிதியத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் Surplus ஆக மாற்றம் செய்யப்பட்ட One-Off Surplus இன் பெறுமதி ரூபா 15,867 மில்லியன் ஆகும். இங்கு கூறப்பட்ட மாற்றங்கள் 2017 ஆம் ஆண்டு விசேட ஆயுள் காப்புறுதி வழங்குநர்களுக்கு பதிவு செய்யப்பட்ட இலாபங்களை அதிகரிப்பதற்கு நேரடியாக பங்களிப்புச் செய்தது.

## இலாபம்

இலாபமுடைமை அட்டவணை 4 இல் சித்தரிக்கப்பட்டவாறு சில ஆயுள் காப்புறுதி வழங்குநர்களால் One-Off Surplus மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதி வழங்குநர்களால் அறிக்கையிடப்பட்ட வரி விதிப்புக்கு முன்னரான இலாபம் ரூபா 23,401 மில்லின் ஆகும். One-Off Surplus மாற்றத்திற்கு முன்னரான வரி விதிப்புக்கு முன்னரான இலாபம்

அட்டவணை 04

காப்புறுதி நிறுவனங்களின் இலாபத் தன்மை

| காப்புறுதி வழங்குநர் | 2016 (அ) நீண்ட காலக் காப்புறுதி (ரூ.'000) | 2016 (அ) பொதுக் காப்புறுதி (ரூ.'000) | 2016 (அ) மொத்தம் (ரூ.'000) | 2017 (ஆ) நீண்டகாலக் காப்புறுதி (ரூ.'000) One-off Surplus க்கு முந்திய மாற்றம் | 2017 (ஆ) நீண்டகாலக் காப்புறுதி (ரூ.'000) One-off Surplus க்கு பிந்திய மாற்றம் | 2017 (ஆ) பொதுக் காப்புறுதி (ரூ.'000) | 2017 (ஆ) மொத்தம் (ரூ.'000) |
|---|---|---|---|---|---|---|---|
| AIA லை∴ப் | 793,250 | | 793,250 | 7,597,099 | 13,677,947 | | 13,677,947 |
| AIG | | (64,384) | (64,384) | | | (40,526) | (40,526) |
| அலியான்ஸ் ஜெனரல் | | 37,636 | 37,636 | | | 193,318 | 193,318 |
| அலியான்ஸ் லை∴ப் | 25,959 | | 25,959 | 104,051 | 104,051 | | 104,051 |
| அமானா ஜெனரல் | | (139,172) | (139,172) | | | 61,144 | 61,144 |
| அமானா லை∴ப் | 35,691 | | 35,691 | 52,207 | 52,207 | | 52,207 |
| ஆர்பிகோ | 107,888 | | 107,888 | 49,033 | 49,033 | | 49,033 |
| செலிங்கோ ஜெனரல் | | 1,381,126 | 1,381,126 | | | 1,702,653 | 1,702,653 |
| செலிங்கோ லை∴ப் | 3,743,726 | | 3,743,726 | 6,351,351 | 9,807,535 | | 9,807,535 |
| கொன்டினென்டல் | | 191,276 | 191,276 | | | 291,386 | 291,386 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | | 189,142 | 189,142 | | | 429,954 | 429,954 |
| கோப்லை∴ப் | (7,266) | | (7,266) | 53,774 | 53,774 | | 53,774 |
| பெயார்பெஸ்ட் | | (485,083) | (485,083) | | | 720,450 | 720,450 |
| HNB லை∴ப் | 656,641 | | 656,641 | 725,665 | 725,665 | | 725,665 |
| HNB ஜெனரல் | | 48,879 | 48,879 | | | 201,722 | 201,722 |
| ஜனசக்தி லை∴ப் | 953,017 | | 953,017 | (104,193) | 1,691,635 | | 1,691,635 |
| ஜனசக்தி ஜெனரல் | | 1,277,445 | 1,277,445 | | | 1,242,429 | 1,242,429 |
| LIC | 3,394 | | 3,394 | 24,645 | 24,645 | | 24,645 |
| LOLC ஜெனரல் | | 313,297 | 313,297 | | | 272,157 | 272,157 |
| LOLC லை∴ப் | 320,534 | | 320,534 | 144,595 | 400,730 | | 400,730 |
| MBSL | | (220,526) | (220,525) | | | (46,437) | (46,437) |
| ஓறியன்ற் | | 30,565 | 30,565 | | | 65,877 | 65,877 |
| பீப்பள்ஸ் | | 733,010 | 733,010 | | | 866,691 | 866,691 |
| சணச | 176,591 | (68,497) | 108,094 | 77,914 | 77,914 | 6,838 | 84,752 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 877,443 | | 877,443 | 1,106,517 | 1,904,521 | | 1,904,521 |
| SLIC | 4,555,716 | 9,235,253 | 13,790,969 | 3,216,447 | 3,314,683 | 2,575,519 | 5,890,202 |
| யூனியன் லை∴ப் | 1,373,307 | | 1,373,307 | 4,002,194 | 7,384,128 | | 7,384,128 |
| யூனியன் ஜெனரல் | | 776,630 | 776,630 | | | | |
| மொத்தம் | **13,615,891** | **13,236,597** | **26,852,488** | **23,401,299** | **39,268,468** | **8,543,175** | **47,811,643** |

வருடா வருடம் 71.87% ஆல் முன்னேற்றமடைந்துள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இந்த மேம்பாடு பிரதானமாக நியமிக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளர்களின் பரிந்துரைகளுடன் சில பாரிய கம்பனிகளால் பங்குபற்றாத வியாபாரத்தைத் தவிர்த்து பங்குதாரர்களுக்கு மாற்றம் செய்யப்பட்ட Surplus லமாக ஏற்பட்டது. “மட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் ஒதுக்கத்திற்கு IRCSL உடைய அங்கீகாரத்துடன் பங்குதாரர்களின் நிதியத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட மொத்த One-Off Surplus இன் தொகை ரூபா 15,867 மில்லியன் ஆகும். செலிங்கோ ஆயுள், யூனியன் ஆயுள், ஜனசக்தி ஆயுள், சொப்ட்லொஜிக், LOLC ஆயுள், SLIC மற்றும் AIA ஆகிய கம்பனிகள் இதனை மேற்கொண்டுள்ளன. இதற்கமைய, இங்கு குறிப்பிடப்பட்ட மாற்றத்துடன் ஆயுள் காப்புறுதி தொழிற்துறையின் 2017 ஆம் ஆண்டுக்கான மொத்த இலாபங்கள் ரூபா 39.268 மில்லியன் ஆகும்.

2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 13,236 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி வழங்குநர்களால் பதிவு செய்யப்பட்ட வரிவிதிப்புக்கு முன்னரான மொத்த இலாபம் ரூபா 8,543 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட உயரிய இலாபமுடைமை பிரதானமாக SLIC உடைய துணைக் கம்பனியின் கணிசமான அளவு பெறப்பட்ட பங்குலாப வருமானமான ரூபா 6,750 மில்லியனால் ஏற்பட்டது.

## காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர் நிதியங்கள்

IRCSL இனால் வழங்கப்பட்ட வழிகாட்டி 16 இன் நிபந்தனைகளுக்கு அமைவாக சில ஆயுள் காப்புறுதி வழங்குனர்களால் மாற்றம் செய்யப்பட்ட One-Off Surplus உடன் ஏற்கனவே விளக்கப்பட்ட வகையில் ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளினால் மொத்த பங்குதாரர் நிதியங்களுக்கு மேம்படுத்தப்பட்ட முன்னேற்றம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக அட்டவணை 5 இல் சித்தரிக்கப்பட்டவாறு மொத்த பங்குதாரர் நிதியங்கள் ரூபா 176,706 மில்லியனாக (2016 இல் ரூபா 140,445 மில்லியன்) அமைகிறது. அத்துடன் 2016 இல் பதிவு செய்யப்பட்ட 3.15% வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில், 2017 இல் 25.82% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு ரூபா 61,643 மில்லியனை பங்குதாரர்களின் நிதியமாக பதிவு செய்து SLIC மிக வலுவான இடத்திலுள்ளது. எவ்வாறாயினும், SLIC பொதுக் காப்புறுதி வியாபாரம், ஆயுள் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டையும் வெவ்வேறாக பிரிக்க வேண்டிய நிலையிலுள்ளது. 2016 ஆம் ஆண்டில் ரூபா 11,912 மில்லியனை பதிவுசெய்து அதனுடன் ஒப்பிடும் போது ரூபா 20,647 மில்லியனை 2017 இல் பதிவு செய்து செலிங்கோ ஆயுள் இரண்டாவது பெரிய பங்குதாரர் நிதியத்தைக் கொண்டுள்ளது.

நியமிக்கப்பட்ட காப்பீட்டுக்

அட்டவணை 5

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தப் பங்குதாரர்கள் நிதி

| காப்புறுதி வழங்குநர் | 2016 (அ) | | 2017 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தப் பங்குதாரர் நிதி (ரூ.'000) | % | குறிப்பிடு மூலதனம் (ரூ.'000) | கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை இருப்பு (ரூ.'000) | மொத்த ஏனைய ஒதுக்கங்கள் (ரூ.'000) | மொத்தப் பங்குதாரர் நிதி (ரூ.'000) | % |
| AIA லைஃப் | 5,360,984 | 3.82 | 511,922 | 6,080,848 | 10,766,147 | 17,358,917 | 9.82 |
| AIG | 43,469 | 0.03 | 812,215 | | (809,272) | 2,943 | 0.00 |
| அலியான்ஸ் ஜெனரல் | 973,471 | 0.69 | 905,500 | | 679,081 | 1,584,581 | 0.90 |
| அலியான்ஸ் லைஃப் | 486,186 | 0.35 | 739,624 | | 149,782 | 889,406 | 0.50 |
| அமானா ஜெனரல் | 1,758,292 | 1.25 | 1,860,001 | | (38,462) | 1,821,539 | 1.03 |
| அமானா லைஃப் | 523,517 | 0.37 | 500,000 | | 75,343 | 575,343 | 0.33 |
| ஆர்பிகோ | 754,710 | 0.54 | 675,565 | | 101,686 | 777,251 | 0.44 |
| செலிங்கோ ஜெனரல் | 8,801,136 | 6.27 | 500,200 | | 9,362,137 | 9,862,337 | 5.58 |
| செலிங்கோ லைஃப் | 11,911,828 | 8.48 | 500,001 | 3,456,184 | 16,690,712 | 20,646,897 | 11.68 |
| கொன்டினென்டல் | 1,194,534 | 0.85 | 750,000 | | 688,891 | 1,438,891 | 0.81 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 1,695,343 | 1.21 | 1,260,252 | | 803,932 | 2,064,184 | 1.17 |
| கோப்லைஃப் | 485,502 | 0.35 | 500,000 | | 96,209 | 596,210 | 0.34 |
| பெயார்பெஸ்ட் | 816,567 | 0.58 | 3,131,949 | | 1,398,137 | 4,530,086 | 2.56 |
| HNB லைஃப் | 2,875,330 | 2.05 | 1,171,875 | | 2,604,402 | 3,776,277 | 2.14 |
| HNB ஜெனரல் | 971,728 | 0.69 | 1,150,000 | | 20,220 | 1,170,220 | 0.66 |
| ஜனசக்தி லைஃப் | 8,148,633 | 5.80 | 4,853,752 | 1,795,829 | 2,811,296 | 9,460,877 | 5.35 |
| ஜனசக்தி ஜெனரல் | 6,718,571 | 4.78 | 5,878,017 | | 1,866,085 | 7,744,102 | 4.38 |
| LIC | 527,255 | 0.38 | 500,000 | | 93,357 | 593,357 | 0.34 |
| LOLC ஜெனரல் | 991,715 | 0.71 | 700,000 | | 566,740 | 1,266,740 | 0.72 |
| LOLC லைஃப் | 583,270 | 0.42 | 800,000 | 256,134 | (72,101) | 984,033 | 0.56 |
| MBSL | 91,728 | 0.07 | 1,080,022 | | (1,046,207) | 33,815 | 0.02 |
| NITF | 7,564,859 | 5.38 | | | 7,260,349 | 7,260,349 | 4.11 |
| ஓறியன்ற் | 617,545 | 0.44 | 825,000 | | (156,108) | 668,892 | 0.38 |
| பீப்பள்ஸ் | 2,629,456 | 1.87 | 1,350,000 | | 1,707,239 | 3,057,239 | 1.73 |
| சணச | 1,215,483 | 0.87 | 1,044,597 | | 3,192 | 1,047,789 | 0.59 |
| சொப்ட்லொஜிக் லைஃவ் | 1,962,167 | 1.40 | 1,062,500 | 798,004 | 2,025,625 | 3,886,129 | 2.20 |
| SLIC | 63,028,451 | 44.87 | 6,000,000 | 98,236 | 55,544,510 | 61,642,746 | 34.89 |
| யூனியன் லைஃப் | 3,866,192 | 2.75 | 1,000,000 | 3,381,934 | 7,582,780 | 11,964,714 | 6.77 |
| யூனியன் ஜெனரல் | 3,847,303 | 2.73 | - | - | - | - | - |
| மொத்தம் | **140,445,225** | **100** | **40,062,992** | **15,867,169** | **120,775,702** | **176,705,863** | **100** |

கணிப்பாளர்களின் பரிந்துரைகளுடன் 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தமாக ரூபா 13,161 மில்லியன் பங்குதாரர்களின் நிதியத்திற்கு பிரதானமாக One-Off Surplus மற்றும் ஆயுள் காப்புறுதி நிதிய Surplus இல் இருந்து மாற்றம் செய்யப்பட்டு, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் AIA ஆயுளின் மொத்த ஒதுக்கீடு பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. யூனியன் ஆயுள் உடைய நியமிக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளர்களின் பரிந்துரைகளுக்கு அமைய ரூபா 7,024 மில்லியன் One-Off Surplus மாற்றம் மற்றும் ஏனைய Surplus மாற்றங்கள் மூலம் இவ்வாண்டில் யூனியன் ஆயுளின் மொத்த பங்குதாரர் நிதியங்கள் 200% க்கு மேலாக அதிகரித்துள்ளது.

காப்புறுதி பொது வியாபார கம்பனிகளுள் செலிங்கோ பொதுக் காப்புறுதி ரூபா 9,862 மில்லியனை பங்குதாரர் நிதியத்தில் பதிவு செய்து முன்னணியில் திகழ்ந்து வருகின்றது. அதனையடுத்து, ஜனசக்தி பொது மற்றும் NITF உள்ளது. பெயார்பெஸ்ட் யூனியன் பொது காப்புறுதியுடன் ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் பெயார்பெஸ்டின் மொத்த பங்குதாரர் நிதியம் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டு, 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,530 மில்லியனை பதிவு செய்துள்ளது. (2016 இல் ரூபா 817 மில்லியன்)

## கிளைகள், பணியாட்கள் மற்றும் காப்புறுதி வழங்குநர்களின் முகவர்கள் பற்றிய பகுப்பாய்வு

காப்புறுதி வர்த்தகத்தின் தன்மை காரணமாக, நாடு பூராகவும் பரந்துள்ள கிளைகள் வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதிச் சேவைகளை பங்கீடு செய்வதில் முக்கிய இடம் வகித்துள்ளன. பிரதான விற்பனைப் பிரதேசம் என்ற அடிப்படையில் மேல் மாகாணத்தில் பரந்து கிடக்கும் கிளைகளின் எண்ணிக்கை 677 ஆகும். மேலும், கிளைகளின் கலவைகளின் போக்கு பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 1,151 ஆயுள் காப்புறுதிக் கிளைகள், 765 பொதுக் காப்புறுதிக் கிளைகள் மற்றும் 163 மேலும் 2017 ஆம் ஆண்டு கிளைகளின் கலப்பு காப்புறுதிக் கிளைகளும் உள்ளன.

காப்புறுதிக் கம்பனிகளுக்கு வினைத்திறன்மிக்க முகவர்களை முகாமைத்துவம் செய்வது ஓரளவு சவால்மிக்கதாக இருந்த போதிலும், முகவர்களினால் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் பங்களிப்பிலேயே காப்புறுத்துறை பிரதானமாக தங்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டு 43,816 முகவர்கள் சேவையாற்றிய அதேவேளை. 2017 ஆம் ஆண்டு சேவையாற்றிய மொத்த முகவர்களின் எண்ணிக்கை 44,866 ஆகும்.

அட்டவணை 06

2016 மற்றும் 2017 இல்
கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| மத்திய மாகாணம் | 196 | 177 | 880 | 1,018 | 4,245 | 4,418 |
| கிழக்கு மாகாணம் | 132 | 153 | 553 | 652 | 2,223 | 2,286 |
| வட மத்திய மாகாணம் | 145 | 139 | 617 | 724 | 2,520 | 2,468 |
| வட மேல் மாகாணம் | 178 | 224 | 919 | 1,116 | 4,094 | 4,238 |
| வட மாகாணம் | 160 | 161 | 570 | 547 | 3,387 | 3,171 |
| சப்ரகமுவ மாகாணம் | 149 | 161 | 842 | 822 | 2,745 | 3,117 |
| தென் மாகாணம் | 234 | 266 | 1,088 | 1,470 | 4,915 | 5,000 |
| ஊவா மாகாணம் | 120 | 121 | 478 | 583 | 2,422 | 2,435 |
| மேல் மாகாணம் | 657 | 677 | 10,949 | 11,535 | 17,265 | 17,733 |
| மொத்தம் | **1,971** | **2,079** | **16,896** | **18,467** | **43,816** | **44,866** |

இம்முகவர்கள், பிரதானமாக மேல் மாகாணத்தில் சேவையாற்றுகின்றனர். அதனைத் தொடர்ந்து தென் மற்றும் மத்திய மாகாணங்கள் இடம்பெறுகின்றன. சப்ரகமுவ மாகாணத்தில் சேவையாற்றும் முகவர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்களவு 3,117 க்கு அதிகரித்துள்ளது. (2016 இல் 2,745) இதேவேளை வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் சேவையாற்றுகின்ற முகவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6 மற்றும் விளக்கப்படம் 4 ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டவாறு இக்காலப்பகுதியின் போது காப்புறுதித் துறையில் சேவையாற்றிய

அட்டவணை 04

2017 டிசம்பர் 31 இல் செயற்பாட்டிலுள்ள கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை



பணியாளர்களின் எண்ணிக்கை 18,467 ஆகும். கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட 16,896 உடன் ஒப்பிடுகையில், முன்னேற்றம் ஒன்றைக் காட்டுகின்றது. காப்புறுதிக் கம்பனிகளில் சேவையாற்றும் மொத்த பணியாட்களில் 60% ஆனோர் மேல் மாகாணத்திலுள்ள கம்பனிகளில் கடமையாற்றி வருகின்றனர். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தென் மாகாணாத்தில் உள்ள பணியாளர்களின் தொகை குறிப்பிட்ட வகையில் 35% ஆல் அதிகரித்துள்ளது.

## காப்புறுதிக் கம்பனிகளின் பரம்பல் பங்கீடு

தொழிலநுட்பக் கண்டுபிடிப்புக்களின் உதவியோடு காப்புறுதி வழங்குநர்கள் ஒன்லைன் ஊடாக புதிய பரம்பல் பங்கீடுகளை விசேடமாக அபிவிருத்தி செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட பரம்பல்களைப் பயன்படுத்துவதற்கு எத்தனிக்கின்றனர். இணையம் ஊடாக காப்புறுதி பொருட்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கும் போக்கு தெளிவாகத் தெரிகின்றது. இது, விசேடமாக சந்தைப்படுத்தலில் சமூக வலைத்தளங்கள் காப்புறுதி வழங்குநர்களுக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்குவதில் பிரசித்தம் பெற்றுள்ளன. பல காப்புறுதி வழங்குநர்கள் சில “InsurTech” தீர்வுகளை தமது வாடிக்கையாளர்களுக்கு விரிவாக்கம் செய்வதற்கு தொலைத்தொடர்பு சேவைகள் வழங்குனர்களுடன் அண்மைக் காலங்களில் பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விளக்கம் படம் 5, காப்புறுதிக் கம்பனிகளின் GWP க்கு பல்வேறுபட்ட பரம்பல் பங்கீடுகளின் பங்களிப்பை விளக்குகின்றது.

வரைபடம் 05
காப்புறுதி நிறுவனங்களின் விநியோக மார்க்கம்




| | நீண்டகால 2016 | பொது 2016 | நீண்டகால 2017 | பொது 2017 |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 87.59 | 27.17 | 87.94 | 27.15 |
| தரகர்கள் | 0.51 | 17.41 | 0.79 | 17.57 |
| நேரடி | 5.91 | 43.25 | 4.52 | 44.81 |
| பாங்கஷ்யூரன்ஸ் | 5.04 | 3.86 | 5.97 | 2.66 |
| ஏனைய | 0.95 | 8.30 | 0.78 | 7.81 |

ஏனைய பரம்பல் பங்கீடுகள் வளர்ந்து வருகின்ற போதிலும், ஆயுள் காப்புறுதிச் சந்தைகளைப் பொறுத்த வரையில் முகவராண்மை முறைமை தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இது, 87.94% GWP யை உருவாக்குகின்றது. bancassurance இல் இருந்து GWP யை நோக்கி வழங்கிய பங்களிப்பு 5.97% ஆகும். (2016 5.04%) இதனைத் தொடர்ந்து நேரடி விற்பனைகள் இடம்பெறுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்காக தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் கூடிய பொருட்களை வழங்குவதற்காக பொதுக் காப்புறுதி வழங்குநர்கள் தமது இலாகாக்களை தொழில் முறை ரீதியாக பயிற்றுவிக்கப்பட்ட விற்பனைப் பிரிவு ஊடாக வழங்கும் நோக்கைக் கொண்டிருக்கின்றனர். இதற்கமைய நடமாடும் வாடிக்கையாளர்கள், பிரத்தியேக விற்பனைப் பிரிவு போன்றவற்றினால் நேரடியான விற்பனைகள் மூலம் GWP க்கு செய்யப்பட்ட பங்களிப்பு 44.81% ஆகும். (2016 இல் 43.25% ஆகும்) செலிங்கோ பொதுக் காப்புறுதித் துறை இவ்வகைக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து NITF உடைய விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் தன்மை காரணமாக, NITF இரண்டாம் இடம் பெறுகிறது.

2017 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த கட்டுப்பண வருமானத்திற்கு 27.15% பங்களிப்பை (2016 இல் 27.17%) முகவர்கள் அளித்துள்ளனர். பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் GWP க்கு தரகர்கள் 17.57% ஐ உருவாக்கியுள்ளனர். அதேவேளை, அவர்களால் ஆயுள் காப்புறுதி வியாபாரத்திற்கு அளிக்கப்பட்ட பங்களிப்பு மிகவும் குறைவாகும். பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த GWP யில் 7.81% ஏனைய வகைகளால் பிரதிநிதித்துவப்படுகிறது. இவ்வகை பிரதானமாக குழும நிதி மற்றும் குத்தகை ஸ்தாபனங்களினால் உருவாக்கப்பட்ட காப்புறுதி வியாபாரத்தை உள்ளடக்கியுள்ளது.

## நீண்டகால காப்புறுதி வியாபாரம்

### நிகர எழுதப்பட்ட கட்டுப்பணம் மற்றும் சந்தைப்பங்கு

பொருளாதார சவால்கள் இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 63,477 மில்லியனுடன் ஒப்படுகையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 71,504 மில்லியனை மொத்த கட்டுப்பண வருமானமாக ஆயுள் காப்புறுதி வழங்குநர்கள் பதிவு செய்துள்ளனர். இதற்கமைய GWP தொடர்பாக ஆயுள் காப்புறுதித்துறை 12.65% வளர்ச்சியை பதிவு செய்கிறது. (2016 இல் 18.23%) ஆயுள் காப்புறுதியின் பலன்கள் பற்றிய விழிப்புணர்வின் அதிகரிப்பு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய காப்புறுதிப் பொருட்கள் மற்றும் உயர்த்தப்பட்ட வாடிக்கையாளர்கள் சேவைகள் என்பன ஆயுள் காப்புறுதித் துறையின் முன்னேற்றத்திற்கு சாதகமான பங்களிப்பை வழங்கியுள்ளன. இத்துறை கலப்புக் காப்புறுதி வழங்குநர்களை வெவ்வேறாகப் பிரித்ததன் காரணமாக, கடந்த மூன்று வருடங்களில் இரண்டு இலக்க வளர்ச்சி வீதத்தை சான்றுபடுத்தியுள்ளது.

அட்டவணை 7, கம்பனி ரீதியான GWP யினையும் நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளின் சந்தைப் பங்கையும் விளக்குகிறது.

கடந்த வருடங்களைப் போன்று சந்தைப் பங்கில் 22.05% ஐ பதிவு செய்து, செலிங்கோ ஆயுள் முதலிம் வகிக்கின்றது. அத்துடன். 2017 ஆம் ஆண்டு ரூபா 15,765 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது. (2016 இல் ரூபா 15,028 மில்லியன்) SLIC 17.51% சந்தைப் பங்குடன் GWP க்கு பங்களிப்புச் செய்துள்ள இரண்டாவது பெரிய நிறுவனமாகும். அத்துடன், இது ரூபா 12,517 மில்லியனை வருமானமாக ஈட்டியுள்ளது. இதனைத் தொடர்ந்து AIA ஆயுள் காப்புறுதி 16.10% சந்தைப் பங்கினை பதிவு செய்துள்ளது. (ரூபா 11,511 மில்லியன்) 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 58.33% மொத்த GWP யுடன் ஒப்பிடுகையில் இந்த மூன்று கம்பனிகளும் 2017 ஆம் ஆண்டில் மொத்த GWP க்கு 55.66% பங்களிப்புச் செய்து சற்று வீழ்ச்சியை

அட்டவணை 07

கம்பனி ரீதியாக எழுதப்பட்ட மொத்தக் கட்டுப்பணமும் சந்தைப் பங்கும் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்

| காப்புறுதியாளர் | 2013 | | 2014 | | 2015 | | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தை பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தை பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தை பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தை பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தை பங்கு (%) |
| AIA லை.்.ப் | 6,863,047 | 16.47 | 7,266,574 | 16.29 | 8,433,333 | 15.71 | 10,103,915 | 15.92 | 11,510,581 | 16.10 |
| அலியான்ஸ் லை.்.ப் | 828,790 | 1.99 | 823,456 | 1.85 | 919,144 | 1.71 | 1,040,269 | 1.64 | 1,178,828 | 1.65 |
| அமானா லை.்.ப் | 542,986 | 1.30 | 679,029 | 1.52 | 928,294 | 1.73 | 820,727 | 1.29 | 792,174 | 1.11 |
| ஆர்பிகோ | 206,494 | 0.50 | 297,439 | 0.67 | 482,447 | 0.90 | 745,386 | 1.17 | 1,038,085 | 1.45 |
| செலிங்கோ லை.்.ப் | 11,122,906 | 26.69 | 12,002,524 | 26.91 | 13,456,828 | 25.06 | 15,027,600 | 23.67 | 15,765,484 | 22.05 |
| கோப்லை.்.ப் | 337,623 | 0.81 | 402,046 | 0.90 | 494,598 | 0.92 | 466,997 | 0.73 | 636,178 | 0.89 |
| HNB லை.்.ப் | 2,014,547 | 4.83 | 2,342,867 | 5.25 | 2,788,715 | 5.19 | 3,554,078 | 5.60 | 3,963,642 | 5.54 |
| ஜனசக்தி லை.்.ப் | 2,193,662 | 5.26 | 2,170,419 | 4.87 | 2,550,782 | 4.75 | 2,943,963 | 4.64 | 2,902,873 | 4.06 |
| LIC | 322,268 | 0.77 | 348,767 | 0.78 | 386,885 | 0.72 | 473,867 | 0.75 | 582,114 | 0.81 |
| LOLC லை.்.ப் | 274,798 | 0.66 | 592,422 | 1.33 | 1,209,578 | 2.25 | 1,896,558 | 2.99 | 2,467,166 | 3.45 |
| MBSL | 251,720 | 0.60 | 294,299 | 0.66 | 203,235 | 0.38 | 235,533 | 0.37 | 123,732 | 0.17 |
| சணச | 283,975 | 0.68 | 260,867 | 0.58 | 311,434 | 0.58 | 367,637 | 0.58 | 377,690 | 0.53 |
| SLIC | 8,397,718 | 20.15 | 8,121,159 | 18.21 | 10,470,079 | 19.50 | 11,893,640 | 18.74 | 12,517,119 | 17.51 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 2,520,283 | 6.05 | 3,048,148 | 6.84 | 4,091,042 | 7.62 | 5,635,701 | 8.88 | 7,530,935 | 10.53 |
| யூனியன் லை.்.ப் | 5,515,063 | 13.23 | 5,945,499 | 13.33 | 6,964,390 | 12.97 | 8,270,751 | 13.03 | 10,117,630 | 14.15 |
| மொத்தம் | 41,675,880 | 100 | 44,595,516 | 100 | 53,690,783 | 100 | 63,476,622 | 100 | 71,504,231 | 100 |
| வளர்ச்சி வீதம் (%) | 11.20 | | 7.01 | | 20.40 | | 18.23 | | 12.65 | |

காண்பிக்கின்றது. யூனியன் ஆயுள் ரூபா 10,118 மில்லியனை பதிவு செய்து, சந்தையில் நான்காவது இடத்தைப் பெறுகின்றது.

ஆர்பிகோ, கூப்லை.்.ப், சொப்ட்லொஜிக் லை.்.ப், LOLC லை.்.ப் ஆகிய நான்கு நிறுவனங்களும் 2016 இன் பதிவு செய்யப்பட்ட GWP யுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 30% க்கு கூடிய வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளன. விளக்கம் படம் 6, GWP தொடர்பாக ஒவ்வொரு காப்புறுதி வழங்குநர்களுடைய செயற்பாட்டையும் விளக்குகிறது.

## GWP க்கு பங்களிப்புச் செய்து முதலீடம் பெறும் ஐந்து பங்களிப்பாளர் மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குநர்களும்

அட்டவணை 07

2013 - 2017 வரை ஐந்து முன்னணி நிறுவனங்களும் காப்புறுதி வர்த்தகப் பங்குகளும் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




| | செலிங்கோ லை.்.ப் | SLIC | AIA லை.்.ப் | யூனியன் லை.்.ப் | சொப்ட்லொஜிக் லை.்.ப் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2013 | 26.69 | 20.15 | 16.47 | 13.23 | 6.05 | 17.41 |
| 2014 | 26.92 | 18.21 | 16.29 | 13.33 | 6.84 | 18.41 |
| 2015 | 25.06 | 19.50 | 15.71 | 12.97 | 7.62 | 19.14 |
| 2016(அ) | 23.67 | 18.74 | 15.92 | 13.03 | 8.88 | 19.76 |
| 2017(ஆ) | 22.05 | 17.50 | 16.10 | 14.15 | 10.53 | 19.67 |

## - நீண்டகால காப்புறுதி வியாபாரமும்

விளக்கப்படம் 7, கடந்த 5 வருட காலப்பகுதிகளில் முதலிடம் பெறும் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதி வழங்குநர்களுடைய சந்தைப்பங்கு பற்றிய விபரங்களை சித்தரிக்கிறது. கடந்த வருடங்களைப் போன்று செலிங்கோ லை.்.ப், SLIC, AIA லை.்.ப், யூனியன் லை.்.ப் மற்றும் சொப்ட்லொஜிக் லை.்.ப் என்பன கூட்டாக GWP யில் ரூபா 57,442 மில்லியனை வருமானமாக ஈட்டி ஆயுள் காப்புறுதி துறையின் மொத்த சந்தையில் 80.33% இடத்தைப் பிடித்துள்ளன. செலிங்கோ லை.்.ப் மற்றும் SLIC ஆகிய இரண்டு முன்னணி நிறுவனங்களின் சந்தைப் பங்குகள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 இல் சற்று சரிவடைந்துள்ளது. ஐந்தாவது பங்களிப்பினரான சொப்ட்லொஜிக் லை.்.ப் சந்தையில் 10.53% இடத்தை (2016 இல் 8.88%) பிடித்துள்ளதுடன், கடந்த ஐந்து வருட காலப்பகுதிகளில் படிப்படியாக தமது சந்தைப் பங்கினை அதிகரித்துள்ளது.

## நிகர எழுதப்பட்ட கட்டுப்பணம், மீள் காப்பீடு வழங்குநர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் தக்க

## வைத்துக்கொள்ளப்பட்ட விகிதம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 8 இல் விளக்கியவாறு பங்குபற்றிய மற்றும் பங்குபற்றாத வியாபாரங்கள் GWP க்கு முறையே 26.99% (2016 இல் 28.45%) மற்றும் 70.14% (2016 68.36%) ஆகிய பங்களிப்பை 2017 இல் வழங்கியுள்ளது. பங்குபற்றும் வியாபாரத்துடன் கூடிய அம்சங்களைக் கொண்ட பொருட்கள் சில காப்புறுதி வழங்குநர்கள் பங்குபற்றும் வியாபாரத்தை விட்டு நகர்ந்து சென்றமையினால் அதன் விநியோகம் குறைவாக இருக்கின்றது. 2017 இல் உள்ள மொத்த பங்குபற்றும் வியாபார இலாகாவின் அடிப்படையில் SLIC மற்றும் செலிங்கோ லை∴ப் ஆகியன அறிக்கையிடப்பட்ட GWP யில் மூன்றில் இரண்டு பகுதியை தமதாக்கிக் கொண்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் பங்குபற்றாத வியாபார இலாகாவில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு 15.57% ஆனால் வளர்ச்சியடைந்தள்ளதுடன், ரூபா 50,152 மில்லியனை பதிவு செய்துள்ளது. கூறுடன் தொடர்புபட்ட வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட GWP பங்குச் சந்தையில் மெதுவான செயற்பாட்டை காட்டுவதாலும் சந்தையில் அதிகூடிய போட்டியுடனான பொருட்கள் தெரிவுகள் இருப்பதால் பிரசித்தம் குறைந்து வருகிறது. இவ்வகையில் GWP க்கு கூறுடன் தொடர்புபட்ட வியாபாரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு 2017 ஆம் ஆண்டு ரூபா 2,056 ஆக அமைந்தது.

அட்டவணை 8 இல் சித்தரிக்கப்பட்டவாறு 2017 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் ஒட்டுமொத்த தக்க வைத்துக்கொள்ளப்பட்ட விகிதம் 95.97% ஆகும். (2016 இல் 96.09%)

## நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள்

அட்டவணை 06

மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் நிறுவன வாரியான சந்தைப் பங்கு - 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




அட்டவணை 9 மற்றும் விளக்கப்படம் 8 இல் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீண்டகால காப்புறுதி வழங்குநர்களுடைய மொத்த சொத்துக்கள் கம்பனி வாரியாக விளக்கப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு ரூபா 345,589 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை நீண்டகால காப்புறுதி கம்பனிகள் உரிமை கொண்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் அத்தொகை ரூபா 392,400 மில்லியன் பெறுமதியாகும்.

கடந்த வருடங்களைப் போன்றே மொத்த சொத்துக்களில் ரூபா 121,740 மில்லியன் மொத்த சொத்துக்களை பதிவு செய்து 31,02% ஐ பிரதிநிதித்துவம் செய்து SLIC முதலிடத்தில் உள்ளது. செலிங்கோ லை∴ப் மற்றும் AIA ஆகியன முறையே 27.04% (ரூபா 106,095 மில்லியன்) மற்றும் 13.40% (ரூபா 52,577 மில்லியன்) பெறுமதியான சொத்துக்களை கொண்டு சந்தையில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுகின்றன. இவ்வகையில் SLIC செலிங்கோ லை∴ப் மற்றும் AIA ஆகியன கூட்டாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் 71% க்கும் மேலதிகமான மொத்த சொத்துக்களுக்கு உரிமை கொண்டுள்ளன.

யூனியன் லை∴ப், ஜனசக்தி லை∴ப் மற்றும் HNB லை∴ப் என்பன தங்களது சொத்து அடித்தளத்தை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தன. இதன் பிரகாரம், அவை, முறையே நான்காம், ஐந்தாம், ஆறாம் இடங்களை உறுதிப்படுத்தியுள்ளன. 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒரேயொரு நிறுவனம் தவிர ஏனைய சகல கம்பனிகளும் தமது மொத்த சொத்துக்களை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருந்துள்ளன.

## 2016 மற்றும் 2017 டிசம்பர் மாதத்தில் உள்ளவாறான சொத்துக்களின் தெரிவு, நீண்டகால காப்புறுதி வியாபாரம்

தளம்பல் நிலையிலுள்ள வட்டி வீத சூழ்நிலை நீண்டகால முதலீடுகளில்

அட்டவணை 08

மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம், மீள் காப்பீட்டாளருக்கு வழங்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் தக்க வைப்பு விகிதம் என்பனவற்றின் துறை ரீதியான பகுப்பாய்வு - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்

| வகுப்பு | 2015 | | | 2016 (அ) | | | 2017 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (ரூ. '000) | மீள் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கட்டுப்பணம் (ரூ. '000) | தக்க வைப்பு விகிதம் (%) | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (ரூ. '000) | மீள் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கட்டுப்பணம் (ரூ. '000) | தக்க வைப்பு விகிதம் (%) | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (ரூ. '000) | மீள் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கட்டுப்பணம் (ரூ. '000) | தக்க வைப்பு விகிதம் (%) |
| பங்குபற்றியோர் | 18,257,891 | 238,383 | 98.69 | 18,056,530 | 178,699 | 99.01 | 19,296,371 | 151,849 | 99.21 |
| பங்கு பற்றாதோர் | 32,987,375 | 1,749,826 | 94.70 | 43,393,219 | 2,271,917 | 94.76 | 50,151,583 | 2,671,119 | 94.67 |
| அலகு இணைக்கப்பட்டது | 2,445,517 | 30,008 | 98.77 | 2,026,873 | 30,069 | 98.52 | 2,056,277 | 58,048 | 97.18 |
| மொத்தம் | **53,690,783** | **2,018,218** | **96.24** | **63,476,622** | **2,480,685** | **96.09** | **71,504,231** | **2,881,016** | **95.97** |

அட்டவணை 9

மொத்த சொத்துக்களின் நிறுவன ரீதியான பகுப்பாய்வு - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்

| காப்புறுதியாளர் | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. '000 | % | ரூ.'000 | % |
| AIA லை.்.ப் | 46,082,441 | 13.34 | 52,576,947 | 13.40 |
| அலியான்ஸ் லை.்.ப் | 2,907,569 | 0.84 | 4,072,925 | 1.04 |
| அமானா லை.்.ப் | 2,707,599 | 0.78 | 2,928,702 | 0.75 |
| ஆர்பிகோ | 1,586,962 | 0.46 | 2,106,353 | 0.54 |
| செலிங்கோ லை.்.ப் | 96,458,088 | 27.91 | 106,094,508 | 27.04 |
| கோப்லை.்.ப் | 1,824,173 | 0.53 | 2,188,203 | 0.56 |
| HNB லை.்.ப் | 12,199,440 | 3.53 | 15,419,280 | 3.93 |
| ஜனசக்தி லை.்.ப் | 19,092,842 | 5.53 | 20,384,326 | 5.19 |
| LIC | 2,256,631 | 0.65 | 2,682,943 | 0.68 |
| LOLC லை.்.ப் | 2,806,696 | 0.81 | 4,102,317 | 1.04 |
| MBSL | 596,568 | 0.17 | 634,896 | 0.16 |
| சணச | 1,933,526 | 0.56 | 1,923,053 | 0.49 |
| SLIC | 109,525,219 | 31.69 | 121,739,739 | 31.02 |
| சொட்ட்லொஜிக் லைவ் | 9,917,607 | 2.87 | 12,478,446 | 3.18 |
| யூனியன் லை.்.ப் | 35,693,463 | 10.33 | 43,067,007 | 10.98 |
| மொத்தம் | **345,588,824** | **100** | **392,399,645** | **100** |

நிதியிடுவதை ஆயுள் காப்புறுதி வழங்குநர்கள் தமது நீண்டகால பொறுப்புக்களுடன் பொருத்துவது மிகவும் சவால் மிக்கதாகவுள்ளது. இருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி வழங்குநர்களின் சொத்துக்கள் 13.55% ஆல் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அட்டவணை 10 மற்றும் விளக்கப்படம் 9 இல் சித்தரிக்கப்பட்டவாறு ஒழுங்குபடுத்தல்கள், தேவைப்பாடுகள் மற்றும் நீண்டகால முதலீடுகளோடு இணைந்துள்ள இடர்கள் ஆகியன காரணமாக, ஆயுள் காப்புறுதி வழங்குநர்கள் தங்களுடைய சொத்து பொறுப்பு முகாமைத்துவக் கொள்கையை அரசாங்க கடன் பிணையங்களில் முதலீடு செய்வதற்கு முதன்மை இடமளித்துள்ளனர். இதற்கமைய அரசாங்க கடன் பிணையங்கள் ரூபா 183,353 மில்லியனாக அமைந்துள்ளதுடன். மொத்த சொத்துக்களில் 46.73% ஐ பெற்று 12.97% வளர்ச்சியை இவ்வருடம் காட்டியுள்ளது.

பெருநிறுவனக் கடன் முதலீடுகளில் பிரதான வகை ஒன்றாக இருப்பதோடு, 2017 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு ரூபா 73,010 மில்லியனை (2016 இல் ரூபா 71,381 மில்லியன்) பதிவு செய்துள்ளது. ஒப்புரவுகள் ரூபா 44,383 மில்லியனாக பதிவு செய்யப்பட்டு மொத்த சொத்து இலாகாவில் 11.31% ஐ பிரதிபலிக்கிறது. 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 2017 இல் ரூபா 40,795 மில்லியன் பதிவு செய்யப்பட்டு 44.23% அதிகரிப்பை காட்டுகிறது. பொதுவாக அரசாங்க பிணையங்கள் மற்றும் செமிப்புகளுக்கு வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் இவ்விரண்டு வகையான முதலீடுகளுக்கும் அதிக முதலீடுகளை அதிகரித்தது. கூறுநம்பிக்கைகளில் 80% ஆனவை SLIC மற்றும் சொப்ட்லொஜிக் லை.்.ப் ஆகிய இரண்டிலும் இருந்து பெறப்பட்ட போதிலும் கூறுநம்பிக்கைகளின் முதலீடுகள் ரூபா 4,942 மில்லியனினால் அதிகரித்தது.

## முதலீடு வருமானம் - நீண்கால காப்புறுதி வியாபாரம்

முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 27,610 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டு ரூபா 34,675 மில்லியனாக பதிவு செய்யப்பட்டு 25.59% ஆல் அதிகரித்துள்ளது. அட்டவணை 11 இல் சித்தரிக்கப்பட்டவாறு அரசாங்க திறைசேரி முறிகள், தொகுதிக்கடன்கள் மற்றும் வங்கி சேமிப்புக்கள் என்பன முன்னணி வகித்த முதலீட்டு வகைகளாக அமைகின்றன. இவை மொத்த முதலீட்டு வருமானத்தில் 89% பங்களிப்பைச் செய்துள்ளன.

அரசாங்க பிணையங்களில் இருந்து ஈட்டப்பட்ட முதலிட்டு வருமானம் ரூபா 19,943 மில்லியன் ஆகும். இது, 2017 ஆம் ஆண்டில் இடப்பட்ட சராசரி முதலீடுகளான ரூபா 172,825 மில்லியனிற்கு ஆகும். இதற்கமைய அரசாங்க பிணையங்களுக்காக பதிவு செய்யப்பட்ட முதலீட்டு வசூல் 2017 மே ஆண்டு 11.54% ஆகும். ஒட்டு மொத்த நிதி முதலீடுகளில் சேமிப்புகள் உயரிய முதலீட்டு வசூல் வகித்தத்தை பதிவு செய்தது. அது 13.14% ஆகும். மேலும், சேமிப்புக்களில் இருந்து முதலீட்டு இலாகாவில் கணிசமான பகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய பெருநிறுவனக் கடன் ரூபா 8,416 மில்லியன் முதலீட்டு வருமானத்தை ஈட்டியது. (2016 இல் ரூபா 6,731 மில்லியன்) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது, 25.03% அதிகரிப்பை காட்டுகிறது. மேலும், 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட

அட்டவணை 08

2016 மற்றும் 2017 டிசம்பர் 31 இல் நிறுவனங்களின் மொத்த சொத்துக்கள் பற்றிய பகுப்பாய்வு - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்



அட்டவணை 10

2016 மற்றும் 2017 டிசம்பர் 31 ஆந் திகதிகளில் உள்ளபடியான சொத்துக்களின் திரட்டு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| சொத்துக்களின் வகை | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. '000 | % | ரூ. '000 | % |
| அரச கடன் பிணையங்கள் | 162,296,721 | 46.96 | 183,353,483 | 46.73 |
| உரிமையாண்மைகள் | 44,311,123 | 12.82 | 44,382,861 | 11.31 |
| நிறுவனக் கடன் | 71,380,883 | 20.65 | 73,009,816 | 18.60 |
| காணியும் கட்டடமும் | 10,005,535 | 2.90 | 11,059,556 | 2.82 |
| வைப்புக்கள் | 28,285,552 | 8.18 | 40,794,927 | 10.40 |
| அலகு நம்பிக்கைகள் | 1,939,392 | 0.56 | 6,881,291 | 1.75 |
| காப்புறுதிக் கடன்கள் | 5,724,534 | 1.66 | 6,136,682 | 1.56 |
| ஏனைய சொத்துக்கள் | 19,174,620 | 5.55 | 23,297,044 | 5.94 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,470,464 | 0.72 | 3,483,985 | 0.89 |
| மொத்தம் | **345,588,824** | **100** | **392,399,645** | **100** |

அட்டவணை 09

2016 மற்றும் 2017 டிசம்பர் 31 இல் சொத்துக்களின் செறிவு - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




பெரு நிறுவனக் கடன்களில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வசூல் 10.89% ஆக இருப்பதோடு, 2017 இல் 11.66% ஆக பதிவு செய்துள்ளது. பெறப்பட்ட வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 46.43% ஆல் அதிகரித்தது.

2016 இல் பதிவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டு வசூல் 9.15 ஆக இருப்பதோடு அது 2017 இல் 10.30% ஆக அமைகிறது.

## காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் திறன் நிலைமை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

காப்புறுதித் துறையின் பாதுகாப்பு மற்றும் விரிதிறன் என்பவற்றை உயர்த்தும் நோக்குடன் ஆயுள் காப்புறுதி வழங்குநர்களின் இடர் அடிப்படையிலான முதலீட்டு மட்டத்தை IRCSL தொடர்ந்து மதிப்பிட்டும் கண்காணித்தும் வருகிறது. 2015 ஆம் ஆண்டின் (இடர் அடிப்படையிலான முதலீட்டு) கடன் தீர் திறன் விழிம்பு தொடர்பாக ஆயுள் காப்புறுதி வழங்குநர்களின் இடர் அடிப்படையிலான முதலீடு (RBC) சம்பந்தமான விபரங்களை அட்டவணை 12, 13 மற்றும் 14 என்பன எடுத்துக் காட்டுகின்றன.

இதற்கமைய 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு MBSL தவிர அனைத்து ஆயுள் காப்புறுதி வழங்குநர்களும் ரூபா 500 மில்லியனாக இருக்க வேண்டிய மொத்த இருக்கக்கூடிய முதலீட்டுத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்துள்ளனர். மேலும், காப்புறுதி வழங்குநர்கள் முதலீட்டுப் போதுமான தன்மை தேவைப்பாட்டுடன் இணங்கி இருப்பதற்காக குறைந்தபட்ச முதலீட்டுப் போதுமான விகிதத்தை 120% ஆக பேணிப் பாதுகாக்குமாறும் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. IRCSL உடைய அமுலாக்க மட்டமான 160% க்கு மேலதிகமான CAR ஐப் பேணிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துமாறு அனைத்து காப்புறுதி வழங்குநர்களும் வேண்டப்பட்டுள்ளனர். 2017 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளின் சராசரி CAR 321% (2016 இல் 302%) ஆகும்.

அனைத்து காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடையப் பெற்றால், அதனால் ஏற்படும் தீவிரமான, பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் இடருக்குரிய தீர்வை சரணடையப்படும் பெறுமதி முதலீட்டுக் கட்டணம் இதனைப் பூர்த்தி செய்கிறது. இங்கு சில கம்பனிகளின் பெறுமதி பாதகமானதாகவோ அல்லது பூச்சியமாகவோ அமையும். இதற்கமைய, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அறிக்கையிடப்பட்ட SVCC ரூபா 6,113 மில்லியனாகும். 2016 ஆம் ஆண்டு 31 ஆம் திகதி அறிக்கையிடப்பட்ட ரூபா 12,442 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு பெறுமதி குறைந்துள்ளது.

## காப்புறுதிக் கம்பனிகளில் இருக்கக்கூடிய மொத்த மூலதனம் (TAC) - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளின் திரண்ட TAC ரூபா 191,175 மில்லியன் ஆகும். (2016 இல் 175,122 மில்லியன்). கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 9.17% ஆக உயர்ந்துள்ளது. அடுக்கு 1, அடுக்கு II இல் உள்ளடக்கப்பட்டுள்ள TAC மூலதனம் மற்றும் கழிப்பனவுகள் ஆகும்.

அடுக்கு 1 இல் உள்ள மூலதன நட்டங்களையும் எஞ்சியுள்ள சம்பாத்தியங்கள் மற்றும் எஞ்சியிருக்கும் சம்பாத்தியங்களுக்கான சீராக்கங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக முழுமையான இருக்கக்கூடிய மூலதனமாகும். 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அடுக்கு 1 க்கான மூலதனம் ரூபா 209,989 மில்லியன் ஆகும். கடந்து செல்கின்ற அடிப்படையில் ஏற்படக்கூடிய நட்டங்களை உள்வாங்கிக் கொள்வதற்கு ஆதரவளிக்கும் அடுக்கு II மூலதனம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 5,879 மில்லியன் ஆகும். TAC இல் தொட்டறிய முடியாத அல்லது திரவம் அற்ற சொத்துக்களை

அட்டவணை 11

முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் திரட்டு - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்

| வகை | 2016 (அ) | | | 2017 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடுகள் (ரூ. '000) | முதலீட்டு விளைச்சல் விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடுகள் (ரூ.. '000) | முதலீட்டு விளைச்சல் விகிதம் (%) |
| அரச கடன் பிணையங்கள் | 17,287,423 | 149,720,570 | 11.55 | 19,943,319 | 172,825,102 | 11.54 |
| - திறைசேரி முறிகள் | 15,799,939 | | | 18,488,291 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 112,769 | | | 115,075 | | |
| - ஏனையவை (கடன் வட்டி) (REPO) | 1,374,715 | | | 1,339,953 | | |
| உரிமையாண்மை | (90,015) | 39,492,171 | (0.23) | 1,032,285 | 35,940,489 | 2.87 |
| - மூலதன வருமானம் / நட்டம் | (1,211,655) | | | (275,534) | | |
| - பங்கிலாபம | 1,121,640 | | | 1,307,819 | | |
| நிறுவனக் கடன்கள் | 6,730,680 | 61,832,558 | 10.89 | 8,416,426 | 72,195,350 | 11.66 |
| - கடன் பத்திரங்கள் | 6,680,698 | | | 8,324,759 | | |
| - வணிகப் பத்திரங்களும் ஏனையவும் | 48,924 | | | 91,667 | | |
| - ஏனைய ஒத்த நிதிச் சாதனங்கள் | 1,058 | | | - | | |
| காணியும் கட்டடங்களும் | 72,101 | 8,800,403 | 0.82 | 76,147 | 10,532,545 | 0.72 |
| வைப்புகள் | 3,098,884 | 33,758,505 | 9.18 | 4,537,799 | 34,540,239 | 13.14 |
| - வங்கி | 2,886,761 | | | 4,066,946 | | |
| - நிதிக் கம்பனிகள் | 212,123 | | | 470,853 | | |
| அலகு நம்பிக்கை | 92,602 | 2,166,425 | 4.27 | 125,887 | 4,410,341 | 2.85 |
| காப்புறுதிக் கடன்கள் | 366,026 | 5,537,077 | 6.61 | 497,367 | 5,930,608 | 8.39 |
| ஏனையவை | 52,624 | 290,963 | 18.09 | 46,139 | 438,906 | 10.51 |
| மொத்தம் | **27,610,325** | **301,598,672** | **9.15** | **34,675,369** | **336,813,580** | **10.30** |

உள்ளடக்கிய கழிப்பனவுகள் 12.92% ஐ பிரதிபலிக்கிறது.

## காப்புறுதிக் கம்பனிகளினால் தேவைப்படுத்தப்படும் இடர் அடிப்படையிலான முதலீட்டின் (RCR) ஒப்பீடுகள் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

தேவைப்படும் இடர் மூலதனம் என்பது, (RCR) பன்முகத் தன்மைக்குப் பொருத்தமான கொடுப்பனவுகளுடன் பொருள் இடர் வகைகளுக்காக தீர்மானிக்கப்படும் மூலதனச் செலவுகளின் நிகர மொத்தமாகும். அட்டவணை 14 இல் சித்தரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர், மீள் காப்பீட்டு இடர், பொறுப்பு இடர் மற்றும் செயற்பாட்டு இடர் என்பன பொருள் இடர் வகைகளாகக் கருத்திற் கொள்ளப்படுகின்றன. நீண்டகால காப்புறுதி வியாபாரத்திற்கான 2017 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தலுக்கு பின்னரான கணக்கிடப்பட்ட மொத்த இடர் மூலதனச் செலவுகள் ரூபா 48,468 மில்லியன் ஆகும். (2016 இல் ரூபா 44,644 மில்லியன்). 2017 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தலுக்கு முன்னரான தொகை ரூபா 63,550 மில்லியன் ஆகும். முந்திய வருடத்தைப் போன்று சந்தை இடர் பிரதான இடராக இருந்தது. இதன் கணக்கிடப்பட்ட தொகை ரூபா 36,728 மில்லியன் ஆகும். இதனைத் தொடர்ந்து முறையே பொறுப்பு இடா, மற்றும் செறிவு இடர் என்பன இடம்பெற்றன. இதற்கமைய பன்முகப்படுத்தலுக்கு முன்னதாக இந்த மூன்று இடர் வகைகளும் மொத்த இடர் மூலதனச் செலவுகளில் 84.47% ஐ பிரதிபலித்தன.

## வழங்கப்பட்ட காப்புறுதிக் கொள்கைகள் மற்றும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

விளக்கப்படம் 10 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2017 ஆம் ஆண்டுக்கான அமுலில் உள்ள மொத்த ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளின் தொகை 3,068,846 ஆகும். 2016 இல் இது, 3,009,427 ஆகும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டு 636,156 புதிய ஆயுள் காப்புறுதிக் கொள்கைகள் வழங்கப்பட்டன. 2016 உடன் ஒப்பிடுகையில் இது ஓரளவு குறைவைக் காட்டுகிறது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த சனத்தொகையில் கணக்கிடப்பட்ட ஆயுள் காப்புறுதி கொள்கைகளின் தொகை ஓரளவு வளர்ச்சியடைந்து 14,31% ஐ பதிவு செய்கிறது. (2016 இல் 14.19%). இச்சனத்தொகையில் தொழில் புரிபவர்களின் தொகையைக் கணக்கிடுகையில், ஆயுள் காப்புறுதி தொகைகளின் எண்ணிக்கை ஓரளவு குறைவடைந்து 2017 இல் 35.51% காட்டுகிறது. (2016 இல் 37.62%).

## பொருள் வாரியாக வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளும் காப்புறுதி செய்யப்பட்ட தொகையும் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 15, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அமுலில் இருந்த காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கையும், அதிலிருந்து பெறப்பட்ட தொகையையும் வழங்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில் விளக்குகிறது. இந்தக் குறிப்பிட்ட காப்புறுதி வகைகள் மானியம், உலகளாவிய ஆயுள், தவணை, மொத்தம் மற்றும் ஏனையவைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த காப்புறுதித் தொகை ரூபா 2,413,655 மில்லியன் அகும். இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 23.62% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது.

வலுவில் இருந்த பெரும்பாலான கொள்கைகள், மானியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ரூபா 1,438,145 ஆக காட்டுகிறது. இதற்குக் காரணம், அதன் முதிர்வடைந்த காலப்பகுதியில் உள்ள கொடுப்பனவுகளின் தொகையின்

அட்டவணை 12

கடன் தீர்க்கும் நிலையின் கம்பனி வாரியான பகுப்பாய்வு - 2016 மற்றும் 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசம்பர் 31 இல் உள்ளவாறு | | | | 2017 (ஆ) டிசம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | TAC (ரூ. '000) | RCR (ரூ.'000) | SVCC (ரூ.'000) | CAR (%) | TAC (ரூ.'000) | RCR (ரூ.'000) | SVCC (ரூ.'000) | CAR (%) |
| AIA லைஃப் | 21,107,662 | 3,755,882 | 5,853,682 | 361 | 23,866,513 | 3,853,018 | 4,010,591 | 595 |
| அலியான்ஸ் லைஃப் | 897,438 | 297,902 | 110,061 | 301 | 1,120,048 | 187,798 | 21,381 | 596 |
| அமானா லைஃப் | 550,223 | 372,733 | - | 148 | 586,807 | 279,153 | - | 210 |
| ஆர்பிகோ | 1,250,144 | 200,880 | 63,453 | 622 | 1,424,463 | 362,451 | - | 393 |
| செலிங்கோ லைஃப் | 43,094,498 | 12,847,731 | - | 335 | 52,730,727 | 13,582,910 | - | 388 |
| கோப்லைஃப் | 758,207 | 359,965 | - | 211 | 697,394 | 405,471 | - | 172 |
| HNB லைஃப் | 5,274,682 | 1,058,500 | 1,185,311 | 445 | 6,038,377 | 1,689,029 | 483,048 | 358 |
| ஜனசக்தி லைஃப் | 3,751,144 | 1,405,869 | - | 267 | 5,178,103 | 2,151,085 | 717,405 | 241 |
| LIC | 536,864 | 207,057 | 49,678 | 259 | 665,053 | 253,947 | - | 262 |
| LOLC லைஃப் | 887,316 | 392,696 | - | 226 | 1,008,326 | 442,673 | - | 228 |
| MBSL | 105,905 | 73,229 | - | 145 | 156,415 | 78,626 | - | 199 |
| சணச | 936,626 | 177,125 | 481,480 | 195 | 523,137 | 280,955 | 54,773 | 186 |
| SLIC | 73,125,635 | 17,134,441 | 311,006 | 427 | 74,563,589 | 17,278,458 | - | 432 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 8,570,469 | 2,761,510 | 4,386,958 | 195 | 6,084,461 | 2,920,932 | 826,001 | 208 |
| யூனியன் லைஃப் | 14,274,762 | 3,598,467 | - | 397 | 16,532,023 | 4,701,641 | - | 352 |
| மொத்தம் / ஒட்டுமொத்தம் | **175,121,575** | **44,643,987** | **12,441,629** | **302** | **191,175,436** | **48,468,147** | **6,113,199** | **321** |

அட்டவணை 13

மொத்த கிடைக்கத்தக்க மூலதனத்தின் (TAC) கம்பனி வாரியான பகுப்பாய்வு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதி வழங்குநர் | 2016 (அ) டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2017 (ஆ) டிசம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|---|
| | TAC (ரூ.'000) | அடுக்கு 1 (ரூ.'000) | அடுக்கு II (ரூ.'000) | கழிப்பனவுகள் (ரூ.'000) | TAC (ரூ.'000) |
| AIA லைஃப் | 21,107,662 | 26,167,050 | 441,176 | 2,741,713 | 23,866,513 |
| அலியான்ஸ் லைஃப் | 897,438 | 1,323,766 | - | 203,718 | 1,120,048 |
| அமானா லைஃப் | 550,223 | 629,586 | 120 | 42,900 | 586,806 |
| ஆர்பிகோ | 1,250,144 | 1,567,254 | - | 142,791 | 1,424,463 |
| செலிங்கோ லைஃப் | 43,094,498 | 55,949,722 | 3,624,279 | 6,843,274 | 52,730,727 |
| கோப்லைஃப் | 758,207 | 817,912 | 44,705 | 165,223 | 697,394 |
| HNB லைஃப் | 5,274,682 | 8,111,048 | - | 2,072,671 | 6,038,377 |
| ஜனசக்தி லைஃப் | 3,751,144 | 12,325,288 | | 7,147,185 | 5,178,103 |
| LIC | 536,864 | 792,033 | - | 126,980 | 665,053 |
| LOLC லைஃப் | 887,316 | 1,195,555 | - | 187,230 | 1,008,325 |
| MBSL | 105,905 | 158,019 | - | 1,604 | 156,415 |
| சணச | 936,626 | 705,636 | 1,221 | 183,720 | 523,137 |
| SLIC | 73,125,635 | 75,873,864 | 31,128 | 1,341,403 | 74,563,589 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 8,570,469 | 6,905,366 | 48,436 | 869,340 | 6,084,462 |
| யூனியன் லைஃப் | 14,274,762 | 17,467,260 | 1,688,310 | 2,623,547 | 16,532,023 |
| மொத்தம் | **175,121,575** | **209,989,359** | **5,879,375** | **24,693,299** | **191,175,436** |

அட்டவணை 14

2016 மற்றும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடர் மூலதனத் தேவைப்பாட்டின் (RCR) கம்பனி வாரியான பகுப்பாய்வு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதி வழங்குநர் | 2016 (அ) டிசம்பர் 31 இல் உள்ளவாறு (ரூ.'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | கவனக் குவிப்பு இடர் | சந்தை இடர் | மீள் காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | செயற்பாட்டு இடர் | பன்முகப்படுத்தலுக்கு முன்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) | பன்முகப்படுத்தலுக்கு பின்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) |
| AIA ல.்.ப் | 522,912 | 767,887 | 2,030,977 | - | 1,690,531 | 463,209 | 5,475,515 | 3,755,882 |
| அலியான்ஸ் லை.்.ப் | 2,383 | 24,317 | 236,982 | 367 | 135,930 | 23,367 | 423,347 | 297,902 |
| அமானா லை.்.ப் | 30,407 | 279,493 | 59,373 | 601 | 37,298 | 27,063 | 434,235 | 372,733 |
| ஆர்பிகோ | 19,302 | 110,716 | 69,027 | 108 | 21,027 | 15,776 | 235,956 | 200,880 |
| செலிங்கோ லை.்.ப் | 888,650 | 504,103 | 11,231,956 | 10,420 | 2,129,986 | 938,552 | 15,703,667 | 12,847,731 |
| கோப்லை.்.ப் | 25,529 | 21,907 | 286,671 | 1,235 | 129,581 | 18,152 | 483,075 | 359,965 |
| HNB ல.்.ப் | 124,489 | 279,699 | 410,127 | 974 | 664,619 | 118,356 | 1,598,264 | 1,058,500 |
| ஜனசக்தி லை.்.ப் | 245,566 | 245,914 | 817,698 | 560 | 477,108 | 182,810 | 1,969,658 | 1,405,869 |
| LIC | 17,884 | 37,093 | 143,027 | 86 | 56,344 | 21,401 | 275,836 | 207,057 |
| LOLC ல.்.ப் | 1,072 | 1,490 | 305,867 | 3,349 | 237,107 | 28,020 | 576,905 | 392,696 |
| MBSL | 4,306 | 16,065 | 13,324 | - | 64,742 | 5,966 | 104,403 | 73,229 |
| சணச | 36,075 | 6,017 | 132,674 | 931 | 12,410 | 18,710 | 206,816 | 177,125 |
| SLIC | 880,170 | 1,435,350 | 14,440,153 | - | 3,413,384 | 1,088,729 | 21,257,785 | 17,134,441 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 65,587 | 298,230 | 1,846,349 | - | 1,652,722 | 98,046 | 3,960,934 | 2,761,510 |
| யூனியன் லை.்.ப் | 184,021 | 399,384 | 2,688,718 | 357 | 1,456,248 | 345,230 | 5,073,958 | 3,598,467 |
| மொத்தம் | **3,048,353** | **4,427,665** | **34,712,923** | **18,988** | **12,179,037** | **3,393,387** | **57,780,354** | **44,643,987** |

| காப்புறுதி வழங்குநர் | 2017 (ஆ) டிசம்பர் 31 இல் உள்ளவாறு (ரூ.'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | கவனக் குவிப்பு இடர் | சந்தை இடர் | மீள் காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | செயற்பாட்டு இடர் | பன்முகப்படுத்தலுக்கு முன்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) | பன்முகப்படுத்தலுக்கு பின்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) |
| AIA ல.்.ப் | 544,451 | 474,348 | 2,267,270 | - | 1,941,588 | 527,000 | 5,754,658 | 3,853,018 |
| அலியான்ஸ் லை.்.ப் | 2,618 | 25,017 | 86,290 | 494 | 145,002 | 33,924 | 293,345 | 187,798 |
| அமானா லை.்.ப் | 29,497 | 201,296 | 43,883 | 585 | 36,015 | 29,333 | 340,610 | 279,153 |
| ஆர்பிகோ | 19,663 | 270,640 | 61,596 | 168 | 83,571 | 20,870 | 456,508 | 362,451 |
| செலிங்கோ லை.்.ப் | 1,076,424 | 567,911 | 11,671,525 | 4,653 | 2,430,953 | 1,072,306 | 16,823,772 | 13,582,910 |
| கோப்லை.்.ப் | 50,089 | 12,620 | 290,161 | - | 198,532 | 21,795 | 573,196 | 405,471 |
| HNB ல.்.ப் | 194,403 | 362,576 | 1,030,356 | 1,759 | 551,798 | 152,059 | 2,292,949 | 1,689,029 |
| ஜனசக்தி லை.்.ப் | 247,394 | 53,919 | 1,700,189 | 1,082 | 760,967 | 194,302 | 2,957,852 | 2,151,085 |
| LIC | 25,835 | 44,087 | 174,420 | 82 | 63,257 | 27,289 | 334,970 | 253,947 |
| LOLC ல.்.ப் | 1,072 | 16,189 | 240,874 | 4,457 | 354,006 | 41,041 | 657,639 | 442,673 |
| MBSL | 4,428 | 14,432 | 47,752 | 5 | 41,276 | 6,363 | 114,256 | 78,626 |
| சணச | 27,862 | 156,839 | 84,412 | 300 | 77,346 | 19,237 | 365,995 | 280,955 |
| SLIC | 1,042,994 | 1,972,474 | 13,709,970 | - | 4,149,374 | 1,259,957 | 22,134,770 | 17,278,458 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 92,124 | 348,759 | 1,481,824 | - | 2,195,653 | 118,941 | 4,237,301 | 2,920,932 |
| யூனியன் லை.்.ப் | 196,407 | 471,272 | 3,837,662 | 276 | 1,270,902 | 435,499 | 6,212,016 | 4,701,641 |
| மொத்தம் | **3,555,261** | **4,992,379** | **36,728,184** | **13,861** | **14,300,240** | **3,959,916** | **63,549,837** | **48,468,147** |

உள்ளார்ந்த அம்சங்களாகும். எவ்வாறாயினும், நுகர்வோரின் தேவைப்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, இந்த வருடத்தின் போது மானியங்கள் மற்றும் மொத்த ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளில் ஓரளவு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. மறுவகையில் பார்க்கும் போது, முதலீட்டு சேமிப்பு மற்றும் நெகிழ்ச்சித் தன்மை போன்ற சில அம்சங்களின் காரணமாக, உலகளாவிய ஆயுள் காப்புறுதிப் பொருட்களுக்கான தேவை வளர்ச்சியடைந்து வருகின்றது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டு முடிவில் 871,299 (2016 இல் 840,150) உலகளாவிய ஆயுள் காப்புறுதிக் கொள்கைகள் அமுலில் இருந்தன. இதனால் பெறப்பட்ட மொத்த காப்புறுதி தொகை ரூபா 367,730 மில்லியன் ஆகும். (2016 இல் 323,336 மில்லியன்). தவணைக் காப்புறுதியும் குறிப்பிடத்தக்களவு பங்கை பெறப்பட்ட மொத்த காப்புறுதித் தொகையில் பிரதிபலித்ததோடு, இவ்வருடத்தில் இருந்த மொத்த காப்புறுதிக் கொள்கைகளில் 16.35% பங்களிப்பை காட்டியது.

அட்டவணை 10
வழங்கப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள காப்புறுதிக் கொள்கைகள் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை | 546,292 | 545,303 | 740,511 | 668,714 | 636,156 |
| நடைமுறையிலுள்ள ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை | 2,477,695 | 2,604,667 | 2,889,763 | 3,009,427 | 3,068,846 |
| நடைமுறையிலுள்ள ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையின் சதவீதம் | 12.0 | 12.5 | 13.8 | 14.19 | 14.31 |
| நடைமுறையிலுள்ள ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை மொத்த ஊழியர் சக்தியின் %* | 28.1 | 29.6 | 33.6 | 37.62 | 35.51 |

*மூலம் - ஆண்டின் நடுப்பகுதியின் ஊழியர் சக்தி மற்றும் சனத்தொகை - சனத்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

## காப்புறுதிக் கொள்கை காலக் கழிவு - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

விளக்கப்படம் 2, புதிய காப்புறுதிக் கொள்கைகள் மற்றும் மொத்த காப்புறுதிக் கொள்கைகளுடன் தொடர்புபட்ட காலக் கழிவு விகிதத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த குறைப்பைச் சித்தரிக்கின்றது. கொள்கை முகாமைத்துவத்தில் இருந்த வினைத்திறனற்ற தன்மை, அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்களில் இருந்த பொருத்தமற்றதன்மை, முகவர்களின் கையாடல்கள், நுகர்வோரின் செலவழிக்கத் தக்க வருமானத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் காரணமாக கட்டுப்பணம் செலுத்தத் தவறியமை போன்ற காரணிகள் ஒவ்வொரு வருடமும் உயரிய கொள்கை காலக்கழிவு விகிதங்களை பதிவுசெய்து காப்புறுதியில் நிலவும் நீடித்த பிரச்சினை ஒன்றாக இருந்து வருகிறது. 2017 ஆம் ஆண்டு காலக் கழிவடைந்த மொத்த ஆயுள் காப்புறுதி கொள்கைகளின் தொகை 378,660 ஆகும். இதனுள் 90,038 புதிய கொள்கைகளும் அடங்குகின்றன. மேலும், அவ்வருடத்தில் வலுவிலிருந்த மொத்த காப்புறுதிக் கொள்கைகளுள் காலக் கழிவு பெற்ற மொத்த காப்புறுதிகளின் விகிதங்களின் 12.34% (2016 இல் 12.95%) ஆகும் . அதேவேளை, 2017 இல் வழங்கப்பட்ட புதிய கொள்கைளில் ஏற்பட்ட புதிய கொள்கை காலக்கழிவு 14.15% ஆகும். (2016 இல் 15.36%). சராசரியாக பார்க்கும் போது கடந்த 5 வருட காலப் பகுதியில் 372,000 கொள்கைகள் காலக்கழிவு பெற்றுள்ளன.

## காப்புறுதி நிறுவனங்களால் உறப்பட்ட கோரிக்கைகள் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

2017 ஆம் ஆண்டு காப்புறுதி வழங்குநர்களால் உறப்பட்ட கோரிக்கைகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இது, ரூபா 25,967 மில்லியன் (2016 இல் ரூபா 22,485 மில்லியன்) ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்படுகையில், 15.49% வளர்ச்சியடைந்துள்ளது. பெறுமதி தொடர்பாக பார்க்கையில், கடந்த 5 வருட காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதி வழங்குநர்களால் உறப்பட்ட உயர்ந்தபட்ச கோரிக்கை இவையாகும். காப்புறுதி முதிர்ச்சியடைந்த அனுகூலங்கள் பெரும்பான்மையாக அமைவதோடு, அது, ரூபா 14,240 மில்லியன் (2016 இல் ரூபா 12,371 மில்லியன்) ஆகும். மொத்த அனுகூலங்களில் 54.8% பிரதிபலிக்கின்றது. இதற்கமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 இல் முதிர்ச்சியடைந்த நன்மைகள் 15.11% ஆல் அதிகரித்துள்ளது. சரணடைதல்களும் உறப்பட்ட கோரிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவு பங்கை பிரதிபலிக்கிறது. அது, ரூபா 5,392 மில்லியன் ஆகும். இது, மொத்த கோரிக்கைகளில் 20.76% பிரதிபலிக்கிறது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயலாமை அனுகூலங்கள் மற்றும் இறப்பு அனுகூலங்கள் முறையே 30.26% மற்றும் 29.17% ஆக அதிகரித்துள்ளது. உடல்நல நன்மைகள், முற் கொடுப்பனவுகள், போனஸ், சில இரத்துச் செய்தல்கள் மற்றும் மீள் வழங்கல்கள் போன்ற ஏனைய அனுகூலங்கள் ரூபா 3,611 மில்லியனாக அமைகின்றன. இது, உறப்பட்ட மொத்த கோரிக்கைகளில் 13.91%ஐ பிரதிபலித்தது, முதல் வருடத்துடன் ஒப்பிடுகையில் 25.07% வளர்ச்சியை பதிவு செய்கிறது.

விளக்கப்படம் 12, நீண்டகால காப்புறுதி நிறுவனங்களால் உறப்பட்ட கோரிக்கைகளின் விபரங்களைத் தருகிறது.

## காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

2017 ஆம் ஆண்டின் கோரிக்கைகளின் பெறுமதிக்கு எதிராக 15.49% வளர்ச்சியைப் பதிவு செய்து 2017 ஆம் ஆண்டுக்கான மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 7.87% ஆல் ஓரளவு அதிகரித்து 341,344 ஆக பதிவு செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்த நன்மைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 115,311 ஆகும். (2016 இல் 108,680). இது, மொத்த கோரிக்கைகளில் 33.78% ஐ பிரதிபலிக்கிறது. உடல்நல நன்மைகள், இரத்துச் செய்தல்கள், மீள் வழங்கல்கள், மீளப் பெறுதல்கள் போன்றவற்றின் மீதான “ஏனைய” கோரிக்கைகள் முதல் வருடத்துடன் ஒப்பிடுகையில் 9.71% ஆல் வளர்ச்சியைடைந்து 157,251 ஆக

அட்டவணை 15
2016 மற்றும் 2017 இல் பொருள் வாரியாக வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளும் காப்புறுதி செய்யப்பட்ட தொகையும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| உற்பத்தியின் வகை | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|
| | காப்பீட்டுக் கொள்கைகளின் எண்ணிக்கை | காப்பீட்டுத் தொகை (ரூ.000') | காப்பீட்டுக் கொள்கைகளின் எண்ணிக்கை | காப்பீட்டுத் தொகை (ரூ.000') |
| தவணைக் காப்புறுதி | 476,468 | 805,553,921 | 501,899 | 878,057,665 |
| உலகளாவிய ஆயுள் காப்பீடு | 840,150 | 323,335,829 | 871,299 | 367,730,167 |
| முழு ஆயுள் காப்பீடு | 29,793 | 1,674,568 | 25,701 | 1,581,575 |
| அறக் கட்டளை | 1,499,479 | 332,101,717 | 1,438,145 | 371,193,218 |
| ஏனையவை | 163,537 | 489,831,801 | 231,802 | 795,092,598 |
| மொத்தம் | **3,009,427** | **1,952,497,836** | **3,068,846** | **2,413,655,223** |

அட்டவணை 11
2013 - 2017 வரை இரத்துச் செய்யப்பட்ட காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கையும் அதன் சதவீதமும் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|---|---|---|
| இரத்துச் செய்த புதிய காப்புறுதிக் கொள்கை | 107,906 | 103,500 | 93,008 | 102,697 | 90,038 |
| இரத்துச் செய்த மொத்தக் கொள்கைகள் | 366,506 | 362,664 | 364,567 | 389,732 | 378,660 |
| இரத்துச் செய்த புதிய காப்புறுதிக் கொள்கைகள் வழங்கப்பட்ட புதிய கொள்கைகளின் சதவீதங்களில் | 19.75 | 18.98 | 12.56 | 15.36 | 14.15 |
| இரத்துச் செய்த மொத்த காப்புறுதிக் கொள்கைகளின் அளவு நடைமுறையிலுள்ள மொத்த கொள்கைகளின் சதவீதங்களில் | 14.79 | 13.92 | 12.62 | 12.95 | 12.34 |

பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கையில் சரணடைதல்கள் 13.7% ஐ பிரதிபலிக்கின்றது. காப்புறுதி வழங்குநர்கள் இதனை கவனத்திற் கொண்டு அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செலுத்தப்பட்ட இறப்பு அனுகூலங்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 8,418 உடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 11,253 ஆகக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

அட்டவணை 16, 2013 தொடக்கம் 2017 காலப்பகுதிக்கான காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கையின் விபரங்களைத் தருகிறது.

## பொதுக் காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்

2017 ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதித் துறைக்கு வெற்றிகரமாக அமைந்த இன்னுமொரு வருடமாகும். பொதுக் காப்பறுதி வியாபாரத்தில் 12 காப்புறுதி வழங்குநர்கள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் முழுமையாக செயற்படுவதோடு, அதனுடன் இணைந்து மேலும் மூன்று காப்புறுதி வழங்குநர்கள் பொது மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தை செயற்படுத்தி வருகின்றனர். நுளம்புகளினால் ஏற்பட்ட வைரஸ் தொற்றுக்களின் அதிகரிப்பு, வாகனங்கள் மீது அறவிடப்பட்ட இறக்குமதி வரி வீத மாற்றங்கள், பணப் பரிமாற்ற வீதங்களின் ஏற்றத்தாழ்வுகள், பாதகமான காலநிலைகள் போன்றவற்றினால் கடந்த வருடம் ஏற்பட்ட பல எண்ணிக்கையான சவால்களை காப்புறுதி வழங்குநர்களால் எதிர் கொள்ளக்கூடியதாக இருந்தது.

கடந்த வருடங்களைப் போன்று காப்புறுதிச் சந்தையின் GWP பிரதானமாக பொதுக் காப்புறுதித் துறையினால் செலுத்தப்பட்டதோடு, இது, 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த GWP யில் 56.57% ஆகும். (2016 இல் 55.63%). சவால்மிக்க சூழ்நிலைகள் எவ்வாறு இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 79,590 மில்லியன் GWP யுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டு ரூபா 93,119 மில்லியனை GWP ஆக ஈட்டி 2017 ஆம் ஆண்டு 17.00% பாதகமான வளர்ச்சியோடு (2016 இல் 14.90%) முடிவடைந்தது.

இந்த நிலையான வளர்ச்சி 2017 ஆம் ஆண்டில் பிரதானமாக மோட்டார் மற்றும் உடல்நலக் காப்புறுதி வியாபாரங்களினால் ஏற்பட்டது. 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உடல்நலக் காப்புறுதி வியாபாரத்தில் பதிவு செய்யப்பட்ட 17.60% உடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் NITF இனால் செயற்படுத்தப்பட்ட அக்ரஹார உடல்நலக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் ஏற்பட்ட கட்டுப்பண வருமானத்தின் அதிகரிப்பு மற்றும் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அனைத்து இலங்கை பாடசாலை மாணவர்களுக்கும் SLIC ஊடாக கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட சுரக்ஷா இலவச மருத்துவ மற்றும் தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி என்பன 2017 ஆம் ஆண்டில் உடல்நலக் காப்புறுதி வியாபாரத்தில் பதிவு செய்யப்பட்ட 46.23% வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளன.

அட்டவணை 17 மற்றும் விளக்கப்படம் 13 இல் 2017 ஆம் ஆண்டு SLIC 19.71% (2016 இல் 19.10%) சந்தைப் பங்கினை பெற்றதன் மூலம், ரூபா 18,355 மில்லியன் கட்டுப்பண வருமானத்தைப் பதிவு செய்து சந்தையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதற்கமைய, 2016 ஆம் ஆண்டு தவிர தொடர்ச்சியாக 4 வருடங்களும் GWP தொடர்பாக பொதுக் காப்புறுதிச் சந்தையில் SLIC

அட்டவணை 12
காப்புறுதி நிறுவனங்களினால் கோரப்படும் உரிமைக் கோரிக்கைகள் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|---|---|---|
| இயலாமை அனுகூலம் | 45,457 | 436,518 | 430,617 | 488,818 | 636,758 |
| மரணம் | 1,358,337 | 1,889,289 | 1,640,801 | 1,616,565 | 2,088,118 |
| மீளப் பெறல் | 5,677,638 | 7,184,611 | 5,267,864 | 5,121,636 | 5,391,723 |
| முதிர்ச்சி அனுகூலங்கள் | 9,839,833 | 9,754,751 | 11,687,811 | 12,370,659 | 14,239,953 |
| ஏனையவை | 1,388,698 | 1,378,929 | 1,906,560 | 2,887,039 | 3,610,801 |

முதலாவது இடத்தை தக்க வைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 15,198 மில்லியன் கடட்டுப்பண வருமானத்துடன் ஒப்பிடுகையில், அது, 20.77% குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. இது, சுரக்ஷா இலவச மருத்துவ மற்றும் தனிப்பட்ட விபத்துக் காப்புறுதியில் இருந்து ஈட்டப்பட்ட கட்டுப்பணமான ரூபா 2.3 பில்லியனை உள்ளடக்குகிறது. செலிங்கோ காப்புறுதி ரூபா 17,012 மில்லியன் (2016 இல் ரூபா 15,265 மில்லியன்) கட்டுப்பண வருமானத்தை ஈட்டி, 18.27% (2016 இல் 19.18%) சந்தைப்பங்கைப் பெற்று 2017 ஆம் ஆண்டு இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. ஜனசக்தி பொதுக் காப்புறுதி 12.61% (2016 இல் 12.74%) சந்தைப் பங்கைப் பெற்று ரூபா 11,774 மில்லியனை (2016 இல் ரூபா 10,138 மில்லியன்) கட்டுப்பண வருமானமாக பதிவு செய்து சந்தையில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பெயார் பெஸ்ட், யூனியன் பொதுக் காப்புறுதியுடன் இணைந்து GWP யினை 307% ஆக உயர்த்தி, 9,611 மில்லியனைப் பதிவு செய்து சந்தையில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 26.38% வளர்ச்சியைப் பதிவு செய்து, 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,114 மில்லியனை (2016 இல் ரூபா 6,421 மில்லியன்) கட்டுப்பண வருமானமாக ஈட்டி 2017 இல் 8.71% சந்தைப் பங்கினைப் பெற்று (2016 இல் 8.07%) NITF சந்தையில் ஐந்தாவது பாரிய சந்தைச் செயற்பாட்டாளராக உள்ளது. அக்ரஹார உடல்நல காப்புறுதித் திட்டத்தின் ஊடாக ஈட்டப்பட்ட கட்டுப்பண வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் மற்றும் SRCC & T என்பன 2017 ஆம் ஆண்டு NITF யின் உயரிய வளர்ச்சி வீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. அலியான்ஸ் ஜெனரல் மற்றும் பீப்பிள்ஸ் என்பன முறையே 6.01% (2016 இல் 5.34%) மற்றும் 4.92% (2016 இல் 5.23%) சந்தைப் பங்கை 2017 ஆம் ஆண்டில் பெறக்கூடியதாக இருந்தது.

அதிகரிக்கப்பட்ட சந்தைப் பங்குகள் காரணமாக, 2016 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட GWP உடன் ஒப்பிடுகையில், ஒறியன்ட், சணச, அலியான்ஸ் ஜெனரல், கொன்டினன்டல் மற்றும் HNB ஜெனரல் என்பன 25% க்கு மேற்பட்ட வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன. செலிங்கோ பொது, ஜனசக்தி பொது, MBSL மற்றும் பீப்பள்ஸ் தவிர்ந்த ஏனைய சகல காப்புறுதிக் கம்பனிகளின் சந்தைப்பங்குகளும்

அட்டவணை 16

காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| இயலாமை நன்மைகள் | 6,980 | 8,120 | 14,081 | 9,521 | 10,749 |
| இறப்பு | 5,284 | 5,795 | 6,747 | 8,418 | 11,253 |
| சரண் | 41,964 | 46,312 | 42,814 | 46,484 | 46,780 |
| முதிர்வு நன்மைகள் | 102,050 | 107,353 | 120,661 | 108,680 | 115,311 |
| ஏனைய நன்மைகள் | 99,257 | 84,835 | 112,337 | 143,336 | 157,251 |
| மொத்தம் | **255,535** | **252,415** | **296,640** | **316,439** | **341,344** |

அட்டவணை 17

கம்பனி வாரியாக மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் மற்றும் சந்தைப் பங்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதி வழங்குநர் | 2013 | | 2014 | | 2015 | | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுப்பணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) |
| AIA ஜெனரல் | 2,428,675 | 4.17 | 2,655,577 | 4.34 | 3,297,840 | 4.76 | | | | |
| AIG | 880,060 | 1.51 | 414,805 | 0.68 | 3,141 | 0.00 | | | | |
| அலியான்ஸ் ஜெனரல் | 1,964,907 | 3.37 | 2,723,406 | 4.45 | 3,244,844 | 4.68 | 4,247,691 | 5.34 | 5,593,322 | 6.01 |
| அமானா ஜெனரல் | 1,432,135 | 2.46 | 1,285,418 | 2.10 | 1,438,732 | 2.08 | 1,474,186 | 1.85 | 1,739,936 | 1.87 |
| செலிங்கோ ஜெனரல் | 10,311,479 | 17.69 | 11,431,680 | 18.68 | 12,921,561 | 18.65 | 15,265,433 | 19.18 | 17,012,087 | 18.27 |
| கொன்டினென்டல் | 1,330,515 | 2.28 | 1,761,747 | 2.88 | 2,309,413 | 3.33 | 3,088,064 | 3.88 | 3,892,991 | 4.18 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 1,272,941 | 2.18 | 1,358,932 | 2.22 | 1,691,705 | 2.44 | 2,420,130 | 3.04 | 2,966,680 | 3.19 |
| பெயார்பெஸ்ட் | 1,556,386 | 2.67 | 1,638,126 | 2.68 | 1,908,901 | 2.76 | 2,361,614 | 2.97 | 9,610,990 | 10.32 |
| SRCC & T தவிர்ந்த அனைத்து பொது வகுப்பு வணிகத்திற்கான நிகர ஒருங்கிணைந்த விகிதம் | 99.72 | 102.67 | 103.12 | 104.21 | 105.16 |
| பொது நிகர கூட்டு விகிதம் காப்புறுதி வியாபாரம் | 95.48 | 98.18 | 98.49 | 99.86 | 100.69 |

எண்ணிக்கையான கொள்கைகளைப் பெற்று 2017 ஆம் ஆண்டு பெறப்பட்ட மொத்த கொள்கைகளில் 87.96% பிரதிநிதித்துவப்படுத்துகிறது. (2016 - 87.98%) வழங்கப்பட்ட மொத்த மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளில் மூன்றாம் திறத்தவர் காப்புறுதி பெரும்பான்மையாக விளங்குகிறது. இந்த விடயம், எதனைத் தெளிவுபடுத்துகின்றது என்று பார்க்கையில், மக்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மாத்திரம் குறைந்த கட்டுப்பணத்தைச் செலுத்தி குறைந்தபட்ச பாதுகாப்பு மட்டத்தை பெற விரும்புகின்றனர். தீ அபாயக்

அட்டவணை 19
ஈட்டிய நிகர கட்டுப்பணம், ஏற்பட்ட நிகர கோரிக்கைகள், நிகர கோரிக்கையின் சதவீதம், நிகர செலவுகள், நிகர செலவுகள் சதவீதம் மற்றும் நிகர இணைந்த சதவீதம் - பொதுக் காப்புறுதி வர்த்தகம்




காப்புறுதி மற்றும் உடல்நல காப்புறுதிக் கொள்கைகள் தவிர்ந்த அனைத்து உப வகுப்புகளுக்குமான காப்புறுதிக் கொள்கைகள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 இல் அதிகரித்துள்ளன.

## புதிய, புதுப்பிக்கப்பட்ட காப்புறுதிக் கொள்கைகள் மற்றும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் விபரங்கள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 29 மற்றும் விளக்கப்படம் 20 என்பன 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான புதிய காப்புறுதிக் கொள்கைகள், புதுப்பிக்கப்பட்ட காப்புறுதிக் கொள்கைகள் ஆகியவற்றின் விபரங்கள் மற்றும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகள் பற்றிய விபரங்களை விளக்குகிறது. 2017 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் அனைத்து உப வகுப்புகள் சம்பந்தமாக வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் மொத்த எண்ணிக்கை 6,051,867 ஆகும். (2016 இல் 5,909,818) இது, 2016 உடன் ஒப்பிடுகையில், 2.40மூ ஆல் அதிகரித்துள்ளது. கடந்த வருடங்களைப் போன்று 2017 ஆம் ஆண்டு முடிவடைந்ததில் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கையில் மோட்டார் காப்புறுதி அதிகூடிய எண்ணிக்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 2,780,940 (2016 இல் 2,657,337) மூன்றாம் திறத்தவர் கொள்கைகளையும் 2,573,294 (2016 இல் 2,396,217) விரிவான கொள்கைகளையும் உள்ளடக்கி, மொத்தமாக 5,354,234 (2006 இல் 5,053,554) கொள்கைகளை பதிவு செய்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருட காலப்பகுதியின் போது அமுலில் இருந்த கடல் காப்புறுதி மற்றும் தீ அபாயக் காப்புறுதி என்பன முறையே 29.98% மற்றும் 29.62% ஆல் குறைவடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வலுவிலுள்ள ஏனைய காப்புறுதிக் கொள்கைகள் 2017 ஆம் ஆண்டு 6.89% ஆல் சற்று அதிகரித்துள்ளது).

## மீள் காப்புறுதி வியாபாரம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஆரம்பக் காப்புறுதி வழங்குநர்களுக்கு மறு காப்புறுதி காப்பீட்டை இலங்கையில் வழங்குகின்ற ஒரேயொரு நிறுவனமாகும். 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட இல. 1791/4 அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் ஒவ்வொரு பொது மறு காப்புறுதியிலும் இருந்து அவர்களுக்கு எழுகின்ற மொத்த பொறுப்பில் இருந்து 30% ஐ NITF க்கு விட்டுக் கொடுக்குமாறு அனைத்து ஆரம்ப காப்புறுதி வழங்குநர்களும் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் NITF ரூபா 3,683 மில்லியனை மறு காப்புறுதி கட்டுப்பண வருமானமாக பதிவு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டு பதிவு செய்த ரூபா 2,397 மில்லியனுடன் ஒப்பிடுகையில், இது, 53.64% ஆல் அதிகரித்துள்ளது.

2017 இல் NITF இனால் மீளப் பெறுதல் கட்டுப்பணமாக ரூபா 175 மில்லியன் மறு காப்புறுதி வழங்குநர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது. (2016 இல் ரூபா 252 மில்லியன்) இதன் விளைவாக, 95.25% (2016 இல் 89.50%) தக்கவைத்துக் கொள்ளக்கூடிய விகிதத்தை பதிவு செய்து கொள்ளக்கூடியதாக இருந்தது. NITF ரூபா 3,058 (2016 இல் 1,929 மில்லியன்) மில்லியனை நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணமாக பதிவு செய்து 58.53% சாதகமான அதிகரப்பை காட்டுகிறது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உறப்பட்ட நிகர கோரிக்கைகள் ரூபா 2,326 மில்லியன் ஆகும். (2016 இல் ரூபா 2,868 மில்லியன்) இது, 76.06% கோரிக்கைகள் விகிதத்தை உருவாக்கியது. (2016 இல் 148.68%) 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் NITF இனுடைய மறு காப்புறுதி வியாபாரம் அறிக்கையிட்ட செலவுகளின் தொகை ரூபா 765 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டு உறப்பட்ட ரூபா 583 மில்லியனோடு ஒப்பிடுகின்ற போது, 31.22% அதிகரிப்பை பதிவு செய்கிறது. மேலும், இது 2017 ஆம் ஆண்டு 25.02% செலவு விகித்ததை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு அமைவாக ஒன்றிணைந்த விகிதமாக கருதப்படும் கோரிக்கை விகிதம் மற்றும் செலவு விகிதத்தினுடைய ஒன்றுதிரட்டு 101.08% ஆக பதிவு செய்யப்பட்டு, 2016 ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட 178.90% வீதத்துடன் ஒப்படுகையில், 77.82% ஆல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது.

2016 ஆம் அண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியான ரூபா 5,755 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு NITF இனுடைய மறு காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 4,250 மில்லியன் ஆகும். NITF யினுடைய மறு காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்ட அரசாங்க பிணையங்களின் முதலீடுகள் 78.65% ஆல் குறிப்பிடத்தக்களவு மோசமடைந்துள்ளது. இது, 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட ரூபா 1,625 மில்லியனுக்கு எதிராக ரூபா 347 மில்லியனை பதிவு செய்துள்ளது.

மறு காப்புறுதி பெறுவனவுகள் ரூபா 2,194 மில்லியனை பதிவு செய்துள்ளது. (2016 இல் ரூபா 2,880 மில்லியன்) 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மறு காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் இது பிரதான சொத்து வகையாக பிரதிநிதித்துவப்படுத்தி 51.62% பதிவு செய்துள்ளது. கூறப்பட்ட மிகுதி 2016 இல் இருந்து எந்தவித மாற்றமும் இன்றி அவ்வாறே இருக்கின்றது. இதற்கமைய NITF இன் மறு காப்புறுதி வியாபாரம் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கான போதுமான அளவிலான அங்கீகரிக்கப்பட்ட

மூலதனங்களை கொண்டிருக்கவில்லை.

## காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது 60 காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகள் செயற்பாட்டில் இருந்தன. அவை, ரூபா 22,423 மில்லியன் GWP யினை ஈட்டியுள்ளன. 2016 ஆம் ஆண்டு ஈட்டப்பட்ட ரூபா 17,781 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டு காப்புறுதி இடைத்தரகு வியாபாரத்தின் மூலம் ஈட்டப்பட்ட மொத்த GWP 26.11% வளர்ச்சியை பதிவு செய்கிறது. இந்த மொத்த GWP நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் இருந்தும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் இருந்தும் ஈட்டப்பட்ட கட்டுப்பண வருமானத்தை உள்ளடக்குகின்றது. இவை முறையே ரூபா 341 (1.52%) மற்றும் ரூபா 22,083 (98.48%) மில்லியன் ஆகும்.

கடந்த வருடங்களைப் போன்று 2017 ஆம் ஆண்டில் நீண்கால காப்புறுதி வியாபாரத்தை நோக்கிய காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகளின் பங்களிப்பு முக்கியமற்றதாகும். இடைத்தரகுக் கம்பனிகளால் வழங்கப்பட்ட விபரங்களுக்கு அமைவாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த GWP யில் 0.48% மாத்திரமே அவற்றின் மூலம் ஈட்டப்பட்டது. எவ்வாறாயினும், காப்புறுதி இடைத்தரகு கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த GWP யில் 23.72% ஐ ஈட்டி ரூபா 93,119 மில்லியனை பதிவு செய்துள்ளன. (SRCC & T கட்டுப்பணம் உள்ளடங்கலாக.)

2017 ஆம் ஆண்டில் ஒவ்வொரு காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகளும் ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான GWP யினை சேகரித்தன. அத்துடன், இக்கம்பனிகள் கூட்டாக ரூபா 21,264 மில்லியன் GWP யினை ஈட்டியிருந்தன. எஞ்சிய 33 காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகள் அட்டவணை 30 இல் சித்தரிக்கப்பட்டவாறு ரூபா 1,159 மில்லியனனை ஈட்டியிருந்தன.

வரைபடம் 20
புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் செயற்பாட்டிலுள்ள காப்புறுதிக் கொள்கைகள் சம்பந்தமான விபரங்கள் - பொதுக் காப்புறுதி வர்த்தகம்




வரைபடம் 21
2008 - 2017 வரை காப்புறுதித் தரகு நிறுவனங்கள் மூலம் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்




| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீண்டகாலக் காப்புறுதி (GWP) (ரூபா மில்லி.) | 195 | 188 | 243 | 296 | 195 | 191 | 158 | 206 | 263 | 341 |
| பொதுக் காப்புறுதி (GWP) (ரூபா மில்லி.) | 8,781 | 8,698 | 9,317 | 10,193 | 12,532 | 14,189 | 14,559 | 16,124 | 17,518 | 22,083 |
| மொத்த GWP (%) தரகுக் கம்பனிகளின் பங்களிப்பு | 15.43 | 15.44 | 14.43 | 12.78 | 14.03 | 14.39 | 13.91 | 13.28 | 12.43 | 13.62 |

அட்டவணை 28
மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கைகளின் எண்ணிக்கை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| | காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
| தீ அபாயம் | 177,749 | 188,578 | 227,800 | 246,058 | 242,184 |
| கடல் அபாயம் | 158,893 | 186,447 | 190,720 | 191,966 | 196,293 |
| மோட்டார் | 3,795,059 | 4,004,162 | 4,531,187 | 5,075,622 | 5,428,618 |
| 3ம் தரப்பு மட்டும் | 2,126,037 | 2,229,153 | 2,460,596 | 2,628,255 | 2,785,000 |
| விரிவான | 1,669,022 | 1,775,009 | 2,070,591 | 2,447,367 | 2,643,618 |
| உடல் நலம் | 11,609 | 13,716 | 15,053 | 16,040 | 14,121 |
| ஏனைய செலவுகள் | 186,131 | 204,285 | 202,038 | 238,921 | 290,357 |
| மொத்தம் | **4,329,441** | **4,597,188** | **5,166,798** | **5,768,607** | **6,171,573** |

அட்டவணை 29

புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள கொள்கைகள் பற்றிய விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| | 2016 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய கொள்கைகள் | புதுப்பிக்க-ப்பட்டவை | ஆண்டு இறுதியில் அமுலில் உள்ளவை | புதிய கொள்கைகள் | புதுப்பிக்க-ப்பட்டவை | ஆண்டு இறுதியில் அமுலில் உள்ளவை |
| தீ அபாயம் | 103,969 | 136,976 | 344,682 | 88,247 | 156,266 | 242,602 |
| கடல் அபாயம் | 165,619 | 5,180 | 237,873 | 170,330 | 5,669 | 166,547 |
| மோட்டார் | 2,191,720 | 2,886,731 | 5,053,554 | 2,380,751 | 3,029,136 | 5,354,234 |
| 3ம் தரப்பு மட்டும் | 1,178,712 | 1,453,258 | 2,657,337 | 1,289,099 | 1,484,081 | 2,780,940 |
| விரிவான | 1,013,008 | 1,433,473 | 2,396,217 | 1,091,652 | 1,545,055 | 2,573,294 |
| உடல் நலம் | 8,826 | 6,235 | 14,649 | 5,043 | 7,716 | 11,563 |
| ஏனைய செலவுகள் | 183,772 | 47,437 | 259,060 | 229,380 | 63,798 | 276,921 |
| மொத்தம் | **2,653,906** | **3,082,559** | **5,909,818** | **2,873,751** | **3,262,585** | **6,051,867** |

அட்டவணை 30

காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் ஊடாக உழைக்கப்பெற்ற மொத்தக் கட்டுப்பணம் - 2017

| | | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்டகால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| | தரகர்களின் பெயர் | ரூபா ('000) | சந்தைப் பங்கு (%) | ரூபா ('000) | சந்தைப் பங்கு (%) | ரூபா ('000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ADZ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 14,725 | 4.32 | 692,419 | 3.14 | 707,144 | 3.15 |
| 2 | எயிட்கென் ஸ்பென்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 3,745 | 1.10 | 627,123 | 2.84 | 630,868 | 2.81 |
| 3 | அல்பின்கோ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 882 | 0.26 | 684,235 | 3.10 | 685,117 | 3.06 |
| 4 | அலியான்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 6,671 | 1.96 | 120,540 | 0.55 | 127,211 | 0.57 |
| 5 | அசற்லைன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 403 | 0.12 | 1,829,565 | 8.29 | 1,829,968 | 8.16 |
| 6 | சினேர்ஜி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 510 | 0.15 | 131,486 | 0.60 | 131,996 | 0.59 |
| 7 | CF இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 79 | 0.02 | 2,704,243 | 12.25 | 2,704,322 | 12.06 |
| 8 | கொலம்போர் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 6,445 | 1.89 | 272,431 | 1.23 | 278,876 | 1.24 |
| 9 | கொமர்ஷியல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 35,560 | 10.44 | 2,527,181 | 11.44 | 2,562,741 | 11.43 |
| 10 | டெல்மேஜ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 73,091 | 21.45 | 967,461 | 4.38 | 1,040,552 | 4.64 |
| 11 | ஈக்குவிட்டி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | - | - | 158,195 | 0.72 | 158,195 | 0.71 |
| 12 | எசேஜீ கரிம்ஜீ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 23,806 | 6.99 | 462,280 | 2.09 | 486,087 | 2.17 |
| 13 | பின்லே இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 20,006 | 5.87 | 1,251,088 | 5.67 | 1,271,094 | 5.67 |
| 14 | போர்சைட் இன்சூரன்ஸ் அன்ட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | - | - | 143,942 | 0.65 | 143,942 | 0.64 |
| 15 | குளோபல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேவிசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 5,307 | 1.56 | 115,258 | 0.52 | 120,565 | 0.54 |
| 16 | இன்ஷுர்மீ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 23,898 | 7.01 | 130,859 | 0.59 | 154,758 | 0.69 |
| 17 | லைஃவ் அன்ட் ஜெனரல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிட்டெட் | 2,169 | 0.64 | 157,476 | 0.71 | 159,645 | 0.71 |
| 18 | மேர்க்கன்டைல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 159 | 0.05 | 326,290 | 1.48 | 326,449 | 1.46 |
| 19 | நேஷன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட்டெட் | 7,194 | 2.11 | 1,612,609 | 7.30 | 1,619,803 | 7.22 |
| 20 | புரோகெயார் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 5,995 | 1.76 | 350,873 | 1.59 | 356,868 | 1.59 |
| 21 | புரொடெக்சன் அன்ட் அஷ்யூரன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | - | - | 1,301,599 | 5.89 | 1,301,599 | 5.80 |
| 22 | R M S இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | - | - | 106,778 | 0.48 | 106,778 | 0.48 |
| 23 | ரிலயன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 26,383 | 7.74 | 579,623 | 2.62 | 606,006 | 2.70 |
| 24 | சேனாரத்ன இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 18,092 | 5.31 | 1,469,745 | 6.66 | 1,487,837 | 6.64 |
| 25 | செங்கடகல இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | - | - | 1,082,045 | 4.90 | 1,082,045 | 4.83 |
| 26 | ஸ்ரடெஜிக் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 8,676 | 2.55 | 954,691 | 4.32 | 963,367 | 4.30 |
| 27 | ஸெனித் ன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | 923 | 0.27 | 219,709 | 0.99 | 220,632 | 0.98 |
| | உப மொத்தம் | **284,719** | **83.56** | **20,979,745** | **95.01** | **21,264,464** | **94.83** |
| | ஏனைய காப்புறுதி தரகுக் கம்பனிகள் (33) | **55,998** | **16.44** | **1,103,022** | **4.99** | **1,159,020** | **5.17** |
| | முழுத் தொகை | **340,717** | **100** | **22,082,767** | **100.00** | **22,423,484** | **100.00** |

# செயற்பாட்டு மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகள்

### 1. திரட்டுகள் பற்றிய மீளாய்வு

#### a) வருடாந்த சட்ட நியதித் திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், மற்றும் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கைகள்

திருத்தப்பட்டவாறான தீர்மானம் 14 க்கு அமைய, நிதியாண்டு முடிவடைந்தில் இருந்து தொடர்ந்து வரும் 4 மாத காலப் பகுதிக்குள் காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் வருடாந்த நியதிச்சட்டத் திரட்டுகள் மற்றும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஆகியவற்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றன. மேலும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள காப்புறுதி வழங்குனர்கள், தங்களின் வருடாந்த நியதிச் சட்டத் திரட்டுடன் இணைத்து, காப்புறுதிக் கணிப்பீட்டு அறிக்கைகளையும், சுருக்கங்களையும் சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றனர். சட்டத்தின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் ஒழுகி நடப்பதையும், அதன் துல்லியத் தன்மையையும் ஆராய்வதற்காக ஆணைக்குழு திரும்பல்கள், நேரகாலத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றதா என்பதை உன்னிப்பாக மேற்பார்வை செய்து வருகின்றன.

காப்புறுதிக் கம்பனிகள் நியதிச்சட்ட தேவைப்பாடுகளில் இருந்து விலகிச் சென்றிருந்தால், அவற்றை உரிய கால வரையறைக்குள் சீராக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றன. சட்டத்தின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளோடு காப்புறுதி வழங்குநர்கள் ஒழுகி நடப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆணைக்குழு பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கு மேலதிகமாக, திரட்டுகளை மீளாய்வு செய்கின்றபோது அவதானிக்கப்பட்ட சில விடயங்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட தள மேற்பார்வையின் போது தீர்க்கப்பட்டன.

#### b) இடர் மதிப்பீட்டு அறிக்கை (RAR)

RBC கட்டமைப்புடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு இக்காலப் பகுதியின் போது இடர் மதிப்பீட்டு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டது. காப்புறுதிக் கம்பனிகள் தம்முடைய 2016 ஆம் ஆண்டுக்கான இடர் மதிப்பீட்டு அறிக்கையை 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னராகவோ ஆணைக்குழுவுக்குச் சமர்பிக்குமாறு வேண்டப்பட்டன. நான்கு கம்பனிகள் தவிர, அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும், உரிய நேரத்தில் RAR ஐ ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கவில்லை. கம்பனிகளின் செயற்பாடுகள் தொடர்பான கண்ணோட்டம் ஒன்றைப் பெறுவதற்காக ஆணைக்குழு நிறுவனக் கட்டமைப்பு மற்றும் உரித்து, வியாபார விபரங்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் பங்கீடு, கோரிக்கைகளின் நிர்வாகம், இடர் முகாமைதத்துவம் போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய RAR இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை மீளாய்வு செய்தது.

#### c) மீள் காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள்

சட்டத்தின் பிரிவு 31(1) க்கு அமைவாக, அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் வருடா வருடம் தமது மறு காப்புறுதி ஒழுங்குபடுத்தல்களை ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு வேண்டப்பட்டுள்ளன. ஆணைக் குழுவினால் குறித்துரைக்கப்பட்ட மதிப்பீட்டுத் தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தியுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட மறு காப்பீட்டு வழங்குநரிடம் இருந்து மறு காப்பீடு பெறப்பட்டதா என்பதையும், காப்புறுதி வழங்குநர் ஈடுபட்டுள்ள அனைத்து வகையான வியாபார வகைகளுக்கும் காப்பீடு உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும் மற்றும் NITF யினால் கட்டாய விட்டுக்கொடுப்பு வழங்கப்பட்டுள்ளனவா போன்ற விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக ஆணைக்குழு மேலே கூறப்பட்ட விடயங்களை மீளாய்வு செய்யும். ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்ட ஏதேனும் இணங்கி நடக்காத விடயங்கள் அல்லது விலகல்கள் என்பன பொருத்தமான கம்பனிகளுக்கு சீராக்க நடவடிக்கைகளை குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் எடுப்பதற்காக ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும்.

மேலும், அனைத்து காப்புறுதி வழங்குநர்களும் விருப்பத்திற்குரிய மீள் காப்புறுதி ஒழுங்குபடுத்தல்களை காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றன. மேலே கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தல்களை ஆணைக்குழு மீளாய்வு செய்யும். இதற்கு மேலதிகமாக, NITF க்கு விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டாய விட்டுக் கொடுப்பு மேற்கொள்ளப்பட்டதா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்காக NITF இன் கருத்துக்களும் பெறப்படும். அத்துடன், அவதானிக்கப்பட்ட விலகல்கள் பொருத்தமான காப்புறுதிக் கம்பனிகளுக்கு குறித்துரைக்கப்பட்ட உரிய நேரத்திற்குள் சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அறிவிக்கப்படும்.

#### d) காலாண்டுத் திரட்டுக்கள்

சட்டத்தின் உரிய ஏற்பாடுகளுக்கு அமைவாக அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் ஒவ்வொரு காலாண்டின் முடிவில் இருந்து 45 நாட்களுக்குள் கம்பனிகளின் காலாண்டுத் திரட்டுக்களைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்துகின்றன. சட்டத்தின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளோடு ஒழுகி நடந்திருப்பதையும்

கம்பனிகளின் செயற்பாட்டை மதிப்பீடு செய்வதற்கும் 2017 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டுத் திரும்பல்கள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டன.

ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரின் செயற்பாட்டை மதிப்பீடு செய்வதற்காக நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டின் மீதான கட்டுப்பண வருமானம் எழுத்துறுதி இலாபம் மற்றும் நிகர இலாபம் என்பவற்றின் அடிப்படையில் ஆணைக்குழு திரட்டுக்களைப் பகுப்பாய்வு செய்துள்ளன. மேலும், இலாபகரத் தன்மை, செலவுகள் மற்றும் கோரிக்கைகள் மீதான விரிவான விகிதப் பகுப்பாய்வு ஒன்று காப்புறுதி வழங்குநர்களின் செயற்பாட்டை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

காப்புறுதி வழங்குநர்களின் சொத்து மற்றும் பொறுப்பு நிலைமை, மூலதன போதுமான தன்மை விகிதம், திரவத்தன்மை மற்றும் மூலதன போதுமான தன்மை (கடன் தீர் திறன்) என்பனவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரின் நிதி நிலைமை ஒவ்வொரு காலாண்டிலும் மேற்பார்வை செய்யப்பட்டது. காலாண்டுத் திரட்டுக்களை மீளாய்வு செய்யும் போது அவதானிக்கப்பட்ட ஏதேனும் முரண்பாடுகள் இணங்கி ஒழுகத் தவறியமை என்பன பொருத்தமான காப்புறுதி வழங்குநர்களுக்கு அறிவிக்கப்படுவதோடு, குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் அவற்றை சீராக்குமாறு காப்புறுதி வழங்குநர்கள் வேண்டப்படுகின்றனர்.

“சட்டத்தின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி நடவடிக்கைகளை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றுடன் இணங்கி நடந்தமையை உறுதிப்படுத்துவதற்காக” காப்புறுதி வழங்குநர்கள் காலாண்டு திரட்டுக்களுடன் இரண்டு இணக்க சான்றுப்படுத்தல்களைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

### e) மாதாந்த திரட்டுக்கள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு மாத முடிவிலிருந்து 21 நாட்களுக்குள் RBC கட்டமைப்பின் கீழ் மாதாந்த அடிப்படையிலான திரும்பல்களைச் சமர்ப்பிக்குமாறு 05 காப்புறுதி நிறுவனங்கள் தேவைப்படுத்தப்பட்டன. இந்தத் தீர்மானம் எடுப்பதற்கான காரணம் யாதெனில், இக்கம்பனிகளால் சட்டத்துடன் இணங்கி ஒழுகாமை அறிக்கையிடப்பட்டது. அத்துடன், அக்கம்பனிகளின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் இணக்கம் என்பவற்றை அடிக்கடி ஆய்வு செய்வதற்காகவே இந்தத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. இதற்கமைவாக, சட்டம், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றுடன் இந்தக் கம்பனிகளின் நிதி நிலைமை இணங்கியிருந்தது என்பதை உறுதிப்படுத்தும் முகமாக ஆணைக்குழு இக்கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திரட்டுக்களை மீளாய்வு செய்தது.

## 2. கடன் தீர் திறன் விழிம்பு விதிகளுடன் இணக்கத்தை மேற்பார்வை செய்தல் (இடர் அடிப்படையிலான மூலதனம்)

கடன் தீர் திறன் விழிம்பு விதிகளுக்கு அமைவாக (இடர் அடிப்படையிலான முதலீடு) ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் பொது மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் குறைந்தபட்ச மொத்த இருக்கக்கூடிய மூலதனம் (TAC), மூலதன போதுமான தன்மை விகிதம் என்பவற்றை பேணிப் பாதுகாக்குமாறு வேண்டப்பட்டன. அத்துடன், மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த திரட்டுக்களுடன் இணைந்து, கடன் தீர் திறன் விழிம்பு (இடர் அடிப்படையிலான மூலதனம்) கணக்குகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். ஆணைக்குழு கடன் தீர் திறன் விழிம்பு விதிகளுடன் இணங்கியிருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அத்தகைய கணக்குகளை மீளாய்வு செய்வதுடன் பகுப்பாய்வும் செய்கிறது. காப்புறுதி வழங்குநர்களால் தேவைப்படுத்தப்பட்ட கடன் தீர் திறன் விழிம்பு தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாதவிடத்து அல்லது கணக்கீடுகள் தவறாக இருக்கும் போது அக்காப்புறுதி வழங்குநர்களை கடன் தீர் திறன் விழிம்பு விதிகளுடன் இணங்கிச் செல்வதற்கான உடனடியான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அத்தகைய தவறுகளை குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் சீராக்குமாறும் ஆணைக்குழு அறிவுறுத்தும்.

## 3. முதலீட்டுக் குறிப்புகளுடன் கண்காணிப்பு இணக்கம்

### a) அரசாங்க பிணையங்களில் முதலீடு

சட்டத்தின் பிரிவு 25 க்கு அமைவாக காப்புறுதி வழங்குநர்கள் அரசாங்க பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளில் 20% க்கு குறையாத மூலதனத்தையும், நீண்டகால காப்புறுதி நிதியத்தில் 30% க்கு குறையாத மூலதனத்தையும் முதலீடு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர். சமர்ப்பிக்கப்பட்ட திரட்டுக்களின் அடிப்படையில் சட்டத்தின் பிரிவு 25 க்கு அமைவாக ஆணைக்குழு அரசாங்க பிணையங்கள் மீதான முதலீடுகளை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் உன்னிப்பாகக் கண்காணிக்கும். திரட்டுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள அரசாங்க பிணையங்களின் மீது உள்ள முதலீடுகளின் உரித்து மற்றும் சரியான தன்மை என்பவற்றை ஆதாரப்படுத்துவதற்காக ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட வைத்திருக்கும் கூற்றுக்களை மீளாய்வு செய்யும்.

இவற்றில் ஆணைக்குவினால் அவதானிக்கப்பட்ட ஏதேனும் முரண்பாடுகள் அல்லது விலகல்களை இருப்பின், அவை உரிய கம்பனிகளுக்கு குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் சீராக்குவதற்காக அறிவிக்கப்படும்.

### b) தீர்மானம் 1ன் படியான ஏனைய முதலீடுகள்

2011 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம்

திகதி வெளியிடப்பட்ட தீர்மானம் ஒன்று மற்றும் அதனை உடனடுத்த திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் அரசாங்க பிணையத்தில் தொழில்நுட்ப ஒதுக்கு மற்றும் நீண்டகால காப்புறுதி நிதியத்தில் குறைந்தபட்ச வீதங்களை முதலீடு செய்த பின்னர், எஞ்சியுள்ள சொத்துக்களை முதலீடு செய்யுமாறு தேவைப்படுத்தப்படுவர். தீர்மானம் ஒன்றின்படி முதலீடுகள் அமைந்திருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி வழங்குநர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை கம்பனி மீளாய்வு செய்யும்.

இவற்றில் அவதானிக்கப்பட்ட ஏதேனும் உடன்பாடுகள் அல்லது விலகல்கள் பொருத்தமான காப்புறுதி வழங்குநர்களுக்கு குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்காக அறிவிக்கப்படும்.

### c) கடன் தீர் திறன் விழிம்பு விதிகள் (இடர் அடிப்படையிலான மூலதனம்) மீதான அமுலாக்க உபாயம்

கடன்தீர் திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான மூலதன போதுமான தேவைப்பாடுகளை ஏதேனும் காப்புறுதிக் கம்பனி ஒன்று பேணிப் பாதுகாக்கத் தவறியிருப்பின், ஆணைக்குழு அந்த விடயத்தில் தலையிட்டு RBC மீதான அமுலாக்க உபாயத்துடன் இணங்கி நடக்குமாறு கம்பனியை வேண்டுவதன் மூலம் அவ்விடயத்திற்கு எதிராக சீராக்கல் நடவடிக்கையை மேற்கொள்ளும். இத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கான காரணம் யாதெனில், இந்தப் பிரச்சினைகள் கட்டுப்பாட்டை மீறிச் செல்வதைத் தவிர்ப்பதற்கும், முக்கியமான அமுலாக்கப் பிரச்சினை ஒன்றாக உருவெடுப்பதை நிவர்த்தி செய்யும் பொருட்டும், பிரச்சினைக்குரிய காப்புறுதிக் கம்பனிகளை உரிய காலத்தில் கண்டுபிடித்து அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வினைத்திறனான நடவடிக்கைகளை எடுப்பதற்குமாகும். இவ்வாறு சம்பந்தப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் செயற்பாட்டை உன்னிப்பாக அவதானிப்பதன் மூலம் நெருக்கடியான சூழ்நிலைக்கு இட்டுச் செல்லும் மிக மோசமான நிதி நிலைமை அல்லது கடன் தீர் திறன் ஏற்படுவதைத் தடுக்கக்கூடியதாக இருக்கும்.

## 4. வேலைத்தல பரிசீலனைகள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது இடர் அடிப்படையிலான மேற்பார்வை முறைமைக்கு அமைவாக ஆணைக்குழு காப்புறுதிக் கம்பனிகளில் மூன்று தள பரிசீலனைகளை நடத்தியது. 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தலப் பரிசீலனைக்கான பிரதான இலக்குகளாக பின்வருவன அமைகின்றன. அதாவது, கம்பனியின் நிறுவன ரீதியான இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றி சிறந்த விளக்கம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதலாகும். சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, காப்புறுதி வழங்குநர்களின் செயற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடபடி முறைகள் இருந்தனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக இவற்றை ஆணைக்குழு மீளாய்வு செய்தது. அத்துடன், காப்புறுதி வழங்குநர்களின் செயற்பாடு, பொறுப்பு, மதிப்பீடுகள், நடபடி முறைகள் மற்றும் முறைமைகள் பற்றி மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதி வழங்குநர்களின் சிரேஷ்ட அலுவலர்கள் உள்ளக / வெளியக கணக்காய்வாளர்கள் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் ஆகியோருடன் ஆணைக்குழு நேர்முகம் காணல்களையும் மேற்கொண்டது. வேலைத்தல பரிசீலனைகளை மேற்கொண்ட போது, பண மோசடிகளுக்கு எதிரான ஒழுங்கு விதிகளும் (AML) இணங்கி ஒழுகப்பட்டனவா என்பது பற்றி ஆணைக்குழு சரிபார்த்தது.

வேலைத்தல பரிசீலனைகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களும், மேம்பாடுகள் தேவைப்படுகின்ற விடயங்களுக்கு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளும், தொடர்புபட்ட காப்புறுதி வழங்குநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## 5. மேலதிக நிதி மதிப்பீடுகள்

விசாரணை / முறைப்பாடு ஒன்றின் பகுதியாக பெறப்பட்ட தகவல்கள் தொடர்பாக ஆணைக்குழு மேலதிக நிதி மதிப்பீடுகளை மேற்கொள்ளும். ஆணைக்குழு தீர்மானங்களை எடுப்பதை வழிவகை செய்வதை இலகுபடுத்தும் பொருட்டு பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக மேலதிக நிதித் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. முறைப்பாட்டில் கூறப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆணைக்குழுவினால் வேலைத்தல பரிசீலனைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்தகைய இயல்பை உடைய ஒரு தள மேற்பார்வையை ஆணைக்குழு நடத்தியது.

## 6. இலங்கை மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள்

காலாண்டுத் திரட்டுக்களில் இருந்த தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை தொகுத்து ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியிலுள்ள நிதி முறைமை ஸ்திரத்தன்மை திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் காப்புறுதித் துறையின் செயற்பாடு சம்பந்தமான நிதித் தகவல்களை சமர்ப்பித்தது. காப்புறுதி வியாபாரத் துறையின் செயற்பாட்டை அறிந்து கொள்வதற்கு ஆணைக்குழு மொத்த சொத்துக்கள் காப்புறுதி வியாபாரத்தின் பல்வேறுபட்ட வகுப்புகளில் இருந்து பெறப்பட்ட கட்டுப்பண வருமானம், எழுத்தாக்கப் பெறுபேறுகள், காப்புறுதிக் கம்பனிகளின் நிகர இலாபங்கள் மற்றும் சம்பாத்தியங்கள் மீதான விகிதங்கள், இலாபகரத்தன்மை, திரவத்தன்மை, தக்கவைத்துக் கொள்ளக்கூடிய தன்மை போன்ற விடயங்கள் மீதான விபரங்களை பகுப்பாய்வு செய்தது.

## 7. 2016 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் துறைக் கையேடு

காப்புறுதிக் கைத்தொழில் மற்றும் அதன் பங்குதாரர்களின் நன்மைக்காக ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழில் பற்றிய தகவல்களையும், புள்ளி விபரங்களையும் தொகுத்து “கைத்தொழிற்துறை கையேட்டினை” பிரசுரித்தது. இந்தக் கையேடு, மொத்த சொத்துக்கள், காப்புறுதி வியாபரத்தின் பல்வேறுபட்ட

வகுப்பிற்குரிய மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம், சந்தைப்பங்கு, எழுத்தாக்கப் பெறுபேறுகள், மொத்த மூலதனம், கடன் தீர் திறன் நிலைமை போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவான தகவல்களை உள்ளடக்கியிருக்கின்றது.

## 8. காப்பறுதிக் கம்பனிகளில் முதலீடு செய்வது தொடர்பான வழிகாட்டிகள்

ஆணைக்குழு அதன் முகாமைத்துவத்தின் கீழ் வரும் நிதிகள் விவேகமாகவும், சரியான வகையிலும் முதலீடு செய்யப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி கம்பனிகளுக்கு முதலீடுகள் மீதான வழிகாட்டிகளை வழங்கியது. இந்த வழிகாட்டிகள், மூலதன முகாமைத்துவ ஆளுகை, மூலதன இலாகாக்களின் முகாமைத்துவம் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட இடர்கள் சம்பந்தமாக அவதானிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச கொள்கைகளை எடுத்தியம்புகிறது.

## காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகள்

### 1. காலாண்டுத் திரட்டுக்கள், இடைக்கால நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் என்பவற்றின் மீளாய்வு

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 1642/16 (முதலாவது அட்டவணை) இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்த திகதியில் இருந்து 45 நாட்களுக்குள் காப்புறுதி இடைத்தரகுக் கம்பனிகள் தமது காலாண்டு திரும்பல்களை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

பெரும்பான்மையான காப்புறுதி தரகுக் கம்பனிகள் தமது காலாண்டு திரட்டுக்களை ஆணைக்குழுவுக்கு உரிய கால எல்லைக்களில் சமர்ப்பித்திருந்தன. அவற்றின் நிதி நிலைமை, செயற்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாட்டுடன் இணங்கி ஒழுகியமை என்பவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆணைக்குழு காலாண்டு திரும்பல்களை மீளாய்வு செய்தது. ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்ட முரண்பாடுகள் மற்றும் விலகல்கள் சீராக்கத்திற்காக உரிய தரகுக் கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்கள், நிதியாண்டு முடிவடைந்ததில் இருந்து 06 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களும், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் இருந்து இடம்பெற்றிருந்த விலகல்களும் சீராக்கத்திற்காக உரிய காப்புறுதித் தரகு கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### 2. கட்டுப்பணச் சேகரிப்பைக் கண்காணித்தல்

சட்டத்தின் பிரிவு 89 இன்படி காப்புறுதித் தரகுக் கம்பனிகளினால் சேகரிக்கப்பட்ட நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் காப்புறுதி வழங்குநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது. ஆணைக்குழு, காலாண்டுத் திரும்பல்களை மீளாய்வு செய்வதன் மூலம் காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பிரிவு 89 இன்படி இணங்கி நடக்கின்றனவா என்பதை உன்னிப்பாக மேற்பாவை செய்வதோடு, தள மேற்பார்வைகளின் போது இந்த விடயம் உறுதிப்படுத்தப்படும். காப்புறுதித் தரகுக் கம்பனிகள் அவ்வாறு இணங்கி நடந்திருக்காத போது ஆணைக்குழு அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தது.

### 3. வேலைத்தல பரிசீலனைகள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது ஆணைக்குழு அதன் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளோடு இணங்கி நடந்திருக்கின்றனவா என்பதை அவதானிப்பதற்கு காப்புறுதித் தரகுக் கம்பனிகளில் 8 தள மேற்பார்வைகளை மேற்கொண்டது. இந்த தள மேற்பார்வையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களும் சீராக்கல் நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளும் பொருத்தமான தரகுக் கம்பனிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. மேலும், ஏதேனும் மீறல்கள் ஏற்பட்டிருப்பின், ஆணைக்குழு அதற்கான பொருத்தமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை எடுத்தது.

### 4. பதிவுகளைப் புதுப்பித்தல்

2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த உரிமங்களைப் புதுப்பிப்பதற்காக காப்புறுதித் தரகுக் கம்பனிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. புதுப்பித்தலுக்கு முன்னதாக கம்பனிகளின் நிதி நிலைமை மற்றும் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக, ஆணைக்குழு அவற்றின் கணக்காய்வு நிதிக் கூற்றுக்கள் காலாண்டுத் திரும்பல்கள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்தது.

### 5. புதிய தரகுக் கம்பனிகளைப் பதிவுசெய்தல்

தரகுக் கம்பனிகளாகப் பதிவு செய்வதற்கு புதிய கம்பனிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பதிவை சிபாரிசு செய்வதற்கு முன்னராக, விண்ணப்பம் மேற்கொண்ட கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், வியாபாரத் திட்டம், நிறுவனக் கட்டமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்தது.

# ஒழுங்குமுறை மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளைப் பதிவுசெய்தல்

இந்த வருட காலப்பகுதியின் போது புதிய பதிவுக்கான விண்ணப்பங்கள் ஆணைக்குழுவினால் பெறப்படவில்லை. இதற்கமைவாக, பதிவு செய்யப்பட்ட காப்புறுதி வழங்குநர்களின் தொகை கடந்த வருடத்தைப் போன்று 28 ஆக இருக்கிறது. எவ்வாறாயினும், ஒரேயொரு காப்புறுதி நிறுவனம் எந்தவித புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்ளாது இலங்கையில் இருந்து வெளியெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இணைப்பு 1 : ஆணைக்குழுவோடு பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து காப்புறுதி கம்பனிகளின் பெயர் விபரங்களும் அந்தக் கம்பனிகளுக்கு காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதி வகை/வகைகள் என்பனவற்றின் பெயர்களையும் வழங்குகின்றது.

### புதிய காப்புறுதி தரகுக் கம்பனிகளின் பதிவு மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் தரவை புதுப்பித்தல்

காப்புறுதித் தரகர்களைப் பதிவு செய்வதற்காக அழைக்கப்படும் புதிய விண்ணப்பங்களின் தற்காலிக இடைநிறுத்தம் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. இதற்கமைய ஆணைக்குழு காப்புறுதி தரகர்களாக பதிவு செய்துகொள்ள அக்கறையுடைய ஆட்களிடம் இருந்து 9 புதிய வியாபார உத்தேச திட்டங்களை பெற்றது. பெற்ற 9 விண்ணப்பங்களில் ஐந்து ஆட்களுக்கு பெயர் அங்கீகாரத்தை ஆணைக்குழு வழங்கியது. மேலும், இந்தக் காலப்பகுதியின் போது ஆணைக்குழு 3 புதிய காப்புறுதித் தரகர்களுக்கு பதிவினை வழங்கியது. மேலும், இரண்டு பதிவு செய்யப்பட்ட காப்புறுதித் தரகர்கள் (பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்காக) நீண்டகால கால காப்புறுதி வியாபாரத்திற்கு தம்மைப் பதிவு செய்யுமாறு வேண்டினர். ஆணைக்குழு இவர்களுக்கு பதிவை வழங்கியது.

இந்த வருடத்தின் போது 2018 ஆம் ஆண்டுக்கான பதிவை புதுப்பித்தலுக்காக 57 காப்புறுதி தரகுக் கம்பனிகளிடம் இருந்து ஆணைக்குழு விண்ணப்பங்களைப் பெற்றது. சட்டத்தின் கீழ் உள்ள அவசியமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டுகான பதிவைப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களை வழங்கிய அனைத்து கம்பனிகளுக்கும் பதிவு புதுப்பித்தல் வழங்கப்பட்டது.

இணைப்பு 2: ஆணைக்குழுவுடன் பதிவு செய்துகொண்டுள்ள அனைத்துக் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பெயர்களும் அவர்களால் வியாபாரம் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட காப்புறுதி வகுப்பு/வகுப்புகள் என்பவற்றின் பெயர்களும் பதிவுக் காலப்பகுதியும் வழங்கப்பட்டுள்ளன.

## அமுலாக்க நடவடிக்கை

### காப்புறுதிக் கம்பனிகள்

#### இடைநிறுத்தங்கள்

2017 ஆம் ஆண்டு ஜுன் 28 ஆம் திகதியில் இருந்து வலுவுக்கு வரும் வகையில் காப்புறுதிக் கம்பனி ஒன்றின் நிதி அந்தஸ்து (அந்தக் கம்பனியின் நிதி நம்பகத்தன்மை தீவிர சந்தேகமாக அமைவதோடு, அந்த விடயம் அத்தகைய காப்புறுதி வழங்குநரின் காப்புறுதிக் கொள்கையாளரை மோசமாகப் பாதிப்பதாக இருக்கின்ற போது) மோசமாக இருப்பதை அவதானித்த பின்னர் அந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்ட நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதற்கான அதன் பதிவு இடைநிறுத்தம் செய்யப்பட்டது. இதற்கமைவாக, குறிப்பிட்ட கம்பனி அத்தகைய இடைநிறுத்தம் ஏன் நீக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணத்தை எழுத்து மூலமாக கம்பனிக்கு வழங்குமாறும், அத்துடன் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளோடு உடனடியாக இணங்கி நடப்பதற்கான மூலதனத் திட்டம் ஒன்றையும் ஆணைக்குழுவின் கருத்திற்கு எடுத்துக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். கம்பனி அவ்வாறு செய்யத் தவறுமிடத்து கம்பனி மீது விதிக்கப்பட்ட இடைநிறுத்தம் சட்டத்திற்கு அமைவான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பபாட்டை பூர்த்தி செய்யும் வரை 2017 அம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட செலிங்கோ தக்காபுல் கம்பனிக்கு விதிக்கப்பபட்ட இடைநிறுத்தம் தொடர்ந்து அமுலில் இருக்கிறது. இந்த வருட காலத்தின் போது வரையறுக்கப்பட்ட தக்காபுல் ஆணைக்குழுவினால் உண்மையானவை என இனங்காணப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் சமரசம் செய்தது. எவ்வாறாயினும், வரையறுக்கப்பட்ட செலிங்கோ தக்காபுலுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் கோரிக்கை சமரச நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது.

சட்டத்தின் பிரிவு 18(1) க்கு அமைவாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட கடன் தீர் திறன் விழிம்பு தொகையை பேணிப் பாதுகாக்கத் தவறியுள்ளவிடத்து, அத்துடன், சட்டத்தின் ஏதேனும் பிரிவுகள் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் அல்லது விதிகள் அல்லது சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டி அல்லது தீர்மானத்தை அல்லது நிபந்தனையை மீறுகின்ற விடத்து, ஆணைக்குழு காப்புறுதி வழங்குநர் ஒருவரின் பதிவை முழுமையாகவோ அல்லது காப்புறுதி வியாபாரத்தின் ஒரு குறிப்பிட்ட வகுப்பை அல்லது உப வகுப்பின் பதிவை இரத்துச் செய்யலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

#### எச்சரிக்கைகள்

திட்டத்தின் பிரிவு 57 க்கு அமைவாக 2017 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து வலுக்கு வரக்கூடிய வகையில் ஒவ்வொரு மாத முடிவிலிருந்தும் 21 நாட்களுக்குள் காப்புறுதி வழங்குநர் ஒருவர் மாதாந்த திரட்டுக்களை வழங்குமாறு ஆணைக்குழு வழிகாட்டியொன்றை வழங்கியது. எவ்வாறாயினும், ஆணைக்குழுவினால பல பின்னூட்டல்கள் வழங்கிய போதிலும், 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான மாதாந்த திரட்டுக்களை வழங்குவதற்கு கம்பனி

தவறியது. ஆகவே, ஆணைக்குழு சட்டத்தின் பிரிவுகளை குறிப்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டியை மீறியமை தொடர்பாக கம்பனிக்கு எச்சரிக்கை விடுத்தது.

## அமுலாக்க நடவடிக்கை

### காப்புறுதி தரகுக் கம்பனிகள்

#### எச்சரிக்கைகள்

சட்டத்தின் பிரிவு 86(1) உடன் இணங்கி நடக்கத் தவறிய இரண்டு காப்புறுதி தரகுக் கம்பனிகளுக்கு ஆணைக்குழு எச்சரிக்கை கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

சட்டத்தின் பிரிவு 86(1) 2010 பெப்ரவரி 25 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானி இலக்கம் 1642/16 உடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏனையவற்றுடன், ஒவ்வொரு காப்புறுதித் தரகரும் ஒவ்வொரு காலாண்டு முடிவிலிருந்து 45 நாட்களுக்குள் காப்புறுதி தரகுக் கம்பனியின் பிரதம அலுவலரும், பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்ட அதன் காலாண்டு திரும்பலை ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு தேவைப்படுத்துகின்றது.

#### வழிகாட்டிகள்

1. சில காப்புறுதித் தரகர்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சாதாரண தரகுச் சேவைகளுக்கு மேலதிகமாக, துணைச் சேவைகளை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருவதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை ஆணைக்குழு அவதானித்தது. ஆணைக்குழு சட்டத்தின் கீழ் காப்புறுதித் தரகர் என்பதற்கு வழங்கப்பட்ட வரைவிலக்கணத்தைக் கருத்திற் கொண்டு, அத்துடன் தொழிற் துறையினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் கருத்திற் கொண்டு சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதித் தரகு வியாபாரத்திற்கு மேலதிகமாக, காப்புறுதித் தரகர்களால் துணைச் சேவைகள் வழங்கப்படுமாயின், அவற்றை வழங்குவதற்கு முன் ஆணைக்குழுவின் முன் அனுமதியைப் பெற வேண்டுமென அனைத்து காப்புறுதித் தரகர்களையும் வேண்டியது.

2. சட்டத்தின் பிரிவு 101, இலங்கையில் உள்ள எவரேனும் ஒரு நபர் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்படாதவிடத்து, ஆணைக்குழுவோடு பதிவு செய்துகொள்ளாத ஏதேனும் காப்புறுதி வழங்குநருடன் ஏதேனும் காப்புறுதி வியாபாரம் ஒன்றில் நேரடியாகவோ அல்லது உட்கிடையாகவோ ஈடுபடுவதைத் தடை செய்கிறது. மேலே கூறப்பட்ட தடைக்கு விதிவிலக்கு ஒன்று ஆணைக்குழுவினால் சுற்றறிக்கை 36 இன் மூலம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் வெளிநாட்டு உடல்நல காப்புறுதிப் பொருட்கள் தொடர்பான விடயங்களை நடத்துவதற்கு ஆணைக்குழுவிடமிருந்து முன் அனுமதி பெற்ற காப்புறுதித் தரகர்கள் இதிலிருந்து விலக்களிப்புப் பெறுவர். எவ்வாறாயினும், இவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரம் கைமாற்றத்தகாதது. அத்துடன், இன்னுமொரு காப்புறுதித் தரகருக்கு கையளிக்கப்பட முடியாதது என்பதை அறிவித்து, அனைத்து காப்புறுதி வழங்குநர்களுக்கும் இன்னுமொரு வழிகாட்டி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

3. சட்டத்தின் பிரிவு 94 க்கு அமைவாக, காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பிரதான அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டுமென ஆணைக்குழு தேவைப்படுத்தியதோடு, ஆணைக்குழு அத்தகைய பிரதான அலுவலரோடு அனைத்து ஒழுங்குபடுத்தல்கள் விடயங்கள் சம்பந்தமாக தமது தொடர்புகளை மேற்கொள்ளும். எவ்வாறாயினும், ஆணைக்குழுவினால் பிரதான அலுவலருக்கு மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல்கள் கம்பனியின் பணிப்பாளர் சபையுடைய முறையான கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பதை ஆணைக்குழு அறிந்திருந்தது. ஆகவே, ஆணைக்குழு தன்னுடைய தொடர்பாடல்களை சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபைக்கு இயன்றளவு விரைவாக காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் காப்புறுதி தரகர்களுடைய பிரதான அலுவலர்கள் கவனத்திற்கு கொண்டுவருமாறு அனைத்து காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் காப்புறுதி தரகர்கள் ஆகியோருக்கு வழிகாட்டி ஒன்றை வழங்கியது.

4. ஒரு காப்புறுதி தரகுக் கம்பனி, தமது இன்னுமொரு காப்புறுதித் தரகருடைய கூட்டு பெருநிறுவன வாடிக்கையாளர்களின் உதவியுடன், சர்வதேச காப்புறுதிக் காப்பீடுகளை ஒழுங்கமைத்துள்ளது என்பதை அவதானித்த ஆணைக்குழு, அந்தக் கம்பனியை இன்னுமொரு தரகுக் கம்பனி சார்பாக சர்வதேச உடல்நல காப்புறுதிக் காப்பீட்டை அமைப்பதிலிருந்து விலகுமாறு வழிகாட்டி ஒன்றை வழங்கியது.

5. இரண்டு தரகுக் கம்பனிகளின் நிகர மூலதனம் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் தேவைப்பாடான 2.5 மில்லியன் ரூபாவை விட குறைவாக இருப்பதை அவதானித்த ஆணைக்குழு அவசியமான மூலதனத்தை உள்ளிடுமாறும், அந்தக் கம்பனியின் திரட்டுக்களை காலாண்டுத் திரட்டுக்களுக்கு மேலதிகமாக மாதாந்த அடிப்படையில் சமர்ப்பிக்குமாறும் வேண்டியது.

### ஒழுங்குமுறைப்படுத்தல் / ஆலோசனை நடவடிக்கைகள்

1. 2015 ஆம் ஆண்டு ஆணைக்குழு ஒரு கம்பனி தொடர்பாக சில வழிகாட்டிகளை வழங்கியது. அதற்கமைவாக, குறிப்பிட்ட கம்பனி, அதன் முடிவுறுத்தும் விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் கோப்பிடுவதற்கு முன்பு, ஆணைக்குழுவின் அனுமதி பெற வேண்டும் எனவும், அத்துடன் வியாபாரத்தை முடிவுறுத்தும் சட்டச் செயற்பாடு முற்றுப்பெறும் வரை இலங்கைக்கு வெளியே பணம் அனுப்புவதைத் தடை செய்யுமாறும் தேவைப்படுத்தியது. இங்கு கூறப்பட்ட காப்புறுதிக் கம்பனி, நீதிமன்றத்தின் மேற்பார்வை இன்றி, தன்னிச்சையாகவே முடிவுறுத்துவதற்கு ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றது. ஆணைக்குழு, கம்பனியினால் வழங்கப்பட்ட சில பொறுப்புகளுக்கு அமைவாக இந்த விடயத்தை எற்றுக்கொண்டது. மேலும், கம்பனி ஐக்கிய இராச்சியத்தில்

உள்ள சட்ட நிறுவனம் ஒன்றுக்கு சில கோரிக்கைகளை சமரசம் செய்வதற்காக அனுப்ப வேண்டிய சட்டக் கட்டணத்தை அனுப்புவதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைக் கோரியது. இவ்விடயத்தையும் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது.

2. இன்னுமொரு கப்பல் கம்பனியினால் சில கப்பல் தொகுதிக்காக இன்னுமொரு வெளிநாட்டு காப்புறுதி வழங்குநருடன் மேலோடு, இயந்திரங்கள் மற்றும் போர் அபாயக் காப்புறுதிக் காப்பீடு என்பவற்றை 2017 ஆம் ஆண்டு ஜுன் 01 ஆம் திகதியில் இருந்து ஒரு வருட காலத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைக் கோரியது. இந்தக் கோரிக்கை ஆணைக்குழுவினால் சட்டத்தின் பிரிவு 101 க்கு அமைவாக, இந்தக் கம்பனி இதேவிடயத்தை 2017 ஆம் ஆண்டுக்கு நீடிக்க விரும்பினால், ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை தேவைப்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் கீழ் இங்கு குறிப்பிட்ட காப்பீடு ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்களை கருத்திற் கொண்டு இந்த வேண்டுகோளுக்கு ஆணைக்குழு அங்கீகாரமளித்தது. இதனைத் தொடர்ந்து இங்கு குறிப்பிட்ட கப்பல் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் இங்கு கூறப்பட்ட காலப்பகுதிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட கப்பல் தொகுதிக்குள் இன்னுமொரு கப்பலை உள்ளடக்குவதற்கும் ஆணைக்குழு அங்கீகாரம் அளித்தது.

சட்டத்தின் பிரிவு 101 க்கு அமைவாக, இலங்கையில் உள்ள நபர் ஒருவர் மறுகாப்பீட்டு வியாபாரம் தவிர ஏனைய காப்புறுதி வியாபாரத்திற்கு பதிவு செய்யப்படாத காப்புறுதி வழங்குநருடன் ஆணைக்குழுவின் முன் அனுமதியின்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட முடியாது. மேலும், அத்தகைய அனுமதி காப்புறுதி தொழிற்துறை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தேசிய நலன் என்பவற்றை கருத்திற் கொண்ட பின்னர் மாத்திரமே வழங்கப்படும்.

3. பிரிவு 15(A) க்கு அமைவாக, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை சந்தையில் பட்டியல் படுத்துவதற்கான நீடிப்பு ஒன்றுக்காக இரண்டு பொதுக் காப்புறுதிக் கம்பனிகளை இணைத்து புதிய காப்புறுதிக் கம்பனி ஒன்றை உருவாக்குவதற்கான அனுமதி ஆணைக்குழுவிடமிருந்து கோரப்பட்டது. சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு ஆணைக்குழு இவ்விடயத்தை ஏற்றுக்கொண்டது.

சட்டத்தின் பிரிவு 15(A) க்கு அமைவாக ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் உரிமம் வழங்கப்பட்டதில் இருந்து மூன்று வருட காலப்பகுதிக்குள் அக்கம்பனியை உரிமம் அளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல் படுத்தப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது.

4. ஆணைக்குழுவின் முன் அனுமதி இன்றி 2015 ஆம் ஆண்டின் காப்புறுதிக் கம்பனி ஒன்று அதன் பகுதி ஒன்றாக அமைகின்ற ஏதேனும் நிறுவனம், துணைக் கம்பனி அல்லது தாய்க்கம்பனி அல்லது குழுமக் கம்பனி ஒன்றின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக எவரேனும் சம்பந்தப்பட்ட திறத்தவருடன் எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில் இருந்து தடை செய்வதற்கான சில வழிகாட்டிகளை வழங்கியது. இங்கு கூறப்பட்ட கம்பனி இந்த வருட காலப்பகுதியின் போது சில சம்பந்தப்பட்ட திறத்தவர்களிடம் இருந்து பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை வேண்டியது. ஆணைக்குழு இந்த வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு, கம்பனி அதன் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டையும், பாகுபாடு தேவைப்பாட்டையும் பூர்த்தி செய்வதற்கு அமைவாக மேலே கூறப்பட்ட வழிகாட்டி திருத்தப்படலாம் எனத் தீர்மானித்தது.

5. ஆணைக்குழு அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகுக் கம்பனிகளில் உள்ள பிரதான அலுவலர்களை, பிரதம நிறைவேற்று அதிகாரியாக மற்றும் / அல்லது முகாமைத்துவப் பணிப்பாளராக மற்றும் அல்லது கம்பனியின் பணிப்பாளர் சபையின் வழிகாட்டிகளை அமுல்படுத்தும் பொறுப்பையுடைய தனிநபராக 2017 மே 12 ஆம் திகதியில் இருந்து செயற்படுமாறு 2016 ஆம் ஆண்டின் வழிகாட்டி ஒன்றை வழங்கியது. இந்த வழிகாட்டி நீடிப்புக்கான கோரிக்கைகளைக் கருத்திற் கொண்ட ஆணைக்குழு, அனைத்து காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் காப்புறுதி தரகர்களுக்கு இந்த வழிகாட்டியோடு ஒழுகி நடப்பதற்கான நீடிப்பை 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடித்தது.

6. சுற்றறிக்கை 36 க்கு அமைவாக, வெளிநாட்டு உடல்நல பொருட்களை அமைத்துக் கொள்வதற்கு விண்ணப்பித்த காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கு ஆணைக்குழு அதிகாரத்தை வழங்கியது.

சுற்றறிக்கை 36, ஏதேனும் காப்புறுதித் தரகுக் கம்பனி ஒன்று வெளிநாட்டு உடல்நலக் காப்புறுதிக் காப்பீடுகளை அமைத்துக்கொள்ள விரும்பின், அத்தகைய அறிமுகப்படுத்தப்படுகின்ற பொருட்களுக்கான முன் அங்கீகாரத்தை ஆணைக்குழுவிடமிருந்து பெற வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது.

7. பெரும்பான்மையான காப்பீட்டுக் கணிப்பாளர்கள் கடல்கடந்து வசிப்பதன் காரணமாக ஆணைக்குழுக்குச் சமர்ப்பிக்கப்படும் திரும்பல்களின் கடின நகல்களில் காப்புறுதி கணிப்பீட்டாளர்களின் கையொப்பங்களைப் பெறுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதன் காரணமாக, வெளிவாரியான காப்பீட்டுக் கணிப்பாளர்களின் இலத்திரனியல் கையொப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கோரி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை காப்புறுதிக் கம்பனிகள் கோரியிருந்தன. ஆணைக்குழுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகைமைகள் கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர் காப்புறுதிக் கம்பனிகள் அக்கம்பனிகளின் ஏதேனும்

இலத்திரனியல் ஆவணம் அனுப்பி வைக்கின்ற உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் நியமிக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளரின் பெயர் மற்றும் கையொப்பத்தின் மாதிரி என்பவற்றுடன் சபை தீர்மானத்தை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற நிபந்தனையின்படி ஆணைக்குழு 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் நடவடிக்கைகள் சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக அத்தகைய காப்பீட்டுக் கணிப்பாளர்களின் ஸ்கான் செய்யப்பட்ட கையொப்பங்கள் சட்டரீதியானது என ஏற்றுக்கொண்டது.

8. 2010 ஒக்டோபர் 05 ஆம் திகதி திருத்தப்பட்ட மேலதிக அரசாங்க வர்த்தமானி இல. 1674/4 இல் உள்ளவாறு 2002 செப்டம்பர் 23 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி இல. 1255/3 இன் விதி 02(c)(ii) க்கு அமைவாக, இலங்கை காப்புறுதி நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கு முன்னரான தகைமைகளைப் பரீட்சிக்கும் சோதனையில் தோன்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காப்புறுதி முகவர்களால் மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கையான கோரிக்கைகளுக்கு ஆணைக்குழு அனுமதியளித்தது.

   2010 ஒக்டோபர் 05 ஆம் திகதி திருத்தப்பட்ட மேலதிக அரசசாங்க வர்த்தமானி இல. 1674/4 இல் உள்ளவாறு 2002 செப்டம்பர் 23 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி இல. 1255/3 இன் விதி 02(c)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி முகவர்களின் தகைமைகளில் காப்புறுதி முகவர் ஒருவராக பதிவு செய்வதற்கு கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் தமிழ், சிங்களம் அல்லது ஆங்கில மொழிகளில் சாதாரண சித்தி இருப்பது அவசியமாகும். எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்ட விதி 2(C)(ii) நியதிகளுக்கு அமைய எவரேனும் ஒரு நபர் வேறு ஏதேனும் துறையில் விதி 2(C)(i) இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்குச் சமமான ஒரு தகைமையையோ அல்லது அதனைவிட உயர்மட்ட தகைமையையோ கொண்டிருக்கும் பட்சத்தில், அத்தகைய விடயத்தை ஆணைக்குழு ஒவ்வொருவருடைய தகைமை அடிப்படையில் கருத்திற் கொள்ளும்.

9. சட்டத்தின் பதிவுத் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனி ஒன்றில் சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக நடக்கத் தவறியமை காரணமாக, அதன் விண்ணப்பம் நீண்டகாலம் ஆணைக்குழுவில் நிலுவையிலுள்ள போது காப்பறுதிக் கம்பனி ஒன்றாக தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு கம்பனி ஒன்றினால் பதிவிற்கான அங்கீகாரம் வேண்டப்படும் போது அத்தகைய கோரிக்கையை ஆணைக்குழு கருத்திற் கொள்ளாது. மேலும், இந்த விடயம் பற்றி ஆணைக்குழு கம்பனிப் பதிவாளருக்கு அறிவிக்கும்.

10. ஆணைக்குழு வழிகாட்டி 10 இனுடைய விதிகளின்படி பல தரகுக் கம்பனிகளுக்கு தரகு வியாபாரத்திற்கு மேலதிகமாக ஏனைய வியாபாரங்களை நடத்துவதற்கு அங்கீகாரம் அளித்தது.

    சட்டத்தில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு, காப்புறுதித் தரகு வியாபாரத்திற்கு மேலதிகமாக, துணைச் சேவைகளை வழங்குவதற்கு அனைத்துக் காப்புறுதி தரகுக் கம்பனிகளும் வழிகாட்டி 10 இன் கீழ் ஆணைக்குழுவின் முன் அனுமதி பெற வேண்டுமென தேவைப்படுத்துகிறது.

11. திருத்தப்பட்ட சட்டத்தின் புதிய ஏற்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதிக் கம்பனிகளுக்கு புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அனுமதி பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பல எண்ணிக்கையான விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரம் அளித்தது.

12. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பிரதான அலுவலரை நியமிப்பதற்கு காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகள் என்பவற்றினால் அனுமதி கோரி மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரம் அளித்தது.

13. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு பதிலளித்தது.

# விசாரணை மீளாய்வு

ஆணைக்குழு அதன் ஒட்டுமொத்த இலக்குகளான காப்புறுதிக் கொள்கையாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, கோரிக்கையாளர்களினால் ஆணைக்குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைகளின் சமரசத்துடன் தொடர்புபட்ட காப்புறுதி வழங்குனர் மற்றும் கோரிக்கையாளர்களுக்கு இடையே உள்ள பிணக்குகளை விசாரணை செய்து தீர்வு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அத்துடன், ஆணைக்குழு ஏதேனும் காப்புறுதி வழங்குநர், தரகர் அல்லது முகவர் ஒருவரின் சந்தை நடத்தையுடன் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளையும் விசாரிக்கும்.

பிணக்கு அல்லது முறைப்பாடு ஒன்று ஆணைக்குழுவுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் போது (காப்புறுதி வழங்குநர், தரகர் அல்லது ஒரு முகவருக்கு எதிராக) பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இவ்விடயம் தொடர்பாக தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முன்பு அனைத்து திறத்தவர்களின் விளக்கங்களைக் கேட்பதற்கு ஆணைக்குழு சந்தர்ப்பம் ஒன்றை வழங்கும். காப்புறுதி வழங்குநர்கள் அவர்களின் கோரிக்கைகள் தொடர்பான தீர்மானங்களின் அடிப்படையில் தகவல்கள் மற்றும் ஆவணங்களின் உதவியுடன் ஸ்தாபிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றன. ஆணைக்குழுவினால் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு தேவைப்படுகின்ற விடத்து ஆணைக்குழு மூன்றாம் நபர்களின் சரிபார்த்தல்கள் மற்றும் விசேட நிபுணர்களின் கருத்துக்கள் ஆகியவற்றைப் பெறும்.

வரைபடம் 1
கடந்த ஐந்து (5) வருடங்களில் கிடைக்கப்பெற்ற மொத்த பரிந்துரைகள்




## மொத்த ஆற்றுப்படுத்தல்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக்கு உட்பட்ட இந்த வருட காலப்பகுதியின் போது 348 விடயங்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் 341 விடயங்கள் இதேகாலப்பகுதியில் சமரசம் செய்யப்பட்டு முடிவடைந்துள்ளன. சமரசம் செய்யப்பட்ட விடயங்களுள் 78 கோரிக்கைகள் ஆணைக்குழுவின் தலையீட்டின் காரணமாக, காப்புறுதி வழங்குநர்களால் மதிக்கப்பட்டுள்ளது. (அண்ணளவாக) 2017 ஆம் ஆண்டு காப்புறுதி வழங்குநர்களால் மதிக்கப்பட்ட அத்தகைய கோரிக்கைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 20 மில்லியன் ஆகும். (சில கோரிக்கைகளின் சமரசப் பெறுமதி இங்கு குறிப்பிடப்படவில்லை.)

கடந்த ஐந்து (05) வருட காலப்பகுதியின் போது மொத்த 1,549 விடயங்கள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. விளக்கப்படம் 1 இன்படி 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலப்பகுதியில் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவடைந்துள்ளது.

விளக்கப்படம் 2, மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்களின் எண்ணிக்கையை மாதாந்த அடிப்படையில் தருகிறது. பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அதிகூடிய எண்ணிக்கையான ஆற்றுப்படுத்தல்கள் (35) மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, ஏப்ரல் மாதத்தில் குறைந்த எண்ணிக்கையான (22) விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சராசரியாக ஒரு மாதத்திற்கு 29 விடயங்கள் என்ற அடிப்படையில் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜனவரி, பெப்ரவரி, மார்ச், செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்கள் சராசரியை விட கூடிய எண்ணிக்கையைப் பதிவு செய்கின்றன.

வரைபடம் 2
2017 ஆம் ஆண்டில் மாதாந்தம் கிடைத்த பரிந்துரைகளின் பகுப்பாய்வு



வரைபடம் 3
2017 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட மொத்த நடவடிக்கைகளின் வகைப்பாடு




விளக்கப்படம் 3, 2017 ஆம் ஆண்டு ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மொத்த விடயங்களின் தொகுப்பை சித்தரிக்கிறது. இவற்றில் பெரும்பான்மையான ஆற்றுப்படுத்தல்கள் பொதுக் காப்புறுதி வியாபாரம் சம்பந்தமாக மேற்கொள்ப்பட்டுள்ளன. அதாவது, 210 (60%). அத்துடன், நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக 99 (29%) ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய 39 ஆற்றுப்படுத்தல்கள் (11%) பொதுவான தன்மைகளையுடையதாக, குறிப்பாக, வியாபார வகைக்குள் கொண்டுவர முடியாதனவாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மொத்த ஆற்றுப்படுத்தல்களின் தொகுப்பு 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு மாற்றமடையவில்லை.

## நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 1, நீண்டகால காப்புறுதி வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட பரிந்துரைகளின் பிரச்சினை ரீதியான பகுப்பாய்வைத் தருகிறது.

அட்டவணை 1 இன்படி, நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரிந்துரைக்குப்பட்ட பிரச்சினை யாதெனில், கோரிக்கை சம்பந்தமான மறுப்பு (மொத்த தொகையில் 28%) ஆகும். இதற்கு மூலகாரணம் சம்பந்தமான பகுப்பாய்வு பின்வரும் விடயத்தை வெளிப்படுத்துகிறது. அதன் பிரகாரம் காப்புறுதி வழங்க மறுத்தமைக்கு காரணம், காப்புறுதிக் கொள்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அல்லது மறுமலர்ச்சி பெற்ற போது, உண்மையான தகவல்களை வெளிப்படுத்தத் தவறியமை அல்லது அத்தகவல்கள் பற்றி பிரழ்கூற்றுக்கள் செய்தமையாகும். ஒப்பந்தத்திற்கரிய இரு திறத்தவர்களும் (காப்புறுதி வழங்குனர் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளர்) அதிகூடிய தன்னம்பிக்கையுடன் செயற்படுவது காப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படை சட்டக் கோட்பாடாகும். பரிந்துரையாளரால் பரிந்துரைப் படிவத்தில் வெளிப்படுத்தப்படுகின்ற தகவல்களின் அடிப்படையின் மீது காப்புறுதி வழங்குநர் பரிந்துரையாளரின் ஆயுள் இடர் மற்றும் இயைபான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை ஏற்றுக்கொள்வார். இவ்வகையில், உண்மையான தகவல்கள் எதனையும் வெளிப்படுத்தாது அல்லது அத்தகவல்கள் பற்றி பிறழ்கூற்று ஒன்று மேற்கொள்ளும் போது காப்புறுதிக் கொள்கையாளரால் அதிகூடிய தன்னம்பிக்கைக் கோட்பாடு மீறப்பட்டதாக கருதப்படும்.

பொருத்தமான காப்புறுதிக் கோட்பாடுகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளரின் கடப்பாடுகள் தொடர்பாக இருக்கக்கூடிய குறைந்தபட்ச அறிவு இவ்வாறு உண்மையான தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கோ அல்லது பிறழ்கூற்றுக்களை மேற்கொண்டமைக்கோ மூலகாரணமாக இருப்பது சில சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, காப்புறுதிக் கொள்கையாளர் அல்லது பரிந்துரையாளர் அவருடைய தகவல்களை வெளிப்படுத்தும் கடமை மற்றும் அவ்வாறு வெளிப்படுத்தப்படாத போது ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றி அவர்களுக்கு முறையாக அறிவிப்பதற்கு காப்புறுதி வழங்குநர்கள் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றனர். ஆணைக்குழு அதன் விசாரணைகளின் கண்டறிதல்களின் அடிப்படையில் குற்றமற்ற வெளிப்படுத்தாமை உள்ள போது, கோரிக்கையாளர்களுக்கு உதவக்கூடியதாக இருந்தது. அதாவது, குற்றமற்ற பிறழ்கூற்று. எனவே, இத்தகைய கூற்றுக்கள் மோசடியான அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட பிறழ்கூற்றுக்கள் உள்ளடங்க மாட்டாது.

உரிய திகதிக்கு முன்பதாக கட்டுப்பணம் செலுத்தத் தவறியமை காரணமாக, கோரிக்கை விடுக்கும் போது, கொள்கைகள் காலாவதியாகியிருந்தமை கோரிக்கைகளை வழங்க மறுத்தமைக்கு மற்றுமொரு காரணமாகும். காப்புறுதிக் கொள்கை, கட்டுப்பணம் செலுத்த வேண்டிய காலப்பகுதியைக் குறிப்பிடுவதனால், காப்புறுதி வழங்குநர்கள் தமது கட்டுப்பணத்தை குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் சேலுத்த வேண்டிய கடமையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். காப்புறுதிக் கொள்கையாளர்களால் செலுத்தப்பட்ட ஏதேனும் பணம் அல்லது கட்டுப்பணங்கள் தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை காப்புறுதி வழங்குநர்கள் உறுதிப்படுத்த வேண்டும். அதேவேளை, பிணக்கு ஒன்று ஏற்படுகின்ற வேளைகளில் சமர்ப்பிப்பதற்காக காப்புறுதி வழங்குநர்கள் தம்மிடம் நிரூபணம் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும். ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படிருக்கும் போது உரிய நேரத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும், அவ்வாறு தாமதமாகச் செலுத்தியமைக்கு சரியான காரணங்களை நிரூபிக்கின்றபோது மாத்திரமே ஆணைக்குழுவின் ஆதரவைப் பெற முடியும்.

ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட

அட்டவணை 1
நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மீதான பரிந்துரைகள்: பிரச்சினை ரீதியாக

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| கோரிக்கை மறுப்பு | 28 | 28.2 |
| வழங்கப்பட்ட அனுகூலங்களுடனான உடன்பாடற்ற தன்மை | 26 | 26.3 |
| இரத்துச் செய்தல் அல்லது புதுப்பித்தலுக்கான கோரிக்கை | 26 | 26.3 |
| ஏனைய | 19 | 19.2 |
| மொத்தம் | 99 | 100.0 |

விடயங்களுள் 26.3% காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்கப்பட வேண்டிய அனுகூலங்களின் சலுகைகள் சம்பந்தமான பிணக்குகளும் ஆகும். காப்புறுதி வழங்குநர்களால் விநியோகிக்கப்பட்ட விளக்கங்கள் பற்றிய தெளிவின்மை அத்துடன், காப்புறுதிக் கொள்கை அட்டவணையில் உள்ள உள்ளடக்கங்கள் பற்றிய பிழையான புரிந்துணர்வு காரணமாக, இந்தப் பிணக்குகள் ஏற்பட்டுள்ளன. ஆணைக்குழு தேவைப்படும் தெளிவுபடுத்தல்கள் மற்றும் விளக்கங்கள் பற்றி காப்புறுதி வழங்குநர்களிடம் விசாரணை செய்து அவை பற்றிய விளக்கங்களை காப்புறுதி வழங்குநர்களுக்கு எழுத்து மூலமாகவும், ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போதும் வழங்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் கொள்கை ஆவணங்களில் தெளிவற்ற தன்மையும், தேவையான விபரங்கள் இன்மையும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆணைக்கழுவின் வேண்டுகோள்களின் அடிப்படையில் காப்புறுதி கொள்கையாளரின் நன்மையின் பொருட்டு தமது சலுகைகளை மீளக் கருத்திற் கொள்வதாக காப்புறுதி வழங்குநர்கள் உடன்பட்டுள்ளனர்.

26.3% ஆன பரிந்துரைப்படுத்தல்கள் காப்புறுதிக் கொள்கைகளை இரத்துச் செய்த மற்றும் கட்டுப்பணங்களை மீளப் பெறுதல் சம்பந்தமான கோரிக்கைகளுடன் தொடர்புபட்டது. கொள்கை ஆவணத்தைப் பெற்றதிலிருந்து 21 நாட்களின் பின்னர் காப்புறுதிக் கொள்கையை இரத்துச் செய்வதற்கான உரிமையை காப்புறுதிக் கொள்கையாளர்கள் இழக்கின்ற காரணத்தினால், இத்தகைய விடயங்களில் அவர்களுக்கு உதவ முடியாது. எவ்வாறாயினும், சில சூழ்நிலைகளில் காப்புறுதிக் கொள்கையாளர்களினால் எதிர்கொண்ட கஷ்டங்களை கருத்திற் கொண்டு நிவாரணம் வழங்க காப்புறுதி வழங்குநர்கள் உடன்பட்டுள்ளனர்.

நீண்டகால காப்புறுதி வியாபாரத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய ஆற்றுப்படுத்தல்களுக்கான பிரதான காரணம், விற்பனையாட்கள் அல்லது காப்புறுதி முகவர்களால் (19.2%) கட்டுப்பணம் கையாடல் செய்யப்பட்டமையாகும். இது சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் அனைவரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டதோடு, அத்தகைய கையடல்களை சரிபார்க்கக்கூடிய சான்றுகள் மூலம் நிரூபிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரம் காப்புறுதிக் கொள்கையாளர்களுக்கு ஆணைக்குழு உதவியளித்தது. தடுப்பு நடவடிக்கை ஒன்றாக, ஆணைக்குழு நிதி கையாடல் அல்லது மோசடி போன்றவற்றின் காரணமாக, ஏனைய காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் காப்புறுதித் தரகர்களால் சேவை முடிவுறுத்தப்பட்ட ஆட்களை காப்புறுதித் துறைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதில் இருந்து தடுப்பதற்கான வழிகாட்டி ஒன்றை வழங்கியது.

## பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பரிந்துரைப்படுத்தல் மீதான பகுப்பாய்வு

அட்டவணை 2, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரச்சினை வாரியாக ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றிய பகுப்பாய்வை தருகிறது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் “மோட்டார் காப்புறுதி” சம்பந்தமான பெரும்பான்மையான பிரச்சினைகள் ஆற்றுப்படுத்தப்பட்டன. அத்துடன், காப்புறுதி வழங்குநர்களின் தீ அபாயக் கொள்கைகள், கடல் காப்புறுதிக் கொள்கைகள் மற்றும் நிதி உத்தரவாதங்கள் என்பன எஞ்சிய பரிந்துரைப்படுத்தல்களாகும். அட்டவணை 2, பொதுக் காப்புறுதித் துறை வியாபாரத்தின் பரிந்துரைப்படுத்தல்களுக்குரிய பிரதான காரணமாக (63.3%) கோரிக்கைகளின் பரப்பைக் காட்டுகிறது. காப்புறுதி மறுக்கப்பட்டமைக்கு பிரதான காரணமாக பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. தவிர்க்கப்பட்ட பாவனை, சாரதி பதிலீடு, மது போதையில் வாகனம் செலுத்தியமை, காப்புறுதி செய்யக்கூடிய அக்கறையின்மை, வலிதான சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி சாரதி வாகனம் செலுத்தியமை அல்லது கடன் காலப்பகுதிக்குள் கட்டுப்பணங்களை செலுத்தத் தவறியமை காரணமாக கொள்கை இரத்துச் செய்யப்பட்டமை போன்றனவாகும். அரசாங்க பகுப்பாய்வு திணைக்களம், பொலிஸ் மற்றும் சாட்சிக்காரர்கள் (தேவையான போது) ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட அவதானிப்புக்கள் மூலம் இவ்விடயங்கள் (கோரிக்கை மறுப்புக்கள்) மீது விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டன. குறிப்பிட்ட காப்புறுதிக் கொள்கை இழப்புக்கான காரணத்தை காப்பீடு செய்துள்ள போது அத்துடன் கோரிக்கை சம்பந்தமான நிகழ்வுகள் தொடர்பாக மோசடி அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட பிறழ்கூற்று ஒன்று இல்லாத போது மாத்திரமே ஆணைக்குழு கோரிக்கையாளர்களுக்கு உதவியளிக்கும்.

காப்புறுதி வழங்குநர்களால் அளிக்கப்பட்ட சலுகைத் தொகையுடன் உடன்படாமை ஆற்றுப்படுத்தலுக்குரிய இன்னுமொரு பிரதான காரணமாகும். (19.1%) கழிப்பனவுகள் இழப்பு சரிசெய்தல்கள் ஆகியவற்றின் மீது காப்புறுதி வழங்குநர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் பற்றிய தெளிவின்மை மற்றும் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சொற்களை பிழையாகப் புரிந்து கொண்டமை என்பன இத்தகைய ஆற்றுப்படுத்தல்களுக்கு காரணமாகும். காப்புறுதி வழங்குநர்களிடம் இருந்து தேவைப்படுகின்ற விளக்கங்களை வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

சமரசம் சம்பந்தமாக ஏற்பட்ட காலதாமதத்துடன் தொடர்புபட்ட அனைத்து விடங்களும் ஆணைக்குழுவின் தலையீட்டுடன் முறையாக சமரசம் செய்யப்பட்டன. பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் ஏனைய ஆற்றுப்படுத்தல்கள், பிரதானமாக கட்டுப்பணம் செலுத்தத் தவறியமை காரணமாக காப்புறுதி வழங்குநர்களால் காப்புறுதிக் கொள்கை இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் மோசமான கோரிக்கைப் பதிவுகள் என்பன காரணமாகும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முழுமையான கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருப்பது நிரூபிக்கப்படடால் மாத்திரமே ஆணைக்குழுவினால் கோரிக்கையாளர்களுக்கு உதவ முடியும்.

## ஏனைய ஆற்றுப்படுத்தல்கள்

மீளாய்வுக் காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏனைய விடயங்கள் (39) வியாபாரத்தின் குறிப்பான ஒரு வகைக்குள் வராது. அந்த விடயங்கள் பிரதானமாக நியாயமற்ற முடிவுறுத்தல் மற்றும் முகவர்களின் கல்வித் தகைமைகளுடன் சம்பந்தப்பட்டமையாகும். சட்டத்தின் கீழ் ஆணைக்குவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய சாத்தியமான இடங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அட்டவணை 2

பொதுக் காப்பீட்டு வியாபாரத்திலுள்ள விடயங்கள் : விநியோக வாரியாக

| வெளியீடு | # | % |
|---|---|---|
| கோரிக்கை மறுப்பு | 133 | 63.3 |
| வழங்கப்பட்ட அனுகூலங்களுடனான உடன்பாடற்ற தன்மை | 40 | 19.1 |
| கோரிக்கைகளை சமரசப்படுத்தி தரமுயர்த்துதல் | 12 | 5.7 |
| ஏனைய | 25 | 11.9 |
| மொத்தம் | 210 | 100.0 |

## வியாபார ஒழுங்கு விதிகளின் நடத்தை

### 1. காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தரகர்களால் முறைப்பாடுகளை கையாள்வது தொடர்பான வழிகாட்டிகள்

2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி வலுவுக்கு வரக்கூடிய வகையில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு காப்புறுதி வழங்குநர்கள் அவர்களின் முறைப்பாடுகள் முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகளையும், முறைப்பாடுகளை கையாள்கின்ற நடபடி முறைகளையும் வடிவமைத்து கோப்பிட்டுள்ளனர். (அவர்களுடைய சபைகளினால் அங்கீகரிக்கப்பட்டு) இந்த வழிகாட்டிகளுக்கு அமைவாக, இந்தக் கம்பனிகள் அரை வருட செயற்பாட்டு அறிக்கைகளையும் வெளிப்படுத்தியுள்ளன. இந்த வழிகாட்டிகளுடன் கம்பனிகள் இணங்கி நடக்கின்றனவா என்பது கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற சமர்ப்பித்தலை பரீட்சிப்பதன் ஊடாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

### 2. காப்புறுதி முகவர்கள்

காப்புறுதி முகவர்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்ந்து தீர்மானிப்பதற்காக ஆணைக்குழுவின் பிரதிநிதித்துவத்துடன் இலங்கை காப்புறுதிச் சபை (IASL) இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம் (SLIBA) மற்றும் இலங்கை காப்புறுதி நிறுவகம் ஆகியவற்றின் (SLII) பிரதிநிதித்துவத்தோடு இணைப்புக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் ஆலோசனைகளோடு காப்புறுதி முகவர்களுக்காக IASL இனால் தயாரிக்கப்பட்ட நடத்தைக் கோவையை உருவாக்கிய பின்னர் இந்தக் குழு கலைக்கப்பட்டது. இந்தக் கோவை 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு பின்வரும் தேவைப்பாடுகளுடன் விநியோகிக்கப்பட்டன:

- கம்பனிகள் இந்தக் கோவையின் பிரதியொன்றை பதிவு செய்யப்பட்ட அனைத்து காப்புறுதி முகவர்களுக்கும் வழங்க வேண்டும். அத்துடன், முகவர்கள் அந்தக் கோவையை வாசித்து விளங்கிக் கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூலமான அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.
- முகவரின் விருப்பத் தெரிவுக்கு அமைய அவர் விரும்பிய மொழியில் இந்தக் கோவை வழங்கப்பட வேண்டும்.
- காப்புறுதிப் பொருட்களை விற்பனை செய்யும் மற்றும் சந்தைப்படுத்தும் விடயங்களில் ஈடுபடும் அனைவரும் இந்தக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள கோட்பாடுகள், செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் வெகுமதிகள் உட்பட மனித வளங்கள், நிர்வாகக் கொள்கைகள் / உபாய நுட்பங்கள் என்பவற்றில் இவை பிரதிபலிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி முயற்சித்தல் வேண்டும்.
- IASL மற்றும் SLIBA என்பன மூன்று மொழிகளிலும் இந்தக் கோவையை அவற்றின் இணைய தளங்களில் பிரசுரித்தல் வேண்டும்.

### 3. ICP 19 வியாபாரத்தை நடத்துதல்

சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கத்தினால் (IAIS) உருவாக்கப்பட்ட காப்புறுதி உள்ளகக் கோட்பாடுகள் (ICPs) காப்புறுதித்துறையை மேற்பார்வை செய்வதற்கான உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க கட்டமைப்பு ஒன்றை வழங்குகிறது. ICP 19 "வியாபார நடத்துகை" நுகர்வோர் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபடுவதற்கு முன்னரும் ஒப்பந்தம் ஒன்றின் கீழ் உள்ள அனைத்து கடப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படுகின்ற வரையில் அவர்கள் நியாயமான நடத்துகையைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை நோக்கி இருக்கின்றது. ICP 19, கீழே தரப்பட்ட விசேட துறைகளுக்கு குழுமப்படுத்தப்பட்ட 13 நியமங்களைக் கொண்டிருக்கிறது.

- நியமங்கள் 19.1 இலிருந்து 19.2 - நுகர்வோரின் நியாயமான நடத்துகை.
- நியமங்கள் 19.3 இலிருந்து 19.7 - விற்பனைக்கு முந்திய செயற்பாடு
- நியமங்கள் 19.8 இலிருந்து 19.13 வரை - கொள்கைச் சேவை

IAIS இனால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டிகளின் மீது உள்ளக ரீதியாக நடத்தப்பட்ட இடைவெளி பகுப்பாய்வுகளின் கண்டறிதல்களை கருத்திற் கொண்டு ஆணைக்குழு ICP 19 இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட மேற்பார்வை சம்பந்தமான இடைவெளிகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வழிமுறைகளை எடுத்துவரும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

#### நுகர்வோரின் நியாமான நடத்துகை மீதான கோட்பாடுகள்

நுகர்வோரின் நியாயமான நடத்துகை காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோரின் ஒழுக்கரீதியான நடத்தை மற்றும் நல்லெண்ணத்துடன் செயற்படுதல் ஆகிய எண்ணக்கருக்களை உள்ளடக்குகிறது. காப்புறுதி வியாபாரத்தின் இயல்பைப் பார்க்கும் போது, அதன் வெற்றி நுகர்வோர், காப்புறுதி வழங்குநர்கள், இடைத்தரகர்கள் மற்றும் வழங்கப்படும் பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே பாரியளவில் தங்கியுள்ளது. இதன் காரணமாக, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆணைக்குழு காப்புறுதி முகவர்கள் மற்றும் இடைத்தரகர்கள் அகியோரால் நுகர்வோருக்கு வழங்கப்படும் நியாயமான நடத்துகையை

அட்டவணை 3
நுகர்வோரின் நியாமான நடத்துகை மீதான கோட்பாடுகள்

| | |
|---|---|
| கோட்பாடு 01 | வாடிக்கையாளர்களை நியாயமாக நடத்துதல், அனைத்து கம்பனி-களின் வியாபார மாதிரியில் முக்கிய பங்கு வகித்தல் வேண்டும். |
| கோட்பாடு 02 | வாடிக்கையாளர்களின் நலன்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் பொருட்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட வேண்டும். |
| கோட்பாடு 03 | விற்பனைக்கு முன்னரும், விற்பனையின் போதும், விற்பனைக்குப் பின்னரும் வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை தெளிவாக வழங்க வேண்டும். |
| கோட்பாடு 04 | அறிவுரையின் பொருத்தப்பாடு |
| கோட்பாடு 05 | வாடிக்கையாளர்களின் நியாயமான எதிர்பார்ப்புக்களை கையாளுதல் |
| கோட்பாடு 06 | கோரிக்கைகளை நியாயமாக கையாளுதல் |
| கோட்பாடு 07 | வாடிக்கையாளர்களின் பின்னூட்டல்களை பகுப்பாய்வு செய்தலும் முறைப்பாடுகளை நியயமாக கையாளுதலும். |

ஊக்குவிப்பதற்காக இந்தக் கோப்பாடுகளை விறியோகித்தது. இந்தக் கோப்பாடுகள் அட்டவணை 03 இல் இனங்காணப்பட்டுள்ள நுகர்வோரைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களை உள்வாங்கியுள்ளது.

## 4. நிதி கையாடல் அல்லது மோசடி போன்ற காரணங்களின் நிமித்தம் சேவை முடிவுறுத்தப்பட்ட ஆட்களின் தொழில்

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் பணியாளரினால் (ஒரு கிளை முகாமையாளர்) கட்டுப்பணங்கள் கையாடல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் கண்டறிதல்களை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழு பிரிவு 96A யின் கீழ் நிதி கையாடல் அல்லது மோசடி காரணமாக ஏற்கனவே சேவையில் இருந்து நீக்கப்பட்ட ஆட்களைக் காப்புறுதித் துறையில் பணிக்கு அமர்த்துவதை தவிர்க்குமாறு வேண்டி வழிகாட்டியொன்றை வழங்கியுள்ளது. காப்புறுதி கொள்கையாளர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்கில் காப்புறுதி வியாபாரம் நேர்மைத்திறனுடனும், தொழில்முறை ரீதியாகவும், விவேகமாகவும் நடத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த வழிகாட்டி வழங்கப்பட்டது.

## 5. காப்புறுதிப் பிணக்கு தீர்வுத் திட்டத்தை விதிமுறைப்படுத்துதல்

### ஆசிய அபிவிருத்தி வங்கி TA-9263 SRI: மூலதன சந்தை அபிவிருத்தித் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கி மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு கொள்கை அடிப்படையிலான கடன் ஒன்றை அங்கீகரித்துள்ளது. கடந்த திட்டத்தின் Tranche 2 இன் விதிகளுக்கு அமைய ஆணைக்குழு பிணக்குத் தீர்க்கும் குழுவொன்றினை அமைத்து, அதற்கு பணியாட்களையும் நியமிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு அதன் பரிந்துரைகளை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கும்.

பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் மீளாய்வுகளின் அடிப்படையில் ஆலோசகர்களின் முதலாவது வருகையைத் தொடர்ந்து திட்டத்தின் எல்லை, சூழல் பணிகள், எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் மற்றும் அதன் செயற்பாடுகள் என்பவற்றைக் குறித்துக்காட்டி, ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆலோசகர்களின் அடுத்த வருகையின் போது தொழிற்துறை பங்குதாரர்களுடன் (IASL, SLIBA மற்றும் காப்புறுதி குறைகேள் அதிகாரி) பங்குதாரர்களுடன் தற்போது நடைமுறையில் உள்ள பிணக்குத் தீர்வு பொறிமுறையில் கொண்டுவரப்பட வேண்டிய உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் மற்றும் நிர்வகிப்பதற்கான சட்ட வழிகள், விருதுகளின் அமுலாக்கம், நிதியிடல் போன்ற முக்கிய விடயங்களை தீர்த்தல் தொடர்பாக நடைபெற்றது. இந்த வருகையின் போது ஆலோசகர்கள், ஆணைக்குழு வுக்கு மொகைத் தொழில்துறை பிரதிநிதிகளுக்கும் சமர்ப்பணங்களை வழங்கினர். அதன் பின் குழும உறுப்பினர்களுக்கு அமுலாக்கப்பட இருக்கும் திட்டத்தின் நகல் கட்டமைப்பு மற்றும் குறிப்பு விதிமுறைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டன.

ஆலோசகர்களால் வழங்கப்பட்ட சமர்ப்பனங்கள் இலங்கையில் அதிக வினைத்திறனுடனும் பொருத்தமாகவும் இருக்கக்கூடிய காப்புறுதிக் பிணக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக ஆணைக்குழுவினால் தற்போது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

### காப்புறுதி குறைகேள் அதிகாரி திட்டத்தை விதிமுறைப்படுத்துவதற்கான வேண்டுகோள்

ஆணைக்குழு IASL மற்றும் தற்போதைய காப்புறுதி குறைகேள் அதிகாரியிடம் இருந்து நடைமுறையில் உள்ள காப்புறுதி குறைகேள் அதிகாரி திட்டத்தை விதிமுறைப்படுத்தும் வேண்டுகோள்களைப் பெற்றுள்ளது. இவ்வாறு பெற்ற வேண்டுகோள்களை மீளாய்வு செய்த பின்னர் மேலே குறிப்பிட்ட ADB யின் TA திட்டத்தின் கீழ் மாற்று பிணக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்கும் வரையில் தற்போதுள்ள அந்தஸ்தை பேணிப் பாதுகாப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கு ஒன்று குறைகேள் அதிகாரிக்கு விசாரணைக்காக ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ள போது அல்லது விசாரணை செய்து கொண்டிருப்பின் அந்த விடயத்தை ஆணைக்குழு கருத்திற் கொள்ளும் நோக்கில் அவ்விடயத்தை ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு கம்பனிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

## ஏனைய தலையீடுகள்

### பாடசாலை மாணவர்களுக்கான “சுரக்ஷா” காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ள பிணக்குத் தீர்வு

ஆணைக்குழு காப்புறுதிக் கொள்கையுடைய நிபந்தனைகளையும், இயல்புகளையும் மீளாய்வு செய்து, கல்வி அமைச்சிற்கு நடுத் தீர்ப்புக்குப் பதிலாக எளிய மாற்று பிணக்குத் தீர்வு முறையொன்றை அறிமுகப்படுத்துமாறு வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு (காப்புறுதி சேவை வழங்குநர்) அறிவுரை வழங்கியுள்ளது.

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியுறவுகள் (MDER) பற்றிய மீளாய்வு

காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் எதிர்கால காப்புறுதிக் கொளகையாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்குமாறு ஆணைக்குழு பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பார்க்கும் போது, காப்புறுதியை "இடர் முகாமைத்துவக் கருவி" என்ற வகையில் அதன் முக்கியத்துவம் பற்றி சரியான விளக்கம் ஒன்று பொது மக்களுக்கு இருப்பது இன்றியமையாததாகும். காப்புறுதி எதிர்காலத்தில் எதிர்பாராத சம்பவங்கள் மூலம் ஏற்படக்கூடிய நிதி இழப்புக்களை காப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தனித்துவமான மற்றும் மிக முக்கியமான நிதிக் கருவி ஒன்றாகக் கருதப்படுகின்றது. இவ்வகையில் பொருளாதாரம் ஒன்றின் நிலையான அபிவிருத்திக்கு காப்புறுதி முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது. இலங்கையில் பல்வேறுபட்ட காப்புறுதிப் பொருட்கள் சந்தையில் உள்ளன. அத்தோடு, இது, சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இத்தகைய விடயங்கள் இருந்த போதிலும், காப்புறுதி பற்றிய அறிவு இன்மை காரணமாக இந்த வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் காப்புறுதி ஊடுருவல் குறைந்த மட்டத்தில் உள்ளது. எனவே, காப்புறுதி மீதான விழிப்புணர்வை ஊக்குவிப்பது தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபார சமூகத்திற்கு எதிர்காலதத்தில் ஏற்படும் பொருளாதார இழப்புகளில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கி விரிவுபடுத்துகிறது. இதன் மூலம் காப்புறுதி தொழிற்துறையின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கிறது. இந்த வகையில் காப்புறுதி தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஆணைக்குழு ஈடுபட்டு வருகின்றது.

## விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

### பிரதேச செயலகங்களில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழு கிராம சேவகர்கள், பொலிஸ், மதுவரி, திவிநெகும அபிவிருத்தி, விவசாய மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் போன்ற இயைபான பிரதேச செயலகங்களில் இணைந்திருக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியது. ஆணைக்குழு அதன் வகிபங்கு காப்புறுதிக் கொள்கை ஒன்றை வைத்திருப்பதன் முக்கியத்துவம், காப்புறுதிக் கொள்கையாளர் ஒருவருக்கு இருக்கின்ற ஆயுள் மற்றும் சொத்து மீதான காப்பீடு, அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் காப்புறுதிக் கொள்கை ஒன்றை வாங்கும் போதும் பேணிப் பாதுகாக்கின்ற போதும் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான காரணிகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையின் கீழ் கோரிக்கை ஒன்றை மேற்கொள்ளும் போது அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்பவை பற்றி பங்குபற்றுநர்களுக்கு தெளிவுபடுத்தியது. மேலே கூறப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், பொதுமக்களுடன் சமூகத்தின் குறைந்த மட்டத்திற்கு சேவை வழங்குகின்ற போது அடிக்கடி தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதனால், அவர்களுக்கு இவை பற்றி தெளிவுபடுத்தியமை மிக முக்கியமாகும். ஏனெனில், காப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு இருக்கக்கூடிய அனுபவங்கள் மற்றும் மனநிலை பற்றி ஒரு நுண்ணறிவை வழங்கியுள்ளது.



பிரதேச செயலகத் திட்டம்

அண்ணளவாக 796 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி தங்காலை, கெஸ்பாவ, ஹங்குரங்கெத்த, கலேவெல, உடுநுவர, கெக்கிராவ, பெலியத்த, மெதகும்புர, தம்புள்ள மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் "பிரதேச தினக் கூட்டங்களில்" 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் இருந்து சுமார் 1,782 அரசாங்க உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருந்தனர்.

### ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட முக்கியமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, பாடசாலை



பாடசாலைத் திட்டம்

மாணவர்களுக்காக ஆணைக்குழு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

- யக்கலையில் அமைந்திருக்கும் ஸ்ரீ சந்திரஜோதி வித்தியாலயத்தில் உயர்தர வணிகப் பிரிவு மாணவர்கள், ஆசிரியர்களுக்கென நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது.

### மின்னியல் ஊடகம் ஊடான விழிப்புணர்வு

மின்னியல் ஊடகம் பல்வேறு வழிகளில் சமூகத்திற்கு தொடர்பாடலை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதை உணர்ந்து, ஆணைக்குழு மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் இரண்டு வானொலி நிகழ்ச்சிகளையும், மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளது. ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள், காப்புறுதி சம்பந்தமான விடயங்கள் பற்றிய

விழிப்புணர்வை உருவாக்குவதற்காக பின்வரும் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர்.

### தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

- "கொப்பி மேசை", சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில் (ITN) ஒளிபரப்பு செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி
- "சல்மல்யாய", சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில் (ITN) ஒளிபரப்பு செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி
- சுயாதீன தொலைக்காட்சி நிலையம், அதன் பிரதான சிங்கள மொழி செய்திச் சேவையில் ஒரு "செய்தி பிரிவை" ஒளிபரப்புச் செய்தது.

### வானொலி நிகழ்ச்சிகள்

- "சர பிரபா கிர" இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சி.
- "வானுடன் டன்" இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "சிற்றி FM" அலைவரிசையில் நடைபெற்ற நேரடி நிகழ்ச்சி.

### அச்சு ஊடகம் மூலமான விழிப்புணர்வு

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது ஆணைக்குழு பின்வரும் ஊடக வெளியீடுகளையும், ஊடக அறிவித்தல்களையும் பிரசுரம் செய்தது.

### ஊடக வெளியீடு

- 2016 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் காப்புறுதித் துறையின் செயற்பாடு.
- 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது காப்புறுதித் துறையின் செயற்பாடு.
- 2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில், காப்புறுதித் துறையின் செயற்பாடு.
- 2017 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் செயற்பாடு.
- காப்புறுதிக் கோரிக்கைகள் மீதான விசாரணைகளை நடத்துவதன் சம்பந்தப்பட்ட வழிகாட்டிகள்.
- ஆணைக்குழுவினால் ஒழுங்கமைக்கப்படாத அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்கள் பற்றி காப்புறுதி ஒழுங்குபடுத்துநரால் மேற்கொள்ளப்படும் தெளிவுபடுத்தல்.
- காப்புறுதி ஒழுங்குபடுத்துநரின் பெயர் மாற்றம்.

### ஊடக அறிவித்தல்கள்

- பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பற்றிய வருடாந்த அறிவித்தல் "பொது மக்களுக்கான விசேட அறிவித்தல்" என்ற தலைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- காப்புறுதிக் கொள்கையாளர்களுக்கான செய்தி - "உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றித் தெரியுமா" என்ற காப்புறுதிக் கொள்கையாளர்களின் கடமைகளையும், உரிமைகளையும் முன்னிலைப்படுத்திய அறிவித்தல்.
- காப்புறுதி ஒழுங்குமுறைப் படுத்துநர்களால் மேற்கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தல்கள் - ஒழுங்குபடுத்தப்படாத நிறுவனங்கள்.

### ஊடக நேர்காணல்

- பணிப்பாளர் நாயகம் அவர்களுடன் நடத்தப்பட்ட ஒரு நேர்காணல் "அத" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

### பிரசுரங்கள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப் பகுதியின் போது நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு (IRCSL) பற்றிய விழிப்புணர்வுக் கையேடு மறு பதிப்பு செய்து பங்கிடப்பட்டது.

"IRCSL இல் இருந்து காப்புறுதி ஆலோசகர்களுக்கான செய்தி" எனத் தலைப்பிடப்பட்ட காப்புறுதி ஆலோசகர்களின் தொழில்முறை ரீதியான நடத்தையை ஊக்குவிப்பதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை உள்ளடக்கிய ஒரு ஆவணம். இலங்கைக் காப்புறுதிச் சங்கம் (IASL) மற்றும் இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் (SLIBA) ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டு இந்தச் செய்தியை அனைத்து காப்புறுதி ஆலோசகர்களுக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்துமாறு வேண்டி IASL மற்றும் SLIBA ஆகியவற்றின் இணைய தளங்களில் (மும்மொழிகளிலும்) பிரசுரிக்குமாறும் அத்துடன், IASL, SLIBA ஆகியவற்றின் உறுப்பாண்மையை பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதி ஆலோசகர்களுக்கும் (தற்போதைய மற்றும் புதிய) செய்தி ஒன்றின் பிரதியை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## தேசிய காப்புறுதி தினம்

அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 01 ஆம் திகதியை தேசிய காப்புறுதி தினமாகப் பிரகடனப்படுத்தி உள்ளது. இது, காப்புறுதிக் கைத்தொழில் துறை தேசிய பொருளாதாரத்திற்கும் சமூக நலன்புரிக்கும் அளித்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் முகமாக இலங்கை காப்புறுதித்துறை வரலாற்றில் இடம்பெற்ற ஒரு மைல்கல்லாகும். இது, ஆணைக்குழு மற்றும் IASL உடைய கூட்டு முயற்சியினால் பெறப்பட்ட வெற்றியாகும்.

அன்றைய தினம், விசேட ஞாபகார்த்த முத்திரை ஒன்றும்

முதல் நாள் காகித உறையும் 2017 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி தினத்தை ஆரம்பித்து வைப்பதற்காக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார கௌரவ பிரதியமைச்சரினால் மாண்புமிகு ஜனாதிபதியிடம் அவருடைய உத்தியோகபூவ வாசஸ்தலத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது. மேலும், IASL இனால் தேசிய காப்புறுதி தினத்தின் அங்குரார்ப்பண நிகழ்வின் போது மற்றுமொரு நிகழ்வு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் ஆணைக்குழு, ஆசிய அபிவிருத்தி வங்கி, SLIBA மற்றும் காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

"காப்புறுதியின் முக்கியத்துவம்" பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தச் சந்தர்ப்பத்தை கருத்திற் கொண்டு ஆணைக்குழு தேசிய காப்புறுதி தினத்தின் அங்குரார்ப்பண வைபவத்தையும், காப்புறுதி விழிப்புணர்வு மாதத்தையும் கொண்டாடுவதற்காக பல நடவடிக்கைகளை ஒழுங்கமைத்திருந்தது.

(1) தேசிய காப்புறுதி தினத்தன்று முத்திரை மற்றும் முதல் நாள் உறையை வெளியிட்டமை.

(2) வானொலி நிகழ்ச்சிகள்




முத்திரையும் காகித உறையும்

(a) இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வர்த்தக FM அலைவரிசையில் நடைபெற்ற "சர பிரபா கிரா" என்ற நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சி.

(b) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சகல அலைவரிசைகளிலும் பிரதான செய்திகளை அடுத்து முன்னரே பதிவு செய்யப்பட்ட குறுஞ்செய்திகள் "SLBC செய்திகள் பொதி" என்ற நிகழ்ச்சி.

(3) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

(a) சுயாதீன தொலைக்காட்சி சேவையில் பதிவு செய்யப்பட்ட "சல் மல் யாய" என்ற நேர்காணல் நிகழ்ச்சி.

(b) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட "சன்ஹிந்த" என்ற நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சி.

(4) ஊடக வெளியீடுகள்

(a) செப்டம்பர் 1 ஆம் திகதியை "தேசிய காப்புறுதி தினமாக பிரகடனப்படுத்தி பிரசுரிக்கப்பட்ட ஊடக வெளியீடு"

(5) IRCSL இடமிருந்து காப்புறுதி ஆலோசகர்களுக்கான செய்தி

(a) செப்டம்பர் மாத காலப் பகுதியின் போது IASL இனால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச செயற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் போது காப்புறுதிக் கம்பனிகள் ஊடாக மேலே குறிப்பிடப்பட்ட ஆவணம் (மும்மொழிகளிலும்) அனைத்து காப்புறுதி ஆலோசகர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன், இந்த ஆவணம் ஆணைக்குழுவின் இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டது.

### ADB யின் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) அதன் மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காப்புறுதிப் பொருட்களின் நிதி அறிவை விருத்தி செய்வதற்காக விரிவான உபாய நுட்பம் ஒன்றை உருவாக்குவதற்கு ஆணைக்குழுவுக்கு அறிவுரையும், அனுசரணையும் வழங்குவதற்காக ஆலோசகர் ஒருவரை நியமித்தது. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த ஆலோசகர் மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் எல்லை, சூழல், பணிகள், பிரச்சினைகள், வெளிப்படுத்துகைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை குறித்துக்காட்டி ஆரம்ப அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

சர்வதேச சிறந்த நடைமுறைகளோடு ஒப்பிடுகின்ற போது இலங்கையில் தற்போதுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள், தொடர்பாடல் அலைவரிசைகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட உபாய நுட்பங்கள், பாடத்திட்டங்கள் போன்றவற்றில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிவதற்காக, கைத்தொழில் துறை பங்குதாரர்களுடன் பல ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. இவ்வாறு தயார்படுத்தப்பட்ட இடைவெளி பகுப்பாய்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இடைவெளி பகுப்பாய்வு அறிக்கையில் இனங்காணப்பட்ட இடைவெளிகள் பற்றி கலந்துரையாடுவதற்கு 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொழிற்துறைப் பங்குதாரர்கள் மற்றும் ஆணைக்குழுவுடன் ஆலோசகர் ஆலோசனைக் கூட்டங்களின் இறுதிச் சுற்றை நடத்தினார். விரிவான நடவடிக்கைகள் அவற்றை

நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறைகள் அவற்றுக்குத் தேவைப்படுகின்ற வளங்கள் என்பவற்றை இனங்கண்டு தயார்படுத்தப்பட்ட கல்வி உபாய நுப்ப மற்றும் அமுல்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வி உபாய நுப்ப மற்றும் அமுலாக்கல் திட்டத்தை பார்வையிட்ட பின்னர் ஆணைக்குழு "உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள்" பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துகின்றதா என்பது தொடர்பில் மேலதிகத் தகவல்களையும், தெளிவுபடுத்தல்களையும் வழங்குமாறு ஆலோசகரிடம் வேண்டுகோள் விடுத்தது. உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள்:

- ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கையுடன் இணங்கிச் செல்கிறதா;
- ஆணைக்குழுவின் எல்லை வளங்களோடு ஒப்பிடும் போது அடையக்கூடியனவா; மற்றும்
- தெளிவாகவும், குறிப்பாகவும் அத்துடன் அதன் பெறுபேறுகள் அளவிடக்கூடியதாகவும் இருக்கின்றனவா.

இதற்கு பதிலளிக்கும் வகையில் ஆலோசகரும் ADB யும் திருத்தப்பட்ட கல்வி உபாய நுப்ப மற்றும் அமுலாக்கல் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டுள்ளன.

## ஏனைய ஈடுபாடுகள்

### பொருள் இடைவெளி பகுப்பாய்வு

மோட்டார், உடல்நல மற்றும் தீ அபாயப் பொருட்கள் வகைகள் மீதான இடைவெளி பகுப்பாய்வு அறிக்கைகள் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் ஒழுங்குபடுத்தல்கள் கட்டமைப்பின் அபிவிருத்திகள் மற்றும் சந்தை நிலைமைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட அறிக்கைகள் கருத்துக்கள் / பதில்கள் என்பவற்றுக்காக தொழிற்துறை (IASL) அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் பரிந்துரைகள் தொடர்பாக ஆணைக்குழு தொழிற்துறையுடன் (IASL மற்றும் SLIBA உடைய பிரதிநிதிகள்) பல ஆலோசனைக் கூட்டங்களை நடத்தின. அதன் பின் கலந்துரையாடல்களில் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆணைக்குழுவின் பரிந்துரைகள் IASL க்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### பொது மக்களின் கேள்விகளுக்கான பதில்கள்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது பொது மக்கள், காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் ஏனைய பலதரப்பட்ட பங்குதாரர்களால் வேண்டப்பட்ட தகவல்கள் மற்றும் காப்புறுதி தொழிற்துறை தொடர்பாகக் கோரப்பட்ட வழிகாட்டிகள் என்பவற்றுக்கு ஆணைக்குழு கவனம் செலுத்தியது.

### முகவராண்மை முன் ஆட்சேர்ப்புப் பரீட்சையின் பாடத் திட்டத்தை மீளாய்வு செய்தல்

ஆணைக்குழு "சந்தை நடத்தை சம்பந்தமான விடயங்கள்" உடன் தொடர்புபட்ட தற்போதுள்ள பாடத்திட்டப் புத்தகங்கங்களின் உள்ளடக்கங்களை மேலும் மேம்படுத்துவதற்காக முகவராண்மை முன் ஆட்சேர்ப்புப் பரீட்சை சம்பந்தமான பாடத்திட்டப் புத்தகங்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்களைப் பரீட்சித்தது. மேலதிக மேம்படுத்தலுக்காக சில மாற்றங்களை ஆணைக்குழு முன்மொழிந்தது.

### "அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்" (FAQs) மீதான விரிவான ஆவணம் ஒன்றை அபிவிருத்தி செய்தல்

ஆணைக்குழுவின் வகிபங்கு மற்றும் அதன் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள், ஆயுள் காப்புறுதி மற்றும் மோட்டார் காப்புறுதி என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான FAQs தொகுதி ஒன்று தயார்படுத்தப்பட்டது.

### விழிப்புணர்வு வீடியோக்களை மேலிறக்கம் செய்வதற்கு "YouTube" கணக்கை உருவாக்குதல்

விழிப்புணர்வுடன் தொடர்புபட்ட பதிவு செய்யப்பட்ட வீடியோக்கள் மற்றும் sound clips என்பனவற்றை மேலிறக்கம் செய்வதற்காக "YouTube" அலைவரிசை ஒன்று உருவாக்கப்பட்டது. ஆணைக்குழுவினால் இலத்திரனியல் ஊடகத்தில் நடத்தப்பட்ட அனைத்து பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளும் "YouTube" அலைவரிசையில் மேலிறக்கம் செய்யப்பட்டது.

# நிருவாக மீளாய்வு

## பணியாட்கள்

ஒரு ஸ்தாபனத்தின் வெற்றி அதன் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாட்களின் நிபுணத்துவத்தில் பாரியளவில் தங்கியுள்ளது. இந்த வகையில், ஆணைக்குழுவின் வெற்றி உபாய நுட்பத்திற்கு அறிவுசார் மற்றும் அனுபவம்சார் மனித வளங்கள் முதுகெலும்பாக செயற்படுகிறன.

ஆணைக்குழு மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது நேரகாலத்தோடு தேவையான தொழில்முறை ரீதியான நபர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் அதன் மனித வளத்தை வலுப்படுத்துவதற்கு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இத்தகைய முயற்சிகளை எதிர்நோக்குவதற்கு மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியின் போது ஆணைக்குழு ஒரு பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் 6 நிறைவேற்று அதிகாரிகளைச் சேர்த்துக் கொண்டது. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஆணைக்குழுவின் மொத்த பணியாட்களின் எண்ணிக்கை 44 ஆகும்.

ஆணைக்குழுவின் பணியாட்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

| ஊழியர்-களின் எண்ணி-க்கை | கல்விசார் / தொழில்முறை ரீதியான தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப் பின், முதலாவது பட்டம் மற்றும் தொழ்ல்சார் தகைமைகள் | பட்டப் பின் மற்றும் தொழில்சார் தகைமைகள் | பட்டப் பின் மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டம் மற்றும் தொழில்சார் தகைமைகள் | முதலா வது பட்டம் | தொழில்சார் தகைமைகள் |
| 44 | 07 | 02 | 04 | 07 | 09 | 03 |

## பயிற்சி

நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பணியாட்களின் வெளிப்பாடு மற்றும் அறிவை வளர்ப்பதற்கு பயிற்சியில் கவனம் செலுத்துவது முக்கியமாகும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இந்த வருடத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை அளிப்பதற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| வகை | 2016 (ரூபா) | 2017 (ரூபா) |
|---|---|---|
| உள்ளூர் பயிற்சி | 2,021,522/- | 1,297,577/- |
| மாநாடுகளும் வெளிநாட்டுப் பயிற்சியும் | 8,370,750/- | 4,741,449/- |

## ஊழியர் நலன்புரி

நிறுவனம் ஒன்றின் அபிவிருத்திக்கு அதன் பணியாட்களின் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவது முக்கியமாகும். உள்ளக மற்றும் வெளியக மருத்துவத் திட்டங்கள் தனிப்பட்ட விபத்துக் காப்புறுதிக் காப்பீடு, வாகன மற்றும் இடர் கடன் திட்டங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பன அடங்கலாக, கவரக்கூடிய நலன்புரி பொதிகளை ஆணைக்குழு வழங்குகிறது. மேலும், வருடாந்த ஒன்று கூடல்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பணியாட்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஆணைக்குழு வழங்குகிறது.

கல்விசார் தொழில்முறை ரீதியான தகைமகள் பட்டப்பின் முதலாவது பட்டம் மற்றும் தொழில்சார் தகைமைகள்.

# நிதி மீளாய்வு

## கொள்கையாளர் பாதுகாப்பு நிதியம் (PPF)

காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு (PPF) சேகரிக்கப்பட்ட வீத வரி ஆணைக்குழுவினால் சிறந்த திரும்பல்களைப் பெறுவதற்காக விவேகமான முறையில் முதலீடு செய்யப்பட்டது. விளக்கப்படம் 1, செஸ் வரி சேகரிப்பு மற்றும் சம்பாதிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் என்பனவற்றைச் சித்தரிக்கிறது.

விளக்கப்படம் 1, கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் செஸ் வரி வருமானத்தின் வளர்ச்சியை விளக்குகிறது. சாதகமான சந்தை சூழ்நிலைகளின் செல்வாக்கு காரணமாக, 2016 இல் இருந்து 2017 இல் முதலீட்டு வருமானம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டுகிறது.

PPF இனுடைய பெறுமதி, கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் அதிகரித்துள்ளது. விளக்கப்படம் 2, இந்த விடயத்தை சித்தரிக்கிறது.

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் சொத்துக்களின் தொகுதி கீழே சித்தரிக்கப்பட்டுள்ளன.

### ஆணைக்குழுவின் வருமானம்

வரைபடம் 1
2013 - 2019 காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட செஸ் வரி மற்றும் முதலீட்டு வருமானம்




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (ரூ. மில்.) | 246 | 274 | 322 | 408 | 418 |
| முதலீட்டு வருமானம் (ரூ. மில்.) | 236 | 158 | 145 | 229 | 372 |

வரைபடம் 2
2013 - 2017 காலப்பகுதியில் காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் பெறுமதி (ரூ. மில்.) | 1,778 | 2,183 | 2,643 | 3,292 | 4,110 |

வரைபடம் 3
2017 டிசம்பர் 31 வரை காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பாதுகாப்பு நிதிய சொத்துக்களின் கலவை



பின்வரும் மூலங்களில் இருந்து ஆணைக்குழுவின் வருமானம் பெறப்பட்டது.

- காப்புறுதி வழங்குநர்கள், காப்புறுதித் தரகுக் கம்பனிகள் மற்றும் இழப்பு சரி செய்பவர்களிடம் இருந்து பெறப்பட்ட பதிவுக் கட்டணங்கள்
- காப்புறுதிக் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்பட்ட வருடாந்தக் கட்டணம்
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவைப் புதுப்பித்தலுக்காக அறவிடப்பட்ட வருடாந்த புதுப்பித்தல் கட்டணம்
- மேலதிக நிதியங்களில் முதலீடு செய்வதன் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம்

2013 - 2017 வரை பெறப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தின் இடைவெளிகளை விளக்கப்படம் 4 சித்தரிக்கிறது.

## ஆணைக்குழுவின் செலவுகள்

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கம்பனியினால் உறப்பட்ட செலவுகள் 2017 ஆம் ஆண்டு ஓரளவு அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன், ஆணைக்குழு 2017 ஆம் ஆண்டு சுமார் ரூபா 31.0 மில்லியனை மேலதிகமாகப் பதிவு செய்துள்ளது. கடந்த காலத்தில் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வருமானத் திற்கும் செலவுகளுக்கும் இடையிலான பற்றாக்குறை PPF இல் இருந்து பூர்த்தி செய்யப்பட்டதால், இங்கு கூறப்பட்ட மேலதிக PPF க்கு மாற்றம் செய்யப்பட்டது.

கீழே உள்ள விளக்கப்படம் 5, 2013 லிருந்து 2017 வரை கம்பனியினால் உறப்பட்ட மொத்த செலவுகளைச் சித்தரிக்கிறது.

வரைபடம் 4

2013 - 2017 வரையான காலத்திற்கான தரகு வருமானம்




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| வருடாந்தக் கட்டணம் (ரூ. மில்.) | 70 | 73 | 104 | 126 | 142 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (ரூ. மில்.) | 4 | 4 | 9 | 5 | 9 |
| ஏனைய வருமானம் (ரூ. மில்.) | 1 | 2 | 2 | 3 | 3 |
| மானியங்களின் அங்கீகாரம் (ரூ. மில்.) | 5 | 4 | 5 | 2 | 1 |
| மொத்த வருமானம் (ரூ. மில்.) | 80 | 83 | 119 | 136 | 157 |

வரைபடம் 5

ஆணைக்குழுவின் 2013 - 2017 வரையான காலப்பகுதிக்கான மொத்தச் செலவுகள்




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவு (ரூ. மில்.) | 105 | 107 | 123 | 124 | 125 |



# நிதித் தகவல்கள்

# நிதி நிலைமை தொடர்பான கூற்று

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

| | குறிப்பு | 31.12.17 இல் ரூபா | 31.12.16 இல் மீள் கூற்று ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1 | 7,324,758 | 7,629,457 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - வாடகை, மின்சார வைப்புகள் மற்றும் திறைசேரி முறிகள் | 2 | 1,086,252,949 | 1,091,418,880 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்குகள் | 3 | 347,299 | 393,033 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2&16 | 3,023,706,256 | 2,200,446,486 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 12,194,049 | 13,505,456 |
| அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடுகள் | | 42,000,000 | 22,700,000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 5 | 5,796,222 | 5,207,234 |
| **மொத்த சொத்துக்கள்** | | 4,177,621,532 | 3,341,300,546 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகள்** | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் | 6&16 | 4,109,959,205 | 3,291,865,366 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | | 7,389,652 | 7,389,652 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| மானியம் | 7 | 5,718,532 | 3,523,232 |
| ஓய்வு நலக் கடப்பாடு | 8 | 10,902,547 | 9,842,625 |
| | | 16,621,079 | 13,365,857 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| முன்னரே பெற்றுக்கொண்டவை | 16 | 7,358,099 | 8,238,794 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 9&16 | 36,293,496 | 20,440,878 |
| | | 43,651,596 | 28,679,671 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 4,177,621,532 | 3,341,300,546 |

இந்தக் கணக்குக் கூற்றுக்களைத் தயார் செய்வதிலும், சமர்ப்பிப்பதிலும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களே பொறுப்புடையவர்களாவர்.

மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 88 தொடக்கம் 96 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

மனோ தித்தவெல்ல
தலைவர்

ஏ.ஆர்.தேஷப்பிரிய
உறுப்பினர்

தமயந்தி பெர்னாண்டோ
பணிப்பாளர் நாயகம்

சாயா வித்தானவசம்
பணிப்பாளர் நிதி மற்றும் நிருவாகம்

கொழும்பு, ஸ்ரீலங்கா
2018 மே 30

# நிதிச் செயற்பாடு பற்றிய அறிக்கை

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 31.12.17 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.16 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| வருவாய் | 10 | 150,783,219 | 130,972,036 |
| மானிய அங்கீகாரம் | 7 | 1,455,019 | 2,061,963 |
| வட்டி வருமானம் | | 4,486,296 | 3,112,336 |
| ஏனைய வருமானம் | 11 | 302,826 | 258,370 |
| மொத்த வருமானம் | | 157,027,360 | 136,404,704 |
| செலவுகள் | | | |
| பணியாளர் தொடர்பான செலவுகள் | 12 | (69,941,211) | (71,862,315) |
| தொழில்முறை ரீதியான கட்டணங்கள் | 13 | (2,000,000) | (2,801,156) |
| செயற்பாட்டுக் கட்டணங்கள் | 14 | (53,212,244) | (49,032,420) |
| நிதி மற்றும் ஏனையவை | 15 | (114,876) | (150,126) |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட Surplus மொத்த செலவுகள் | 6 | (31,220,674) | (12,185,206) |
| மொத்தச் செலவுகள் | | (156,489,005) | (136,031,223) |
| நிகர Surplus / (பற்றாக்குறை) வரிக்கு முன் | | 538,355 | 373,480 |
| வரி விதிப்பு | | (538,355) | (373,480) |
| நிகர Surplus / (பற்றாக்குறை) வரிக்குப் பின் | | - | - |
| வருடத்திற்கான நிகர Surplus | | - | - |

88 தொடக்கம் 96 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

# நிதிப் பாய்ச்சல் அறிக்கை

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 31.12.17 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.16 இல் முடிவுற்ற வருடம் மீள் கூற்று ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| இக்காலப்பகுதிக்கான நிகர அதிகரிப்பு/(குறைவு) | | - | - |
| பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு | | 3,955,019 | 4,259,214 |
| ஓய்வு நலனுக்கான ஏற்பாடு | | 1,893,706 | 1,807,178 |
| அகற்றல் மீதான இலாபம்/(நட்டம்) | | (41,449) | (66,590) |
| மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு - ஓய்வு நலன் | | (833,784) | - |
| மானிய அங்கீகாரம் | | (1,455,019) | (2,061,963) |
| வருமான வரி | | 538,355 | 373,480 |
| வட்டி வருமானம் | | (4,486,296) | (3,112,336) |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | (429,467) | 1,198,985 |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| தொக்குகளில் குறைவு/(அதிகரிப்பு) | | 45,735 | 52,869 |
| பெறுவனவுகளில் குறைவு/(அதிகரிப்பு) | 16 | 1,289,668 | 3,712,122 |
| முற்பணங்களில் அதிகரிப்பு/(குறைவு) | | (880,694) | 742,508 |
| கடன் வழங்குநர் மற்றும் சேர்த்தல்களுக்கான அதிகரிப்பு/(குறைவு) | 16 | 15,852,619 | 13,220,213 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிதிப் பாய்ச்சல் | | 16,307,328 | 17,727,712 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | 15,877,861 | 18,926,697 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | (19,300,000) | (21,700,000) |
| வட்டி வருமானம் | | 3,969,678 | 2,683,182 |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண விற்பனை மூலம் பெற்ற வருமானம் | | 41,449 | 71,419 |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | | (3,650,319) | (619,406) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர நிதி | | (18,939,191) | (19,564,804) |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மீதான நிதிப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் மாற்றப்பட்ட மூலதனம் | | 3,650,319 | 619,406 |
| நிதியிடல் நடவடிக்கைகள் மீதான நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | 3,650,319 | 619,406 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 588,988 | (18,701) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 5,207,234 | 5,225,935 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 5,796,222 | 5,207,234 |
| வங்கியிலும் கையிலுமுள்ள காசு | 5 & 18 | 5,796,222 | 5,207,234 |

88 தொடக்கம் 96 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

# காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் நிதிப் பாய்ச்சல் அறிக்கை

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 31.12.17 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.16 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான நிதிப் பாய்ச்சல் | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் நிதியத்தில் நிகர அதிகரிப்பு | | 818,093,839 | 648,638,132 |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 818,093,839 | 648,638,132 |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்களில் பெறவேண்டிய வட்டி குறைவு/(அதிகரிப்பு) | | (68,356,404) | (46,126,635) |
| பெறவேண்டிய வீத வரியில் குறைவு/(அதிகரிப்பு) | | (15,572,411) | (24,664,812) |
| வாடகை வைப்பில் குறைவு/(அதிகரிப்பு) | | 5,165,931 | - |
| PPF இலிருந்து மாற்றப்பட வேண்டிய அதிகரித்த தொகை (குறைவு)/அதிகரிப்பு | | (16,376,099) | (19,967,093) |
| | | (95,138,983) | (90,758,539) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர காசு | | 722,954,856 | 557,879,592 |
| முதலீட்டு நடவடிக்கையில்/நிதிப் பாய்ச்சல் (பயன்படுத்தப்பட்ட) | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | | 1,049,400,000 | 362,599,903 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | (1,772,300,000) | (922,000,000) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர காசு | | (722,900,000) | (559,400,097) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 54,856 | (1,520,505) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 503,267 | 2,023,772 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 558,124 | 503,267 |
| வங்கியிலுள்ள காசு | 2 & 18 | 558,124 | 503,267 |

88 தொடக்கம் 96 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 தயாரித்தலுக்கான அடிப்படை

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை ரூபாவில் கிட்டிய தொகைக்குச் சீரமைக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அது, வரலாற்று ரீதியிலான அடிப்படையில் தயாரிக்கப்பபட்டது.

பொருத்தமான இடங்களில் இயைபான கணக்கியல் கொள்கைகள் பின்னிணைப்பு குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.2 இணக்கம் பற்றிய கூற்று

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை பகிரங்கத்துறை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதோடு அது, கூறப்பட்ட நியமங்களுடன் இணங்கியுள்ளது.

### 1.3 தொடர்ந்து செல்லும் கரிசனை

ஆணைக்குழு உறுப்பினர்கள், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையில் ஆணைக்குழு தொடர்ந்து இயங்குவதற்கான தகைமை உள்ளதா என்பதை மதிப்பீடு செய்துள்ளனர். ஆணைக்குவின் உறுப்பினர்கள், IRCSL அதன் செயற்பாட்டைத் தொடரும் எனவும், எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால நியதிச் சட்டக் கடமைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்ற நியாயமான உறுதிப்பாட்டுடன் உள்ளனர். எதிர்காலம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கருத்திற் கொண்ட பின்னர் IRCSL அதன் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஒன்று உள்ளது என்பதை எதிர்பார்க்கவில்லை. இதற்கமைவாக IRCSL அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து செல்லும் கரிசனை என்பதை தொடர்ந்து தழுவுகிறது.

### 1.4 அறிக்கையிடும் காலப் பகுதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு, பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.5 ஒப்பீட்டு இலக்கங்கள்

தற்போதைய நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டவற்றில் ஏற்பட்ட மாற்றங்களோடு இணங்கிச் செல்வதற்காக, ஒப்பீட்டு எண்ணிக்கைகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.6 வரி விதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் எற்பாடுகளுக்கு அமைவாக வருமான வரி ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

பங்கிலாபம் அல்லது வட்டியில் இருந்து பெறப்படும் இலாபங்கள் அல்லது வருமானங்கள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு ஆணைக்குழு வருமான வரி விலக்களிப்பைப் பெற்றுள்ளது.

### 1.7 வெளிநாட்டு நாணயத்தை மாற்றுதல்

ஏதேனும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற நடவடிக்கைகள் இருப்பின், கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வேளையில் இருந்த நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அவை, அறிக்கையிடும் நாணயமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

## 2. சொத்துக்களும் மதிப்பீட்டு அடிப்படைகளும்

### 2.1 ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

#### உரிமை கொள்ளப்பட்ட ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன, திரண்ட தேய்மானத்தில் இருந்து கழிக்கப்பட்டு, அதன் நிலை/மீள் மதிப்பீட்டுத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விலை, அவை எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த எண்ணியிருந்ததோ அதற்காக அவை செயற்படுகின்ற நிலையில் கொண்டுவருவதற்கு உறப்பட்ட ஏதேனும் செலவுகள் மற்றும் அதனைக் கைக் கொள்வதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

#### பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வு, நேர்கோட்டு அடிப்படையில், மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்திற்கு ஏற்ப அறவிடப்பட்டுள்ளது.

| | % வருடாந்த அடிப்படையில் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடமும் பொத்துக்களும் | 12.5 |
| அலுவலக மற்றும் EDP உபகரணம் | 25 |
| பயிற்சி உபகரணம் | 25 |

ஒரு சொத்து கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது அகற்றப்படும் நாள் வரை பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது. அகற்றப்படுதல் மீதான பெறுவனவுகளும் இழப்புக்களும் அகற்றப்படுவதிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு வரும் தொகையுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுகின்றது.

### 2.2 முதலீடுகள்

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளிலான முதலீடுகள் செலவு குறைந்த அடிப்படையில்

# கணக்கீட்டுக் கொள்கைகள்

அல்லது முகப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன் வருட முடிவு வரை வட்டி சேர்க்கப்பட்டுள்ளது.

## 2.3 தொக்குகள்

தொக்குகளின் செலவு குறைவாக அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. பொருள் பட்டியல்களுக்கான விலை "முதலில் வருவது முதலில்" (FIFO) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2.4 பெறுவனவுகள்

பெறுவனவுகள் பெறப்படக் கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## 2.5 காசு மற்றும் காசுக்குச் சமமானவை

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவை வங்கியிலும், கையிலும் உள்ள பணத்தை உள்ளடக்குகின்றது.

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

## 3.1 ஓய்வு நலன்கள்

### 3.1.1 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன் திட்டங்கள் / பணக்கொடை

1983 ஆம் ஆண்டின் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைவாக, பணியாள் ஒருவர் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வேலை செய்திருந்தால் மாத்திரமே பணிக்கொடை வழங்குவதற்கான கடப்பாடு எழுகிறது. இந்தக் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, ஒரு வருட கால சேவையைப் பூர்த்தி செய்த அனைத்து பணியாட்களும் நிதியாண்டு இறுதியில் கடைசியாக பெற்ற சம்பளத்தின் மீது அதிலிருந்து அரை மாத சம்பளத்திற்குச் சமமான தொகை இவ்வேற்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### 3.1.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊசேநி மற்றும் ஊநநி

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன, பொருத்தமான நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, அனைத்து ஊழியர்களும் ஊழியர் பங்கிலாப பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகள் ஆகியவற்றுக்குத் தகுதியுடையவர்கள். ஆணைக்குழு ஊழியர் நம்பிக்கை நிதிய மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் மொத்த வருமானத்திலிருந்து முறையே 12% மற்றும் 3% ஐ பங்களிப்புச் செய்கிறது.

## 3.2 பொறுப்புகள்

நிதிக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் என்பதில் கேள்வி மீதான கொடுப்பனவு அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவைகள் அடங்கும். நடைமுறையற்ற பொறுப்புகள் என்பது, அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்த வேண்டிய மிகுதிகள் ஆகும்.

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், அறிந்து கொள்ளப்பட்ட சகல பொறுப்புக்களும் அதன் விலையில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 3.3 மானியம்

பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட காப்புறுதிக் கொள்கையாளர்களின் மூலதனச் செலவு, மானியமாக கருதப்பட்டு சொத்து ஒன்றின் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் மீது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 4. வருமானம் மற்றும் செலவுகள்

## 4.1 வருமான அங்கீகாரம்

வருமானம், உண்மையான அடிப்படையில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

## 4.2 செலவு அங்கீகாரம்

ஆணைக்குழுவைப் பேணிப் பாதுகாப்பதற்காக உறப்பட்ட அனைத்து செலவுகளும் வருமானத்தின் மீதான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு வருவாய்க்கு அறவிப்பட்டுள்ளது.

## 4.3 நிதிப் பாய்ச்சல் கூற்று

உட்கிடையான முறையைப் பயன்படுத்தி நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## 1. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

| | மோட்டார் வாகனங்கள் ரூபா | தளபாடங்களும் பொருத்துக் களும் ரூபா | அலுவலக உபகரணங்கள் (EDP மற்றும் ஏனைய) ரூபா | பயிற்சி உபகரணங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| 2017 ஜனவரி 1 இல் உள்ளவாறு மீதி | 10,000,000 | 13,538,944 | 22,422,500 | 141,450 | 46,102,894 |
| சேர்ப்பனவுகள் | - | 703,387 | 2,946,931 | - | 3,650,319 |
| அகற்றல்கள் | - | (89,900) | (333,840) | - | (423,740) |
| 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 10,000,000 | 14,152,432 | 25,035,591 | 141,450 | 49,329,474 |
| **திரண்ட பெறுமானத் தேய்வு** | | | | | |
| 2017 ஜனவரி 01 உள்ளவாறு மீதி | 5,893,773 | 11,861,247 | 20,576,966 | 141,450 | 38,473,436 |
| வருடத்திற்கான கட்டணம் | 2,500,000 | 532,847 | 922,172 | - | 3,955,019 |
| அகற்றல்கள் | - | (89,900) | (333,840) | - | (423,740) |
| 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 8,393,773 | 12,304,194 | 21,165,298 | 141,450 | 42,004,716 |
| **எழுதப்பட்ட பெறுமதி** | | | | | |
| 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 1,606,227 | 1,848,237 | 3,870,294 | - | 7,324,758 |
| எழுதப்பட்ட பெறுமதி | | | | | |
| 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 4,106,227 | 1,677,696 | 1,845,535 | - | 7,629,457 |

* சொத்து வகையில் உள்ள திறந்த மீதிக்கு ரூபா 1,393/- க்கான சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது - தளபாடம் மற்றும் பொருத்திகள்.

** முழுமையாக பெறுமானத் தேய்வுக்கு உட்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதிகள் பின்வருமாறு:

| | தொகை ரூபா |
|---|---|
| தளபாடமும் பொருத்திகளும் | 4,622,633 |
| பொருத்திகள் | 6,279,005 |
| அலுவலக உபகரணங்கள் - EDP | 16,466,253 |
| அலுவலக உபகரணங்கள் - ஏனைய | 2,446,483 |
| பயிற்சி உபகரணங்கள் | 141,450 |
| | **35,386,801** |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | | குறிப்பு | 31.12.17<br>இல்<br><br>ரூபா | 31.12.16<br>இல்<br>மீள் கூற்று<br>ரூபா |
|---|---|---|---|---|
| 2 | காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியக முதலீடுகள் மற்றும் ஏனையவை | | | |
| | நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| | வாடகை மற்றும் மின்சார வைப்புகள் | | 9,593,949 | 14,759,880 |
| | திறைசேரி முறிகள் | | 1,076,659,000 | 1,076,659,000 |
| | | | 1,086,252,949 | 1,091,418,880 |
| | நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| | அரசாங்க பிணையங்களில் முதலீடு | | - | 1,049,400,000 |
| | நிலையான வைப்புகளில் முதலீடு | | 2,694,300,000 | 922,000,000 |
| | அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகள் மீதான பெறவேண்டிய வட்டி | | 173,597,603 | 105,241,199 |
| | பெறவேண்டிய வீத வரி | 17 | 127,037,223 | 111,464,812 |
| | வங்கி மீது | 18 | 558,124 | 503,267 |
| | PPF க்கு மாற்றப்பட வேண்டிய தொகை | 16 | 28,213,306 | 11,837,206 |
| | | | 3,023,706,256 | 2,200,446,486 |
| | | | 3,023,706,256 | 2,200,446,486 |
| | மொத்த சொத்துக்கள் | | 4,109,959,205 | 3,291,865,366 |
| 3 | தொக்குகள் | | | |
| | அச்சு, காகிதாதி மற்றும் கணனி உபகரணங்கள் | | 331,359 | 352,633 |
| | முத்திரைகள் | | 15,940 | 40,400 |
| | | | 347,299 | 393,033 |
| 4 | ஏனைய நடைமுறைச் சொத்துகள் | | | |
| | வைப்புக்கள் | | 202,895 | 195,363 |
| | சேமிப்புகள் - தே.சே.வ | | 500 | - |
| | ஏனைய பெறுவனவுகள் | | 79,420 | 3,106,577 |
| | WHT மீளப்பெற வேண்டியவை | | 1,934,725 | 1,515,446 |
| | VAT கட்டுப்பாடு | | 1,735,599 | 1,607,046 |
| | பெறவேண்டிய வட்டி - அரசாங்க பிணையங்கள் | | 211,727 | 121,919 |
| | ஊழியர் கடன்கள்* | | 5,769,159 | 5,764,542 |
| | முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள் | | 1,965,955 | 1,062,196 |
| | பொருளாதார சேவைக் கட்டணம் | | 279,070 | 132,365 |
| | SEC இலிருந்து பெற வேண்டியவை | | 15,000 | - |
| | | | 12,194,049 | 13,505,456 |
| | * ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| | ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | | 5,764,543 | 4,948,645 |
| | இவ்வருடத்தில் வழங்கப்பட்ட கடன்கள் | | 3,319,000 | 4,162,000 |
| | | | 9,083,543 | 9,110,645 |
| | இவ்வருடத்தில் செலுத்தப்பட்ட மீள் கொடுப்பனவுகள் | | (3,314,383) | (3,346,103) |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | 5,769,159 | 5,764,543 |
| 5 | காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | |
| | வங்கியிலுள்ள காசு | | | |
| | நிதிய முகாமைத்துவக் கணக்கிலுள்ள மீதி | 18 | 9,373,734 | 5,643,249 |
| | இலங்கை வங்கி - பேரேட்டிலுள்ளவாறு | 18 | (3,577,513) | (438,314) |
| | கையிலுள்ள காசு | | - | 2,301 |
| | | | 5,796,222 | 5,207,234 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 31.12.17 இல் ரூபா | 31.12.16 இல் மீள் கூற்று ரூபா |
|---|---|---|---|
| **6 காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியம்** | | | |
| திறந்த மீதி | 16 | 3,291,865,366 | 2,643,227,233 |
| இவ்வருடத்தில் பெறப்பட்ட வீத வரி | | 418,234,960 | 408,178,592 |
| திறைசேரி முதலீட்டிலிருந்து பெற்ற வட்டி | | - | 2,647,461 |
| Repo மற்றும் அழைப்புக் கணக்கிலிருந்து பெற்ற வட்டி | | 28,364,495 | 127,179,906 |
| திறைசேரி முறி முதலீட்டிலிருந்து பெற்ற வட்டி | | 95,120,708 | 95,381,313 |
| நிலையான வைப்பு மீதான வட்டி | | 248,496,708 | 3,437,951 |
| நிதிய முகாமைத்துவக் கணக்கு மீதான வட்டி | | 331,799 | 263,804 |
| ஆணைக்குழுவின் மேலதிகச் செலவை மிஞ்சிய நிகர வருமானம் | | 31,220,674 | 12,185,206 |
| | | 4,113,634,709 | 3,292,501,466 |
| கழிப்பனவுகள்: | | | |
| செயற்பாட்டுச் செலவுகளுக்கான மாற்றங்கள் | | - | - |
| மூலதனச் செலவுகளுக்கான மாற்றங்கள் | | 3,650,319 | 619,406 |
| மொத்த மாற்றங்கள் - காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியம் | | 3,650,319 | 619,406 |
| வங்கிக் கட்டணங்கள் | | 25,186 | 16,695 |
| | | 3,675,504 | 636,100 |
| இறுதி மீதி | | 4,109,959,205 | 3,291,865,366 |
| **7 மானியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ள மீதி | | 3,523,232 | 4,965,789 |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் ஏற்பட்ட மூலதனச் செலவுகள் | | 3,650,319 | 619,406 |
| கழி: வருட காலப்பகுதியின் போது நிலைமாறக்கூடியவை | | (1,455,019) | (2,061,963) |
| வருட முடிவின் போது உள்ள மீதி | | 5,718,532 | 3,523,232 |

**குறிப்பு - மானியங்களின் அங்கீகாரம்**

மானியம் நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் பின்வரும் விகிதங்களில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது
(அதாவது, சம்பந்தப்பட்ட சொத்தின் பயன்பாட்டுக் காலத்தின் மறையான அடிப்படை மீது)

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | | 25% | |
| அலுவலக உபகரணம் - EDP மற்றும் ஏனையவை | | 25% | |
| தளபாடங்களும் பொருத்திகளும் | | 12.5% | |
| பயிற்சி உபகரணங்கள் | | 25% | |
| **8 ஓய்வு நலக் கடப்பாடுகள்** | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ள மீதி | | 9,842,625 | 8,035,447 |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | | 1,893,706 | 1,807,178 |
| (-) வருட காலத்தின் போது செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | | (833,784) | - |
| வருட இறுதியில் உள்ள மீதி | | 10,902,547 | 9,842,625 |
| **9 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சேர்த்தல்களுக்கான செலவுகள் | | 6,403,725 | 7,448,565 |
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி | | 694,744 | 654,487 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.நி | | 104,212 | 98,174 |
| செலுத்த வேண்டிய PAYE | | 193,832 | 195,330 |
| PPF க்கு மாற்றப்பட வேண்டிய தொகை | 16 | 28,213,306 | 11,837,206 |
| ஏனையவை | | 683,677 | 207,115 |
| | | 36,293,496 | 20,440,878 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | 31.12.17 இல் ரூபா | 31.12.16 இல் ரூபா |
|---|---|---|
| **10 வருவாய்** | | |
| காப்புறுதிக் கம்பனிகள் மீதான வருடாந்தக் கட்டணங்கள் | 142,174,726 | 125,489,332 |
| பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | 8,608,493 | 5,482,704 |
| | 150,783,219 | 130,972,036 |
| **11 ஏனைய வருமானம்** | | |
| வாகனக் கடன்கள் மீதான வட்டி | 38,235 | 26,129 |
| இடர் கடன்கள் மீதான வட்டி | 160,369 | 146,279 |
| அகற்றல்கள் மீதான இலாபம் | 41,449 | 66,590 |
| சில்லறை வருமானம் | 62,773 | 19,371 |
| | 302,826 | 258,370 |
| **12 ஊழியர் செலவுகள்** | | |
| ஊழியர் சம்பளங்கள் | 40,561,287 | 39,765,213 |
| ஊ.சே.நி 12% | 4,867,354 | 4,775,620 |
| ஊ.ந.நி 3% | 1,216,839 | 1,193,905 |
| தலைவருக்கான கொடுப்பனவு | 1,200,000 | 1,200,000 |
| தலைவருக்கான எரிபொருள் கொடுப்பனவு | 238,680 | 238,680 |
| சபை உறுப்பினர்கள் - சமூகமளித்தமைக்கான கொடுப்பனவுகள் | 630,000 | 750,000 |
| பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 25,000 | 225,037 |
| மேலதிக நேர வேலை | 144,169 | 137,226 |
| பணியாட்களுக்கான மருத்துவச் செலவுகள் | 1,767,019 | 1,662,539 |
| பணியாட்களுக்கான மருத்துவக் காப்புறுதி | 1,080,307 | 920,277 |
| தனிப்பட்ட மற்றும் தீ அபாயக் காப்புறுதி | 254,026 | 367,374 |
| ஊழியர் நலன்புரி | 946,202 | 1,264,417 |
| ஊழியர்களுக்கான உள்நாட்டுப் பயிற்சி மற்றும் சந்தாப்பணம் | 1,297,577 | 2,021,522 |
| சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர் - வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் பிரயாணம் | 4,741,449 | 8,370,750 |
| செயற்பாட்டு அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 2,093,426 | 2,072,650 |
| விளம்பர ஆட்சேர்ப்பு | 536,990 | 137,520 |
| பணிப்பாளர்களின் வசிப்பிடத் தொலைபேசி | 463,199 | 300,613 |
| விடுப்பிற்கான பணம் பெறுதல் | 714,347 | 758,115 |
| வாகன செயற்பாட்டு குத்தகைக் கட்டணங்கள் | 970,032 | - |
| சாரதியின் கொடுப்பனவு | 111,290 | - |
| பணிப்பாளர்களுக்கான வாகனக் கொடுப்பனவு | 3,243,548 | 3,000,000 |
| பணிப்பாளர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு | 944,764 | 893,680 |
| ஊழியர்களுக்கான பணிக்கொடை | 1,893,706 | 1,807,178 |
| | 69,941,211 | 71,862,315 |
| **13 தொழில்முறைக் கட்டணங்கள்** | | |
| ஆலோசனைக் கட்டணம் | 2,000,000 | 2,801,156 |
| | 2,000,000 | 2,801,156 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | 31.12.17 இல் ரூபா | 31.12.16 இல் ரூபா |
|---|---|---|
| **14 செயற்பாட்டுச் செலவுகள்** | | |
| வாடகை | 32,175,621 | 29,495,421 |
| வாகனத் தரிப்பிடக் கட்டணங்கள் | 508,670 | 384,743 |
| தொலைபேசி மற்றும் இணையச் செலவுகள் | 1,605,633 | 1,686,159 |
| மின்சாரம் | 1,324,406 | 1,315,853 |
| அலுவலகப் பாதுகாப்பு | 473,899 | 617,424 |
| அச்சு மற்றும் காகிதாதி | 2,096,822 | 1,328,183 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு | 3,334,383 | 2,922,135 |
| பொழுதுபோக்கு | 32,515 | 54,591 |
| பிரயாணம் - உள்ளூர் | 92,044 | 105,542 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு EDP மற்றும் ஏனையவை | 1,178,671 | 1,216,309 |
| IAIS இன் சர்வதேச உறுப்பான்மை (CHF 14,200) | 2,784,043 | 2,717,637 |
| விளம்பரம் - ஏனையவை | 85,950 | 31,040 |
| கூட்டங்களுக்கான செலவுகள் | 559,353 | 705,435 |
| புதினத்தாள்கள் மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா | 135,959 | 126,414 |
| தபால் மற்றும் குறியர் கட்டணங்கள் | 990,554 | 207,402 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - கணக்காய்வாளர் நாயகம் | 227,100 | 223,500 |
| பெறுமானத் தேய்வு | 3,955,019 | 4,259,214 |
| பொதுச் செலவுகள் | 98,343 | 118,475 |
| சட்டச் செலவுகள் | 12,960 | 8,040 |
| விசாரணைச் செலவுகள் | 4,492 | 6,798 |
| மேற்பார்வைச் செலவுகள் | 2,000 | - |
| வாகன பராமரிப்பு | 422,040 | 494,627 |
| வாகனக் காப்புறுதி | 107,011 | 130,859 |
| வாகன ஓட்ட கட்டணங்கள் | 182,727 | 202,343 |
| பாதுகாப்புப் பெட்டக வாடகை | 3,000 | - |
| தேசிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி | 819,026 | 674,276 |
| | 53,212,244 | 49,032,420 |
| **15 நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| வங்கி கட்டணங்கள் | 114,876 | 150,126 |
| | 114,876 | 150,126 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## 16. மீள் விளக்கம்

புதுப்பித்தல் வருமானமாகக் காட்டப்பட்ட ரூபா 30,000/- பிழை ஒன்றின் காரணமாகக் காட்டப்பட்டமையால் 2014 ஆம் ஆண்டிற்கான வருமானமாக அங்கீகரிக்கப்படவில்லை. இவ்வகையில், முற்பணக் கணக்கு ஆரம்ப மீதியாகப் பெறப்பட்ட தொகை ரூபா 30,000/- ஆல் குறைக்கப்பட்டு, அத்தொகை காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு (PPF) மாற்றப்பட வேண்டியதாக இருந்ததனால், இந்நிதியம் ரூபா 30,000/- ஆல் அதிகரிக்கப்பட்டது. மேலும், PPF இன் ஆரம்ப மீதி ரூபா 30,000/- ஆல் அதிகரிக்கப்பட்டது.

## 17. தேசிய பாதுகாப்பு நம்பிக்கை நிதியத்தில் (NITF) இருந்து பெற வேண்டிய நிலுவைகள்

NITF இலிருந்து 2017 ஆம் ஆண்டுக்காகப் பெற வேண்டிய வீத வரியான ரூபா 10,062,587/55 வீத வரி வருமானத்தில் உள்ளடக்கப்படுகிறது.

மேலே கூறப்பட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இருந்து பெறப்பட்ட சராசரி வீத வரி 10% ஆல் அதிகரிக்கப்பட்டது. IRCSL காலாண்டு அடிப்படையிலான வீத வரி NITF இல் இருந்து பெறவில்லை.

## 18. நிதிய முகாமைத்துவக் கணக்குகள், பேரேட்டு மீதிகள் மற்றும் வங்கி மீதிகள்

இரண்டு நடைமுறைக் கணக்குகளுடன் (ஆணைக்குழு மற்றும் PPF என்பவற்றுக்காக) தொடர்புபட்டு IRCSL இரண்டு நிதிய முகாமைத்துவக் கணக்குகளைச் செயற்படுத்தி வருகிறது. இதற்கமைய நடைமுறைக் கணக்குகளில் ரூபா 1,000,000 ஆக சாதகமான மீதியை விட அதிகமாக இருக்கும் இத்தொகை நிதிய முகாமைத்துவக் கணக்குகளுக்கு தன்னிச்சையாகவே மாற்றப்படும். IRCSL இனால் ஏற்கனவே வழங்கப்பட்ட காசோலைகள் உடனடியாக சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால், பேரேட்டுக் கணக்குகளில் காணப்படும் வங்கி மீதி நிதிய முகாமைத்துவக் கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்ட பின்னர் பாதகமான விளைவைக் காட்டும்.

2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கி மீதிகள் பின்வருமாறு:

ஆணைக்குழு - ரூபா 999,250/-

PPF - ரூபா 558,123/72

## 19. வரி விதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வருமான வரிக்கான ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டன.

## 19.1 அரசாங்க பிணையங்கள் மீதான இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கருத்தளவிலான கடன்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டத்தின் பிரிவு 137 க்கு அமைய அரசாங்க பிணையங்களில் இருந்து பெறப்படும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து பெறப்படும் வட்டி வருமானத்திற்கு ஒரு கருத்தளவிலான வரி கடனுக்கு உரித்துடையது. எனினும், அத்தகைய வட்டி வருமானம் மதிப்பீட்டுக்குரிய ஆண்டு ஆணைக்குழுவின் நியதிச் சட்ட வருமானத்தின் ஒரு பகுதியாக அமையும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது.

இதற்கமைய, அரசாங்க பிணையங்களில் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து ஆணைக்குழுவினால் சம்பாதிக்கப்பட்ட நிகர வருமானம், நிதிக் கூற்றுக்களில் வசூலிக்கப்பட்டவையாகக் காட்டப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கருத்தளவிலான வரி கடனாக அமையும் ரூபா 301,876/18 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் நிகர பெறுமதியில் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

## 20. மூலதன ஒப்பியல் பொறுப்புக்கள்

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு எந்தவிதமான மூலதன ஒப்பியல் பொறுப்புக்களும் இல்லை.

## 21. ஐயப்பாடான பொறுப்புக்கள்

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு எந்தவிதமான மூலதன ஐயப்பாடான பொறுப்புக்களும் இல்லை.

## 22. அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் பின் இடம்பெற்ற சம்பவங்கள்

அறிக்கையிடப்பட்ட திகதியின் பின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்களை அல்லது வெளிப்படுத்துகைகளை ஏற்படுத்தக்கூடிய எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

## 23. வெளிப்படுத்தப்பட வேண்டிய சம்பந்தப்பட்ட திறத்தவர்கள்

திருமதி இந்திரானி சுகததாச (தலைவர்), (திரு.ஏ.ஆர்.தேஷப்பிரிய), திரு. டி.என். ஆர். சிறிவர்தன (உத்தியோகபூர்வ அங்கத்தவர்), திரு. ஜெரமி பொலின் மற்றும் டொக்டர் அலி அஸ்கர் ஷாபிர் குலாம்ஹுஸைன் (பதவி வழி அங்கத்தவர்கள்) ஆகியோர் 2017 ஆம் ஆண்டுடின் முழு காலப்பகுதியிலும் பதவி வகித்தனர்.

திரு. பி.சமரசிறி 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி பதவி வழி அங்கத்தவர் பதவியிலிருந்து விலகினார். அத்துடன், 2017 ஓகஸ்ட் 19 ஆம் திகதி திரு. சி.ஜே.பி. சிறிவர்தன பதவி வழி அங்கத்தவராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்வாண்டின் போது ஆணைக்குழு அங்கத்தவர்களால் வகிக்கப்பட்ட தொடர்புகளை கீழ் வரும் அட்டவணை சித்தரிக்கிறது.

இக்காலப்பகுதியின் போது மேலே கூறப்பட்ட நிறுவனங்களுடன் நடைபெற்ற

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான சந்தை விகிதங்களைத் தவிர ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்படவில்லை.

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு முறை |
|---|---|---|
| திருமதி இந்திரானி சுகததாச | கலுபோவிட்டியன ரீ பெக்ரி லிமிட்டெட்<br>தேசிய அபிவிருத்தி வங்கி | பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| திரு. ஏ.ஆர்.தேஷப்பிரிய | பிரதேச அபிவிருத்தி வங்கி<br>நலன்புரி நன்மைகள் சபை<br>ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி | சபைப் பணிப்பாளர்<br>சபைப் பணிப்பாளர்<br>சபைப் பணிப்பாளர் (2017 ஒக்டோபர் 03 தொடக்கம்) |
| திரு. சி.ஜே.பி. சிறிவர்தன | கொழும்பு டொக்யாட் பிஎல்சி<br>கடன் தகவல் பணியகம்<br>இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | பணிப்பாளர்<br>தலைவர் (2017 ஆகஸ்ட் 19 தொடக்கம்)<br>ஆணையாளர் (2017 செப்டம்பர் 25 தொடக்கம்) |
| திரு. பீ.சமரசிறி | இலங்கையின் வங்கியாளர் நிறுவகம்<br>இலங்கை கடன் தகவல் பணியகம்<br>இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு<br>"அப்பி வெனுவென் அப்பி" நிதியம் | தலைவர்<br>தலைவர்<br>உறுப்பினர்<br>உறுப்பினர்<br>(2017 ஆகஸ்ட் 19 வரை) |
| திரு. டி.என்.ஆர். சிறிவர்தன | இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தரநிலை கண்காணிப்புச் சபை<br>இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு<br>இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் | சபை உறுப்பினர்<br>சபை உறுப்பினர்<br>சபை உறுப்பினர் |
| திரு. ஜெரமி பொலின் | ஒக்டோகன் கன்சல்டன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்<br>என்ட்லெஸ் அவுட்டோர் (பிரைவேட்) லிமிட்டெட் | பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| டொக்டர் அலி அஸ்கர் ஷாபிர் குலாம்ஹுசைன் | அடம் கெப்பிட்டல் பிஎல்சி<br>சிலோன் அன்ட் பொறின் டிரேட்ஸ் பிஎல்சி<br>பிஸ்னஸ் சேம்பர் ஒப் கொமர்ஸ்<br>ஸ்ரீலங்கா இன்ஸ்டியூட் ஒப் டெக்ஸ்டைல் அன்ட் அப்பரல்<br>அடம் எக்ஸ்போ (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் காபன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் கெப்பிட்டல் மைக்ரோ கிரடிட் (பிரைவேட்) லிமிட்டெட்<br>நெற்வேர்க் கொம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் மெட்டல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் கோப்பரேட் செக்டேரியல் (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் எயார் கொன்டிஷனர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் அப்பரல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>அடம் ஒட்டோமொபைல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>வெல்வின் (பிரைவேட்) லிமிட்டெட்<br>ஜோர்ஜியோ மொன்றி (பிரைவேட்) லிமிட்டெட்<br>ஸ்பைஸி ஒப் லை.்.ப் (பிரைவேட்) லிமிட்டெட்<br>சிலோன் அன்ட் பொறின் சேர்கிடெக் (பிரைவேட்) லிமிட்டெட்<br>கொழும்பு அப்போதசெரிஸ் (பிரைவேட்) லிமிட்டெட்<br>கொழும்பு பிரைட் அன்ட் டிரான்ஸ்போட் லிமிட்டெட்<br>டொட்வெல் அன்ட் கம்பனி லிமிட்டெட்<br>ஹமில்டன் றிசோட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர் |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ටීආර්ටී/සී/අයිආර්සීඑස්එල්/2017/එෆ්එස්/16
මබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2018 අගෝස්තු 31 දින

தலைவர் அவர்கள்,

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு.

## இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2017 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் திருத்த அதிகாரச்சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப் புரைகளும் இவ் வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2018 யூலை 18 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 இலங்கை காப்புறுதிச் சபை (IBSL) எனும் பெயரை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என மாற்றஞ் செய்தல்

இலங்கை காப்புறுதிச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளும் இலங்கை பிணை முறி மற்றும் செலாவணி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் கட்டாயமாக நிரல்படுத்துவதற்கான தேவையிலிருந்து விலக்கைப் பெறும் நோக்குடன், இலங்கை காப்புறுதிச் சபை, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவாக 2017 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் (திருத்த) அதிகாரச் சட்டத்தின் மூலம் மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

### 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப் பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7

2006, 2008, 2012 ஆம் ஆண்டுகளின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,604,348 கொண்டு செல்லும் பெறுமதியுடைய மோட்டார் வாகனங்கள் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 10,000,000 பெறுமதியில் மீள் மதிப்பிடப்பட்டிருந்தன. நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மீளப் பெறுமதியிடப்படும் சொத்தொன்றினது நியாயபூர்வமான பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதியை விட போதுமான அளவு மாற்றம் அடையும்போது மீண் டும் மீளப் பெறுமதியிடப்பட வேண்டுமாயினும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் மோட்டார் வாகனங்களைத் தவிர ரூபா 31,724,786 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளானபோதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, மதிப் பிடப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காப்புறுதி நிறுவனமாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கும்போது அதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கான குறிப்பிட்ட கால எல்லையை நிர்ணயித்திருக்காததுடன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம், காப்புறுதி நிறுவனமாகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் அவ்விண்ணப்பத்தை விலக்கிக் கொள்ளுமாயின் குறித்த தொகையில் 50 சதவீதம் மாத்திரம் திருப்பிச் செலுத்துவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது 3 சந்தர்ப்பங்களில் அவ்வாறல்லாது செலவிடப்பட்ட மொத்த தொகையாகிய ரூபா 500,000 ஒரு

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

சந்தர்ப்பத்தில் திருப்பிச் செலுத்தப்பட்டும், முழுத்தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் செலுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டும் மொத்தத் தொகையும் வருமானமாகக் கணக்கிலிடப்பட்ட ஒரு சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நூலகப் புத்தகங்கள் சம்பந்தமாக ஆணைக்குழுவால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையானது சகல புத்தகக் கிரயத்தையும் கொள்வனவு செய்யப்படும் ஆண்டின் செலவினமாகக் கணக்கிலிடுவதேயாகும். எவ்வாறாயினும், ஆணைக்குழு கொள்வனவு செய்திருந்த ரூபா 100,000 கிரயத்திற்கு மேற்பட்ட புத்தகங்களும் மேற்படி செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்ததாக நூலக புத் தகப் பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

## 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 61(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சகல காப்புறுதியாளர்களும் தமது காப்புறுதிக் கம்பனிகளது பதிவு செய்யப்பட்ட தவணைப் பணத்தின் மீதான கட்டணமொன்றை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டும். அதற்கமைய, 2017 யூன் 28 ஆந் திகதி நடவடிக்கைகளை இடை நிறுத்தியிருந்த காப்புறுதிக் கம்பனி ஒன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,460,687 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

## 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டினது செஸ் வருமானமாக ரூபா 10,062,587 பெற வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்டபோதும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டிய செஸ் வருமானம் ரூபா 16,107,274 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 6,044,687 வேறுபாடு நிலவியது.

## 2.3 பெற வேண்டிய கணக்குகள்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஆ) பிரிவின் பிரகாரம், 2015 ஆண்டின்போது நெடுங்கால (ஆயுட் காப்புறுதி) மற்றும் சாதாரண காப்புறுதி என காப்புறுதி நிறுவனங்களை வெவ்வேறுபடுத்துவதற்காக விண்ணப்பித்திருந்த காப்புறுதிக் கம்பனி ஒன்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 500,000 மற்றும் அதனோடு தொடர்புடையதாகப் பெற வேண்டிய வரியாகிய ரூபா 71,429 என்பன கணக்காய்வுத் தினமளவிலும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வெவ்வேறுபடுத்தப்படாமையால் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஆ) பிரிவு | நெடுங்காலக் காப்புறுதி (ஆயுட் காப்புறுதி) தொடர்பான சொத்துக்கள், வேறு ஏதாவது வகைக் காப்புறுதி தொடர்பான சொத்துக்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருக்க வேண்டுமாயினும் 12 பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளில் 02 காப்புறுதிக் கம்பனிகள் இதுவரை அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் நிதிப்பிரமாணம் 371 | பெறப்படும் செயல் நிமித்தக் கட்டு நிதி அப்பணி முடிவுற்றவுடனேயே தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், பெறப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 755,996 முற்பணம் கணக்காய்வுத் தினத்திலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | நிர்வாகக் கைநூல் ஒன்றைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அதனை திறைசேரியின் செயலாளருக்குச் சமர்ப்பித்து அவரது இணக்கத்தைப் பெற வேண்டுமாயினும், கைநூலுக்கான திறைசேரிச் செயலாளரின் இணக்கம் கணக்காய்வுத் தினத்திலேனும் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிப் பெறுபேறுகள்

ஆணைக்குழுவின் ஆரம்பந்தொட்டு நிதிக் கூற்றுக்களில் வரிக்குப் பின்னரான மிகையோ அல்லது பற்றாக்குறையோ காண்பிக்கப்படுவதில்லை. ஆணைக்குழுவானது வருமானத்திலும் கூடிய செலவினத்தை காப்புறுதியாளர்களது பாதுகாப்பு

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

நிதியத்தில் சீராக்கல் செய்வதன் மூலம் மேற்குறிப்பிட்ட மிகை அல்லது பற்றாக்குறையை சூனியமாக்கியிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், ஆணைக்குழுவினது வருமானமானது முன்னைய ஆண் டுடன் ஒப்பிடுகையில் ரூபா 20,622,656 அதிகரித்திருந்தது. ஆணைக்குழுவின் மொத்தச் செலவினமும் ரூபா 20,457,782, அதாவது, 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. காப்புறுதி உரித்துடையவர்களது பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்ட தொகை ரூபா 19,035,468 அதிகரித்தும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,179,824 அதிகரித்தும் இருந்ததே மேற்படி செலவின அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

ஆணைக்குழுவினது 2013 தொடக்கம் 2017 வரையிலான 05 ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செயற்பாட்டு மிகை இல்லாதபோதும், கடந்த 05 ஆண்டுகளின்போதான ஒட்டு மொத்த பங்களிப்பு வேறுபாடுகளைப் பரிசீலிக்கையில் 2013, 2014, 2015, 2016 ஆம் ஆண்களின் போதான பங்களிப்பு படிப்படியாக அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின்போதிலும் பங்களிப்பு அதிகரித்தபோதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவ்வதிகரிப்பு 19 சதவீதம் மாத்திரமே ஆகவிருந்தது. ஆண்டின்போது காப்புறுதி உரித்தாளர்களது பாதுகாப்பு நிதியத்திற்கு நிதி மாற்றம் மேற்கொள்ளப்பட்டமையே இதற்கான பிரதான காரணமாக அமைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவின் விசாரணை, கண்காணிப்பு, சட்ட மற்றும் விற்பனைச் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித் தொடர்புடைய பிரிவுகளது செயல் முன்னேற்றம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விசாரணைப் பிரிவு

(i) காப்புறுதியாளர்களாலும் காப்புறுதித் தரகர்களாலும் பாவனையாளர்களது புகார்களைத் தீர்த்து வைக்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் சம்பந்தமாக 2016 ஒக்டோபர் 01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கடிதத்துக்கமைய 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் அரையாண்டுதோறும் புகார்களுக்கென அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 30 நாட்களுக்குள் காப்புறுதிக் கம்பனி ஆணைக்குழுவிற்குத் தகவல்களை அனுப்பி வைக்க வேண்டுமாயினும், 27 காப்புறுதி நிறுவனங்களில் 09 கணக்காய்வுத் தினம் வரை அவ்வாறாகத் தகவல்களை அனுப்பி வைக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 348 புகார்களில் 57 புகார்கள், அதாவது, ஏறக்குறைய 16 சதவீதம் கணக்காய்வுத் தினமான 2018 யூலை 24 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஆ) கண்காணிப்புப் பிரிவு

(i) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் அதிகாரச் சட்டத்தின் 38(3)(அ) பிரிவின் பிரகாரம் அறிவுறுத்தப்பட்டுள்ள ஏதாவதொரு மாதிரிப் படிவத்தினது தவணை அறிக்கையை அவ்வவ்போது சமர்ப்பிக்குமாறு அக்காப்புறுதியாளரிடமிருந்து கோருவதற்கு இயலும். மாதம் முடிவடைந்து 21 நாட்களுக்குள் அவ்வாறாகக் கோரப்பட்ட அவர்களது மாதாந்த சட்டபூர்வ அறிக்கைகள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அவ்வாறாக அறிக்கைகளைக் கோரியுள்ள 03 காப்புறுதிக் கம்பனிகள் குறித்த காலப்பகுதியின் அவ்வறிக்கைகளை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்காதிருந்தபோதும், ஆணைக்குழு அது சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்காக காப்புறுதிக் கைத்தொழில் கைநூல் 2017 ஆம் ஆண்டின் மூன்றாம், நான்காம் காலாண்டுகளுக்குள் பிரசுரிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 04 மாதத்திற்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2018 ஏப்ரல் மாதத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(iii) 2017 ஒக்டோபர் 31 முதல் வாழ்க்கைக் கணிப்புப் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவியமையால் 2017 ஆம் ஆண்டின் மூன்றாம், நான்காம் காலாண்டுகள் தொடக்கம் இற்றைவரை காப்புறுதி நிறுவனங்களின் எண்ணிக்கை அடிப்படை மூலதனக் கட்டமைப்பின் பிரகாரம் பொறுப்புகளை மீளாய்வு செய்யும் பணி நடைபெறவில்லை.

(iv) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 48(1) ஆம் பிரிவின் பிரகாரம், காப்புறுதியாளர்களால் சமர்ப்பிக்கப்படும் வாழ்க்கைக் கணிப்புத் தகவல்கள் வாழ்க்கைக் கணிப்பாளரால் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட வேண்டுமாயினும், வாழ்க்கைக் கணிப்புப் பதவி வெற்றிடங்கள் காரணமாக காப்புறுதியாளர்கள் வழங்கும் வாழ்க்கைக் கணிப்பு அறிக்கைகள் 2016 முதல் இற்றை வரை மீளாய்வு செய்யப்படாதிருந்தன.

(v) இலங்கை காப்புறுதி ஆணைக்குழுவின் கீழ் 60 காப்புறுதித் தரகர் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக்கம்பனிகளுள் 8 கம்பனிகள் மாத்திரம் 2017 ஆம் ஆண்டின்போது களப் பரிசீலனைக் கண்காணிப்புகளை

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

மேற்கொண்டிருந்தன. அது மொத்தத் தரகர் கம்பனிகளது எண்ணிக்கையில் ஏறக்குறைய 13 சதவீதமாகும்.

(இ) சட்டப் பிரிவு

(i) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 114 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தரகர்களைப் பதிவு செய்தல் 2012 ஏப்ரல் 27 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்தடையானது 2016 மே 02 ஆந் திகதி முதல் அகற்றப்பட்டு புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகள் பதிவு செய்யப்படுதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தரகர்களைப் பதிவு செய்யும் குறிப்பிட்ட விதிமுறைகளையும், நடைமுறைகளையும் அறிமுகஞ் செய்திராததால் பதிவு நடவடிக்கைகளில் நீண்ட தாமதம் நிலவுவது அவதானிக்கப்பட்டது.

(ii) ஒழுங்குமுறைப்படுத்தலை / மதியுரைச் செயற்பாடுகளைத் தொடக்கி வைப்பதற்கு சகல காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகு முற்பணமும், பிரதான உத்தியோகத்தராக (Principal Officer) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரையோ அல்லது நிறைவேற்று முகாமையாளரையோ அல்லது அப்பணிக்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தரையோ நியமதித்து 2017 மே 12 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமென ஆணைக்குழுவின் 2016 மார்ச் 13 ஆந் திகதிய பணிப்புரை (Direction) 09 இன் மூலம் சகல காப்புறுதி மற்றும் 60 காப்புறுதித் தரகு நிறுவனங்களுக்கும் அறவிக்கப்பட்டிருந்தது. அக்கம்பனிகளது வேண்டுகோளின் பேரில் இக்காலக்கெடு 2017 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தபோதும், 2018 யூலை 24 ஆந் திகதி கணக்காய்வு மேற்கொள்ளப்படுகையிலும் 02 காப்புறுதி நிறுவனங்கள் பிரதான உத்தியோகத்தர்களை நியமித்திருக்கவில்லை.

(iii) செலிங்கோ தகாபூல் லிமிட்டட்டின் வியாபார நடவடிக்கைகளுக்கு ஆணைக்குழு 2009 ஆம் ஆண்டில் தடை விதித்திருந்ததுடன், SC(FR) 191/09 ஆம் இலக்க அடிப்படை உரிமை வழக்கின் மூலம் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பிரகாரம் அக்கம்பனிக்குச் சமர்ப்பித்த மோசடியற்ற காப்புறுதி உரித்தை படிப்படியாக நீக்கிக் கொள்வதற்கு அக்கம்பனியினது சொத்துக்களை விடுவிப்பதற்கென அப்போதைய சபை கம்பனியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. எவ்வாறாயினும், 142 மோசடியற்ற உரித்தில் 132 இன் உரித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன், 10 வழக்குக் கோவைகளது தற்போதைய நிலைமை கணக்காய்வுத் தினமான 2018 யூலை 24 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

(ஈ) விற்பனைச் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித் தொடர்பு பிரிவு

(i) பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ், திவிநெகும, அபிவிருத்தி, கமத்தொழில் மற்றும் கள உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்ட மாவட்டச் செயலகங்களில் 10 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டபோதும், சாதாரண பொதுமக்களை இலக்காகக் கொண்ட அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே, நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 50 சதவீதமானவையும் மத்திய மாகாணத்தில் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ii) மாவட்டச் செயலகங்களில் நடாத்தப்பட்ட அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போதுமானதாகவும் வெற்றிகரமாகவும் நடாத்தப்பட்டது தொடர்பாக கேள்விக்கொத்து மூலம் பங்குபற்றியவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டிருந்தன. அதற்கமைய, கேள்விக் கொத்துக்களை வழங்குவதன் மூலம் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களைத் திறம்பட நடாத்துவதற்கு அவை பயன்படும் எனக் குறிப்பிடப்பட்டபோதும், பெறப்பட்ட பதில்கள் மீளாய்வு செய்யப்பட்டோ அல்லது அப்பதில்களின் வாயிலாக நிகழ்ச்சித்திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு இருந்தமையையோ கணக்காய்வில் அவதானிக்க முடியவில்லை.

(iii) ஆண்டின்போது பாடசாலைச் சிறுவர்களுக்கு 02 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

(iv) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கைத்தொழிலின் செயல் முன்னேற்றத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சிட்டு ஊடகங்களின் மூலம் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஆங்கில மொழியில் மாத்திரமே அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(v) 2017 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவின் வெப் இணையதளத்தினூடாக எப்போதும் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில்களைத் தயாரித்து வெப் இணையதளத்தில் சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 மே 18 ஆந் திகதியளவிலும் அவ்வாறு நடைபெறவில்லை.

(vi) வெப் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்ட கைநூல்களாக Brochures (சிறு கைநூல் தொகுப்பு) 08 உடன் 03 Handouts (கைப்பிரசுரம்) பிரசுரிக்கப்பட்டிருந்தபோதும், அவை நாளதுவரையாக்கப்படாது புதிய கைப்பிரசுரங்கள் எதுவுமே தயாரிக்கப்பட்டு பிரசரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) சமூக ஊடகங்களினூடாக காப்புறுதி தொடர்பாக அறிவூட்டுவதற்காக இலங்கை காப்புறுதிச் சபையாக

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

youtube இல் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கும் 2016 ஆம் ஆண்டில், அறிவூட்டும் கேட்போர் மற்றும் கட்புலனாகத் தொடர்புபடுத்துவதற்கும் ஆணைக்குழுவின் வெப் இணையதளத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், 2016 செப்டெம்பரின் பின்னர் வெப் இணையதளம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக தொழில்நுட்ப உதவியை வழங்கி, இலங்கை காப்புறுதி உரித்துறுதி தொடர்பான அறிவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலாக்குவதற்கு எண்ணியிருந்ததுடன், அதன் இடைவெளிப் பகுப்பாய்வு (Gap Analysis) மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் இனங்கண்டு கொள்ளப்படவில்லை. அதற்கமைய, கல்வி உபாய மார்க்கம் மற்றும் செயலில் ஈடுபடுத்துவதற்கான திட்டம் 2017 ஒக்டோபரில் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த போதும் அதற்கென எண்ணியுள்ள நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமாகியுள்ளமை 2018 யூலை 24 ஆந் திகதியளவிலும் அவதானிக்கப்படவில்லை.

(உ) நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு

பதவியணியின் ஆற்றலை சக்திமிக்கதாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டத் தரவுகளின் பிரகாரம் உள்ளூர் பயிற்சிகளுக்கு ரூபா 3,000,000 மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு ரூபா 10,000,000 என மன்றம் நிதியேற்பாட்டைச் செய்திருந்தபோதும், உள்ளவாறு செலவாகியது குறைந்த அளவிலான முறையே ரூபா 1,297,577 மற்றும் ரூபா 4,741,449 என்பனவே ஆகும்.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 7,324,758 தொடர்ந்து செல்லும் பெறுமதியுடைய சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றுள் ஆண்டின் இறுதியிலான பொருட் கணிப்பின்போது இனங்காணப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத அல்லது பாதிப்படைந்தனவாக வகைப்படுத்தப்பட்ட 145 பொருட்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், கணக்காய்வில் இனங்காணப்பட முடியாது போன பயன்படுத்த முடியாத அப்பொருட்களது மொத்தக் கிரயம் ரூபா 2,331,989 ஆகும். மேலும், பயன்படுத்த முடியாது பழுதடைந்தனவாக இனங்காணப்பட்ட கையிருப்பைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 103(1) ஆம் பிரிவின் பிரகாரம் நட்டத்திற்குள்ளான காப்புறுதிக் கம்பனிகளின் உரிமைகளை தீர்த்து வைக்கும் நோக்கில் காப்புறுதி உரித்துறுதிகளை வைத்திருப்பவர்களது பாதுகாப்பு நிதியம் எனும் பெயரில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதியத்தில் செஸ் வரியின் மூலம் சேர்ந்து நிற்கும் தொகையை செலவு வைக்கப்படவும் வேண்டும். இந் நிதியம் நெடுங்கால நிதியமாவதுடன் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதன் மீதி ரூபா 4,109,959,205 ஆகவுமிருந்தது. நிதியத்தின் ஆரம்பித்திலிருந்து நிதியத்தின் பணத்தைச் செலவிடுவதற்காக சந்தர்ப்பம் ஏற்பட்டிராததால் இதனைக் கூடிய வட்டியை பெறக் கூடிய முதலீடுகளில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பிருந்தும் திரவவியல் நோக்கை அடிப்படையாகக் கொண்டு அதனைக் குறைந்த நாள் முதலீடுகளில் முதலீடு செய்தமையால் நிதியம் பெறக்கூடியதாகவிருந்த கூடிய வட்டி இழப்பிற்குள்ளானமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வருடாந்தக் கட்டணத்தை பெறுவதில் தாமதம் நிலவியமையால் நாளாந்தச் செலவினத்தை ஈடு செய்வதற்கு நிதியத்திலுள்ள பணம் பயன்படுத்தப்பட வேண்டியேற்பட்டதால் குறுகிய கால முதலீடுகளில் ஈடுபட்டதாக ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிவித்திருந்தது.

(இ) 2015 ஒக்டோபர் 05 ஆந் திகதிய 36 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், தரகர் நிறுவனம் ஒன்றினூடாக வெளிநாட்டு மருத்துவக் காப்புறுதி ஒன்றை நடாத்துவதில் எவரேனும் ஈடுபடலாம் என அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அத் தரகர் நிறுவனமானது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இதன் கீழ் 02 காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆரம்பத்தில் ஓராண்டிற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதும், அவ்வனுமதி எழுத்து மூலம் நீடிக்கப்பட்டமை புலனாகாததுடன், வெப் இணையதளத்தில் மாத்திரமே கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுமிருந்தது. வெப் இணையதளத்தில் காணப்பட்ட கால நீடிப்பு முறையான அனுமதியின்றி நடைபெற்றிருந்தமையால் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுவதாக ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிவித்திருந்தது.

(ஈ) 2009 டிசெம்பர் முதல் அமுலுக்கு வரும் பொருட்டு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு ஏப்ரல், டிசெம்பர் மாத விழா முற்பணமாக ரூபா 50,000 வீதம், கொடுப்பனவை மேற்கொண்டிருந்ததுடன், இதற்காக விசேட அங்கீகாரத்தை ஆணைக்குழு பெற்றிருக்கவில்லை.

(உ) நூலகப் புத்தகங்களை நேரடியாகப் பரிசீலனை செய்தபோது 11 புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படுவதற்காக வழங்கப்பட்டு 01 முதல் 07 ஆண்டுகள் கழிந்திருந்தபோதும் அவை திருப்பி அனுப்பப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே ஏறக்குறைய ரூபா 100,000 பெறுமதியான 02 புத்தகங்கள் நூலகத்தில் நேரடிப் பரிசோதனைக்குக் கிடைக்காதிருந்தன.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவனத்தின் தலைமை அலுவலகப் பாவனைக்காக மாதாந்தம் ரூபா 330,096 கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் 2005 ஏப்ரல் 1 தொடக்கம் கட்டிடம் ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. குறித்த வாடகை உடன்படிக்கை 2008 மார்ச் 31 ஆந் திகதி காலாவதியாகியிருந்தது. இதன் காரணமாக, வாடகை அமுலாக்காது வேறொரு கட்டிடத்தை தெரிவு செய்ய வேண்டியுள்ளதாக 2 சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபை கவனத்திற்குக் கொண்டு வந்தபோதும், அது அறிவிக்கப்படாது 2008 ஏப்ரல் 1 தொடக்கம் 2010 யூலை 31 வரை மாதாந்தம் ரூபா 1,472,208 கொடுப்பனவு செய்யப்படுவதற்கான உடன்படிக்கை கட்டிட உரிமையாளருடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்கள் நிலவிய 04 பதவிகள் கணக்காய்வுத் தினம் வரை வெற்றிடமாகவே இருந்தன.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவினது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 மார்ச் 19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிர்வாகக் கைநூல் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக 2017 மார்ச் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதுவரை அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்காதபோதும், நிர்வாகக் கைநூலின் பிரகாரம் ஆட்சேர்ப்பு, சம்பளம், படிகளை மீ ள நிரப்புதல், முற்பணக் கொடுப்பனவு அடங்கலான நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொண்டவாறிருந்தது.

(ஈ) ஆணைக்குழுவின் ஆரம்ப சம்பள அளவுத் திட்டத் தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2005 ஆம் ஆண்டில் அங்கீகரித்திருந்தது. அங்கீகரிக்கப்பட்ட அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கும் தற்போது வழங்கப்படும் உள்ளவாறான சம்பள அளவுத் திட்டத்துக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவும் வரிசை அமைச்சும் சம்பள அதிகரிப்பை பரிந்துரை செய்ய முடியாது என அறிவித்திருந்தபோதும், ஆணைக்குழுவில் 2012 ஆம் ஆண்டின்போது திறைசேரியின் பிரநிதியாகவிருந்தவரால் வெளியிடப்பட்ட PED/360/12/2(ii) மற்றும் 2012 யூலை 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆரம்பச் சம்பளத்தில் 25 சதவீதம் அதி கூடிய வரம்புடன் சம்பளத்தை அதிகரிப்பதில் பாதிப்பில்லை எனும் குறிப்புக்கமைய இவ்வாறு சம்பள அளவுத் திட்டம் அதிகரிப்புக்குள்ளாகி இருந்தமை இதன்போது புலனாகியது.

(உ) காப்புறுதிக் கம்பனிகளில் நட்டத்திற்குப்படாத சட்ட வரையறைக்குப் பதிலாக அறிமுகஞ் செய்யப்பட்ட அபாயத்தை எதிர்நோக்கும் அடிப்படையிலமைந்த கண்காணிப்பு விதிமுறையை ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்தமையால் ஆயுட்கால கூறு ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆயுட்காலக் கணிப்புப் பதவி, உதவி ஆயுட் காலக்கணிப்புப் பதவி ஆகிய பதவிகளுக்கும் 02 சிரேஷ்ட நிறைவேற்றுத்தர / நிறைவேற்றுத்தர பதவிகளுக்கும் 2016 யூன் 09 மற்றும் டிசெம்பர் 07 ஆகிய தினங்களிலும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் ஆயுட் காலக் கணிப்புப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், 2017 ஒக்டோபர் 31 முதல் அப்பதவி வெற்றிடமாக இருந்தது. அவ்வாறே, உதவி ஆயுட் காலக் கணிப்புப் பதவியும் 2016 முதல் 2018 யூலை 24 வரை வெற்றிடமாகவே இருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

## 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான நோக்கத்தை அடைதல்

நிலைத்து நிறகவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான “நிகழ்ச்சி நிரலின்” பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதுடன், மீளாய்வாண்டில் தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளை எவ்வாறு அமுலாக்கலாம் என்பதை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ.்.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 01 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 6.2 பொருட் கொள்வனவும் ஒப்பந்த நடவடிக்கைகளும்

### 6.2.1 தாமதமாகிய செயற்திட்டங்கள்

கணனி முறைமைச் செயற்பாட்டு அறையில் குளிரூட்டியைப் பொருத்துவதற்கு பொறியியல் பணிகளுக்கான தேசிய பொறியியல் மதியுரைப் பணியகத்துடன் ரூபா 1,758,654 ஒப்பந்தப் பெறுமதியில் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) ஆணைக்குழு 2016 மே 11 ஆந் திகதி உடன்படிக்கைகளில் ஈடுபட்டதுடன், 2016 யூன் 07 ஆந் திகதி ரூபா 50,000 முற்பணமாக வழங்கப்பட்டுமிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், 2018 பெப்ரவரியில் நிறைவடைய வேண்டிய இப்பணி கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 06 ஆந் திகதியளவிலும் நிறைவடையாதிருந்தது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவின் பாதீடு செய்யப்பட்ட வருமானமும் செலவினமும் உள்ளவாறான பெறுமதிகளும் ஒப்பிடப்படுகையில் 100 முதல் 246 சதவீதம் வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | ஆணைக்குழுவின் செலவினத்தை ஈடுசெய்வதற்காக காப்புறுதி உரித்துறுதியாளர்களது பாதுகாப்பு நிதியத்தின் வருடாந்த வட்டியில் 20 சதவீத வரம்பிற்கு உட்பட்ட பணத்தைப் பெறுதல். |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | (i) ஒவ்வொரு பொருளையும் இலகுவாக வெவ்வேறுபடுத்தி இனங்காண்பதற்காக கையிருப்பை பொதி செய்தல்.<br>(ii) எழுதுகருவி வகைப் பொருட்களது பதிவேட்டில் கையிருப்பு மட்டம் குறிப்பிடப்படாமை.<br>(iii) மெதுவாக நகரும் எழுதுகருவி வகைப் பொருட்கள் உள்ளமை<br>(iv) எழுதுகருவி வகைப் பொருட் கையிருப்பை நேரடியாகச் சரி, பிழை பார்த்தபோது கையிருப்புப் பதிவேட்டுடன் வேறுபாடுகள் நிலவியமை |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | (i) கட்டுநிதியைத் தீர்த்து வைப்பதில் தாமதம்<br>(ii) முறைப்படி மதிப்பீடு செய்யாது நிதியை பெறுதல்<br>(iii) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |
| (ஈ) வருமானக் கட்டுப்பாடு | மீளாய்வாண்டிற்கான வருமானத்தை முறையாக இனங்காணாமை |
| (உ) சொத்து முகாமைத்துவம | இனங்காண்பதற்கான சுட்டிலக்கம் சரியாக இல்லாமை |

எச்.எம்.காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் நாயகம்

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| **2.2** | நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் | |
| **2.2.1** | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் | |
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 7<br><br>2006, 2008, 2012 ஆம் ஆண்டுகளின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,604,348 கொண்டு செல்லும் பெறுமதியுடைய மோட்டார் வாகனங்கள் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 10,000,000 பெறுமதியில் மீள் மதிப்பிடப்பட்டிருந்தன. நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மீளப் பெறுமதியிடப்படும் சொத்தொன்றினது நியாயபூர்வமான பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதியை விட போதுமான அளவு மாற்றம் அடையும்போது மீண் டும் மீளப் பெறுமதியிடப்பட வேண்டுமாயினும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் மீள மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் அண்டு முடிவடைந்த பின் மீண்டும் நிதி மதிப்பீடு செய்ய எண்ணியிருக்கிறோம். |
| (ஆ) | நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் மோட்டார் வாகனங்களைத் தவிர ரூபா 31,724,786 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளானபோதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, மதிப் பிடப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்களின் மீள் மதிப்பீடு சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்த பின் கணக்குகளை சீராக்க எண்ணியுள்ளோம். |
| **2.2.2** | கணக்கீட்டுக் கொள்கைகள்<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (அ) | காப்புறுதி நிறுவனமாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கும்போது அதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கான குறிப்பிட்ட கால எல்லையை நிர்ணயித்திருக்காததுடன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம், காப்புறுதி நிறுவனமாகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் அவ்விண்ணப்பத்தை விலக்கிக் கொள்ளுமாயின் குறித்த தொகையில் 50 சதவீதம் மாத்திரம் திருப்பிச் செலுத்துவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது 3 சந்தர்ப்பங்களில் அவ்வாறல்லாது செலவிடப்பட்ட மொத்த தொகையாகிய ரூபா 500,000 ஒரு சந்தர்ப்பத்தில் திருப்பிச் செலுத்தப்பட்டும், முழுத்தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் செலுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டும் மொத்தத் தொகையும் வருமானமாகக் கணக்கிலிடப்பட்ட ஒரு சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டன. | விண்ணப்பத்தில் இதுவரை குறித்துரைக்கப்பட்ட தகுதி காண்களுக்களுக்குள் இங்கு கூறப்படட சூழ்நிலைகள் வரமாட்டாது. விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள அடிப்படைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாறுபடும் சூழ்நிலைகளுக்கு நடைமுறை ரீதியான அணுகுமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தச் சூழ்நிலை சம்பந்தமாக ஒரு தெளிவான கொள்கை இருக்கும்.<br><br>கம்பனி ஒரு புதிய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டியிருப்பதால், 50% ஐ வைத்துக்கொள்ளுதல் நியாயயமில்லை. ஆகவே, செலுத்தப்பட வேண்டிய வரி தொகை செலுத்தப்பட்டு மீதி மீண்டும் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>ஆணைக்குழுவினால் பதிவு வழங்கப்படும் வரை, கம்பனியிடம் இருந்து பெறப்பட்ட பணம், முற்பணமாகப் பெறப்பட்ட தொகையாக வைக்கப்பட்டுள்ளது. எனவே, கைவரப் பெறுதல் கோட்பாட்டின் அடிப்படையில் முற்பணமாகப் பெறப்பட்ட பணம் வருமானம் ஒன்றாக இனங்காணப்பட முடியாது.<br><br>கம்பனி 2014 ஆம் ஆண்டு விண்ணப்பத்தை அனுப்பி இருந்தது. (குறிக்கப்பட்ட தொகை 2014 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் தேவையான சட் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கு நாம் பல சந்தர்ப்பங்களை வழங்கி இருந்தோம். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறியதன் காரணமாக, மொத்தத் தொகை வருமானமாக இனங்காணப்படடுள்ளது. இந்த விடயம் 2017 இல் நடைபெற்றதால், இதனை 2017 ஆம் ஆண்டுக்கான ஒரு வருமானமாக கருத்திற் கொள்வது பொருத்தமாக இருக்கும். |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (ஆ) | நூலகப் புத்தகங்கள் சம்பந்தமாக ஆணைக்குழுவால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையானது சகல புத்தகக் கிரயத்தையும் கொள்வனவு செய்யப்படும் ஆண்டின் செலவினமாகக் கணக்கிலிடுவதேயாகும். எவ்வாறாயினும், ஆணைக்குழு கொள்வனவு செய்திருந்த ரூபா 100,000 கிரயத்திற்கு மேற்பட்ட புத்தகங்களும் மேற்படி செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்ததாக நூலக புத் தகப் பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | SLPSAF 7 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதிகாணுதலுக்கு அமைவாக ஆணைக்குழுவுக்கு உரித்தான புத்தகங்கள், ஒரு சொத்தாகக் கருதப்பட முடியாததன் காரணமாக, அவ்வாறு சொத்து ஒன்றாகக் கொள்வது பொருத்தமற்றது. இதன் காரணமாக, இவ்வருட காலப்பகுதியில் இது, செலவு ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், புத்தகங்களில் பெரும்பான்மையானவை சிறிய பெறுமதிகளைக் கொண்டவை. எனவே, இந்த விடயம் தொடர்பில் தெளிவான கொள்கை ஒன்று பின்பற்றப்பட்டுள்ளது. |
| **2.2.3** | கணக்கீட்டுக் குறைபாடுகள் | |
| | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 61(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சகல காப்புறுதியாளர்களும் தமது காப்புறுதிக் கம்பனிகளது பதிவு செய்யப்பட்ட தவணைப் பணத்தின் மீதான கட்டணமொன்றை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டும். அதற்கமைய, 2017 யூன் 28 ஆந் திகதி நடவடிக்கைகளை இடை நிறுத்தியிருந்த காப்புறுதிக் கம்பனி ஒன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,460,687 கணக்கிலிடப் பட்டிருக்கவில்லை. | காப்புறுதிக் கம்பனியினால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. |
| **2.2.4** | விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் | |
| | ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டினது செஸ் வருமானமாக ரூபா 10,062,587 பெற வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்டபோதும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டிய செஸ் வருமானம் ரூபா 16,107,274 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 6,044,687 வேறுபாடு நிலவியது. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| **2.3** | பெற வேண்டிய கணக்குகள் | |
| | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஆ) பிரிவின் பிரகாரம், 2015 ஆண்டின்போது நெடுங்கால (ஆயுட் காப்புறுதி) மற்றும் சாதாரண காப்புறுதி என காப்புறுதி நிறுவனங்களை வெவ்வேறுபடுத்துவதற்காக விண்ணப்பித்திருந்த காப்புறுதிக் கம்பனி ஒன்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 500,000 மற்றும் அதனோடு தொடர்புடையதாகப் பெற வேண்டிய வரியாகிய ரூபா 71,429 என்பன கணக்காய்வுத் தினமளவிலும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வெவ்வேறுபடுத்தப் படாமையால் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. | கம்பனி இதுவரையிலும் பிரிக்கப்படுவதற்கான திட்டத்தை வழங்காதபடியால், வரி தொடர்பான பெறுமதி தொடர்பில் தெளிவுபடுத்தல் ஒன்றைப் பெற முடியாது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட் வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட் பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| **2.4** | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை<br>பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன. | |
| (அ) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கா-ப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஆ) பிரிவு நெடுங்காலக் காப்புறுதி (ஆயுட் காப்பு-றுதி) தொடர்பான சொத்துக்கள், வேறு ஏதாவது வகைக் காப்புறுதி தொடர்பான சொத்துக்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருக்க வேண்டுமாயினும் 12 பதிவு செய்யப்பட் காப்புறுதிக் கம்பனிகளில் 02 காப்புறுதிக் கம்பனிகள் இதுவரை அவ்வாறு நடவடி-க்கைகளை மேற்கொள்ளவில்லை. | 15 காப்புறுதிக் கம்பனிகளில் மூன்று கம்பனிகள் தமது காப்புறுதி வியாபாரத்தைப் பாகுபடுத்தவிலலை. இவற்றுள் இரண்டு கம்பனிகள் பாகுபாட்டுக்குத் தேவையான மூலதனத்தை வழங்கவில்லை. அத்துடன், மற்றைய கம்பனி பாகுபாட்டிற்கான திறைசேரியின் பரிந்துரைக்காகக் காத்திருக்கிறது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் நிதிப்பிரமாணம் 371<br><br>பெறப்படும் செயல் நிமித்தக் கட்டு நிதி அப்பணி முடிவுற்றவுடனேயே தீர்த்து வை-க்கப்பட வேண்டுமாயினும், பெறப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட் ரூபா 755,996 முற்ப-ணம் கணக்காய்வுத் தினத்திலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. | ஐந்து விடயங்களுள் ரூபா 755,996 ஆக அமையும் மூன்று விடயங்கள் இப்போது செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளன.<br><br>மூல விபரப்பட்டியல் இல்லாதபடியால் வெளியாட்களுக்குச் செலுத்தித் தீர்க்கப்படாத முற்கொடுப்பனவுகளைக் கருத்திற் கொண்டு முற்கொடுப்பனவுகளை செலுத்தித் தீர்க்கும் போது மூல விபரப் பட்டியலைச் சமர்ப்பித்தல் ஒரு கட்டாயத் தேவைப்பாடாக இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை-கயின் 9.14 ஆம் பந்தி<br>நிர்வாகக் கைநூல் ஒன்றைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அதனை திறைசேரியின் செயலாளருக்குச் சமர்ப்பித்து அவரது இணக்கத்தைப் பெற வேண்டுமாயினும், கைநூலுக்கான திை-றசேரிச் செயலாளரின் இணக்கம் கணக்க-ாய்வுத் தினத்திலேனும் பெறப்பட்டிருக்கவ-ில்லை. | இதுவரையும் பல பின்னூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அங்கீகாரம் தொடர்பாக தாமதம் ஒன்றுள்ளது என்பது பற்றி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **3.** | நிதிசார் மீளாய்வு | |
| **3.1** | நிதிப் பெறுபேறுகள் | |
| | ஆணைக்குழுவின் ஆரம்பந்தொட்டு நிதிக் கூற்றுக்களில் வரிக்குப் பின்னரான மிகை-யோ அல்லது பற்றாக்குறையோ காணப-ிக்கப்படுவதில்லை. ஆணைக்குழுவானது வருமானத்திலும் கூடிய செலவினத்தை காப்புறுதியாளர்களது பாதுகாப்பு நிதியத்தில் சீராக்கல் செய்வதன் மூலம் மேற்குறிப்பிட் மிகை அல்லது பற்றாக்குறையை சூனிய-மாக்கியிருந்தது. சமர்ப்பிக்கப்பட் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், ஆணைக்குழுவினது வருமானமானது முன்னைய ஆண் டுடன் ஒப்பிடுகையில் ரூபா 20,622,656 அதிகரி-த்திருந்தது. ஆணைக்குழுவின் மொத்தச் செலவினமும் ரூபா 20,457,782, அதாவது, 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. காப்புறுதி உரித்துடையவர்களது பாதுகாப்பு நிதியத்தி-ற்கு மாற்றஞ் செய்யப்பட் தொகை | ஒரு மதிப்பீட்டுக் குறிப்பு |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| | ரூபா 19,035,468 அதிகரித்தும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,179,824 அதிகரித்தும் இருந்ததே மேற்படி செலவின அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.<br><br>ஆணைக்குழுவினது 2013 தொடக்கம் 2017 வரையிலான 05 ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செயற்பாட்டு மிகை இல்லாதபோதும், கடந்த 05 ஆண்டுகளின்போதான ஒட்டு மொத்த பங்களிப்பு வேறுபாடுகளைப் பரிசீலிக்கையில் 2013, 2014, 2015, 2016 ஆம் ஆண்களின் போதான பங்களிப்பு படிப்படியாக அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின்போதிலும் பங்களிப்பு அதிகரித்தபோதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவ்வதிகரிப்பு 19 சதவீதம் மாத்திரமே ஆகவிருந்தது. ஆண்டின்போது காப்புறுதி உரித்தாளர்களது பாதுகாப்பு நிதியத்திற்கு நிதி மாற்றம் மேற்கொள்ளப்பட்டமையே இதற்கான பிரதான காரணமாக அமைந்தது. | |
| **4.** | செயற்பாட்டு மீளாய்வு | |
| **4.1** | செயலாற்றல் | |
| **4.1.1** | செயற்பாடும் மீளாய்வும்<br>வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவின் விசாரணை, கண்காணிப்பு, சட்ட மற்றும் விற்பனைச் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித் தொடர்புடைய பிரிவுகளது செயல் முன்னேற்றம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| **(அ)** | விசாரணைப் பிரிவு | |
| (i) | காப்புறுதியாளர்களாலும் காப்புறுதித் தரகர்களாலும் பாவனையாளர்களது புகார்களைத் தீர்த்து வைக்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் சம்பந்தமாக 2016 ஒக்டோபர் 01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கடிதத்துக்கமைய 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் அரையாண்டுதோறும் புகார்களுக்கென அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 30 நாட்களுக்குள் காப்புறுதிக் கம்பனி ஆணைக்குழுவிற்குத் தகவல்களை அனுப்பி வைக்க வேண்டுமாயினும், 27 காப்புறுதி நிறுவனங்களில் 09 கணக்காய்வுத் தினம் வரை அவ்வாறாகத் தகவல்களை அனுப்பி வைக்கவில்லை. | 30.07.2018 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய (2018 இன் முதல் காலாண்டுத் தகவல்களுடன்) 2017 ஆம் ஆண்டுக்கான தகவல்களை காப்புறுதிக் கம்பனிகள் அனுப்பி வைக்காத காரணத்தினால் இங்கு கூறப்பட்டுள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (ii) | 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 348 புகார்க-ளில் 57 புகார்கள், அதாவது, ஏறக்குறைய 16 சதவீதம் கணக்காய்வுத் தினமான 2018 யூலை 24 ஆந் திகதியளவிலும் தீர்த்து வை-க்கப்படாதிருந்தன. | கணக்காய்வுத் திகதியான 2018 ஜுன் 22 இல் உள்ளவாறு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 35 முறைப்பாடுகளுக்கு மாத்திரமே தீர்வு காணப்படவில்லை. (கணக்காய்வாளர் திணைக்கள உத்தியோகத்தர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டுப் பதிவுப் புத்தகத்தின் பிரதியின் அடிப்படையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது) தெரிவிக்கப்பட்ட 35 முறைப்பாடுகளின் தற்போதைய நிலைமை பின்வருமாறு:<br><br>2 முறைப்பாடுகள் - பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் விசாரணைகள் முடிவடைந்துள்ளன.<br><br>8 முறைப்பாடுகள் - விசாரணைகள் முடிவடைந்து பணிப்பாளர் சபையின் (பணிப்பாளர் சபையின் 183வது கூட்டத்தில்) பொருத்தமான பரிந்துரைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>12 முறைப்பாடுகள் - விசாரணைகள் முடிவடைந்து, பொருத்தமான பரிந்துரைகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு (பணிப்பாளர் சபையின் 184வது கூட்டத்தில்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br><br>7 முறைக்காடுகள் - தீர்வு எட்டப்பட்டு விட்டது.<br><br>2 முறைப்பாடுகள் - மேலதிக விசாரணைகளுக்காக தேவையான விபரங்கள் காப்புறுதிக் கம்பனிகள்/தரகுக் கம்பனிகளிடம் இருந்து பெறப்பட வேண்டும். |
| **(ஆ)** | கண்காணிப்புப் பிரிவு | |
| (i) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறு-திக் கைத்தொழில் அதிகாரச் சட்டத்தின் 38(3) (அ) பிரிவின் பிரகாரம் அறிவுறுத்தப்பட்டுள்ள ஏதாவதொரு மாதிரிப் படிவத்தினது தவணை அறிக்கையை அவ்வவ்போது சமர்ப்பிக்குமாறு அக்காப்புறுதியாளரிடமிருந்து கோருவதற்கு இயலும். மாதம் முடிவடைந்து 21 நாட்களு-க்குள் அவ்வாறாகக் கோரப்பட்ட அவர்களது மாதாந்த சட்டபூர்வ அறிக்கைகள் ஆணைக்-குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அவ்வாறாக அறிக்கைகளைக் கோரியுள்ள 03 காப்புறுதிக் கம்பனிகள் குறித்த காலப்பகுத-ியின் அவ்வறிக்கைகளை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்காதிருந்தபோதும், ஆணைக்-குழு அது சம்பந்தமாக நடவடிக்கைகளை மே-ற்கொள்ளவில்லை. | கம்பனியில் காணப்பட்ட பலதரப்பட்ட சூழ்நிலைகள் காரணமாக, அறிக்கைளை அனுப்பி வைப்பதில் தாமதங்கள் இருக்கலாம். உரிய திகதியில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமைக்கு பின்னூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| (ii) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்காக காப்புறுதிக் கை-த்தொழில் கைநூல் 2017 ஆம் ஆண்டின் மூன்றாம், நான்காம் காலாண்டுகளுக்குள் பிரசுரிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபே-ாதும், 04 மாதத்திற்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2018 ஏப்ரல் மாதத்தில் பிரசுரிக்க-ப்பட்டிருந்தது. | சரிபார்ப்பதற்காக வாசிப்பதில் தாமதம் ஒன்று இருந்தது. அத்துடன், இந்த வருடம் உடன்பட்ட திகதிகளில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் தாதமங்களை தவிர்க்கும் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் இருந்து இணைய தளத்தில் மென் பிரதிகள் மேலிறக்கம் செய்யப்பட்டுள்ளன. |
| (iii) | 2017 ஒக்டோபர் 31 முதல் வாழ்க்கைக் கணி-ப்புப் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவ-ியமையால் 2017 ஆம் ஆண்டின் மூன்றாம், நான்காம் காலாண்டுகள் தொடக்கம் இற்றை-றவரை காப்புறுதி நிறுவனங்களின் எண்ணி-க்கை அடிப்படை மூலதனக் கட்டமைப்பின் பிரகாரம் பொறுப்புகளை மீளாய்வு செய்யும் பணி நடைபெறவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்பட முடியாது. இது அடிப்படையிலான மூலதனக் கட்டமைப்பின்படி காப்புறுதிக் கம்பனியின் பொறுப்புக்களை மதிப்பிடும் அதிகாரம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கம்பனியின் பொறுப்புக்களை மதிப்பிடாது. இங்கு குறிப்பிடப்பட்ட காலாண்டுகளுக்கான ஆவணங்களை நாம் பெற்றுக்கொண்டோம். |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (iv) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 48(1) ஆம் பிரிவின் பிரகாரம், காப்புறுதியாளர்களால் சமர்ப்பிக்கப்படும் வாழ்க்கைக் கணிப்புத் தகவல்கள் வாழ்க்கைக் கணிப்பாளரால் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட வேண்டுமாயினும், வாழ்க்கைக் கணிப்புப் பதவி வெற்றிடங்கள் காரணமாக காப்புறுதியாளர்கள் வழங்கும் வாழ்க்கைக் கணிப்பு அறிக்கைகள் 2016 முதல் இற்றை வரை மீளாய்வு செய்யப்படாதிருந்தன. | இலங்கையில் காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களுக்குத் தட்டப்பாடு நிலவுவதால், பொருத்தமான காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவரை நியமிக்க முடியவில்லை. எவ்வாறாயினும், உலக வங்கியின் நிதித்துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் ஊடாக காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவரை நியமிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (v) | இலங்கை காப்புறுதி ஆணைக்குழுவின் கீழ் 60 காப்புறுதித் தரகர் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக்கம்பனிகளுள் 8 கம்பனிகள் மாத்திரம் 2017 ஆம் ஆண்டின்போது களப் பரிசீலனைக் கண்காணிப்புகளை மேற்கொண்டிருந்தன. அது மொத்தத் தரகர் கம்பனிகளது எண்ணிக்கையில் ஏறக்குறைய 13 சதவீதமாகும். | இருக்கக்கூடிய பணியாட்களுடன் வேலைத்தள மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, எதிர்காலத்தில் பணியாட்களையும், கணனிப்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறைமை ஒன்றையும் பயன்படுத்தி தள மேற்பார்வைகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| **(இ)** | சட்டப் பிரிவு | |
| (i) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 114 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தரகர்களைப் பதிவு செய்தல் 2012 ஏப்ரல் 27 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்தடையானது 2016 மே 02 ஆந் திகதி முதல் அகற்றப்பட்டு புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகள் பதிவு செய்யப்படுதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தரகர்களைப் பதிவு செய்யும் குறிப்பிட்ட விதிமுறைகளையும், நடைமுறைகளையும் அறிமுகஞ் செய்திராததால் பதிவு நடவடிக்கைகளில் நீண்ட தாமதம் நிலவுவது அவதானிக்கப்பட்டது. | காப்புறுதித் தரகர் ஒருவராகப் பதிவு செய்வதற்கு கம்பனி ஒன்று விண்ணப்பம் அனுப்பிய பினனர் ஆணைக்குழு தனது அவதானிப்புக்களை கம்பனிக்கு அனுப்பி வைக்கும். தேவைப்படும் அனைத்து தகுதிகாண்களும் பூர்த்தி செய்யப்படாத வரை ஆணைக்குழு பதிவை மேற்கொள்ளாது. தகுதிகாண்களைப் பூர்த்தி செய்வதற்கு கம்பனிகளும் சில காலத்தை எடுக்கும்.<br><br>இதற்கமைய, ஆணைக்குழு கம்பனிகளை தரகர்களாக பதிவு செய்வதற்கு தெளிவான நடபடி முறையொன்றை பிரயோகித்துள்ளதுடன், பதிவுக்காக எடுக்கப்படும் கால அளவு, தொடர்புபட்ட கம்பனிகள் அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு எடுக்கும் காலப்பகுதியில் தங்கியுள்ளது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (ii) | ஒழுங்குமுறைப்படுத்தலை / மதியுரைச் செயற்பாடுகளைத் தொடக்கி வைப்பதற்கு சகல காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகு முற்பணமும், பிரதான உத்தியோகத்தராக (Principal Officer) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரையோ அல்லது நிறைவேற்று முகாமையாளரையோ அல்லது அப்பணிக்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தரையோ நியமதித்து 2017 மே 12 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமென ஆணைக்குழுவின் 2016 மார்ச் 13 ஆந் திகதிய பணிப்புரை (Direction) 09 இன் மூலம் சகல காப்புறுதி மற்றும் 60 காப்புறுதித் தரகு நிறுவனங்களுக்கும் அறவிக்கப்பட்டிருந்தது. அக்கம்பனிகளது வேண்டுகோளின் பேரில் இக்காலக்கெடு 2017 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தபோதும், 2018 யூலை 24 ஆந் திகதி கணக்காய்வு மேற்கொள்ளப்படுகையிலும் 02 காப்புறுதி நிறுவனங்கள் பிரதான உத்தியோகத்தர்களை நியமித்திருக்கவில்லை. | இரண்டு காப்புறுதிக் கம்பனிகள் தவிர ஏனைய அனைத்து காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளும், வழிகாட்டி 9 இல் உள்ள பொருத்தமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளன. ஒரு காப்புறுதிக் கம்பனியுடைய காப்புறுதி வியாபாரம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. மற்றைய காப்புறுதிக் கம்பனி 2018 ஜுலை 31 ஆம் திகதி வரை நீடிக்குமாறு வேண்டியுள்ளது. |
| (iii) | செலிங்கோ தகாபூல் லிமிட்டட்டின் வியாபார நடவடிக்கைகளுக்கு ஆணைக்குழு 2009 ஆம் ஆண்டில் தடை விதித்திருந்ததுடன், SC(FR) 191/09 ஆம் இலக்க அடிப்படை உரிமை வழக்கின் மூலம் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பிரகாரம் அக்கம்பனிக்குச் சமர்ப்பித்த மோசடியற்ற காப்புறுதி உரித்தை படிப்படியாக நீக்கிக் கொள்வதற்கு அக்கம்பனியினது சொத்துக்களை விடுவிப்பதற்கென அப்போதைய சபை கம்பனியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. எவ்வாறாயினும், 142 மோசடியற்ற உரித்தில் 132 இன் உரித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன், 10 வழக்குக் கோவைகளது தற்போதைய நிலைமை கணக்காய்வுத் தினமான 2018 யூலை 24 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. | சமரசங்கள் நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக செல்ல வேண்டியிருப்பதால், நிலுவையில் உள்ள வழக்கு நடவடிக்கைகளுக்கான தீர்வுகளை கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு எட்டப்பட முடியாது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (ஈ) | விற்பனைச் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித் தொடர்பு பிரிவு | |
| (i) | பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ், திவிநெகும, அபிவிருத்தி, கமத்தொழில் மற்றும் கள உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்ட மாவட்டச் செயலகங்களில் 10 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டபோதும், சாதாரண பொதுமக்களை இலக்காகக் கொண்ட அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே, நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 50 சதவீதமானவையும் மத்திய மாகாணத்தில் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச செயலகங்களில் கிராம சேவகர்கள், பொலிஸ், திவிநெகும, அபிவிருத்தி, விவசாய மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் சந்திக்கின்ற பிரதேச தின கூட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்றன. ஏனைய சமூகங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் பத்திரிகைகள் ஊடாக நடத்தப்பட்டன. பிரதேச செயற்பாட்டுத் திட்டம் இதனைப் பற்றி தெளிவாக குறிப்பிடுகிறது. விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் பொதுக் காப்புறுதித்துறை கலந்துரையாடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, IRCSL உடைய அச்சிடப்பட்ட விழிப்புணர்வு சாதனங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றது.<br>பிரதேச செயலகங்களில் நடைபெற்ற 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் கண்டி மாவட்டத்தில் நடைபெற்றன. (20%) 2017 ஆம் ஆண்டில் ஐந்து நிகழ்ச்சித் திட்டங்கள் மத்திய மாகாணத்தில் நடைபெற்றன. |
| (ii) | மாவட்டச் செயலகங்களில் நடாத்தப்பட்ட அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போதுமானதாகவும் வெற்றிகரமாகவும் நடாத்தப்பட்டது தொடர்பாக கேள்விக்கொத்து மூலம் பங்குபற்றியவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டிருந்தன. அதற்கமைய, கேள்விக் கொத்துக்களை வழங்குவதன் மூலம் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களைத் திறம்பட நடாத்துவதற்கு அவை பயன்படும் எனக் குறிப்பிடப்பட்டபோதும், பெறப்பட்ட பதில்கள் மீளாய்வு செய்யப்பட்டோ அல்லது அப்பதில்களின் வாயிலாக நிகழ்ச்சித்திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு இருந்தமையையோ கணக்காய்வில் அவதானிக்க முடியவில்லை. | விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் உள்ளடக்கங்களைக் கருத்திற் கொள்கையில், 2016 ஐ விட 2017 ஆம் ஆண்டில் ஒரு தனித்துவமான வேறுபாடு காணப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட Power Point சமாப்பணங்கள், ஒவ்வொரு வருடமும் மீளாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகளும், ஒதுக்கப்பட்ட நேரங்களும் பிரதேச செயலகத்தின் தற்றுனிபின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. எனவே, இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் உள்ளடக்கத்தில் இருக்கக்கூடிய, மிகப் பிரதானமானதும் தேவையான விடயங்களுக்கு மாத்திரம் ஓரளவு உட்படுத்தப்பட்டது. |
| (iii) | ஆண்டினபோது பாடசாலைச் சிறுவர்களுக்கு 02 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள், அதிபரின் அனுமதி பெற்றால் மாத்திரமே நடத்தப்பட முடியும். எனவே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபாய நுட்பமுறை ஒன்றாக, குறிப்பிடப்பட்ட முதலீட்டு சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்ற போதே அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணத்துவம் பெற்ற ஆலோசகர் குறிப்பிடப்பட்ட உபாய நுட்ப முறை என்னவென்று விளக்க வேண்டும். அவரது பரிந்துரைகளின் அடிப்படையில் பாடசாலைகளுக்காக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் திருத்தப்பட வேண்டும். |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (iv) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கைத்தொழிலின் செயல் முன்னேற்றத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சிட்டு ஊடகங்களின் மூலம் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஆங்கில மொழியில் மாத்திரமே அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. | இந்தப் பத்திரிகை அறிவித்தல்கள், கட்டணமின்றி பிரசுரிக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகள், ஆணைக்குழுவின் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்கான இடத்தை அதன் தற்துனிபு அதிகாரத்திலும், பத்திரிகையில் உள்ள இடத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கின்றன. எனவே, இவ்விடயம் ஆணைக்குவின் கட்டுப்பாட்டை மீறியதாகும். அறிவித்தல்கள், ஆங்கிலப் பத்திரிகையில் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டாலும், ஆணைக்குழு மும்மொழிகளிலும் அறிவித்தல்களை பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கும். |
| (v) | 2017 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவின் வெப் இணையதளத்தினூடாக எப்போதும் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில்களைத் தயாரித்து வெப் இணையதளத்தில் சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 மே 18 ஆந் திகதியளவிலும் அவ்வாறு நடைபெறவில்லை. | அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளில் உள்ளடக்கப்பட வேண்டியவை தயார் செய்வது பூர்த்தியாகி விட்டது. "இலங்கை காப்புறுதிச் சபை" என்பதிலிருந்து "இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு" என பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு, எமது இணைய தளத்தில் அந்த மாற்றங்கள் தொடர்பான அறிக்கையைப் பிரசுரிப்பதற்கு நிதி மற்றும் நிர்வாக திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அத்தகைய அறிக்கையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களோடு சேர்த்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. காலத்திற்குக் காலம் பல திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒரே நேரத்தில் அனைத்து மாற்றங்களையும் உள்ளடக்குவது சிறந்தது என நாம் கருதுகின்றோம். |
| (vi) | வெப் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்ட கைநூல்களாக Brochures (சிறு கைநூல் தொகுப்பு) 08 உடன் 03 Handouts (கைப்பிரசுரம்) பிரசுரிக்கப்பட்டிருந்தபோதும், அவை நாளதுவரையாக்கப்படாது புதிய கைப்பிரசுரங்கள் எதுவுமே தயாரிக்கப்பட்டு பிரசரிக்கப்பட்டிருக்கவில்லை. | கையேடுகளின் உள்ளடக்கத்தை மேம்படுத்தி, புதிய உள்ளடக்கங்களையும் சேர்த்து, கையேடுகளை மீள அச்சிடுவதற்கு குறிப்பிடத்தக்களவு காலம் அவசியமாகும். கொள்முதல் செயற்பாட்டிற்கும் சில காலம் தேவைப்படும். ஆணைக்குழுவின் இலச்சினை, அதன் பிரசுரங்களில் உள்ளடக்கப்பட வேண்டியிருப்பதனால் இலச்சினை பூர்த்தியாக்கப்படும் வரை பொருத்தமான திணைக்களம் காத்திருக்க வேண்டும். அதாவது, 22.03.2018 வரை. கையேடுகளை அச்சிடுவதற்காக இப்போது அச்சிடும் கம்பனி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>2017 ஆம் ஆண்டு காப்புறுதிக் கொள்கைகள் மீதான முதலீடுகள் எனத் தலைப்பிடப்பட்ட கையேடு ஒன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்படவில்லை. ஏனெனில், இது 2016 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். புதிய இலச்சினை அத்தகைய கையேட்டில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், அச்சிடும் வேலை பூர்த்தியாகி விட்டன. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட் வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட் பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (vii) | சமூக ஊடகங்களினூடாக காப்புறுதி தொடர்பாக அறிவூட்டுவதற்காக இலங்கை காப்புறுதிச் சபையாக youtube இல் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கும் 2016 ஆம் ஆண்டில், அறிவூட்டும் கேட்போர் மற்றும் கட்புலனாகத் தொடர்புபடுத்துவதற்கும் ஆணைக்குழுவின் வெப் இணையதளத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், 2016 செப்டெம்பரின் பின்னர் வெப் இணையதளம் நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. | காப்புறுதி பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக IRCSL 08.11.2016 இல் YouTube கணக்கு ஒன்றைத் திறந்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கை காப்புறுதி சபையின் பெயர் மாற்றப்பட்டதனால் இந்த இணைய தளத்திலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>இலங்கை காப்புறுதிச் சபை என்ற பெயரில் இருந்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பதாக பெயர் மாற்றப்பட்டதன் காரணமாக, அதன் இணைய தளத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து நிதி மற்றும் நிர்வாக பிரிவினால் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைக்கு அமைவாக இணைய தளத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் மாற்றங்களை YouTube கணக்கில் சேர்த்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. திருத்தங்களை காலத்திற்கு காலம் மேற்கொளாமல் அனைத்து மாற்றங்களையும் ஒரே நேரத்தில் செய்வது பொருத்தமானது என நாம் நம்புகின்றோம். |
| (viii) | ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக தொழில்நுட்ப உதவியை வழங்கி, இலங்கை காப்புறுதி உரித்துறுதி தொடர்பான அறிவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலாக்குவதற்கு எண்ணியிருந்ததுடன், அதன் இடைவெளிப் பகுப்பாய்வு (Gap Analysis) மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் இனங்கண்டு கொள்ளப்படவில்லை. அதற்கமைய, கல்வி உபாய மார்க்கம் மற்றும் செயலில் ஈடுபடுத்துவதற்கான திட்டம் 2017 ஒக்டோபரில் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த போதும் அதற்கென எண்ணியுள்ள நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமாகியுள்ளமை 2018 யூலை 24 ஆந் திகதியளவிலும் அவதானிக்கப்படவில்லை. | 2017 டிசம்பர் 07 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணத்துவம் பெற்ற ஆலோசகரால் கல்வி உபாயநுட்ப மற்றும் அமுலாக்கத் திட்டத்தின் மீது சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த ஆணைக்குழுவின் 179வது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது:<br>• உடன்பட்ட கொள்கை நடபடிகள் மீதான ஒப்பந்தம்;<br>• ஆணைக்குழுவின் எல்லை மற்றும் வளங்களுடன் இது அடையக்கூடியது;<br>• தெளிவானதும், குறிப்பானதுமான பெறுபேறுகளை அளவிட முடியும். அத்துடன், மேலதிகத் தகவல்கள் / தெளிவுபடுத்தல்களைப் பெற முடியும்.<br>இதற்கமைய 01.02.2018 அன்று ஆணைக்குழு கல்வி உபாயநுட்ப அமுலாக்கத் திட்டத்திற்கு உரிய திருத்தங்கள் பற்றி ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அறிவித்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி புதிய திட்டம் ஒன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், ADB அத்தகைய ஒரு புதிய திட்டத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. |
| (உ) | நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு | |
| | பதவியணியின் ஆற்றலை சக்திமிக்கதாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டத் தரவுகளின் பிரகாரம் உள்ளுர் பயிற்சிகளுக்கு ரூபா 3,000,000 மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு ரூபா 10,000,000 என மன்றம் நிதியேற்பாட்டைச் செய்திருந்தபோதும், உள்ளவாறு செலவாகியது குறைந்த அளவிலான முறையே ரூபா 1,297,577 மற்றும் ரூபா 4,741,449 என்பனவே ஆகும். | இங்கு குறிப்பிடப்பட்ட ஏற்பாடு, வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித் திட்டம் நடைபெறாதபடியால், அத்தகைய உயர்ந்த மீதித் தொகையொன்று காட்டப்பட்டுள்ளது. பயிற்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை இவ்வருடம் முழுமையாக பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.<br><br>2017 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சி மீது அதிக கவனம் செலுத்தப்பட்டதால் நிகழ்ச்சிகளுக்கான செலவுகள் ஏற்பாட்டாளர்களினால் உறப்பட்டது. ஆகவே, இங்கு கூறப்பட்ட ஏற்பாடுகளில் ஒரு அதிகரிப்பை விளைவித்தது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| 4.2 | முகாமைத்துவச் செயற்பாடுகள்<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப் படுகின்றன. | |
| (அ) | 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 7,324,758 தொடர்ந்து செல்லும் பெறுமதியுடைய சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றுள் ஆண்டின் இறுதியிலான பொருட் கணிப்பின்போது இனங்காணப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத அல்லது பாதிப்படைந்தனவாக வகைப்படுத்தப்பட்ட 145 பொருட்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், கணக்காய்வில் இனங்காணப்பட முடியாது போன பயன்படுத்த முடியாத அப்பொருட்களது மொத்தக் கிரயம் ரூபா 2,331,989 ஆகும். மேலும், பயன்படுத்த முடியாது பழுதடைந்தனவாக இனங்காணப்பட்ட கையிருப்பைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது சொத்துக்களின் அளவீடுகள் மாத்திரமே அளவையாளர் சபையினால் காட்டப்பட்டுள்ளன. பதிவுப் புத்தகத்தில் இருந்து சொத்துக்களை நீக்கும் போது மாத்திரமே அசைவற்ற சொத்துக்களின் பதிவுப் புத்தகத்தோடு ஒப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படும். அசைவற்ற சொத்துக்களின் பதிவுப் புத்தகத்தோடு, ஒப்பிட்டு அளவை ஒன்றை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் 103(1) ஆம் பிரிவின் பிரகாரம் நட்டத்திற்குள்ளான காப்புறுதிக் கம்பனிகளின் உரிமைகளை தீர்த்து வைக்கும் நோக்கில் காப்புறுதி உரித்துறுதிகளை வைத்திருப்பவர்களது பாதுகாப்பு நிதியம் எனும் பெயரில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதியத்தில் செஸ் வரியின் மூலம் சேர்ந்து நிற்கும் தொகையை செலவு வைக்கப்படவும் வேண்டும்.<br><br>இந் நிதியம் நெடுங்கால நிதியமாவதுடன் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதன் மீதி ரூபா 4,109,959,205 ஆகவுமிருந்தது. நிதியத்தின் ஆரம்பித்திலிருந்து நிதியத்தின் பணத்தைச் செலவிடுவதற்காக சந்தர்ப்பம் ஏற்பட்டிராததால் இதனைக் கூடிய வட்டியை பெறக் கூடிய முதலீடுகளில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பிருந்தும் திரவவியல் நோக்கை அடிப்படையாகக் கொண்டு அதனைக் குறைந்த நாள் முதலீடுகளில் முதலீடு செய்தமையால் நிதியம் பெறக்கூடியதாகவிருந்த கூடிய வட்டி இழப்பிற்குள்ளானமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வருடாந்தக் கட்டணத்தை பெறுவதில் தாமதம் நிலவியமையால் நாளாந்தச் செலவினத்தை ஈடு செய்வதற்கு நிதியத்திலுள்ள பணம் பயன்படுத்தப்பட வேண்டியேற்பட்டதால் குறுகிய கால முதலீடுகளில் ஈடுபட்டதாக ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிவித்திருந்தது. | நிதியத்தின் பெயர் “காப்புறுதிக் காப்புறுதியாளர்களின் பாதுகாப்பு நிதியம்” என அழைக்கப்படல் வேண்டும். அத்துடன், செஸ் வரியில் இருந்து பெற்ற பணம் வழமையாக நீண்டகால மூலதனங்களில் முதலீடு செய்யப்படும்.<br><br>IRCSL உடைய வருமானம் வருடாந்தக் கட்டணத்திலேயே முதன்மையாக தங்கியுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கட்டணத்தைப் பெறுவது செப்டம்பர் மாதம் வரை நீடித்தது. அத்துடன், ஆணைக்குழுவின் நாளாந்த செலவுகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்ட படியால் காலத்திற்குக் காலம் பெறப்பட்ட பணம் குறுகிய தவணையில் முதலீடு செய்யப்பட்டது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (இ) | 2015 ஒக்டோபர் 05 ஆந் திகதிய 36 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், தரகர் நிறுவனம் ஒன்றினூடாக வெளிநாட்டு மருத்துவக் காப்புறுதி ஒன்றை நடாத்துவதில் எவரேனும் ஈடுபடலாம் என அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அத் தரகர் நிறுவனமானது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இதன் கீழ் 02 காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆரம்பத்தில் ஓராண்டிற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதும், அவ்வனுமதி எழுத்து மூலம் நீடிக்கப்பட்டமை புலனாகாததுடன், வெப் இணையதளத்தில் மாத்திரமே கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுமிருந்தது. வெப் இணைய தளத்தில் காணப்பட்ட கால நீடிப்பு முறையான அனுமதியின்றி நடைபெற்றிருந்தமையால் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் படுவதாக ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிவித்திருந்தது. | இணைய தளத்தில் அங்கீகரித்தலுக்காக நீடிக்கப்பட்ட காலப்பகுதி எந்தவித முறையான அனுமதியும் இன்றி மேற்கொள்ளப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. |
| (ஈ) | 2009 டிசெம்பர் முதல் அமுலுக்கு வரும் பொருட்டு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு ஏப்ரல், டிசெம்பர் மாத விழா முற்பணமாக ரூபா 50,000 வீதம், கொடுப்பனவை மேற்கொண்டிருந்ததுடன், இதற்காக விசேட அங்கீகாரத்தை ஆணைக்குழு பெற்றிருக்கவில்லை. | ரூபா 50,000 பண்டிகை முற்பணத்திற்கான அங்கீகாரம் பணிப்பாளர் சபையிடம் இருந்து பெறப்பட்டது. இது, நிர்வாகக் கையேட்டில் அத்தியாயம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகக் கையேட்டின் இரண்டாவது இணைப்பு, செலுத்தக்கூடிய தொகையின் உச்ச அளவை குறிப்பிடுகிறது. ஊழியர்கள் தமது விருப்பப்படி வருடத்திற்கு ஒரு முறை (ஏப்ரல் அல்லது டிசம்பர் மாதத்தில்) இங்கு குறிப்பிடப்பட்ட உச்ச தொகைகையோ அல்லது அதற்குக் குறைவான தொகையையோ கோரலாம். |
| (உ) | நூலகப் புத்தகங்களை நேரடியாகப் பரிசீலனை செய்தபோது 11 புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படுவதற்காக வழங்கப்பட்டு 01 முதல் 07 ஆண்டுகள் கழிந்திருந்தபோதும் அவை திருப்பி அனுப்பப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே ஏறக்குறைய ரூபா 100,000 பெறுமதியான 02 புத்தகங்கள் நூலகத்தில் நேரடிப் பரிசோதனைக்குக் கிடைக்காதிருந்தன. | நிறுவனம் வரையறுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டுள்ளது. தொழில் முறைத் தேவைப்பாடுகளின் நிமித்தம், ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பொருத்தமான புத்தகங்கள் ஒரு நபரினால் நீண்டகாலம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இன்னுமொரு அலுவலருக்கு அத்தகைய புத்தகம் தேவைப்படும் பட்சத்தில் அதனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும், முடிவடைந்த காலப்பகுதியைப் பொறுத்து அத்தகைய அலுவலர்கள் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.<br><br>இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு புத்தகங்கள் பெறுமதி கூடியதாக இருக்கின்ற காரணத்தினால், அவை இன்னுமொரு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எவரேனும் அலுவலருக்கு அப்புத்தகம் தேவைப்படும் போது எந்த நேரத்திலும் அதனைப் பெற்றுக்கொள்ளலாம். |
| **4.3** | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | |
| | நிறுவனத்தின் தலைமை அலுவலகப் பாவனைக்காக மாதாந்தம் ரூபா 330,096 கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் 2005 ஏப்ரல் 1 தொடக்கம் கட்டிடம் ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. குறித்த வாடகை உடன்படிக்கை 2008 மார்ச் 31 ஆந் திகதி காலாவதியாகியிருந்தது. இதன் காரணமாக, வாடகை அமுலாக்காது வேறொரு கட்டிடத்தை தெரிவு செய்ய வேண்டியுள்ளதாக 2 சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபை கவனத்திற்குக் கொண்டு வந்தபோதும், அது அறிவிக்கப்படாது 2008 ஏப்ரல் 1 தொடக்கம் 2010 யூலை 31 வரை மாதாந்தம் ரூபா 1,472,208 கொடுப்பனவு செய்யப்படுவதற்கான உடன்படிக்கை கட்டிட உரிமையாளருடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | “மெஹவர பியச” என்ற கட்டடத்தின் மீதான எழுத்து மூல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கட்டடம் கட்டுமான மட்டத்தில் உள்ளது. காப்புறுதிக் கைத்தொழில் துறையின் ஒழுங்குபடுத்துநரைப் பேணுவதற்கு தற்போதுள்ள கட்டடத்திற்கு செலுத்தப்படும் வாடகையைவிட குறைந்த வாடகையில் கட்டடம் ஒன்றைக் கண்டுபிடிப்பது கடினமாகும். அலுவலகக் கட்டடம் மீதான இந்தவிடயம், முன்னைய கணக்காய்வு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விடயம் கலந்தாராயப்பட்டு COPE குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| **4.4** | பதவியணி நிர்வாகம்<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப் படுகின்றன. | |
| (அ) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்கள் நிலவிய 04 பதவிகள் கணக்காய்வுத் தினம் வரை வெற்றிடமாகவே இருந்தன. | சாரதி வெற்றிட ஆட்சேர்ப்புக்காக பரீட்சார்த்தி ஒருவர் 26.2.2018 அன்று தெரிவு செய்யப்பட்டார். அவர், 27.02.2018 இல் இருந்து வேலைக்கு சமூகமளிக்கவில்லை. இரண்டாவது பரீட்சார்த்தியை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவரும் வேலைக்குச் சமூகமளிக்கவில்லை. ஆகவே, அனைத்து வெற்றிடங்களுக்குமாக பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவினது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 14.2(C) யில் (b) ஊழியர் நிர்வாகம் தொடர்பாக சபையினால் வழங்கப்பட்ட பதில் பின்வருமாறு:<br><br>பணிநிலைத் தெரிவுகளுக்கான அங்கீகாரம் வழங்கப்படும் வேளையிலேயே ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை சபை ஆரம்பத்தில் இருந்தே பெற்றுள்ளது. புதிய பதவி நிலைகளை உருவாக்கும் தேவைப்பாடு எழும் போது, காலத்திற்குக் காலம் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்டது. உடனடுத்த திருத்தங்களுடனான ஆட்சேர்ப்பு செயற்பாட்டு முறை நிருவாக கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>அது, அங்கீகாரத்திற்காக 2012 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>தேவையான தகவல்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரம் வெவ்வேறாக பெறப்பட்டுள்ளன. |
| (இ) | 2012 மார்ச் 19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிர்வாகக் கைநூல் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக 2017 மார்ச் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதுவரை அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்காதபோதும், நிர்வாகக் கைநூலின் பிரகாரம் ஆட்சேர்ப்பு, சம்பளம், படிகளை மீ ள நிரப்புதல், முற்பணக் கொடுப்பனவு அடங்கலான நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொண்டவாறிருந்தது. | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில்துறை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரிவுகள் 5(e), 10(1) மற்றும் 10(2) க்கு அமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு, அது தற்போது செயற்பட்டு வருகின்றது. |

# 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (ஈ) | ஆணைக்குழுவின் ஆரம்ப சம்பள அளவுத் திட்டத் தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2005 ஆம் ஆண்டில் அங்கீகரித்திருந்தது. அங்கீகரிக்கப்பட்ட அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கும் தற்போது வழங்கப்படும் உள்ளவாறான சம்பள அளவுத் திட்டத்துக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவும் வரிசை அமைச்சும் சம்பள அதிகரிப்பை பரிந்துரை செய்ய முடியாது என அறிவித்திருந்தபோதும், ஆணைக்குழுவில் 2012 ஆம் ஆண்டின்போது திறைசேரியின் பிரநிதியாகவிருந்தவரால் வெளியிடப்பட்ட PED/360/12/2(ii) மற்றும் 2012 யூலை 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆரம்பச் சம்பளத்தில் 25 சதவீதம் அதி கூடிய வரம்புடன் சம்பளத்தை அதிகரிப்பதில் பாதிப்பில்லை எனும் குறிப்புக்கமைய இவ்வாறு சம்பள அளவுத் திட்டம் அதிகரிப்புக்குள்ளாகி இருந்தமை இதன்போது புலனாகியது. | IRCSL இன் சம்பள அளவுகள் ஒருபோதும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் சம்பள அளவுகள் சுற்றறிக்கை இல.30(1) க்கு அமைவாக இருந்ததில்லை. ஆரம்ப சம்பள அளவுகள் 2005 ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதோடு, 2012 ஆம் ஆண்டின் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில், அடிப்படை சம்பளம் 25% ஆல் அதிகரிக்கப்பட்டது. IRCSL இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றி வருகிறது. |
| (உ) | காப்புறுதிக் கம்பனிகளில் நட்டத்திற்குட்படாத சட்ட வரையறைக்குப் பதிலாக அறிமுகஞ் செய்யப்பட்ட அபாயத்தை எதிர்நோக்கும் அடிப்படையிலமைந்த கண்காணிப்பு விதிமுறையை ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்தமையால் ஆயுட்கால கூறு ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆயுட்காலக் கணிப்புப் பதவி, உதவி ஆயுட் காலக்கணிப்புப் பதவி ஆகிய பதவிகளுக்கும் 02 சிரேஷ்ட நிறைவேற்றுத்தர / நிறைவேற்றுத்தர பதவிகளுக்கும் 2016 யூன் 09 மற்றும் டிசெம்பர் 07 ஆகிய தினங்களிலும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் ஆயுட் காலக் கணிப்புப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், 2017 ஒக்டோபர் 31 முதல் அப்பதவி வெற்றிடமாக இருந்தது. அவ்வாறே, உதவி ஆயுட் காலக் கணிப்புப் பதவியும் 2016 முதல் 2018 யூலை 24 வரை வெற்றிடமாகவே இருந்தது. | காப்புறுதிக் கணிப்பீட்டுப் பிரிவுக்கு, காப்புறுதிக் கணிப்பீட்டாளர், உதவி காப்புறுதி கணிப்பீட்டாளர் மற்றும் நிர்வாகப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், காப்புறுதிக் கணிப்பீட்டாளாளர், உதவிக் காப்புறுதிக் கணிப்பீட்டாளர் ஆகிய பதவிகளுக்கு தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படவில்லை. இலங்கையில் சில தொழில்முறை ரீதியான காப்பீட்டுக் கணிப்பாளர்களே உள்ளனர் என்பது இத்தால் குறிப்பிடத்தக்கதாகும். |
| **5.** | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி | |
| **5.1** | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான நோக்கத்தை அடைதல் | |
| | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான “நிகழ்ச்சி நிரலின்” பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதுடன், மீளாய்வாண்டில் தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளை எவ்வாறு அமுலாக்கலாம் என்பதை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அறிந்திருக்கவில்லை. | நிதி அமைச்சுக்கு தொடர்பு கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 2017 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதில்களும்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| **6.** | கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும் | |
| **6.1** | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் | |
| | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 01 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நகல் நிதிக் கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமாப்பிக்கப்பபட்டது.<br><br>புதிய உறுப்பினர்களின் பங்களிப்புடன் ஆணைக்குழுக் கூட்டம் 2018 மே மாதம் 18 ஆம் திகதி நடைபெற்றது. அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஜுன் 01 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. |
| **6.2** | பொருட் கொள்வனவும் ஒப்பந்த நடவடிக்கைகளும் | |
| **6.2.1** | தாமதமாகிய செயற்திட்டங்கள்<br><br>கணனி முறைமைச் செயற்பாட்டு அறையில் குளிரூட்டியைப் பொருத்துவதற்கு பொறியியல் பணிகளுக்கான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத் துடன் ரூபா 1,758,654 ஒப்பந்தப் பெறுமதியில் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) ஆணைக்குழு 2016 மே 11 ஆந் திகதி உடன்படிக்கைகளில் ஈடுபட்டதுடன், 2016 யூன் 07 ஆந் திகதி ரூபா 50,000 முற்பணமாக வழங்கப்பட்டுமிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், 2018 பெப்ரவரியில் நிறைவடைய வேண்டிய இப்பணி கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 06 ஆந் திகதியளவிலும் நிறைவடையாதிருந்தது. | வாயு சீராக்கி இயந்திரத்தைப் பொருத்துவதில் அந்த செயற்பாட்டு முறையில் தோன்றிய பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அதனைப் பொருத்துவதில் தாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், வாயு சீராக்கி பொருத்தும் வேலை தற்போது பூர்த்தியடைந்துள்ளது. |
| **6.3** | பாதீட்டுக் கட்டுப்பாடு | |
| | ஆணைக்குழுவின் பாதீடு செய்யப்பட்ட வருமானமும் செலவினமும் உள்ளவாறான பெறுமதிகளும் ஒப்பிடப்படுகையில் 100 முதல் 246 சதவீதம் வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | |
| **7** | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | |
| | கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது. | |

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவி-னால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| (அ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு<br><br>ஆணைக்குழுவின் செலவினத்தை ஈடு செய்வதற்காக காப்புறுதி உரித்துறுதியாளர் களது பாதுகாப்பு நிதியத்தின் வருடாந்த வட்டியில் 20 சதவீத வரம்பிற்கு உட்பட்ட பணத்தைப் பெறுதல். | |
| (ஆ) | கையிருப்புக் கட்டுப்பாடு<br><br>(i) ஒவ்வொரு பொருளையும் இலகுவாக வெவ்வேறுபடுத்தி இனங்காண்பதற்காக கையிருப்பை பொதி செய்தல்.<br><br>(ii) எழுதுகருவி வகைப் பொருட்களது பதிவேட்டில் கையிருப்பு மட்டம் குறிப்பிடப்படாமை.<br><br>(iii) மெதுவாக நகரும் எழுதுகருவி வகைப் பொருட்கள் உள்ளமை<br><br>(iv) எழுதுகருவி வகைப் பொருட் கையிருப்பை நேரடியாகச் சரி, பிழை பார்த்தபோது கையிருப்புப் பதிவேட்டுடன் வேறுபாடுகள் நிலவியமை | எதிர்கால நடவடிக்கைகளின் போது பொருத்தமான இடங்களில் தேவையான கவனம் செலுத்தப்படும். |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு<br><br>(i) கட்டுநிதியைத் தீர்த்து வைப்பதில் தாமதம்<br><br>(ii) முறைப்படி மதிப்பீடு செய்யாது நிதியை பெறுதல்<br><br>(iii) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை | |
| (ஈ) | வருமானக் கட்டுப்பாடு<br><br>மீளாய்வாண்டிற்கான வருமானத்தை முறையாக இனங்காணாமை | |
| (உ) | சொத்து முகாமைத்துவம்<br><br>இனங்காண்பதற்கான சுட்டிலக்கம் சரியாக இல்லாமை | |

# பின்னிணைப்பு I

2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள்.

| காப்புறுதிக் கம்பனியின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகுப்பு |
|---|---|
| AIA இன்ஷுவரன்ஸ் லங்கா பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| AIG இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் * | பொதுக் காப்புறுதி |
| அலியான்ஸ் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| அலியான்ஸ் லை∴ப் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| அமானா தக்கபுல் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| அமானா தக்கபுல் லை.ப் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| ஆர்பிகோ இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| சொப்ட்லொஜிக் லை∴ப் இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| பெயார்பெஸ்ட் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| செலிங்கோ ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| செலிங்கோ லை∴ப் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| கொன்டினென்டல் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| கோப்பரேட்டிவ் இன்ஷுவரன்ஸ் கம்பனி லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| கோப்லைவ் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| HNB அஷுரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| HNB ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| ஜனசக்தி இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| லை∴ப் இன்ஷுவரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| LOLC ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| LOLC லை∴ப் அஷுரன்ஸ் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| நஷனல் இன்ஷுவரன்ஸ் டிரஸ்ட் பன்ட் | பொதுக் காப்புறுதி |
| ஓறியன்ற் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| பீள்பள்ஸ் இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| சீமாசஹித்த சணச ரக்ஷன சமாகம | பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் கோப்பரேஷன் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| யூனியன் அஷுரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| ஜனசக்தி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |

* வரையறுக்கப்பட்ட AIG காப்புறுதி - இனிமேல், எவ்வித புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், இலங்கையிலிருந்து வெளியேறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட MBSL காப்புறுதிக் கம்பனி - நீண்டகால மற்றும் பொதுக்காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதற்கு வழங்கப்பட்ட பதிவு 2017 ஜுன் 28 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட AIA பொதுக் காப்புறுதி லங்கா, 2016 ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்து வலுவுக்கு வரும் வகையில் வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பொதுக் காப்புறுதியுடன் இணைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட யூனியன் அஷுரன்ஸ் பொது - 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வரையறுக்கப்பட்ட பெயார்பெஸ்ட் காப்புறுதியுடன் இணைந்துள்ளது.

# பின்னிணைப்பு II

2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தரகுக் கம்பனிகள்.

| இல. | தரகரின் பெயர் | வியாபார வகுப்பு | பதிவு வழங்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| 1 | 3 D H இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 2 | A. M. W. இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 3 | ADZ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 4 | எயிற்கன் ஸ்பென்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 5 | அல்பினிகோ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 6 | அலியான் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 7 | AMTRUST இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 8 | அகியூலைன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 9 | அசெகி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 10 | அஸெட்லைன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| | | நீண்ட காலக் காப்புறுதி | 25.09.2017 – 24.09.2018 |
| 11 | Ax இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 02.01.2017 – 31.12.2017 |
| 12 | பிரலியன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 13 | Ceyexxe இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 14 | சிலோன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 15 | சினேர்ஜி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| | | நீண்ட காலக் காப்புறுதி | 11.08.2017 – 31.12.2017 |
| 16 | CF இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 17 | கொலம்போர் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 18 | கொமர்ஷியல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 19 | D S இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 20 | டெல்மேஜ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 21 | ஈகல் DVRS இன்ஷுவரன்ஸ் அன்ட் றீஇன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 09.05.2017 – 08.05.2018 |
| 22 | E A P – R M S இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 23 | இக்குவிற்றி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 24 | ஈஸாஜி கரிம்ஜி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 25 | பைன்லே இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 26 | போரெசைட் இன்ஷுவரன்ஸ் அன்ட் றீ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 27 | ஜோர்ஜ் ஸ்ருவட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 28 | குளோபல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விசஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 29 | கிரான்ட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 30 | காடியன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 31 | இன்சூர்மீ இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 09.09.2017 – 31.12.2017 |
| 32 | ஜே இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 33 | JF இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 34 | L M & A இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 35 | லக் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 36 | லை.ஃ.ப் அன்ட் ஜெனரல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |

# பின்னிணைப்பு II தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| 37 | மெக்ஸ்வெல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 38 | மோர்கன்டைல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| | | நீண்ட காலக் காப்புறுதி | 25.09.2017 – 24.09.2018 |
| 39 | முட்டுவல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 27.06.2017 - 26.06.2018 |
| 40 | மை இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 17.01.2017 – 31.12.2017 |
| 41 | நேஷன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 42 | பிளேசிட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 43 | புரோகெயர் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 44 | புரோடெக்சன் அன்ட் அஷுரன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 45 | புரோடெக்சன் அன்ட் அட்மொஸ்ட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 46 | ரெட்மோ சுவிஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 47 | றிலயன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 48 | றின்கூன் லங்கா இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 49 | S Y M இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 02.01.2017 – 31.12.2017 |
| 50 | சம்சன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 51 | சேனாரத்ன இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 52 | செங்கடகல இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 53 | ஸ்டஜிக் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 54 | டிரஸ்ட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி வர்த்தகம் | 01.01.2017 – 31.12.2017 |
| 55 | UN இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 56 | யுனைட்டெட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 57 | வெராசிட்டி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 58 | விக்டர் இம்மானுவல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 59 | வொலங்கா இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |
| 60 | ஸெனித் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி | 01.01.2017 – 31.12.2017 |

# அருஞ்சொல் அகராதி

## திரட்டு

அதே கம்பனியுடன் காப்புறுதி செய்துகொண்ட அல்லது மறுகாப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான இடர்கள் இழப்பு நிகழ்வு ஒன்று நடைபெறும் அதே சமயத்தில் பாதிக்கப்படும் சூழ்நிலையை குறிக்கும்.

## கையேற்புச் செலவுகள்

புதிய காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் இருக்கின்ற காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் கையேற்புகளோடு முதன்மையாக சம்பந்தப்பட்ட அத்துடன் மாறுபடும் அனைத்துச் செலவுகளையும் குறிக்கும். உதாரணம் - தரகு.

## காப்பீட்டு கணிப்பாளர்

காப்பீட்டுக் கணிப்பாளர் என்பவர், எதிர்பாராத நிகழ்வுகளையுடைய நிதிசார் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு தொழில் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட நபர் ஆவார். காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் காப்புறுதி வியாபாரத்தின் இயல்பு, அதன் நிதிசார் சேவைகள், சொத்துக்களுடன் ஒன்றிணைந்துள்ள இடர்கள் மற்றும் புள்ளி விபரவியல் மாதிரிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் சிறந்த விளக்கம் கொண்டவர்களாக இருத்தல் அவசியமாகும். காப்புறுதிச் சூழலில் இந்தத் திறன்கள் உதாணரமாக, கட்டுப்பணங்களை நிருபித்தல், தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் மூலதன மட்டங்கள் ஆகியவற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படும்.

## நிர்வாகச் செலவுகள்

கட்டுப்பணச் சேகரிப்பு, இலாகா நிர்வாகம், ஊழியர் செலவினம், ஆதனம், ஆலை மற்றும் உபகரணம் தொடர்பான பெறுமானத் தேய்வுகளுக்கான ஏற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய நிர்வாகத் தன்மையைக் கொண்ட செலவுகளாகும்.

## ஏற்கத்தகு ஆதனங்கள்

காப்புறுதி வழங்குநரின் நியதிச் சட்ட ரீதியான கடன் தீர்வு திறனைத் தீர்மானிப்பதற்காக, உள்ளடக்கப்படும் சொத்துக்களாகும். 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் அத்தகைய சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

## ஆண்டுத் தொகை

ஆண்டுத் தொகை பெறுபவரின் ஆயுள் காலம் முழுவதும் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு காலாந்தர அடிப்படையில் செலுத்தப்படும் வருமான அனுகூலங்களாக அமைகின்ற ஒரு நீண்டகால காப்புறுதிப் பொருள் ஆகும். ஒத்திவைக்கப்பட்ட ஆண்டுத் தொகை. கொடுப்பனவுகள் - எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு காலப்பகுதியில் ஆரம்பிக்குமாயின், அது ஒத்தி வைக்கப்பட்ட ஆண்டுத் தொகை எனப்படும். உடனடியான ஆண்டுத் தொகை - ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட போதே கொடுப்பனவும் ஆரம்பிக்கப்படுமாயின், அது உடனடியான ஆண்டுத் தொகை எனப்படும்.

## பாங்கசூரன்ஸ் (Bancassurance)

ஒரு காப்புறுதி வழங்குநர், காப்புறுதி மற்றும் மூலதனப் பொருளை, வங்கி வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான ஒரு ஒழுங்கமைப்பு.

## பயனாளி

காப்புறுதிக் கொள்கையாளர் ஒருவரின் இறப்பு இடம்பெறும் வேளை, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும் ஏனைய அனுகூலங்களையும் பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதிக் கொள்கையாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

## மூலதன போதுமான விகிதம் (CAR)

தேவைப்படும் இடர் மூலதனத்திற்கு (RCR) ஆதரவளிக்கும் மொத்த மூலதனத்தின் (TAC) போதுமான வழிவகைகள். CAR = (TAC/RCR) x100

## மாற்றாளர்

மறு காப்புறுதிக் கம்பனி ஒன்றின் வடிக்கையாளர் (முதன்மை காப்புறுதிக் கம்பனி)

விட்டுக்கொடுத்தல் - விட்டுக்கொடுக் கப்படும் கம்பனிகளால் மறு காப்புறுதி வழங்குநர்களுக்காக மாற்றப்படும் இடரின் ஒரு பகுதி.

## கோரிக்கைகள்

சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் அல்லது அழிவு மற்றும் இறப்பு அல்லது ஊறுகள், வைத்தியசாலை மற்றும் மருத்துவத்திற்காக செலவிடப்படும் போது, காப்புறுதிக் கொள்கையாளரின் இறப்பு அல்லது இயலாமை, மானியக்கொள்கை ஒன்று முதிர்வடையும் போது, ஓய்வு பெறும் வயதை அடையும் போது, காப்புறுதிக் கொள்கை ஒன்று சரணடையும் போது போன்ற ஏதேனும் நிகழ்வு ஒன்று எழும் சந்தர்ப்பங்களில் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் கீழ் செலுத்தப்படும் தொகை.

## உறப்பட்ட கோரிக்கைகள்

கணக்குக் காட்டப்படும் காலப்பகுதியில், கோரிக்கை கையாளுவதோடு தொடர்புடைய செலவுகள், பொருத்தமான சந்தர்ப்பங்களில் கணக்குக் காட்டப்படும் காலத்தின் ஆரம்ப அல்லது இறுதித் திகதியில் செலுத்தப்பட வேண்டிய இருக்கின்ற கோரிக்கை தொடர்பான ஏற்பாடுகளைச் சீராக்குதல் ஆகியவற்றோடு தொடர்புபட்ட செலுத்தப்பட்ட மொத்தக் கோரிக்கைகளின் கூட்டுத் தொகை.

## உறப்பட்ட ஆனால் அறிக்கை இடப்படாத கோரிக்கைகள் (IBNR)

எதிர்பார்க்கப்பட்ட ஏற்பட்ட இழப்பு சம்பந்தமான செலவுகளை ஈடு செய்வதற்காக ஆதனம், பொறுப்பு மற்றும் பண ரீதியான காப்புறுதி என்பன சம்பந்தமான கணக்கு காட்டப்படுகின்ற காலத்தின் இறுதிப் பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு தொகையாகும். ஆனால், காப்புறுதி வழங்குநருக்கு இதுவரை அறிக்கையிடப்படாத தொகை.

## செலுத்தப்பட வேண்டிய கோரி-க்கைகளின் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைளைக் கையாள்வதில் ஏற்பட்ட செலவுகள், அத்துடன், அத்தகைய கோரிக்கைகளில் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகைகளைக் கழித்து, உறப்பட்ட செலவுகள் உட்பட ஆனால், அறிக்கையிடப்படாத ஐந்தொகை தயாரிக்கப்படும். திகதியன்று நடைபெறுகின்ற நிகழ்வுகள் மூலமாக, ஏற்பட்ட கோரிக்கைகளைச் செலுத்தித் தீர்ப்பதற்காக மதிப்பிடப்பட்ட தொகையை ஈடு செய்வதற்காக வழங்கப்பட்ட தொகை.

## இணைக் காப்புறுதி

காப்புறுதிக் கொள்கையாளருடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள், குறித்துரைக்கப்பட்ட கட்டுப்பணத்தில் உடன்பட்ட விகிதத்திற்கான இடர் ஒன்றை ஈடு செய்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

## தரகு

காப்புறுதி வழங்குநரின் பொருட்களை

# அருஞ்சொல் அகராதி தொடர்ச்சி...

விற்பனை செய்தமைக்காக அல்லது அவருக்கு சேவைகளை வழங்கியமைக்காக தரகர் அல்லது காப்புறுதி முகவர் ஒருவருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு.

## செறிவு இடர்

காப்புறுதி வழங்குநரின் சொத்துக்கள், உள்ளார்ந்த கடன் இடரை, பொருத்தமான வகையில் கணிப்பதற்கு பொதுமான அளவில் பன்முகப்படுத்தப்படாத போது இருக்கின்ற மேலதிகக்கடன், மேலதிக கடன் இடர்.

## கடன் இடர்

கம்பனிக்கு வெளிப்பாடு ஒன்று உள்ள பிணையங்கள் வழங்குநரின் (காப்புறுதரி வழங்குநரின் மூலதன இலாகாவில்), கடனாளிகள் (உதாரணம்-அடமானதாரர்கள்), அல்லது எதிர் முனைவோர் (உதாரணம் -மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள், வழித்தோன்றல் ஒப்பந்தங்கள் அல்லது வைப்புக்கள் மீது) மற்றும் இடைத்தரகர்களின் தவறுகை அல்லது கடன் விகித ஒப்படைகளில் ஏற்படும் நகர்வுகள் காரணமாக, நிகழும் நிதி இழப்பு இடர், கடன் இடர் எனப்படும். கடன் இடர், தவறுகை இடர், தரமிறக்கிய அல்லது இடம்பெயர்வு இடர், உட்கிடையான கடன் அல்லது பரவலான கடன், செறிவு இடர் மற்றும் இடைத்தொடர்பு இடர் என்பவற்றை உள்ளடக்கும். கடன் இடர் மூலதன எதிர்முனைவோர், காப்புறுதிக் கொள்கையாளர்கள் (செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்கள் ஊடாக), மறுகாப்பீட்டாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் வழித்தோன்றல் எதிர்முனைவோர் என்பவற்றில் இருந்து தோன்றும்.

## ஒத்திவைக்கப்பட்ட கையேற்புச் செலவு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

கணக்கியலின் வருடாந்த அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் திகதியன்று வலுவிலுள்ள காலாவதியாகாத ஒப்பந்த இடர்களின் காலப்பகுதியுடன் தொடர்புபட்ட கையேற்புச் செலவுகள் ஆகும். இவை, ஒரு கணக்கியல் காலப்பகுதியில் இருந்து அடுத்து வரும் கணக்கியல் காலப்பகுதிகளுக்கு கொண்டு வரப்படும்.

## கைவிடப்பட்ட செயற்பாடு

நிறுவனம் முழுவதிலும் இருந்து அகற்றுவதற்கு முறையான திட்டம் ஒன்றுள்ள ஒரு நிறுவனத்தின் முழுமையான பிரிவு, துணைப் பிரிவு அல்லது ஒரு பிரிவின் செயற்பாடுகள்.

## சமிபாதிக்கப்பட்ட கட்டுப்பணங்கள்

கணக்கியல் காலப்பகுதியின் ஆரம்பத்திலும், இறுதியிலும் சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஏற்பாடுகள் மூலமாக சீராக்கப்பட்ட எழுதப்பட்ட கட்டுப்பணங்கள்.

## மானியங்கள்

துரதிஷ்டவசமான நிகழ்வு ஒன்றின் காரணமாக, தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கைக்கு ஏற்படுகின்ற இடரை மாத்திரம் உள்வாங்குகின்ற ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம், ஆயின், தவணை முடிவின் போது முதிர்வு அனுகூலங் களையும் வழங்கக்கூடிய ஒன்று.

(ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று குறிப்பிட்ட கால முடிவிற்கு பின்போ (அதன் முதிர்வின் போது) அல்லது இறப்பின் மீதோ ஒரு தொகையை செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது).

## பொதுக் காப்புறுதி வியாபாரம்

தீ, கடல், மோட்டார் அல்லது இதர காப்புறுதி வியாபாரம் ஒன்றை, தனித்தோ அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து நடத்தப்படுகின்ற காப்புறுதி வியாபாரம் ஆகும். கணக்கியல் காலப் பகுதியின் போது, பொதுக் காப்புறுதி வியாபாத்துடன் சம்பந்தப்பட்ட அனுமானிக்கப்பட்ட மறு காப்பீட்டிற்கான கட்டுப்பணங்கள் உள்ளடங்கலாக, அனைத்து மூலங்களிலும் இருந்து பெற வேண்டிய அல்லது மொத்தமாகப் பெறப்பட்ட கட்டுப்பணமாகும்.

## மொத்த கட்டுப்பணம்

கழிவுகள், மீளச் செலுத்தல்கள், தள்ளுபடிகள் என்பவற்றைக் கழித்த பின் உள்ள கட்டுப்பணம். ஆயின், மறுகாப்பீட்டு விட்டுக்கொடுப்பிற்காக காப்புறுதி வழங்குநரால் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப்பணம் அல்லது செலுத்த வேண்டிய கட்டுப்பணம் என்பவற்றில் இருந்து கழிப்பதற்கு முன்னராக.

## காப்புறுதி வழங்குநர்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பனியாவதுடன், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில்துறை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குநராகப் பதிவு செய்யப்பட்டவர்.

## Insurtech தீர்வுகள்

தற்போதைய காப்புறுதிக் கைத்தொழில் மாதிரியில் இருந்து வினைத்திறன் மற்றும் சேமிப்புகளை எடுத்துக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் பயன்பாட்டைக் குறிக்கும். Insurtech என்பது. "insurance" (காப்புறுதி) மற்றும் "technology" (தொழில்நுடபம்) ஆகிய சொற்களில் இருந்து பெறப்பட்ட ஒட்டுச் சொல்லாகும். அத்துடன், இது, fintech என்ற வார்த்தையில் இருந்து ஈர்க்கப்பட்டு உருவான ஒரு சொல்லாகும்.

## காலாவதியான கொள்கை

கட்டுப்பணத்தைச் செலுத்தாமையின் காரணமாக, சலுகைக் கால இறுதியில் முடிவுறுத்தப்பட்ட ஒரு கொள்கை.

## பொறுப்பு போதுமான தன்மை பரீட்சை (LAT)

அதன் காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் நிகழ்கால மதிப்புகளைப் பயன்படுத்தி, அதன் காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமையானவையா என அங்கீகரிப்பதற்காக அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு.

## பொறுப்பு இடர்

காப்புறுதி வழங்குநரால் ஸ்தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளரின் பொறுப்புகள், எதிர்காலக் கோரிக்கைகள் மற்றும் தற்போது வலுவிலுள்ள கொள்கைகள் மீதான செலவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கு போதுமானதாக இல்லாமையைக் குறிப்பிடும் இடர்.

## நீண்டகால காப்புறுதி வியாபாரம்

மனித வாழ்க்கையை உத்தரவாதப் படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படும் அல்லது பராமரிக்கப்படும் ஒப்பந்தங்கள். அத்தகைய ஒப்பந்தங்கள் ஒருவரின் இறப்பு நிகழ்கின்ற போது பணம் செலுத்தப்படும் ஒப்பந்தங்களையும் அல்லது மனித வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்வு ஒன்று ஏற்படும் போது பணம் செலுத்தப்படும் ஒப்பந்தத்தையும் அத்துடன், மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு செலுத்த வேண்டிய கட்டுப்பணத்திற்கு அமைவாக ஈடுபடுகின்ற ஒப்பந்தங்கள் ஆகும்.

# அருஞ்சொல் அகராதி தொடர்ச்சி...

## இழப்பு விகிதம்

சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணங்களுக்காக உறப்பட்ட கோரிக்கைகளின் விகிதம். இது, காப்புறுதி ஒப்பந்தங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட இடர்களோடு காப்புறுதி வழங்குநரின் விலையிடல். எவ்வாறு சிறந்த வகையில் பொருந்துகிறது என்பதைக் குறித்துக் காட்டும். (சம்பந்தப்பட்ட வரைவிலக்கணங்கள், உறப்பட்ட கோரிக்கைகள், வருடாந்த அடிப்படையிலான எழுத்தாக்க உறுதி).

## சந்தை இடர்

காப்புறுதி வழங்குநரின் சொத்துக் களுக்குரிய சந்தைப் பெறுமதியில் குறைப்பை ஏற்படுத்தும் இடர்.

## முதிர்சி

நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று பெறப்பட்டு அதன் தவணை முடிவில் செலுத்த வேண்டிய தொகைக்குரிய கொடுப்பனவை மேற்கொள்கின்ற நேரம்.

## இறப்பு விகிதம்

முழு மக்கள் தொகைக்கு அல்லது குறிப்பிட்ட வயது குழுமத்திற்குரிய மரண விகிதம். இது, உலகளாவிய ரீதியில் விகிதத்தில் வெளிப்படுத்தப்படுவதோடு, இறப்பு விகித அட்டவணைகளில் விளக்கப்படுகிறது.

## நிகர கோரிக்கைகள் விகிதம் நிகர இழப்பு விகிதம்

காப்புறுதி வழங்குநர்களால் நிகர கோரிக்கைச் செலவுகளை நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்தோடு, தொடர்பு படுத்துவதற்காக பயன்படுத்தப் படும் ஒரு சூத்திரமாகும். (அதாவது, பொருத்தமான மறுகாப்பீட்டைக் கழித்த பின்னர்).

$$\frac{\text{உறப்பட்ட நிகர கோரிக்கை}}{\text{நிகர கட்டுப்பண சம்பாத்தியம்}} \text{X } 100$$

## நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர இழப்பு விகிதத்தோடு, நிகர செலவு விகிதத்தை ஒன்றிணைப்பதன் மூலம், காப்புறுதி வழங்குநரின் செயற்பாடுகளின் இலாபகரத் தன்மையை குறித்துக் காட்டுகிறது. இணைந்த விகிதம் மூலதன வருமானத்தைக் கருத்திற் கொள்ளாது.

$$\frac{\text{உறப்பட்ட நிகர கோரிக்கை}}{\text{நிகர கட்டுப்பண சம்பாத்தியம்}} \text{X } 100 + \frac{\text{செலவுகள்}}{\text{நிகர கட்டுப்பண சம்பாதிப்பு}} \text{X } 100$$

## நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

மறுகாப்பீட்டுக் கட்டுப்பணத்திற்காகவும் சம்பாதிக்கப்படாத கட்டுப்பணத்தின் அதிகரிப்பு அல்லது குறைப்புக்கு சீராக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்.

## நிகர செலவு விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்தை கையேற்பு மற்றும் நிர்வாக செலவுகளோடு தொடர்புபடுத்துவதற்கு காப்புறுதி கம்பனிகளால் பயன்படுத்தப்படும் ஒரு சூத்திரம் (உதாரணம், தரகு, வரிகள், பணியாட்கள், விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்)

## பங்குபற்றாத கொள்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

பொருத்தமான ஆயுள் காப்புறுதி நிதியத்திலுள்ள surplus களை பங்கிட்டுக் கொள்வற்கான ஒப்பந்த ரீதியில் உரித்தற்ற நீண்ட காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதிக் கொள்கையாளர்கள்.

## ஒரு தடவை மேலதிகம்

2016 ஆம் ஆண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு RBC யில் உள்ள மொத்த கொள்கை பொறுப்புக்கள் மீது 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான NPV ஆளுமையின் கீழ் உள்ள மொத்த கொள்கைப் பொறுப்புக்களின் மிகை ஆகும். மேலதிகம் பின்வரும் மாற்றத்தினால் உருவாக்கப்பட்டது. கொள்கை பொறுப்புக்களுடைய மதிப்பீட்டு முறைமை நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து மொத்த கட்டுப்பண மதிப்பிட்டிற்கு மாற்றப்பட்டது.

## ஒரு தடவை மேலதிக மாற்றம்

surplus உடைய மாற்றம் பின்வரும் காரணத்தினால் ஏற்பட்டது. கொள்கைப் பொறுப்புக்கள் மதிப்பீட்டு முறைமை, நிகர கட்டுப்பண மதிப்பீட்டில் (NPV) இருந்து பங்குதாரர் நிதியத்திற்கான மொத்த கட்டுப்பண மதிப்பீட்டிற்கு (GPV) மாற்றப்பட்டது.

## செயற்படு இலாபம்

மூலதன வருமானம், நிகர மூலதன ஆதாயம் மற்றும் ஏனைய வருமானங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதி வியாபாரத்தை பரிவர்த்தனை செய்வதன் மூலம் ஈட்டப்படுகின்ற இலாபம்.

## செயற்பாட்டு இடர்

உள்ளக முறைமைகள், ஆட்கள், நடபடி முறைகள் அல்லது நிதி இழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள், உள்ளக முறைமைகள், ஆட்கள், நடபடி என்பவற்றின் பற்றாக்குறை அல்லது தோல்வி அல்லது நிதியிழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் என்பவற்றில் இருந்து எழுகின்ற இடர் செயற்பாட்டு இடர். பாதுகாப்பு இடரையும் உள்ளடக்கும்.

## கொள்கை

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றைக் குறித்துக் காட்டும் ஆவணங்கள்.

## காப்புறுதி கொள்கையாளர்

காப்புறுதி வழங்குநருடன் ஒப்பந்தத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அப்போதைக்கு காப்புறுதிக் கொள்கை ஒன்றை வைத்துள்ள சட்ட உரித்தாளர்.

## கொள்கைக் கடன்

நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்றின் சரணடையும் பெறுமதி மீதான உத்தரவாதத்தின் கீழ் காப்புறுதி வழங்குநரால் காப்புறுதி கொள்கையாளருக்கு வழங்கப்படும் கடன். இந்தக் கடன் சாதாரணமாக, கொள்கையின் தற்போதைய சரணடையும் பெறுமதியில் ஒரு விகிதத்திற்கு மட்டுப்படுத்தப்படுவதோடு, அத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படும்.

## முதன்மை காப்புறுதி வழங்குநர்

காப்புறுதிக் கட்டுப்பணம் ஒன்றுக்கு பிரதிபலனாக இடர்களை அனுமானிக்கும் காப்புறுதிக் கம்பனி ஒன்றாவதோடு, காப்புறுதிக் கொள்கையை வைத்துள்ள வருடன், நேரடியான ஒப்பந்த தொடர்பும் இருக்கும். (தனிப்பட்ட ஆள், சங்கம் அல்லது அமைப்பு)

## மறு காப்பீடு

ஒரு பிரதிபயனின் (கட்டுப்பணம்) பரிமாற்றத்திற்காக மாற்றாளரால் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களின் இழப்புக்களுக்கு

# அருஞ்சொல் அகராதி தொடர்ச்சி...

எதிராக அவற்றைத் தீதறுப்பதற்காக ஒரு காப்பறுதியாளர் அல்லது மறுகாப்பீட்டாளர் இன்னுமொரு காப்புறுதியாளருடன் (மாற்றாளர்) செய்து கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம்.

## மறுகாப்பீட்டுத் தரகு

மறு காப்பீட்டாளர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்களோடு சம்பந்தப் பட்ட பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய தரகு.

## உள்நோக்கிய மறுகாப்பீடு

மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளுதல்.

## வெளிநோக்கிய மறுகாப்பீட்டு

மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை சேர்த்தல்.

## மறுகாப்பீட்டு இலாபத் தரகு

மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் மீது மறுகாப்பீட்டாளரால் பெறப்பட்ட நிகர இலாபத்தின் (மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு) அடிப்படையில் மறுகாப்பீட்டாளரிடம் இருந்து மாற்றாளரால் (மறுகாப்பீடு செய்யப்பட்ட முதன்மை காப்புறுதி வழங்குநர்) பெறப்பட்ட அல்லது பெறவேண்டிய தரகு.

## தக்க வைத்துக் கொள்ளல்

அனுமானிக்கப்பட்ட இடரின் ஒரு பகுதி. இதற்கு காப்புறுதி வழங்குநர் / மறு காப்பீட்டாளர், மறு காப்பீடு / திருப்பிச் செலுத்த மாட்டார். அதாவது, சொந்தக் கணக்கிற்காக நிகர தொகையை வைத்துக் கொள்ளுதல்.

## மீளப் பெறுதல்

மறுகாப்பீட்டாளர் இடர்களை மாற்றும் ஒரு நடவடிக்கையாகும். இது, இன்னுமொரு மருத்துவக் காப்பீட்டாளருக்காக மறு காப்பீடு செய்யப்பட்டது.

## இடர் மூலதன தேவைப்பாடு (RCR)

இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு என்பது, 2015 ஆம் ஆண்டின் கடன் தீர்வு திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து பொருத்தமான மற்றும் பொருள் வகையைச் சார்ந்த இடர்களின் மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குரிய தேவைப்படும் மூலதனத்தின் மொத்த தொகை.

RCR பொது மற்றும் நீண்டகால காப்புறுதிக்கு வெவ்வெறாக கணக்கிடப்படுவதுடன், காப்புறுதி மற்றும் பங்குதாரர் நிதியம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.

(அ)பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு

RCR = [(கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$+ பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$+ செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]; மற்றும்

(b) நீண்டகால வியாபாரம் ஒன்றுக்கு:

RCR = max {(SVCC, [(கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$+ பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$+ செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]

## கடன் தீர் திறன் விழிம்பு (இடர் அடிப்படையிலான மூலதனம்)

காப்புறுதிப் பொறுப்புகளுக்காக தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, காப்புறுதி வழங்குநரால் வைத்திருக்க வேண்டிய விலலங்கமற்ற மூலதனத்தின் தொகையைத் தீர்மானிப்பதற்காக இருக்கின்ற ஒழுங்குபடுத்தும் மூலதனத் தேவைப்பாடு. அத்துடன், முழுமையான குறைந்தபட்ச மூலதன போதுமான தன்மையின் தராதரத்தை உள்ளடக்கியதோடு, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 26(1) உடன் சேர்த்து வாசிக்கின்றவிடத்து, பிரிவு 105 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் கடன் தீர் திறன் விழிம்பு விதிகளின் (இடர் அடிப்படையிலான மூலதனம்) வரைவிலக்கணப்படுத்தியுள்ள இடர் அடிப்படையிலான தேவைப்பாட்டையும் உள்ளடக்குகிறது.

## மேலதிக மாற்றங்கள்

கொள்கைப் பொறுப்புகளை விஞ்சுகின்ற சொத்துக்களின் மிகைத் தொகையை ஆயுள் காப்புறுதி நிதியத்திலிருந்து காப்பீட்டுக் கணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பங்குதாரருடைய நிதியத்திற்கு மாற்றுதல்.

## சரணடையும் பெறுமதி

காப்புறுதிக் கொள்கை ஒன்றின் தவணைக்காலம் பூர்த்தியடைய முன்னர், நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று முடிவுறுத்தப்படும் போது அதற்காக காப்புறுதி வழங்குநரால் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய தொகை ஆகும். இங்கு குறிப்பிடப்பட்ட சரணடையும் பெறுமதியை அடைவதற்கு காப்புறுதிக் கொள்கை தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு அமுலில் இருந்திருத்தல் வேண்டும்.

## சரணடையும் பெறுமதி மூலதனக் கட்டணம் (SVCC)

அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடையக் கூடிய தீவிர பாதகமான சூழ்நிலை ஒன்று ஏற்படும் சந்தர்ப்பம்.

## தவணைக் காப்புறுதி

குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட தவணைக்கு பாதுகாப்பை வழங்குகின்ற ஆயுள் காப்புறுதிக் கொள்கையின் ஒரு வகை. கொள்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின் போது காப்புறுதி இறந்தால் மற்றும் காப்புறுதிக் கொள்கை வலுவில் இருப்பின் - இறப்பின் மீதான ஒரு அனுகூலம் செலுத்தப்படும்.

## தொழில்நுட்ப ஏற்பாடு

இலாகாவின் ஆயுள் காலத்தின் போது, அதிலிருந்து எழும் ஏனைய பயனாளிகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் அதன் காப்புறுதிக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி வழங்குநரால் ஒதுக்கி வைக்கப்படும் ஒரு தொகை. இது, கொள்கைகள், மறு காப்புறுதி என்பவற்றை நிர்வகிப்பதற்கான செலவுகள் மற்றும் எஞ்சிய இடர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான மூலதனத்தையும் உள்ளடக்கும்.

## அடுக்கு 1 மூலதனம்

தொடர்ந்து செல்லுக்கான கரிசனைகள் மற்றும் வியாபாரத்தை முடிவுறுத்தல்

# அருஞ்சொல் அகராதி தொடர்ச்சி...

ஆகிய அடிப்படையின் மீது அனைத்து சந்தர்ப்பங்களிலும் காப்புறுதி வழங்குநருக்கு ஏற்படுகின்ற நட்டத்தை பாதுகாப்பதற்காக முழுமையாக இருக்கக்கூடிய நிரந்தர மூலதனம்.

## அடுக்கு 2 மூலதனம்

அடுக்கு 1 மூலதனத்தில் உறிஞ்சும் தன்மையுடைய பண்புகள் இல்லாத மூலதனம். ஆயின், எவ்வாறாயினும், நடந்து கொண்டிருக்கின்ற செயற்பாடுகள் அல்லது வியாபாரத்தை முடிவுறுத்தும் செயற்பாடுகளின் போது சில இழப்பு உறிஞ்சும் தன்மையை வழங்கக்கூடியது.

## மொத்தமாக இருக்ககூடிய மூலதனம் (TAC)

2015 ஆம் ஆண்டின் கடன்தீர் திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட கழிப்பனவுகள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் கழித்த அடுக்க 2 மூலதனம் மற்றும் அடுக்கு 1 மூலதனம் ஆகிய இரண்டினதும் மொத்தத் தொகை இருக்கக்கூடிய மொத்த மூலதனமாகும்.

## எழுத்தாக்க இலாபம்

மூலதன வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தை கருத்திற் கொள்ளாது, பொதுக் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதன் மூலம் ஈட்டப்படும் தொழில்நுட்ப இலாபம்.

## சம்பாதிக்கப்படாத கட்டுப்பணம்

வரவேண்டிய கட்டுப்பணங்கள் கணக்குகளில் ஏற்கனவே உள்ளிடப் பட்டிருப்பதோடு, ஆயின், இது, ஐந்தொகை திகதியை அடுத்து வரும் இடர் காலப்பகுதியோடு தொடர்புபட்டது.

## சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு

இன்னும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் எதிர்காலத்தில் எழக்கூடிய கோரிக்கைகளை வழங்குவதற்காக பொதுக் காப்புறுதி வழங்குநரால் வைத்திருக்கப்படும் நிதியமாகும்.

## காலாவதியாகாத இடர் ஒதுக்கு

கோரிக்கைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட கூடிய தொகை மற்றும் இதுவரை அத்திகதிக்கு முன்னர் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் முடிவுபெற்ற ஒப்பந்தங்களில் இருந்து எழக்கூடிய செலவுகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட தொகையைவிட கூடிய தொகையாகும். ஏனெனில், அவற்றினுடைய மதிப்பிடப்பட்ட தொகை சம்பாதிக்கப்படாத கட்டுப்பணங்களுக்கான ஏற்பாடுகளைவிட அதிகரித்திருப்பதால் (ஒத்தி வைக்கப்பட்ட ஏதேனும் கையேற்புக்கான செலவுகள் இருப்பின் அவற்றைக் கழித்த பின்பு).

## உலகளாவிய ஆயுள் காப்புறுதி

முதலீட்டு சேமிப்புகள் மற்றும் குறைந்த கட்டுப் பணங்களை உள்ளடக்கிய வகையிலான தவணை ஆயுள் காப்புறுதியாக அமைகின்ற நிரந்தர ஆயுள் காப்புறுதி ஆகும். அநேகமான உலகளாவிய காப்புறுதிக் கொள்கைகள், நெகிழ்வான கட்டுப்பணத் தெரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது. எவ்வாறாயினும், சில ஒற்றைக் கட்டுப்பணம் (ஒற்றை மொத்தத் தொகைக் கட்டுப்பணம்) அல்லது நிலையான கட்டுப்பணங்களை (அட்டவணையிடப்பட்ட நிலையான கட்டுப்பணங்கள்) விரும்புவர்.

## முழு ஆயுளுக்குமான காப்புறுதி

முழு ஆயுள் காப்புறுதி பெற்றவரின் ஆயுள் காலம் முழுவதையும் பாதுகாப்பதற்காக வழங்கப்படுகிறது. இறப்பு மீதான நலனை வழங்குவதற்கு மேலதிகமாக, முழுமையான ஆயுள் காப்புறுதி பணப் பெறுமதி திரளக்கூடிய ஒரு சேமிப்பு உறுப்பையும் உள்ளடக்கும். இந்தக் கொள்கைகள் நிரந்தர அல்லது பாரம்பரிய ஆயுள் காப்புறுதி எனவும் அழைக்கப்படும்.

# பொதுத் தகவல்கள்

### அலுவலக முகவரி

இல. 11, கிழக்குக் கோபுரம்,
உலக வர்த்தக நிலையம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1
ஸ்ரீலங்கா.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94 11 2396184-9 |
| தொலைநகல் | : | +94 11 2396190 |
| மின்னஞ்சல் | : | info@ircsl.gov.lk |
| இணைய தளம் | : | www.ircsl.gov.lk |

### சட்ட வடிவம்

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க விதிகளுக்கு அமைய, இலங்கையில் ஒரு நியதிச் சட்ட சபையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது, 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிய, 1172∴27 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2001 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

### ஆணைக்குழுவின் இலக்கும் பொறுப்பும்

காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் எதிர்கால காப்புறுதிக் கொள்கையாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கும் நோக்குடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மைத் திறனுடனும், தொழில் முறையாகவும், விவேகமான முறையிலும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் இலக்கும், பொறுப்புமாகும்.

### கணக்கியல் வருடம்

டிசம்பர் 31

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்

### வங்கியாளர்

இலங்கை வங்கி

### கணக்காய்வுக் குழு

திரு. ஏ.ஆர். தேஷப்பிரிய
டொக்டர் அலி அஸ்கர் ஷாபிர் குலாம்ஹுஸைன்
திரு. ஜெரோமி போலிங்

இலங்கை
காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

இல. 11, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், கொழும்பு 1, ஸ்ரீலங்கா
தொலைபேசி : +94 11 2396184-9 | தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : info@ircsl.gov.lk | இணைய தளம் : www.ircsl.gov.lk